உலகச் சுற்றுலாச் சிறுகதைகள்



டோராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு

கலைஞர்
கருணாநிதியின்
சிறுகதைகள்

கலைஞர் மு.கருணாநிதி

தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை-28

முதல் பதிப்பு : 1977
பதிப்புரிமை

விலை ரூ. 10/-

முகப்பு ஓவியம் :
அமுதோன்

அச்சிட்டோர் :
டேக்ஸ் & கம்பெனி லா பிரஸ்,
கிண்டி, சென்னை–32

என்னுரை

ஏடுகள் பலவற்றில் குறிப்பாக 'முரசொலி'யில் நான் அவ்வப்போது எழுதிய சிறுகதைகளின் தொகுப்பே இந்தப் புத்தகம். இந்தக் கதைகளில் சில ஆங்கிலத்திலும், வேறு மொழிகளிலும் ஏடுகளில் வெளிவந்துள்ளன. பிரச்சினைக்குரியவைகளாக்கப்பட்ட கதைகளும் உண்டு. எல்லாக் கதைகளையும் இந்த நூலில் தொகுத்திட எடுத்த முயற்சி ஈடேறவில்லை. விடுபட்டுப்போன சிறுகதைகளை, 'தமிழ்க்கனி பதிப்பக'த்தார் அடுத்த பதிப்பில் இணைத்து வழங்கிடுவார்கள் என்று நம்புகிறேன். இன்னும் எழுத வேண்டிய சிறுகதைகள் ஏராளமானவற்றுக்கு நெஞ்சில் அடித்தளம் அமைத்துள்ளேன். அந்தக் கட்டிடங்களும் நேரம் வாய்க்கும் போதெல்லாம் கட்டி முடிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பதிப்பகத்தாருக்கு என் நன்றி!

சென்னை
5—9—77

அன்புள்ள,
மு. கருணாநிதி

பதிப்புரை

தமிழ் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்ற கலைஞர் அவர்களின் அரும் படைப்புகளில் சிந்திய சில வைர மணிகளின் தொகுப்பே இந்நூல்.

'கலைஞரின் சிறுகதைகள்' எனும் தலைப்பில் வெளியிடப்படும் இந்நூலில் அடங்கிய கதைகள் முன்னரே ஏடுகள் பலவற்றில் மலர்ந்து மணம் பரப்பி இருந்தாலும் அம்மலர்களை ஒன்றாக இணைத்து எழில் ஆரமாக்கி தமிழன்னைக்குச் சூடி மகிழ்வதில் நாங்கள் பெருமை காண்கிறோம்.

காலத்தை வெல்லும் கருத்துக்களைப் படைக்கும் அருந்திறன் கொண்ட கலைஞர் அவர்களின் எழுத்துக்கள் நடையாலும், கருத்தாலும் படிப்பவரின் சிந்தனையைக் கிளறி பெரும் புரட்சியை ஏற்படுத்தக் கூடியவை என்பதை நாடு நன்கறியும்.

அவர் எழுத்தில் ஒரு துடிப்பு இருக்கும். அது ஒவ்வொரு தமிழனின் உள்ளத் துடிப்பையும் உள்ளடக்கிய துடிப்பாகும்!

அவர் எழுத்தில் ஒரு லயம் மிளிரும். அந்த லயம் படிப்பவரின் உள்ளத்தை உருக்கும் சக்திமிகு லயமாகும்!

அவர் எழுத்தில் தனி ஒரு நளினம் இருக்கும். அந்த நளினம் ஒவ்வொரு வாசகரின் உள்ளத்தையும் வசீகரிக்கும் வனப்பு மிகு நளினமாகும்!

அவரது எழுத்துக்களில் தென்றல் தவழும் அதே நேரத்தில் தீ நாக்குகளை வான்முகடுவரை நீட்டும் எரிமலைக் குமுறலும் கிளம்பும்!

அவர் எழுத்துக்களில் சமுதாயத்தின் அடித்தட்டிலிருந்து மேல்தட்டுவரை உள்ளவர்களைப் பற்றிய அழுத்தந்திருத்தமான கருத்துக்களைக் காண முடியும். அத்தகைய கருத்துக்கள் அடங்கிய சிறுகதைக் கருவூலமே இந்த நூல்.

37 சிறுகதைகள் அடங்கிய இந்த நூலை வெளியிடுவதற்கு எங்களுக்கு உரிமை அளித்த கலைஞருக்கு நன்றி கூறுகிறோம். தமிழ்ப்பெருங்குடிமக்கள் என்றும்போல் தங்களின் பேராதரவை நல்குவார்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு.


சென்னை-28
25-9-77

—தமிழ்க்கனி பதிப்பகத்தார்.

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	புகழேந்தி	..	1
2.	நளாயினி	..	7
3.	சபலம்	..	15
4.	ஆட்டக்காவடி	..	22
5.	குப்பைத்தொட்டி	..	30
6.	சந்தனக்கிண்ணம்	..	38
7.	சங்கிலிச்சாமி	..	48
8.	கங்கையின் காதல்	..	60
9.	தாய்மை	..	64
10.	தப்பிவிட்டார்கள்	..	75
11.	தப்பவில்லை	..	83
12.	ஆதரிக்கிறார்	..	93
13.	இரகசியம்!	..	99
14.	மூன்றாறு ரூபாய்	..	103
15.	ஏழை	..	106
16.	ஒரிஜினலில் உள்ளபடி	..	110
17.	பனங்குலை	..	117
18.	செத்தவள் கதை	..	122
19.	பிரேத விசாரணை	..	131
20.	கண்டதும் காதல் ஒழிக!	..	137
21.	ஆலமரத்துப் புறுக்கள்	..	142
22.	தொத்துக்கிளி	..	147
23.	காதல் கடிதம்	..	152
24.	கண்ணடக்கம்	..	157
25.	வாழ முடியாதவர்கள்	..	164
26.	அபாக்ய சிந்தாமணி	..	172
27.	பாலைவன ரோஜா	..	180

எண்			பக்கம்
28.	புரட்சிப்படம்	..	185
29.	திடுக்கிடும் கதை	..	190
30.	கடைசிக் கட்டம்	..	196
31.	அய்யோ ராஜா !	..	202
32.	விஷம் இனிது	..	209
33.	வேணியின் காதலன்	..	216
34.	அமிர்தமதி	..	222
35.	சுமந்தவள்	..	230
36.	சித்தார்த்தன்	..	241
37.	நுனிக்கரும்பு	..	244



புகழேந்தி

விஞ்ஞான ஆராய்ச்சியிலே அவனுக்கு நிகர் யாருமில்லை. இந்தியாவின் ஈன்ஸ்டின் என்று உபகண்டம் பாராட்டுப் படித்தது. சரித்திர ஆராய்ச்சியின் கரையைக் கண்டவன் அவன். சார்லஸ் ஆண்டபோது நடந்ததைக் கூற வேண்டுமா? ஷாஜகானின் குணதிசயங்களை ஒன்றுவிடாமல் சொல்ல வேண்டுமா? நாசர் காலமா? சீசர் வீரமா? எல்லாமே அவனுக்கு மனப்பாடம்! சுருங்கச் சொன்னால் அவனே ஒரு சரித்திரப் புத்தகம்!

இலக்கியத்திலே எதுபற்றி அவனிடம் விவாதிக்க வேண்டும்? எதற்கும் தயார்! கவிதைத் துறையிலே கம்பனா? ஷெல்லியா? காளிதாசனா? டென்னிசனா? பைரனா? பாரதியா? யாரைப் பற்றியும் கருத்துரைகள் வழங்குவதிலே அவனுக்கு நிகர் யாருமில்லை என்பது மட்டுமல்ல; அந்தக் கவிதா மண்டலத்தோடு போட்டியிடவும் திறமை பெற்றவன். பொருளாதாரம் பற்றி விளக்கம் தேவையா? காரல்மார்க்ஸ் அனுப்பிவைத்த தூதுபோலத் தொடங்கி விடுவான், பொருளாதாரப் பிரசங்கத்தை. அமெரிக்காவின் ஆஸ்தி என்ன? ரஷ்யாவின் ரகசியமென்ன? இது போன்ற விவரங்களை மிக எளிதில் கற்றுத்தர வல்லோன்! கணிதத்திலோ மேதை! பூகோளத்துப் புலி! அரசியலிலே அவனேர் பிளேட்டோ! சமுதாயத்திலே சாக்ரட்டீஸ்! எழுத்திலே பெர்னட்ஷா—ஷேக்ஸ்பியர் இருவரின் கூட்டு! பேச்சிலே டெமாஸ்தனிஸ்—இங்கர்சால் இருவரின் கலப்பு! இத்தகைய மேதை! புதிய பாதை வகுத்தவன்! அவனது பெயர் கூறவே

மக்கள் தயங்குவர்—பெயரைக்கூறுவது அவன் பெருமையை இழிவு படுத்துமோ என்ற சந்தேகத்தால்! ஆகவே அவனை மேதை என்றே அழைத்தது இந்த மேதினி.

சில புலவர்கள்கூட அழகாகச் சொல்லுவார்கள் அவனது பெயரைப் பற்றி. "மே" என்பது உலகத் தொழிலாளரின் உற்சவதினம்; "தை" என்பது தமிழரின் உழைப்பு வெற்றி தினம்; ஆகவே இரண்டு பெருந் திருநாட்களும் சேர்ந் தமைந்த பொருத்தமான பட்டம் 'மேதை' என்று! நமது சிந்தை கவர்ந்தவனுக்குச் சிறப்பான பெயர் அமைந்துவிட்டது என்று கூறி மகிழ்வர் பல்லோர். வயதோ முப்பது நிறையவில்லை; வாலிபத் தென்றல்! அதற்குள்ளாக அவனுக்கு வந்து குவிந்த புகழோ பெருங்குன்றம்!

அவனைச் சுற்றி வாழ்த்துப் பாடியபடி எந்நேரமும் இருப்பர் மாணவரும், தொழிலாளரும், பண்டிதரும், பாமரரும்! தனக்கு எத்துணைப் பெருமை வளர்ந்திருக்கிறது என எண்ணும்போது, மணக்கும் அவன் நெஞ்சம். புகழ் கண்டு பூரிப்படைவான். ஆனாலும் அவன் உள்ளம் புகையும் எரிமலை போல இருந்ததை அவனால் மறைக்க முடியவில்லை. மறைப்பதற்கு மிகவும் கஷ்டப் பட்டான்.

புகழ்! புகழ்!! புகழ்!!!

யாருக்கு வேண்டும் இந்தப் புகழ்? சரித்திர விற்பன்னன்—ஜகம் புகழும் பூகோள மேதை—கணித நிபுணன்—கவிஞருக்கு மன்னன்—எழுத்து வேந்தன் என்றெல்லாம் உலகம் உளறுகிறது அவனைப் பற்றி! ஆனால், அவனே துடித்துக் கிடக்கிறான். "தொலையாதோ இந்தப் புகழ்" என்று மனம் வெடித்துச் சாகிறான். காரணம் அவனால் தனியே எங்கும் போகமுடியாது. மாலை நேரத்தில் கடற்கரையில் உலவி வரலாமா? முடியாது. கூடாது என்று தடையல்ல; அவன் போக முடியாதபடி புகழ் அவனைத் தடுத்தது. நூறு, ஆயிரம் என்று மக்கள் சூழ்ந்து கொள்வர். "மேதை" வந்துவிட்டார் என்ற செய்தி எங்கும் பரவும். தனிமையை நாடி வந்த அவன் புகழ்தரும் தலைவலி தாங்காமல் ஓட்டமாக ஓடி வீட்டுக்குப் போய்விடுவான். ரயிலில் போகமுடியாது. கடைத் தெருப் பக்கம் தலைகாட்ட இயலாது. கண் காட்சி சாலைகளில் காலடி வைக்க முடியாது. புகழ்—புகழ்—புகழ்—எங்கும் புகழ்! அந்த மேதையின் நற்பண்புகள் பற்றிப் பேசாதார் இல்லை.

'காதலனும் காதலியும் கொஞ்சிடும் அந்த அழகான நந்தவனத்தைப் பற்றி உணர்ச்சி பொங்கிட வர்ணித்திருக்கிறானே; அந்த ஓய்யார வனத்திலே உல்லாச கீதம் பாடும் ஜீவஜோடிகளை யாரும் சித்திரிக்காத வண்ணம் சித்திரித்து எழுதி இருக்கிறானே; படிக்கும் போதே நமக்கு ஒரு போதை தோன்றுகிறதே; அதை எழுதும்போது அவன் நிலை எப்படி இருந்திருக்கும்!—இப்படியெல்லாம் எழுதுவது போன்ற கற்பனையை வாழ்நாளில் தத்ரூபமாகச் சந்திக்க வேண்டுமென்று அவன் விரும்பமாட்டானே? அந்த இன்ப விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ள முடியாமல் தவித்திருக்க மாட்டானே? அந்தத் தவிப்பின்போது ரோஜா கிடைக்காவிட்டால் ஒரு கனகாம்பரம் என்ற அளவுக்குத் தன் ஆசையை விரித்திருக்க மாட்டானே?'

என்றெல்லாம் அவனைப்பற்றிப் பேசினர்.

"ஆச்சரியம்தான்! நீ நினைக்கிறபடியோ, சந்தேகங் கொள்ளுகிறபடியோ, அந்த மேதை, வழுக்கி விழுந்து விடுகிறவனல்லன்! நிச்சயம் அத்தகைய வழியில் அவன் இறங்கமாட்டான்!" என்று உறுதியோடும் பலர் பதிலுரைத்தனர்.

"நல்லொழுக்க சீலன் என எப்படி நவில முடியும்? நாடு பல சுற்றியிருக்கிறான்?"

"ஏடு பல கற்றிருக்கிறான்—என் அவன் சற்குணனுய் இருக்க முடியாது?" இப்படிக் கேள்வியும் பதிலும் மாறி மாறி!

"தான் எதிர்பார்த்து நடைபோடும், அந்த இலட்சியம் கைகூடும் வரையில்—உலகத்திற்கு அந்த ஒப்பற்ற பரிசை வழங்கும் வரையில்—அவன் திருமணமே செய்துகொள்ள மாட்டானும்!"

இந்தப் பிரச்சாரமும் பரவியது. அவன் அப்படிச் சொன்னானே இல்லையோ—எல்லோரும் அப்படித்தான் நம்பிக்கொண்டிருந்தனர். அவன் சொல்லாததை யெல்லாம் மக்கள் சொல்லுவர். அதைப் பற்றிப் புகழ்வர்; அவனும் வேறு வழியின்றி, "ஆமாம், சொன்னேன்" என்று ஒத்துக்கொள்வான்.

"இலட்சியம் கைகூடும் வரையில் உறங்கவும் மாட்டாராம்!" இப்படிப் பிரச்சாரம் நடைபெறும். அன்பின் மிகுதியால் கிளம்பும் வதந்தி. அவனைப் போய்க் கேட்பர், "உங்கள் இலட்சியம்

கைகூடும் வரையில் உறங்கமாட்டீர்களாமே! ஆகா, என்ன உறுதி! என்ன உறுதி'' எனப் புகழ் பாடியபடியே!

''இல்லை, இல்லை—எனக்கு அப்படியெல்லாம் இலட்சியத்தில் மோகமில்லை!'' என்று அவனுல் சொல்லமுடியும்? முடியாது. ஆகவே, ''ஆமாம் உறங்கமாட்டேன்'' என்பான், அதற்காகத் தன்னைச் சுற்றியிருப்போர் தூங்கிய பிறகு நாற்காலியில் உட்கார்ந்தபடியே—எதையோ சிந்திப்பதுபோலத் தூங்கிக் கொண்டிருப்பான். பாவம்! அதுவும் அமைதியற்ற அரைத் தூக்கம்.

''நமது மேதை—நல்ல வேட்டி சட்டைகூட உடுத்துவதில்லை—அவருடைய எண்ணமெல்லாம் உலகத்திற்கு ஒரு புதிய வழி காண வேண்டுமென்பதிலேயே லயித்துக்கிடக்கிறது'' என்பர் சிலர்.

''இல்லை, இல்லை—நான் ஆடம்பரமாக உடை உடுத்துவேன்'' என்று அவன் கூறமுடியும்? முடியாதே; பாவம்! அதற்காக நாற்றத்தையும் தாங்கிக்கொண்டு அழுக்கு ஆடைகளை உடுத்து வான்.

''பெரிய மகானுக்கும் நமது மேதைக்கும் என்ன வேறுபாடு? ஒன்றுமில்லை—பெண் என்றுல் திரும்பியும் பார்ப்பதில்லையே இவர்!'' என்று அதிசயமாகப் பேசுவர் பலர்.

''உம்—பெண்ணுவது மண்ணுவது!'' என்று மேதையும் அவர்களோடு சேர்ந்து பேசுவான். பேசத்தானே வேண்டும் அவனுடைய பெருமையைக் காப்பாற்றிக்கொள்ள!

மேதை ஒருநாள் வெளியூருக்கு அழைக்கப்பட்டிருந்தான்—கல்லூரி ஒன்றிலே 'விஞ்ஞான அறிவு' என்ற தலைப்பிலே சொற்பொழிவு நிகழ்த்துவதற்காக! கல்லூரித் தலைவரின் வீட்டிலேயே தங்கியிருந்தான். யாரும் தொந்தரவு கொடுக்காம லிருப்பதற்காகத் தனியாக மேல் மாடியில் மேதைக்கு இடவசதி செய்து கொடுத்திருந்தார் கல்லூரித் தலைவர். கல்லூரியில் மேதையின் சொற்பொழிவு நடைபெற்றது. விஞ்ஞானத்தின் பெருமைகளை அவனுக்கே உரிய அழகு நடையில் அவனுல் மட்டுமே விளக்கமுடியும் என்ற அத்தனைப் பெரிய கருத்துக்களை மாணவரிடையே வாரியிறைத்தான் மேதை.

கூட்டத்திலே மாணவிகளும் அதிகமிருந்தனர். அந்த முல்லைக் கொல்லையின் நடுவே அழகு ரோஜா ஒன்றும் இருந்தது. மேதையின் பேச்சையும், அவனது கட்டுக் குலையா மேனியின் அழகையும் அந்த ரோஜாப்பூ தன்னிரு செவிகளாலும், விழி களாலும் முறையே விழுங்கிக்கொண்டிருந்தது. மேதையின் பார்வையும் இரண்டொரு முறை அந்த அழகியின் மீது பாய்ந்தது. ஆனால் பாய்ந்த வேகத்தில் மீண்டது. அவன் அவளை லட்சியம் செய்ததாகக் காட்டிக்கொள்ளவில்லை. சொற்பொழிவு முடிவுற்றது. மேதையை மாணவர் சூழ்ந்துகொண்டனர். அனைவரிடமும் பேசிவிட்டு மேதை கல்லூரித் தலைவரின் வீட்டுக்குப் புறப்பட்டான்.

உணவு முடிந்த பின்னர் அமைதியை விரும்பி, மேதை மாடிக்குப் போனான். மாடியில் உலவிக்கொண்டிருந்தான். நல்ல நிலவு! உலவிக்கொண்டிருந்தவனுக்குக் கால் வலி எடுக்கவே நாற்காலியில் அமர்ந்தான். மேதையைக் கவனிப்பதற்காக அமர்த் தப்பட்டிருந்த பையன் ஓடிவந்து, மேதையின் கால்களை அமுக்கி விட்டான். மேதையின் வலி கண்ட கால்கள் பையனின் பணிவிடையால் சுகம் பெற்றன.

மேதையின் கண்கள் கட்டவிழ்த்துக்கொண்டு இங்குமங்கும் திரிந்தன. எதிர்த்த வீட்டு மாடியிலே, கல்லூரியிலே கண்ட அந்த ரோஜா நின்றுகொண்டிருந்தாள். அவள் மேதையையே பார்த்துக்கொண்டுமிருந்தாள். அவள் கண்களிலேயிருந்து புறப் படும் அந்தக் காதற் கணைகள் எவ்வளவு சக்தி வாய்ந்தவை! ஆனால் அவைகள் மேதையை அசைக்கவும் முடியாதவை என எண்ணித் தவித்தாள் அந்த ரோஜா! மேதைக்குக் கால் அழுத்தி விட்ட பையன் வேலை முடிந்து வெளியே போனான். போனவன் எதிர்த்த வீட்டு மாடிக்கு எப்படிப் போனானே தெரியவில்லை, அந்த மாடியைப் பார்த்துக்கொண்டிருந்த மேதையின் கண்களிலே ஒரு காட்சி தெரிந்தது.

தனக்குக் கால் பிடித்த பையன் எதிர்த்த வீட்டிலே அந்தக் கல்லூரி ரோஜாவுடன் ஏதோ பேசுகிறான். அவளும் மெதுவாக ஏதோ கூறுகிறாள். பிறகு அந்தப் பையனுடைய கைகளை எடுத்துக் கண்களிலே ஒத்திக்கொள்கிறாள்.

அந்தக் காட்சியை மேதை கண்டான். "லட்சியம் ஈடேறும் வரையில் பெண்களைத் திரும்பியும் பாரார்! திருமணமும்

வேண்டார்!'' என்று ஊரார்—உலகத்தார் பேசிய புகழ் உரைகள் அவன் காதில் ஒலித்தபடியிருந்தன.

மறுநாள் காலையில் பையன் வந்தான், அவனுக்குக் காலைப் பணிவிடைகள் புரிவதற்காக! அப்போது மேதை அவனிடம் கேட்டான், ''நேற்றிரவு அந்தப் பெண் உன் கைகளைக் கண்களில் ஒத்திக்கொண்டாளே, ஏன்?'' என்று. ''நான் உங்கள் கால்களைப் பிடித்தேனல்லவா? அதனல் என் கைகள் மிகவும் பாக்கியம் செய்த கைகளாம்; அதனல் என் கரங்களை அவள் கண்களில் ஒத்திக்கொண்டாள்!'' என்று பையன் நிலைமையை விளக்கினன்.

மேதை ஒன்றும் பதில் சொல்லவில்லை. நினைத்துக்கொண்டான், ''நான் அவள் கால்களையே கண்களில் ஒத்திக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவளோ, என் காலில் பட்ட உன் கரங்களை முத்தமிடுகிறாள்! நல்ல புகழப்பா இது! பொல்லாத புகழ்—என்னைக் கொல்லாமல் கொல்லுகிறது!'' என்று அவன் ஆயிரம் முறை தனக்குள்ளாகவே முணுமுணுத்துக்கொண்டான்!

அதற்குள்ளாக அந்தப் பெண்ணும், எதிர்வீட்டு மாடியில் உதயமானாள். மேதையை வழியனுப்புவதற்காக ஐம்பது மாணவரும், ஆசிரியர் பத்துப் பேரும் மாடிக்கு வந்துவிட்டார்கள். மேதை, எதிர்வீட்டு மாடியை ஏறெடுத்தும் பாராமல் காரியங்களை முடித்துக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டார்.

''மேதை வாழ்க!'' என்ற முழக்கத்துடன் மாணவர்களும் ஆசிரியர்களும் கலைந்தார்கள்.

நளாயினி

அழகான பெண். ஒளிமுகம் படைத்த உருக்குலையா மங்கை. வெள்ளை உடையால் அவள் அன்ன நடைக்கு அழகு சேர்க்கிறாள். சிவந்த கழுத்திலே ஒரு கறுப்பு மணிமாலை. அந்தக் கோதி முடித்த கூந்தலையுடைய கோதை—தலையிலே ஒரு கூடையுடன் தெருவிலே போகிறாள். அப்பழுக்கற்ற யௌவனத்தின் தனித் தன்மை வாய்ந்த அழகு ஊர்வலம்! இருள் படிந்த தெருவிலே அவள் நடந்து செல்வது—வையத்து மண்ணுக்கு வரவிழைந்த வானத்துத் தாரகைதான் வந்துற்றதோ என எண்ணத் தோன்றியது!

அந்த ஜோதி மழை பொழியும் சொர்ணச் சிலையின் தலையிலே கூடை; கூடையிலோ துர்வாடை! ஆமாம்—அழகியின் தலையில் ஓர் அழுகிய உருவம். கூடையின் அடிப்புறத்தைத் தாங்கியிருக்கும் அவள் இளங்கரங்கள் சுமை தாங்காமல் நடுங்கிக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் அந்தச் சுந்தரவல்லி போய்க்கொண்டுதானிருக்கிறாள். சோகத்திலும் ஒரு சோபிதம் இருக்கிறது என்பதை அவளது எழில் வதனம் கவிஞர்கட்குக் காட்சியாக்கிக் கொண்டிருக்கிறது. கூடையிலே அமர்ந்துள்ள அழுகிய உருவமோ புன்னகை புரிந்தவண்ணமிருக்கிறது. அந்தப் புன்னகை எதையோ ஓர் இன்பத்தை எதிர்பார்த்து மலரும் புன்னகை. புன்னகையில் விசாரத்தைக் காண வேண்டுமா? ஆசைப்படுவோர் அந்த உருவத்தின் இனிப்பைப் பார்த்துக் கொள்ளலாம். கூடையிலே இருந்த அந்த உருவம் ஆண். தனக்கென உரிய உடலில் கால்

பாகத்துக்குமேல் இழந்துவிட்ட மனிதன்; மகரிஷி! மௌத் கல்யர் என்னும் பெயருடைய மகான்.

'பெரிய' மனுஷன், 'பெரிய' ஆள், 'பெரிய' செல்வந்தன், 'பெரிய' பண்ணையார் என்பதுபோலப் 'பெரிய' வியாதி என்று ஒன்றுண்டே! அந்தப் பெருவியாதியால் பீடிக்கப்பட்டவர் அந்தப் பெரிய மகான். அவர்தான் தன்னுடைய அழகான மனைவியின் தலையில் ஏறிக்கொண்டு தெருவில் போகிறார்.

"போடி வேகமாக!"

"போய்க்கொண்டுதானேயிருக்கிறேன், பிராணபதி!"

"நளாயினி! நட வேகமாக! அதற்காக என்னைக் கீழே போட்டுவிடாதே! நீ விழுந்தாலும் பரவாயில்லை!"

"என் தெய்வமே! என்ன ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்? என் கூடுவிட்டு ஆவி போனாலும் கூடையைக் கீழே போடமாட்டேன். கூடையிலென்ன வியாபாரப் பொருளா இருக்கிறது? வீட்டுச்சாமான் தூக்கிச் செல்கிறேன்? விலை மதிக்க வொண்ணா என் ரத்தினமல்லவா தாங்கள்! தங்களையா கீழே போட்டு விடுவேன்? அபச்சாரம்! அபச்சாரம்!"

குஷ்டரோகக் கணவனைக் கூடையில் சுமந்து—கோமளத் தாமரையெனும் முகத்திலே சோகத்தைச் சுமந்து—அந்த நடக்கும் பொன்வண்டு நளாயினி போய்க்கொண்டிருக்கிறாள். எங்கே போகிறாள்? தீர்த்தமாடவும், க்ஷேத்ராடனம் செய்யவும் கணவன் விரும்புகிறான்; அந்தப் பக்திப் பசியைத் தீர்த்துவைக்க வேண்டும் என்பதற்காகவா அந்த ஏந்திழையாள்—இந்த வேலையை மேற் கொண்டிருக்கிறாள்? இல்லை! இல்லை! பின் என்ன? பர்ண சாலையை விட்டுப் பர்ணசாலைக்கு மாறுவதற்காகவா அந்தப் பயணம் நடைபெறுகிறது—பாவையை வாகனமாகக் கொண்டு? அதுவும் இல்லை! பின் எங்கே தான் போகிறார்கள்? தவம் புரியவு மல்ல! தலம் காணவுமல்ல! பிறகு எங்கே போகிறார் தபோதனர்? தாசிவீட்டுக்குப் போகிறார்! ஏன்? "வேசித்தொழில் கூடாது! காசினாதனைத்தொழு!" என்று போதனை புரிவதற்காகவா? அதற்காகவும் செல்லவில்லை, அந்தக் குஷ்டரோகி. பரத்தையின் வீட்டைப் பக்திக் கூடமாக்க அல்ல! பகவான் பற்றிய விளக்க முரைக்க அல்ல! கமண்டலமேந்தியார் செல்வது கணிகையின் கட்டிலறைக்கு! முனிவரின் மோகம் முக்கண்ணனைக் காண அல்ல! நான்கு கண்களும் சந்திக்க—அந்த நயனலளிதத்தை வந்திக்க!

பொருளுக்குச் சுகம் வழங்குவாளின் அகம் நாடிப் புருஷனைக் கொண்டு செல்லும் நளாயினி—பூத்திருக்கும் ரோஜா! அந்த ரோஜா, அழுகிப்போன வண்டை கருகிப்போன ஒரு மலரிடம் எடுத்துச் செல்கிறது! அதோ, கணிகையர் தெருவும் வந்து விட்டது! நளாயினியின் உடல்வலியும் தீர்ந்தது. அவள் கணவனின் உள்ள வெறியும் கொஞ்சம் அடங்கியது. தேடிய இடத்துக்கு வந்து விட்டனர். கூடையை இறக்கி வைத்தாள். வலிமிகுந்த உடம்பை ஒருமுறை நெளித்து வளைத்துக் கொண்டாள்.

"வான்வில்லோ!" என்பர் வர்ணனையாளர் அருகே இருந்தால்! "மான் துள்ளுமா இப்படி!" என்பர் ஏடெழுதுவோர்! "ஒரு விநாடி அப்படியே வளைந்து நில், போதும். உலகை விலையாகக் கேட்கும் ஓவியம் தீட்டுகிறேன்" என்பான் சித்திரக்காரன் அருகே நின்றால்! அத்தகைய தோகைமயிலாள், தன் துணைவனுக்கு இரவுத்துணை தேடி எழுந்து விட்டாள் இழி மகளின் இல்லத்துக்கு.

அலங்காரக் கரங்களால் அந்த வீட்டின் கதவைத் தட்டினாள். தட்டுவதற்கு முன் திறக்கப்பட்டது வீடு. திறப்பதற்குமுன் எட்டிப்பார்த்தது ஓர் முகம். அந்த முகம் கண்டார் மௌத்கல்யர். "சுகம் கண்டேன்! சுகம் கண்டேன்!" என்று சுருதிவிட்ட வித்வான்போல் கூவினர். சுருக்கம் விழுந்த முகத்திலே பயங்கரமான ஒளி! ரத்தங் கசியும் கன்னங்களிலே புன்னகை உண்டாக்கிய ஆழமான பள்ளம்! கீறிக் கிடக்கும் உதடுகளிலேயே காமக்கிறுக்கு வெளிப்பட்டது. விரலற்ற கரம் நீட்டி அந்த வேசிப் பெண்ணை ஆசையுடன் வாழ்த்தினர். குஷ்டரோகியின் கும்மாளங்கண்ட இல்லத்துக்காரி "விஷயம் என்ன?" என்றாள். "எல்லாம் நம் சொந்த விஷயமே!" என்றார் ரிஷீஸ்வரர்.

நளாயினி பேச ஆரம்பித்தாள்.

"பெண் பாவாய்! இவர் என் கணவர். நான் பதி சொல் தவறாத பாவை. உன்னகம் நாடி வரவேண்டு மென்றார். அவர் மனங் கோணுமல் நடந்து கொள்ளடி மாதரசி!"

தாசிப்பெண், நளாயினியின் வார்த்தை கேட்டுத் திடுக்கிட்டாள். 'கணவனைத் தாசி வீட்டுக்கு அழைத்துவரும் மனைவியை இன்றுதான் முதன் முதலாகப் பார்க்கிறேன்!' என்று தனக்குத்

தானே ஆச்சரியப்பட்டுக் கொண்டாள். அந்த அதிசயத்துடனே அந்தக் குஷ்டரோகியின் அவலட்சணமான முகத்தை வெறுப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள். அவள் ஒரு முடிவுக்கு வருவதற்கு முன்பாகவே, நளாயினி ஒரு பொன் முடிப்பை அவள் முன்னே நீட்டினாள். "சம்மதம்" என்று தாசி மகளும் கண்ஜாடை காட்டினாள். கூடையிலிருந்த குஷ்டரோக மகாஜனத் தாசிப்பெண் அன்போடு அணைத்தெடுத்து அம்சதூளிகா மஞ்சத்துக்குப்போய் விட்டாள்.

பெருமூச்சுடன் அந்த வீட்டைவிட்டுக் கிளம்பினாள் நளாயினி. கையிலேயிருந்த கூடையை வாசலிலே வைத்து விட்டுக் "காலையில் வருகிறேன்" என்று காவலாளியிடம் கூறி விட்டுப் போய்விட்டாள்.

புழுதி படிந்த பூச்செண்டுபோல் போகும் நளாயினியை ஒரு குரல் தடுத்து நிறுத்துகிறது. "நளாயினி, அன்புள்ள தோழி! கொஞ்சம் நில்லேன்!" என்று கூறியபடி ஒரு பெண்மணி ஓடி வருகிறாள். பக்கத்து ஆசிரமத்தில் உள்ளவள் அந்த அழகி, "உலகா, நீயா! இந்நேரத்தில் எங்கேயடி வந்தாய்?" என்று வழியும் கண்ணீரைத் துடைத்தபடிக் கேட்கிறாள் நளாயினி. "சோலைப்பக்கம் போனேன்—நீ வருவதைப் பார்த்ததும் வந்தேன்; ஆமாம்—நளாயினி! உன்னை ஒன்று கேட்கிறேன் கோபித்துக் கொள்ளமாட்டாயே!" என்று பீடிகையுடன் ஆரம்பிக்கிறாள் உலகா. "என்னடி உலகா! தாராளமாகக் கேள்" என்று சிரிப்பை வரவழைக்க முயல்கிறாள் நளாயினி.

"எவ்வளவுதான் புருஷனிடத்திலே அன்பும் பக்தியும் இருந்தாலும், அவனைத் தாசி வீட்டுக்குக் கொண்டுபோய் நீயே விட்டு வருவது என்பது..எனக்கு அவ்வளவாக...."

"உலகா! போதும் நிறுத்து—பெண்களுக்குக் கணவனே தெய்வம். கணவரின் ஆசைகளை நிறைவேற்றுவதே கற்புக் கரசியின் லட்சணம். என் கண்ணுளர் பிணி கொண்டவராயிருக்கலாம். ஆனால் அவர் எனக்குத் தேன்கனி, தெரியுமா உனக்கு! புருஷனிடம் எப்படி நடக்கவேண்டும் என்று நீ எனக்குப் புத்தி சொல்லாதே! என்னைப் பார்த்து நீயும் திருந்திக்கொள்."

"நளாயினி! என்னை மன்னித்துவிடு! உன்னுடைய அன்பையும்—பதி பக்தியையும் தவறுக நினைத்து விட்டேன்,

க்ஷமித்துவிடு நளாயினி! உன்போன்ற வைராக்யமுள்ள புண்ய வதியையும்—பத்தினியையும் ஈரேழு பதினலு உலகிலும் காண முடியாது. நீ பத்தினி—நீ பத்தினி!''

''உலகா நீ என்னை உணர்ந்து கொண்டால் போதும்—நான் உன்னை மன்னிக்க வேண்டாம். நீ என்போல் கற்புக்கரசியாக இரு! என் போன்ற பத்தினிகளைப் பின்பற்று! நான் வருகிறேன்.''

இதைச் சொல்லிவிட்டு நளாயினி தன் ஆசிரமம் நோக்கிப் போனுள். உலகாவும் தன் தவற்றை உணர்ந்து, ''நளாயினி பத்தினி'' என்று தோத்திரம் செய்தவாறு அதைவிட்டு நகருகிருள். அப்போது ஒரு வாலிபன் ஓடிவந்து உலகாவின் கண்களைப் பொத்துகிருன். இருவரும் அங்குள்ள சோலைப் பக்கம் போய்விடுகிருர்கள், சிரிப்பைக் கொட்டியபடியே!

விம்மி விம்மி அழுதபடி ஆசிரமத்துக்குள்ளே நுழைந்து தரையில் குப்புற விழுகிருள் நளாயினி. அவளது நீலத் திருவிழி களிலேயிருந்து நீர்வீழ்ச்சிகள் புறப்படுகின்றன. முழு நிலவை மறைக்கும் முகிலென அவள் முகத்தை மறைக்கிறது விரிந்து கிடக்கும் கருங்கூந்தல்.

சோலையின் பக்கமிருந்து ஒரு கீதம் ஆசிமரத்துக்குள்ளே கேட்கிறது. அழுது கொண்டேயிருக்கும் நளாயினி அந்தக் கீதத்தைக் கவனிக்கிருள். ஆம்—உலகாவின் குரல் அது! அதோடு இன்னெரு ஆண் குரலும் கீதமிசைக்கிறது! 'என்னைப் பத்தினியென ஒத்துக்கொண்டு—என் கரங்களைக் கண்ணிலே ஒத்திக்கொண்ட உலகா தன் காதலனுடன்—கள்ளக் காதலுடன் கனி மரச் சோலையில் இன்ப கீதம் பாடுகிருள். என் வயதுதான் அவளுக்கும்; அவளைவிட அழகி நான். நானே இங்கே நாதியற்றுக் கிடக்கிறேன். ''தேனே! மானே!'' என்று அவளை வர்ணித்துக் கொண்டிருப்பான் அவள் காதலன்.'

இப்படி எண்ணுதலெல்லாம் எண்ணுகிருள் நளாயினி. மீண்டும் அழுகிருள். ஆசிரமத்துக் கதவு திறக்கப்படுகிறது. அழுகையை நிறுத்தினுள். ஆனல் கண்களைத் துடைக்கவில்லை; கதவைத் திறந்து கொண்டு ஒரு பெண் உள்ளே வருகிருள். ஏறத்தாழ நளாயினியும் அவளும் ஒரே மாதிரி காணப்படு

கிறார்கள். இருவரும் சேர்ந்து நின்றால், "யார் நளாயினி?" என்று கண்டு பிடிப்பதே கஷ்டமாகிவிடும். வந்த பெண், நளாயினி அருகில் உட்காருகிறாள். நளாயினியும் எழுந்து உட்காருகிறாள். "வா, இதயா வா!" என்று தேம்பியபடி வரவேற்கிறாள் நளாயினி.

"நளா! ஏனம்மா இப்படி எப்போதும் அழுது கொண்டே யிருக்கிறாய்?"

"காரணமா கேட்கிறாய்; இதயா! தனலிற் புழுவாய்த் தவிக்கிறேன் நான் என்பதை நீ அறிய மாட்டாயா? அதோ ஜோடியாகக் கூவும் பறவைகளின் சங்கீதத்தைக் கேட்கிறாயா நீயும்! சோலைப்புறமிருந்து காதலர் மீட்டும் வீணகானம் எத்தகைய விரகதாபத்தை ஒரு பருவ மங்கைக்கு எழுப்பும் என்பதை நீ அறியமாட்டாயா! அறிவாய்! இதயா! அனைத்தும் அறிவாய்! அறிந்தும்—எனக்கு ஆறுதல் கூறுவதற்காக இப்படி மௌனம் சாதிக்கிறாய்—இல்லையா!"

"உண்மைதான் நளாயினி! உலகா உன்னைப் பத்தினி என வாழ்த்தினாள்; அதையும் மறைந்து நின்று கேட்டேன். அந்தப் புகழ் வெளிச்சம் மட்டுமே போதுமென்று திருப்தி அடைய வேண்டியதுதான்!"

"இதயா! உண்மையாகச் சொல்! நான் பத்தினியா? எப்படி? எப்படி?"

"ஆமாம்! குஷ்டரோகம் பிடித்த கணவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறாயே!"

"கிண்டல் செய்யாதே—இதயா! குஷ்டரோகம் பிடித்தவ னோடு கூடிக் கிடக்க எனக்கு விருப்பமில்லை. அவனை என்னை ஆசையோடு அழைக்கிறான். அணைக்கவோ என் கை நடுங்குகிறது. ஆகவேதான் அவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பினேன். என் அழகுக்கு ஆபத்து வராமல் அவன் ஆவல் தீர்ந்தால் சரியென்று எண்ணினேன். இந்தத் தந்திரம் உனக்குத் தெரியாதா, இதயா!"

"ஞானறியாதது ஒன்றுண்டா நளாயினி! ஆனாலும், உலகா நம்பியிருக்கிறாள்; உன் பதி பக்தியை! குஷ்டரோகியைத் தாசி வீட்டுக்குத் தலையிலே தூக்கிக் கொண்டு போனதைப் பெரிய பதிபக்தி என உலகா எண்ணுகிறாள்."

"தலையில் தூக்கிக்கொண்டு போனேன் என்கிறாயே நீயும்! திருத்திக்கொள்! கூடையில் வைத்துத் தலையில் தூக்கிக்கொண்டு போனேன். குஷ்டரோகியைக் கையால் தொட்டுத் தலையில் தூக்கிப்போக எனக்கென்ன பைத்தியமா? அதெல்லாம் ஜாக்கிரதையாகக் கூடையில் வைத்துத்தான் கொண்டு போனேன்."

"நளா! உன் கணவன் எவ்வளவு கடுமொழிகளைக் கூறினாலும்—எதிர்த்து ஒரு சொல் கூறாத கற்பரசி என நேற்றுக் கூட உலகா என்னிடம் உன்னைப் புகழ்ந்தாள்."

"கணவன் திட்டினான்—நான் மறுமொழி பேசவில்லை; உண்மைதான்! குஷ்டரோகிதானே திட்டுகிறான் என்று அலட்சியப் படுத்தினேன். நானும் அவனுடன் பேசினால் பேச்சு வளரும். அந்த வாதத்தின் காரணமாக அவனெடு நெருங்கி நின்று வார்த்தையாட வேண்டும். அதற்காகத்தானடி, அந்தக் குட்டம் பிடித்தவன் குரைத்துக்கொண்டிருக்கட்டும் என்று விட்டு விட்டேன்!"

"உம்...எப்படியோ பத்தினி என்று பட்டம் பெற்று விட்டாய்! பார் புகழும் பதிவிரதை—பதிபக்தி மிகுந்தவள் என்றெல்லாம் உலகா புகழ்ந்துவிட்டாள் உன்னை!"

"உலகாவுக்கு என்னடி தெரியும் என் உள்ளத்தில் இருக்கும் எரிமலை? பத்தினிப் பட்டம் போதுமா பருவக்கனை சொட்டும் இந்தப் பரிதாபத்துக்குரியவளுக்கு? சொல்லடி இதயா! சொல்லு! சுகவாழ்வுக்கு வழி சொல்லு!"

"வழி சொல்லுகிறேன்—நளாயினி! நான் ஒரு புதிய வரம் தருகிறேன். இந்த ஜென்மத்தைச் சீக்கிரம் கழித்துவிட்டு விரைவில் அடுத்த ஜென்மம் எடு! அந்த ஜென்மத்தில் நீ திரௌபதியாகப் பிறக்கப் போகிறாய்! ஒரு கணவன் இருந்தும் உனக்கு உற்சாகமில்லை, உல்லாசமில்லை. உள்ளமோ வேதனைக் களமாயிருக்கிறது உனக்கு! ஆகவே அடுத்த பிறப்பில் ஐந்து கணவரோடு ஆனந்த வாழ்வு வாழ அருமையான வரம் தருகிறேன்."

"இதயா! இது உண்மையா?"

"பொய் இல்லை! புது வாழ்வு ஆரம்பமாகிறது, உனக்கு! புது வாழ்வு—புனர் ஜென்மம்—இரண்டும் பொருளில் ஒன்று தான்! அதைப் புரிந்து கொள்ளடி, என் தோழி!"

"புரிந்துகொண்டேன்!" என்று பூரிப்புடன் துள்ளியபடி நளாயினி, இதயாவைத் தழுவிக்கொள்கிறாள். சோகக் கண்ணீர், ஆனந்தக் கண்ணீராக மாறிவிட்டது அவளுக்கு! அந்த ஆசிரமத்தில் இன்பகீதம் ஆரம்பமாயிற்று!

குறிப்பு :—புராணக் கதைப்படி நளாயினிதான் திரௌபதையாகப் பிறந்திருக்கிறாளாம்.

சபலம்

காற்றைக் கிழித்துக்கொண்டு 'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' திருச்சி நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. சென்னையில் இரவு 8 மணிக்கு வண்டியில் ஏறியவர்கள் அலுப்போடும், களைப் போடும் போராடிக் கொண்டு முதுகை வளைத்துக் கொண்டே அமர்ந்திருந்தனர். சென்னை ரயில் நிலையத்தில் இடம் வாடகைக்கு விடும் பொடிப்பயல்கள் பலருண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கையை இப்படியே நடத்திப் பழகிக் கொள்ளுகிறார்கள்.

வண்டியில் ஏறியோ—அல்லது ஏறுமல் ரயில் மேடையைச் சுற்றிக்கொண்டோ இடம் அகப்படுமா என்று தவித்துக் கொண் டிருப்பவர்களிடம், கதைகளில் பகவான் 'பிரத்யட்சமாவது போல' ஒரு பொடியன் வந்து நிற்பான். "சாமி, இங்கே வாங்க நல்ல இடம்" என்பான். அவன் கூடச் சென்றால் போதும்; வண்டிக்குள் அருமையான இடத்தைக் காட்டிப் பலகையில் அவன் விரித்திருந்த 'பட்டு மெத்தை'யை எடுத்து முண்டாசு கட்டிக் கொள்வான். அந்த இடத்தில் தூங்குவதற்கு—டிக்கட் பணம் போக—அவனுக்கு ஒரு நாலணு வாடகை. இப்படிப் பல பையன்கள் வாடகை வியாபாரம் நடத்துவார்கள். அவர்கள் கண்ணில் அகப்பட்டுக் கருணைக்குப் பாத்திரமான பிராயாணிகள் கண்ணயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். அந்தப் பாக்கியம் கிடைக்காத பலர் கண்ணுக்குள் நுழைந்து இமைகளைப் பிடித் திழுத்து மூடும் உறக்கத்தை எதிர்க்கத் துணிவற்று ஒருவரோ டொருவர் மோதிக் கொண்டிருந்தனர். கழுத்தில் நிற்கச் சக்தி

யிழந்து தொங்கும் தலையை முழங்காலிலோ—பக்கத்திலிருப்பவர் தோள் பட்டையிலோ—அல்லது ஜன்னல் கட்டையிலோ முட்டுக் கொடுத்துக்கொண்டு அமர்ந்திருந்த காட்சி பரிதாபமாயிருந்தது.

இந்தக் 'கும்பகர்ண லோக'த்தில் கொட்டை கொட்டையாக விழித்துக் கொண்டிருந்தவர்களும் இல்லாமலில்லை. நூற்றுக்கு ஒருவராவது இருக்கத்தான் செய்தனர். வண்டியில் ஆறுவது பெட்டியில் ஜன்னல் வழியாகக்கூடக் கால்களை வெளியே சிறிது நீட்டிக் கொண்டு கஷ்டப்பட்டுப் பலர் குறட்டை விட்டுக் கொண்டிருந்தனர். நீண்ட ஒரு பலகையின் மூலையில் உட்கார்ந் திருந்த ஒருவன், அலுப்பைப் பற்றிய அக்கறைகள் எதுவு மில்லாமல் ஏதோ ஓர் உணர்ச்சியில் அங்குமிங்கும் பார்ப்பதும், பலகைக்குக் கீழே கவனிப்பதுமாயிருந்தான். அவனுக்கு எதிரில் மற்றொரு பலகையில் மற்றொரு வாலிபன், கண்களை மூடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அவன் விழிகள் மூடி யிருந்தனவே தவிர—அவன் தூங்கவில்லை யென்பது தெளிவாயிற்று. விழி களும் முக்கால் பாகந்தான் அடைபட்டிருந்தன. கால்பாகத்தின் வழியாக அவன் பார்வை எதிரில் உட்கார்ந்திருக்கும் வாலிபனை யும் பலகைக்குக் கீழே படுத்திருக்கும் ஒரு பெண்ணையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தன.

அவனும் சந்திராவும் தங்கள் குழந்தையுடன் சென்னையில் தான் ஏறினார்கள். அவர்கள் ஏறி உட்கார்ந்த சிறிது நேரத்துக் கெல்லாம் எதிர்ப் பக்கத்தில் அந்தத் தூங்காத வாலிபன் வந்து உட்கார்ந்தான். வந்தவன் எதிர்பாராதவிதமாக அங்கு வந்து அமரவில்லை. எல்லாப் பெட்டிகளையும் ஒரு முறைக்கு இரண்டு முறையாகக் கவனித்துவிட்டுக் கடைசியில் இங்கு வந்து ஏறிக் கொண்டான்.

சந்திராவின் கையிலிருந்த குழந்தை அருகிலிருந்த ஒரு கிழவியின் நரைமயிரைத் தன் தளிர்க்கரங்களால் பிடித் திழுக்கவே—கிழவி பொக்கைவாய்ச் சிரிப்பை உதிர்த்துக் கொண்டே அந்த மழலையிடமிருந்து தலையை விடுவித்துக் கொண்டாள். இதோடு கிழவி சும்மாயிருக்கவில்லை. கிழவிகளின் குணமே—நல்லதோ கெட்டதோ ஏதாவது பேசிக்கொண்டிருக்க வேண்டுமல்லவா?.....அதுவும் குழந்தையென்றால் கேட்க வேண்டுமா? "என்னுடி கண்ணு! உன் பேரு என்ன?" என்று கிழவி கொஞ்சினாள். "மூர்த்தி" என்று கணீரென்று உச்சரித்தது

குழந்தை. ''உங்க அப்பா பேரு?'' என்றுள் கிழவி. ''எங்கப்பா பேரு குமரேஸ். உன் பேரு என்ன?'' என்று குழந்தை கேட்ட வுடன்—கிழவிக்கு ஆனந்தம் தாங்கவில்லை. குமரேசும்—சந்திரா வும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். அப்போது எதிர்ப் பலகையிலிருந்தும் ஒரு சிரிப்பு வெடித்தது. அதைச் சந்திரா கவனித்தாள். சிரித்தவனும் சிரிப்பினூடே, சந்திராவைத்தான் உற்றுப் பார்த்தான்.

அவனைப் பார்த்த சந்திரா திடுக்கிட்டு அப்படியே ஸ்தம்பித்து விட்டாள். ஆனாலும் திடப்படுத்திக்கொண்டு குழந்தையின் விளையாட்டைக் கவனித்தாள். இடையிடையே அவள் நீலக் குறு விழிகள் மட்டும் எதிர்ப்பக்கத்திலுள்ள அந்த வாலிபனையே அடிக்கடி விழுங்கிக்கொண்டிருந்தன. அந்த வாலிபன் நல்ல அழகன். விசாலமான கண்கள்; அரும்பு மீசைகள்; அழகை அதிகப்படுத்த பளபளப்பான பட்டுச்சட்டை; அவனது பெரிய கண்கள் சந்திராவைப் பார்க்கும்போதெல்லாம் போதையேறிக் காணப்பட்டன. சந்திராவும் தனக்குப் பக்கத்திலேயே கணவன் இருப்பதையும் மறந்தவள்போல, அவனை அடிக்கடி பார்க்கும் வேலையில் ஈடுபட்டிருந்தாள். இதைக் குமரேசும் ஜாடையாகப் புரிந்துகொண்டான். வண்டி ஓடிக்கொண்டிருந்தது. சந்திரா தன் கணவனோடு ஏதாவது பேசுவதும், குழந்தைக்கு விளை யாட்டுக் காட்டுவதும், அதே நேரத்தில் எதிரே உள்ளவனைக் காணுவதுமாயிருந்தாள். குமரேசுக்கு ஏதாவது சொல்லிவிட வேண்டுமென்று மனம் குமுறியது. தன் மனைவி—தனக்கருகில் உட்கார்ந்துகொண்டே இன்னொருவனின் அழகை ரசிப்பதென்றுல் ....இதை அவனுல் நினைக்கவே முடியவில்லை.

அழகுக்காகத்தான் சந்திராவை அவன் மணம்புரிந்தான். அவள் வீட்டுக்கு வந்தபிறகு அறிவும் நிரம்பியவள் என்பது கண்டு மகிழ்ச்சிகொண்டான். குதூகலமாக ஓடிக்கொண்டிருந்த அவர்களின் குடும்ப வாழ்க்கைக்கு அந்த ரயில் பிரயாணம் முட்டுக் கட்டையாகத்தான் வாய்த்தது. இவன் நெஞ்சிலே இந்தப் போராட்டம்—ஆனல் சந்திராவோ எதிர்ப் பலகைக்கு வீசும் கண்களை நிறுத்தியபாடில்லை. குமரேஸ் கொந்தளித்தான். முழுதும் கவனித்து ஒரு முடிவு கட்டிவிட வேண்டுமென்ற தீர் மானம்—அவனை அமைதிப்படுத்தியது.

குழந்தை நன்குகத் தூங்கிவிட்டது. வண்டியும் விழுப் புரத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. அந்தப் பெட்டியில்

இருந்தவர்கள் தூக்க மயக்கத்தில் தள்ளாடிக் கொண்டிருந்தார்கள்.

மூர்த்திக்கு ரயிலில் கிடைத்த புதுப் பாட்டியின் வாயிலிருந்து 'புஸ் புஸ்' என்று மூச்சு வந்துகொண்டிருந்தது. சந்திரா, குழந்தையைக் கீழே போட்டுத் தூங்க வைப்பதற்காக முயன்றாள். குமரேசின் தோளிலிருந்த துண்டை எடுத்துப் பலகைக்குக் கீழே விரித்துத் தானும் கீழேயே படுத்துக்கொண்டாள். குழந்தையையும் பக்கத்தில் படுக்கவைத்துக்கொண்டாள். அவள் படுக்கும் போதே குமரேசைப் பார்த்து வழக்கமான புன்சிரிப்பைக் கொட்டிவிட்டுச் சாய்ந்தாள். ஆனால் குமரேஸ் பதிலுக்குச் சிரிக்கவில்லை. அவன் நெஞ்சு குமுறுவது அவளுக்கு எப்படித் தெரியும்?

எதிரேயிருந்தவனுக்கு இப்போது தலையைக் குனிய வேண்டிய வேலை ஏற்பட்டது. கண்களை மூடிக்கொண்டு தூங்க முயலும் சந்திராவின் முகத்தில் அவன் எந்தத் தனியழகைக் கண்டானோ தெரியவில்லை. ஒரே ரசனைதான்! அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. வயிறு காய்ந்து வாடுபவனுக்கு எதிரே வட்டில் நிறையப் பொங்கலை வைத்தால்...? அந்த நிலைபெற்றான். அவன் உணர்வு ஒரு நிலையில் இல்லை என்பது அவன் அசைவுகளிலேயே பளிச் பளிச்சென மின்னிக்கொண்டிருந்தது. சந்திராவின் தனிப்பார்வை வேறு அவனைப் பம்பரமாக ஆட்டிவைத்திருந்தது. அவனுக்கு அன்று ஒரு நல்ல வாய்ப்புதான். எத்தனையோ பெட்டிகளைத் துருவிப்பார்த்து இதுபோன்ற ஒரு நல்ல இடம் கிடைக்காமல் கடைசியில்—நட்சத்திரத்துக்குக் குறி வைத்தபோது சந்திரனே விழுந்து விட்டதுபோல—கிடைத்த இடமல்லவா இந்த இடம்? தூங்கும் சந்திராவை இவன், ரசித்தான்—ரசித்தான்—அப்படி ரசித்தான்!

இந்த ரசமான கட்டத்தில்தான், குமரேஸ் முக்கால் கண்ணை மூடிக்கொண்டு நடப்பவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தான். சந்திரா எப்படியும் கையுங்களவுமாகப் பிடிபட்டுவிடுவாள் என்று துடித்துக்கொண்டிருந்தான். எதிரே இருந்தவன் குமரேசை அடிக்கடி பார்ப்பதும் தன் கால்களால் அவள் கையை மெதுவாகத் தீண்டுவதும் மீண்டும் சுற்றுமுற்றும் பார்த்துச் சும்மா யிருப்பதுமே வேலையாயிருந்தான்.

வண்டி நெல்லிக்குப்பத்தைத் தாண்டிவிட்டது. சந்திரா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அவள் பொற்கரம் குழந்தை மூர்த்தியை அணைத்தபடி இருந்தது. அந்த வாலிபன் ஏதோ ஒரு புதுத் துணிவுடன் பெருமூச்சுவிட்டான். குமரேசையும் கூர்ந்து நோக்கிக்கொண்டான். குமரேஸ் தன் துப்பறியும் வேலைக்குத் தயாராகத்—தூக்கத்தால் துவண்டிருப்பவனைப்போல இருந்தான். வாலிபனின் கைகள் சந்திராவின் கன்னத்தை வருடின. சந்திரா விழித்துக்கொண்டாள். வாலிபன், நடுங்கிய படிக் கைகளை எடுத்துக்கொண்டான். சந்திரா விழித்த வேகத்தில் குழந்தையும் சிணுங்கியது. சந்திரா மேலே நிமிர்ந்து தன் கணவனைப் பார்த்தாள். அவன் தூங்கி வழிந்துகொண்டிருந் தான். அவளை ஒரு முடிவுகட்டுவதற்காக இமைகளின் இடுக்கில் ஒளிந்துகொண்டிருந்த அந்தப் பயங்கர விழிகளை அவள் பார்க்க வில்லை. கணவனைப் பார்த்த கண்களோடு அந்த வாலிபனையும் பார்த்தாள். அவன் உமிழ்நீர் விழுங்கினான். சிணுங்கிடும் குழந்தைக்கு ஒரு முத்தம் கொடுத்துவிட்டு அதைத் தட்டிக் கொடுத்தபடித் தூங்கிவிட்டாள்.

எத்தனையோ முறை, அழுதிடுங் குழந்தைக்கு அவள் முத்த மிட்டுப் பிறகு தூங்கவைப்பதைக் குமரேஸ் பார்த்திருந்தாலுங் கூட, இந்த முத்தம் அவனை நெருப்பில் தள்ளி எண்ணெயை ஊற்றுவதாயிருந்தது.

சிறிது நேரம் கழிந்தது. வாலிபனின் கரங்கள் மீண்டும் சந்திராவின் கன்னத்தைத் தொட்டன. சந்திரா விழித்தாள். விழித்தவள் குழந்தையைத் தட்டியபடி மறுபடியும் கண்களை மூடிக்கொண்டாள். குமரேசால் அங்கு உட்கார முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. எரிமலையாகிவிட்டான்! பூகம்ப மானது அவன் உள்ளம்! பயங்கரமான ஒரு முடிவுடன் எழுந்தான். குழந்தையைக் கையில் தூக்கினான்; குழந்தை அழுதது. சந்திரா விழித்துப் பார்த்துத் தன் கணவன் கையில் குழந்தையைக் கண்டு—தூங்கத் துவங்கினாள். குழந்தையுடன் குமரேஸ் ஐந்தாறு பலகைகளைத் தாண்டி அப்பாற் போனான். வாலிபனுக்கு மகிழ்ச்சி பெருக்கெடுத்தது.

ரயில் வண்டி புயல் வேகத்தில் பெருமூச்சு விட்டு ஓடிக் கொண்டிருந்தது. குமரேஸ் சுற்றுமுற்றும் பார்த்தான்; கையி லிருந்த குழந்தையை அந்த அந்தகாரமான இருளில் ஜன்னல்

வழியே வீசியெறிந்தான். அந்தப் பசலை எந்தக் காட்டில் விழுந்ததோ? எந்தப் பாறையில் விழுந்து சுக்கு நூறுனதோ?

குமரேசின் மனம் சிறிது சாந்திபெற்றது. 'ஒரு விபச்சாரியின் தொடர்பு இன்றோடு ஒழிந்தது. என் பெயரைச் சொல்லி வருங்காலத்தை வீணுக்காமலிருக்கக் குழந்தையும் ஒழிந்தது. இனிமேல் நான் தனி ஆள். இந்தத் தாசி அவளோடு போகட்டும்!' என்று அவன் மனம் பேசிற்று. வண்டி நிற்கும் ஸ்டேஷனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

அதற்குள் அவன் பார்வை, முன் உட்கார்ந்திருந்த இடத்தில் பாய்ந்தது. வாலிபனின் கரங்கள் இப்போது நடுக்கமின்றிச் சந்திராவின் கன்னத்திடம் சென்றன. அடக்க முடியாத ஆவலுடன் அவன் கன்னக் கதுப்பை விரல்களால் அழுத்தினான். சந்திரா திடுக்கிட்டு விழித்தாள். அவன் இப்போது சிரித்தான். "சீ!" என்ற பெரிய சப்தத்துடன் சந்திரா துள்ளிக் கிளம்பினாள். வாலிபனின் கன்னத்தில் அவள் கரங்கள் மாறி மாறி விளையாடின. எல்லோரும் விழித்துக் கொண்டார்கள். குமரேசும் அருகே வந்து விட்டான். அவனுக்கு மயக்கம் வருவது போலிருந்தது. "அத்தான்!" என்று அவனைக் கட்டிக் கொண்டாள் சந்திரா.

"ஆரம்பத்திலிருந்து நீ பார்த்த பார்வை....." என்னவோ ஆத்திரமாகச் சொல்லப்போனான் குமரேஸ்.

"என் சிறு வயதில் இறந்துபோன அண்ணன் மாதிரி இருந்தது.....பார்த்தேன்...இந்தப் பாவி....." என்று விம்மி விம்மியழுதாள். பெட்டியிலிருந்தவர்கள் அவனைத் திட்டித் தீர்த்தார்கள்.

கடலூர் ஸ்டேஷன் வந்தது. அந்தச் சபலம் பிடித்த மைனர் இறங்கிப் போய்விட்டான். "இதற்காகவே இந்தப் பயல்கள் ரயிலில் ஏறுவது" என்று ஒரு குரல் கிளம்பிற்று.

திடீரென ஏற்பட்ட அதிர்ச்சியில் குழந்தையைக்கூட மறந்திருந்த சந்திரா, "குழந்தை எங்கே அத்தான்?" என்று ஆவலோடு கேட்டாள்.

"பக்கத்தில்தான் இருக்கிறது; இங்கேயே இறங்கு" என்றான் குமரேஸ், அவன் முகம் கறுத்துவிட்டது.

"ஏன்?" என்றாள் அவள்.

"இறங்கேன்—சொல்லுகிறேன்!" என்று மூட்டை முடிச்சுகளைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டான் குமரேஸ். அவளும் இறங்கினாள். இறங்கியவுடன் கேட்டாள்—"எங்கே குழந்தை?" என்று.

கண்ணீர் வழிந்தோட அவன் சொன்ன பதில்: "இரண்டு மைல்களுக்கு அப்பால் இருக்கிறது" என்பதுதான்.

"ஏ! அவசரக்கார குமரேசா!"

"ஆத்திரக்கார முட்டாளே!"

என்ற ஒலி, நாலா புறமிருந்தும் அவன் காதில் சாட்டை ஒலியாய் ஒலித்தது.

'இந்தோ சிலோன் எக்ஸ்பிரஸ்' கடலோரியிலிருந்து புறப்பட்டது.

ஆட்டக்காவடி

''ஆட்டக் காவடி என்றால் பக்திக் காவடி அல்ல! பக்திக் காவடி எடுத்துப் பிரார்த்தனை செலுத்துகிறார்களே, அவர்களுக்கு முன்னே நடைபெறுகின்ற **காவடி ஆட்டக் கச்சேரி**—அவ்வளவு தான்! ஆட்டக் காவடி எடுத்து ஆடுகிறவர்கள் பல பேர் ஏழெட்டுக் குடுக்கை மதுவை உள்ளே செலுத்தியபடி ஆடிக் கொண்டே இருப்பார்கள். பக்திக் காவடி எடுப்பவர்கள் மட்டும் ஒழுங்கோ என்று கேட்கிறாயா? அவர்கள்தான் மதுவைவிடப் பயங்கரமான பக்திப் போதையில் இருக்கிறார்களே! அதனால் நான் சொல்வதைக் கேள், கனிமொழி! நான் நடத்தப் போகும் ஆட்டக் காவடிக் கச்சேரி, பக்தியின் பாற்பட்டதல்ல என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்! கழுத்திலே காவடியிருக்கும்; அவ்வளவுதான்—கருத்திலேயும் ஆண்டவனின் சேவடியிருக்கும் என்று நினைத்துவிடாதே! அந்த மூட நம்பிக்கைப் போதை—என் எதிரே அலகு குத்திக்கொண்டு பால் செம்பு கட்டிய காவடியைச் சுமந்து வருவார்களே, அந்தப் பக்தர்களிடத்திலேதான் இருக்கும். என் காவடியில் 'பாவலா' இருக்குமே தவிர பால் இருக்காது! ஆட்டக்கலை இருக்கும்—அறிவுக் கொலை இருக்காது! மயில் தோகை, காவடியின் முன்னே இருக்கும்—மங்கை உன் நினைவு தான் மனத்தில் இருக்குமே தவிர மயிலேறும் முருகனைப் பற்றிய மடமைக் கனவு இருக்காது!—உத்திரவு கொடு என் தங்கமே! :

நூறு ரூபாய் தருவதாகச் சொல்லுகிறார்கள்—நாளெல்லாம் பாடுபட்டாலும் நாலைந்து மாதம் சேர்ந்தாற்போல் உழைத்தாலும்

முழுசாகக் காண முடியாத பணம்—நூறு ரூபாய்! பழனிக்குப் போய் அங்கே ஆடினால், புதிய கிராக்கிகள் கிடைத்தாலும் கிடைக்கலாம். உத்தேசமாக இரண்டு மூன்று கிராக்கி கிடைத்தால் போதும்—முந்நூறு ரூபாயாவது மிச்சப் படுத்திக்கொண்டு வருவேன். அனுமதி கொடு கனிமொழி! நாளைக் காலையிலே புறப்பட வேண்டும்; பிரார்த்தனைக்காரர்கள் பெரிய பணக் காரர்கள். அவர்களிடத்திலே வாக்களித்துவிட்டு வந்துவிட்டேன், நிச்சயம் வருவதாக; தடை சொல்லாதே தங்கம்! அவர்களை ஏமாற்றி விட்டால், அவர்களுக்கு வேறு ஆட்டக் காவடிக்காரன் கிடைக்க மாட்டான். சாகிறவரையில் என்னைச் சபித்துக் கொண்டேயிருப்பார்கள்!—சரி என்று சொல்லு!—எங்கே? என்னைப் பார்! சரியென்று சொல்ல மாட்டாய்?...''

கனிமொழியின் முகத்தை ஆவலோடு நோக்கியவாறு கொஞ்சுந் தோரணையில் கந்தன் பேசிக்கொண்டே இருந்தான். கனிமொழியின் கண்கள் கலங்கியிருந்தன. அவள் அவனைப் பார்த்தாள் அனுதாபத்தோடு!

''பண ஆசைதானே உங்களை இப்படியெல்லாம் பேசச் செய்கிறது! உடலிலே வலுவிருக்கிறது—உழைக்கக் கை கால்கள் இருக்கின்றன. கடவுள் சந்நிதானத்திற்குக் காவடி எடுப்பவர் களுக்குக் காவடி ஆடி, நூறு ரூபாய் சம்பாதிப்பதைவிடக் கைத்தறி வேலையிலே கிடைக்கிற பத்து ரூபாய், இருபது ரூபாய் எவ்வளவோ உயர்ந்தது, அத்தான்! வேண்டாம்; நான் சொல் வதைக் கேளுங்கள்—பக்கத்து வீட்டுக்காரர்கள் பரிகாசம் செய்வார்கள்! 'சாமி இல்லை, பூதம் இல்லை என்று சொல்லித் திருக்குறள் திருமணம் செய்து கொண்டான். அவன் இப்போது ஆட்டக் காவடி எடுத்து ஆடப் போகிறானும்' என்று ஊரார் கை கொட்டிச் சிரிப்பார்கள், அத்தான்!'' என அழுதாள் கனிமொழி.

''ஆட்டக்காவடி என்றால் அர்த்தம் தெரியாதவர்கள்தான் சிரிப்பார்கள்!—இது ஒரு நடனம் போலத்தான்!''

''நடனம் என்றால் அந்த ஆட்டக் காவடி நடனத்தை ஒரு மேடையில் ஆடிக் காட்டுங்கள்! பழனிக்குக் காவடி தூக்கும் பக்தர்களுக்கு முன்னால்தானே ஆட வேண்டும்?''

''பணம் வருகிறதே—பணம்!''

''மானம் போகிறதே—மானம்!''

"கனிமொழி! உனக்கு எத்தனை தடவை சொல்லி விட்டேன்; நான் ஆடுவது ஆட்டக் காவடி—அவர்கள் தூக்குவது பக்திக் காவடி யென்று!"

"அவர்கள் தனியாக ஆடட்டும் பக்திக் காவடி! நீங்கள் வேறொரு நாளைக்கு ஆட்டக் காவடி ஆடுங்கள்! உங்கள் கலைத் திறமையைக் காட்டுங்கள்! யார் வேண்டாமென்றது? இரண்டும் ஒரே நேரத்தில் வேண்டாம்—இழிவும் பழியும் வந்து சேரும்! உங்கள் ஆட்டக் காவடித் திறமையைக் காட்ட நானே ஏற்பாடு செய்கிறேன்; ஒரு நாள் ஊர் மக்களைக் கூட்டுவோம்; அவர்கள் எதிரே உங்கள் கலைத்திறமையைப் பொழியுங்கள்; அதைக் கண்டு களிக்கிறேன் நான்! அதை விட்டுவிட்டுக் காசுக்காக, மாசு ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம்!"

"பைத்தியக்காரி! நூறு ரூபாய் ஒரு சாமான்யமா?"

"எதற்கு நூறு ரூபாய் இப்போது?—நானென்ன உங்களை ஜரிகைப் புடவையும் தங்க நகையும் கேட்டுத் துன்புறுத்திக் கொண்டாயிருக்கிறேன்? குடிக்கக் கஞ்சி போதும்—குடியிருக்க உங்கள் நெஞ்சு போதும், எனக்கு!"

"கனிமொழி!...நீ என்ன சொன்னாலும் சரி, நாளைக்கு நான் பழனிக்குப் போய்த்தான் தீருவேன்—முடிவை மாற்றவே முடியாது!"

என்று வேகமாக எழுந்தான் கந்தன். அவன் கையைப் பிடித்துக் கனிமொழி நிறுத்தியபடி,

"நன்றாக யோசித்துப் பாருங்கள். ஊர் கேலி செய்யும்; உங்களையே வட்டமிட்டுக் கொண்டிருக்கும் உயிர்த் தோழர்கள் எல்லாம் ஊரார் முகத்தில் விழிக்க முடியாதபடி அவமானத்தால் தலையைக் குனிந்து நடக்க நேரிடும்; நண்பர்களை உத்தேசித் தாவது இந்த முடிவை மாற்றிக் கொள்ளுங்கள்!"

"சரி! ஒரே முறை! அனுமதி கொடுத்துவிடு! இனிமேல் போகவில்லை!"

"ஒரே முறை விஷம் சாப்பிட அனுமதி கொடுக்க முடியுமா?"

"கனிமொழி, குற்றம் செய்கிறோம் என்பது தெரிகிறது—தெரிந்தாலும் சில நேரங்களில் செய்துதான் தீரவேண்டியிருக்கிறது!"

"முன்னெருகாலத்தில் ஆட்டக்காவடி நிபுணராயிருந்தீர்கள்; அதையே தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தால்—பழனிக்குமட்டுமல்ல—திருச்செந்தூர், திருத்தணி, எட்டுக்குடி, கதிர்காமம் வரையிலேகூடச் செல்லலாம். இடையிலே பகுத்தறிவு புரியிலே நுழைந்துவிட்டோம். அத்தான்—அதைச் சற்று எண்ணிப் பாருங்கள்! தெரிந்த குற்றத்தைப் பிறகு செய்ய மாட்டீர்கள்!"

கந்தன் அசைவற்று நின்றுகொண்டேயிருந்தான். கனிமொழியின் கண்கள் அவனையே நோக்கியபடியிருந்தன. அவளது எண்ணங்களோ கடந்த கால ஏடுகளைத் தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தன.

கனிமொழி நெசவாளி வீட்டிலே உதயமான நீல நிலவு; அவள் தந்தை நெல்லையப்பர் பழுத்த பகுத்தறிவுவாதி. ஓரே மகளைச் செல்லமாக மட்டுமன்றி, சிந்தனைத் தோட்டமாகவும் வளர்த்து வந்தார். பட்டிக்காட்டு நடையுடை பாவனைகளோடு பகுத்தறிவுப் பெட்டகமாகவும் விளங்கிடும் முதல் பெண்மணி கனிமொழியாகத்தான் இருக்கவேண்டுமென்று நெல்லையப்பர் பெருமையோடு கூறிக்கொள்வார். கனிமொழி, குழந்தை முதலே பகுத்தறிவுப் பாடசாலையின் மாணவியாக மாறிவிட்டாள்.

தீபாவளி! தெருவெல்லாம் ரகளைப்படும்! வர்ண மத்தாப்புக்கள்—வானவில்லை ஒத்த நிறங்காட்டும் வாண வகைகள்—அவைகளை எல்லாம் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டாள். அப்பா வாங்கித் தந்த "தீபாவளி கொண்டாடாதே!" என்ற புத்தகத்தை வாசலில் உட்கார்ந்து கொண்டு உரக்கப் படிப்பாள். தெருப் பிள்ளைகள் கொளுத்தும், சீன வெடிகளோடு போட்டி போடும் இந்தச் சிங்காரச் சிட்டெழுப்பும் சிந்தனை முழக்கம்!

சோமவார விரதம்—மாரி, காளி பண்டிகை—திரௌபதியம்மன் தீமிதி உற்சவம்—இப்படியெல்லாம் மனத்தைக் கவரும் திருவிழாக்கள் வரும்-போகும். கனிமொழியோ, அந்தக் குக்கிராமத்தில் இருந்தபடியே—குவலயத்துப் புதுமைகளைப் பற்றி எண்ணிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்பாள்.

கனிமொழி—தனி மரமானுள். அந்தக் கன்னியைத் தனியே விட்டுவிட்டுத் தந்தை காலமானுர். தாயற்ற அவள் இப்போது

அனுதைப் பட்டத்துக்குரியவளானுள். அவளது வாழ்க்கை எப்படியெப்படித் திரும்பப் போகிறதோ என்பது பற்றி ஊரார் ஆருடம் கணித்துக் கொண்டிருந்தனர். அந்தச் சமயத்தில்தான் அவள் வீட்டு வாசலிலே பம்பை, மேள வாத்திய ஒலி கேட்டது.

எப்போதும் இதுபோன்ற நிகழ்ச்சிகளை அலட்சியம் செய்து விடும் அவள் அன்றைக்கு ஏனோ தெருப் பக்கம் திரும்பிப் பார்த் தாள். பார்த்தவள் கண்களைத் திரும்ப எடுக்க முடியாமல் திணறிப் போனுள். ஆட்டக் காவடி ஆட்டம்! அதிரூப சுந்தரன் ஒருவன்—அழகும் இளமையும் தேங்கிய உருவினன்—குன்றனைய தனது நெடுந்தோளில் ஆட்டக் காவடியைச் சுமந்திருந்தான்.

எழுச்சியூட்டும் பம்பை முழக்கம்-அதற்கேற்றாற்போல அவன் ஆடும் துடிப்பு நிறைந்த ஆட்டம்! "ஆகா—அழகான வாலிபன்—அற்புதமான கலை!" என்று தனக்குள்ளேயே யாரோ பேசியது போலிருந்தது அவளுக்கு! கண்களைச் சிறிது திருப்பினுள்—திடுக் கிட்டாள்! அந்த ஊர் மிராசுதார் மிருகண்டு முதலியார், அவரது தர்ம பத்தினி, பட்டணத்துக் கல்லூரியில் படிக்கும் அவரது மகன்—மூவரும் நெற்றியிலே அலகுகளைக் குத்திக்கொண்டு பக்தி பூர்வமான பால் காவடிகளைச் சுமந்தபடி நின்றார்கள். இப்போது கனிமொழிக்கு ஆட்டக் காவடிக் கலையும் வெறுத்து விட்டது.

'அடடப் பாவிகளே! அருமையான கலை—இதை விழலுக் கிரைக்கும் நீராக்குகிறீர்களே! சந்தனத்தைச் சாக்கடை நீரில் குழைத்துத் தருகிறார்களே! பாலோடு விஷம் கலந்தாலும்—விஷத்தோடு பால் கலந்தாலும் இரண்டும் ஒன்றுதானே!' என்றெல்லாம் எண்ணியபடி வாயிற்படியில் வியப்போடும் விசாரத்தோடும் நின்று கொண்டிருந்தாள். மிராசுதார் மிருகண்டு வின் பார்வை மட்டும் கனிமொழியின் பக்கம் திரும்ப ஆரம் பித்தது. தோளிலே காவடி! மனத்திலே கனிமொழி மந்திரம்! அத்துணை பக்திபூர்வமாக நின்று கொண்டிருந்தார் பண்ணையார்!

"ஊரதிர ஆடுகிறானே, காவடி ஆட்டம்—அவன்தான் கந்தன்!" என்று அடுத்த வீட்டுக்காரி கனிமொழியிடம் கூறினுள். குழப்பம் உந்தித் தள்ளக் கனிமொழி வீட்டுக்குள்ளே போய் விட்டாள்.

மிருகண்டு முதலியாரும் காவடியுடன் நகர்ந்தார்—கனி மொழியின் வீட்டுக் கதவைப் பார்த்தபடி!

பம்பை ஒலிகள் சிறிது சிறிதாகத் தேய்ந்து மறைந்தன. கனி மொழியின் இருதயத்திலே மட்டும் எங்கேயோ ஒரு மூலையில் ஏதோ ஓர் ஒலி ஈனக் குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது.

ஒரு நாள் இரவு கதவு தட்டும் சப்தம் கேட்டுக் கனிமொழி கதவைத் திறந்தாள். மிராசுதார் மிருகண்டு முதலியார் மளமளவென்று வீட்டுக்குள்ளே நுழைந்தார். கதவை அவரே தாழிட்டார்.

காரணத்தை விளக்கவா வேண்டும்? கனியிருக்கிறது—வெளவால் பறந்து வந்துவிட்டது!

"யாரடா நீ—அன்று நெற்றியிலே அலகு குத்திக்கொண்டு பக்தி ததும்பக் காவடி எடுத்த கண்ணியவானு நீ?—" கனிமொழி நெருப்பானாள்.

"ஆமாம், கிளியே! அந்த அலகு—வெள்ளி அலகு! கிள்ளை நீ உன் அலகால் என் கன்னத்தை வருடு!" என்று கை தொட்டார் மிராசுதார்.

கனிமொழி—பகுத்தறிவுப் பெண்ணன்றே! கண்ணகி சரிதம் படித்தவளன்றே! அவள் கை விளையாடிற்று, பண்ணையாரின் கன்னங்களிலே! இருந்தாலும் வெறிபிடித்த வேங்கை—நெறி பிறழா மான்குட்டி—ஆபத்து நெருங்கிவிட்டது! கூக்குரல்—கூச்சல்—அபயங்கேட்கும் அபாய அறிவிப்பு—அந்தக் குடிசையிலே இருந்து கிளம்பிற்று! அப்போது அங்கே வந்து குதித்தான் ஆட்டக்காவடி கந்தன். மிருகண்டு மிரண்டார். கந்தனின் கால்களில் மிதியுண்டார். கனிமொழி தப்பினாள். கதைகளிலே கதாநாயகிக்கு ஆபத்து வருவதும், கதாநாயகன் காப்பாற்ற வருவதும், பின் காதல் உதயமாவதும் வழக்கமாகிவிட்டதைப் போலவே, கனிமொழியின் வாழ்க்கையிலும் அப்படி ஓர் உண்மைச் சம்பவம் எதிர்பாராமல் நடந்துவிட்டது. கந்தனும் கனிமொழியும் வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்குவதற்கு அவள் விதித்த நிபந்தனைகள் ஏராளம்.

அவைகளிலே ஒன்றுதான், அவன் ஆலயங்களுக்கு ஆட்டக் காவடி ஆடுவதை நிறுத்த வேண்டுமென்பது! ஒத்துக்கொள்ளாமல் இருப்பானு?—ஆட்டக்காவடி நிறுத்தப்பட்டது—அவனுக்கு அவள் அறிவு புகட்டும் ஆசானுக ஆனாள். கந்தனும் அவளுக்குக் கருவிழியானான். அதன் பிறகே இருவருக்கும் திருமணம். ஊரே ஆச்சரியத்தில் மூழ்கியது! கந்தனின் வழியிலே பல

காளையர் நடைபோடத் தொடங்கினர். கந்தன் அந்த ஊர் வாலிபர்களுக்கு இளந்தலைவனனன். கனிமொழியோ ஆனந்தக் கடலில் ஒளிவிட்டுப் புறப்படும் பூரண மதியம்போல் முகங் காட்டிப் பூரித்தாள். காவடிக் கந்தன் கைத்தறிக் கந்தனனன். கைத்தறியிலே வந்த பணம் அவன் தாராளச் செலவுக்குப் போத வில்லைதான்! கஷ்டப்பட்டான். ஆனலும் கனிமொழியின் மனத் திற்கு விரோதமாக நடப்பதற்குப் பயப்பட்டான்.

மிராசுதார் மிருகண்டுவின் மகன்—பீதாம்பரத்தின் மூளை வேலை செய்தது. ஊரிலே எழுந்துள்ள கொள்கைக்கோட்டையைத் தவிடுபொடியாக்கக் கருதினன். கந்தனின் நண்பனனன். காசின் அருமை பெருமைகளைப்பற்றி அடிக்கடி உபதேசித்தான் கந்தனுக்கு! கந்தனின் கொள்கைகளை ஏற்றுக்கொண்டு, அவை களுக்குத் திருத்தங்கள் சில தருவதுபோல நடித்தான். அப்படி அவன் தந்த திருத்தங்களிலே ஒன்றுதான் பழனிக்கு ஆட்டக் காவடி எடுக்கலாம் என்பது!

கந்தன் அந்தத் திருத்தத்திற்கு விளக்கம் கொடுக்கக், கனி மொழி கற்சிலையாக நின்றுகொண்டிருந்தாள் அன்றிரவு.

நின்றுகொண்டிருந்த கந்தன், திடீரென அந்த இடத்தை விட்டு வேகமாக அகன்றனன்.

மறுநாள் அவனது பழனிப் பயணம் ஆரம்பமாயிற்று. ஆட்டக் காவடி ஆட்டமும் பழனித் தெருக்களிலே பிரமாதமாக நடைபெற்றது. அவன் எதிர்பார்த்தபடியே, அங்கேயே அவனுக்கு மூன்று நான்கு கிராக்கிகள் மோதின. முந்நூறு ரூபாய் கிடைத் தது. எடுத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினன். பணத்தைக் காட்டிக் கனிமொழியின் கோபத்தைப் போக்கிவிடலாம் என்ற பூரண நம்பிக்கையோடு வீட்டுக்குள் நுழைந்தான். அங்கே கனிமொழி இல்லை. அந்தப் பகுத்தறிவுச் சிட்டு எங்கேயோ பறந்து விட்டது. கட்டில் மேலே ஒரு காகிதச் சுருள் கிடந்தது. அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தான் கந்தன்.

> "பொது வாழ்க்கை என்பது கரும்பைச் சுவைப்பது போல அல்ல; கரும்பைக் கைகளால் தடவுவதுபோல! தடவிப் பார்த்தால்தான் தெரியும்—கை முழுதும் 'சுணை'கள் குத்திக் கொள்ளும்!

உங்களுடைய முடிவுக்குப் பிறகு, நான் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் இரண்டேதான்!

ஒன்று விஷம்—

மற்றொன்று விவாக ரத்து!

இதில் எதைத் தேர்ந்தெடுப்பதென்று புரியாமல் உலகத்தில் எங்கேயோ ஒரு மூலையில் திரிந்து கொண்டிருக்கிறேன்.

இப்படிக்கு

கனிமொழி

பகுத்தறிவுப் பெண்.

கடிதத்தைப் படித்து முடித்தான் கந்தன். கண்களிலே 'அலகு' செருகப் பட்டதுபோல் துடித்துக் கீழே விழுந்து மூர்ச்சையானான்.

குப்பைத்தொட்டி

வீதியோரத்தில் அந்த மாடி வீட்டுக்குக் கீழேதான் நான் நீண்ட நாட்களாகத் தவம் செய்து கொண்டிருக்கிறேன். என்னுடைய தவம் எந்தக் கடவுளையும் வரவழைத்து அவர்களிடம் ஏதாவது அபூர்வமான வரங்கள் வாங்கவேண்டும் என்பதற்காக அல்ல! அகிலத்தைக் கட்டியாள வேண்டுமென்று அரசர்கள் பலர் தவமிருந்தும் தன்னை அழிப்பார் யாருமிலர் என்ற நிலை ஏற்பட வேண்டுமென்று அசுரர்கள் கொடிய தவங்களை மேற் கொண்டதும்; சாபங்களின் மூலம் பகைவர்களைப் பழிவாங்குகிற வரங்களைப் பெறுவதற்கு முனிவர்கள் தவத்தில் முனைந்ததும் எனக்கு நேற்றுத்தான் விவரமாகத் தெரிந்தது. தவம் என்றால் ஒரே நினைவுடன் வேறு எதையும் பற்றிய சிந்தனையும் இல்லாமல் ஒரே இடத்தில் அமர்ந்து அன்ன ஆகாரமின்றி ஆண்டவனைக் காணத் துடிப்பது; அவன் வந்தபிறகு தேவையைக் கேட்பது! என்னைப் பொருத்த வரையில் ஒரே இடத்தில் அசையாமல் அமர்ந்து இருப்பது ஒன்றைத் தவிர; தவத்துக்குரிய வேறு அடையாளங்கள் எதுவுமே இல்லை.

அப்படித் தவத்தில் ஈடுபட்டவர்களே கூட ஒரே நிலையில் நினைவைச் செலுத்த முடியாமல் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். யார்; எங்கே; எப்பொழுது தவம் செய்கிறார்கள் என்று அலைந்து திரிந்து கண்டுபிடித்து அவர்களது தவத்தைக் கெடுப்பதற் காகவே தேவலோகத்தில் ஒரு பெண்கள் படை தயாராக இருக் கிறது. அதில் குறிப்பிடத்தக்க நட்சத்திரங்கள் மேனகை,

ரம்பை, ஊர்வசி, திலோத்தமை ஆகியோர். தவமிருப்பவர்களை அவர்கள்தான் போய்க் கெடுப்பார்களோ அல்லது அவர்கள் தங்களைக் கெடுக்க வரட்டும் என்று எதிர்பார்த்து இவர்கள் தான் தவம் செய்வார்களோ—இரண்டும் ஆராய்வதற்குரிய விஷயங்கள்தாம்!

ஏதேதோ வந்துவிழுந்து கொண்டிருந்த என் வயிற்றில் நேற்று ஒரு பழைய புராணம் வந்து விழுந்தது. புத்தக உருவில் அது இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில ஏடுகள்! பாதிக்குமேல் செல்லரித்து விட்டிருந்தது! அதில்தான் தவத்தைப் பற்றிய விளக்கங்களையும் கதைகளையும் படித்துத் தெரிந்து கொண்டேன். விசுவாமித்திரர் தவத்தைக் கெடுக்க வந்த மேனகையின் சாகசங்களையும்; அவளது வலையில் முனிவர் விழுந்த பிறகு, அவள் புரிந்த சரசங்களையும்; கானகத்து அருவி யோரங்களில் அவர்கள் நடத்திய காதல் கேளிக்கைகளையும்; கடவுளை நினைக்கும் தவக்கூடம் காமவேள் நடனசாலையாகக் காட்சியளித்ததையும்; மகேஸ்வரன் வருவதற்கு முன்பு மலர் மாரன் வருகை தந்து மாமுனிவரை மங்கையின் மடியிலும் காலடியிலும் உருட்டி உருட்டி மகிழ்ந்ததையும்; ஜெபமாலை இருந்த கையில் மேனகையின் துடியிடை சிக்கித் தவித்ததையும்; மறைந்துள்ள முனிவரின் தடித்த உதடுகள் மேனகையின் மெல்லிதழ்த்தேன் பருகிடத் துடித்த விந்தையையும் வெகு சுவை யுடன் நான் படித்துக்கொண்டிருக்கும் போதுதானு அந்தக் குப்பை வண்டிக்காரன் வந்து தொலைய வேண்டும்.

வந்தவன் மளமளவென்று என் வயிற்றைக் காலிசெய்து அந்தக் கிழிந்த புராணத்தையும் தூக்கி வண்டியிலே போட்டுக் கொண்டு போய்விட்டான். சிலநாட்கள் என் வயிறு உப்பி நான் திக்குமுக்காடிக் கொண்டிருப்பேன்; அப்போதெல்லாம் நாலு நாள் ஐந்துநாள் என்று இந்தப் பக்கம் தலைகாட்டாத நகரசபைக் குப்பை வண்டி என் புராணப் படிப்பில் இப்படி மண்ணைப் போடுமென்று நான் எதிர்பார்க்கவே இல்லை. யாரோ புது ஆபீசர் இந்தப் பக்கம் வந்திருக்கிறாரோ என்னவோ தெரியவில்லை, இரண்டு மூன்று நாட்களாகத் தெருவைச் சுத்தம் செய்வதில் தீவிரம் காணப்படுகிறது. இதுவும் எத்தனை நாளைக்கு? "வந்தாற் போல மாமியார் பந்தடித்தாள்; வர வர மாமியார் கழுதைபோல் ஆனாள்" என்று பழமொழி சொல்வார்களே; அதுபோலத்தான் ஆகிவிடும்.

நானிருக்குமிடத்திற்கு நாலைந்து வீடு தள்ளி ஒரு பஜனை மடம். அந்த மடத்தில் அடிக்கடி புராணப் பிரசங்கங்கள் நடை பெறும். ஒலிபெருக்கியின் மூலமாகக் கேட்டுக்கொண்டிருப்பேன். பாகவதர்கள் பல விஷயங்களைப் பூசி மெழுகிப் பேசியிருக்கிறார்கள் என்பது அந்தப் பழைய புராணத்தைப் பார்த்தபிறகுதான் தெரிந்தது. கணவனில்லாத சமயம் வீடுபுகுந்து தன்னைக் கற்பழித்தவன் இந்திரன் என்று தெரிந்த பிறகும் "ஆகா! இது வல்லவா இன்பம்! இதுநாள் வரையில் ஏங்கிக் கிடந்த சுவைமிகு விருந்தை இன்றல்லவா கண்டேன்" என்ற மனநிறை வுடன் அவனைத் தழுவிக்கிடந்தாள் அகலிகை என்பதை நான் படித்தல்லவா தெரிந்துகொண்டேன்.

தாருகாவனத்துத் தபோதனர்கள் ஆயிரத்துக்கு மேற் பட்டோர்! அவர்தம் பத்தினிகளோ பத்தரை மாற்றுத் தங்கங்கள் மேனியின் பளபளப்பில்! பறிக்கப்படாத பாரிஜாத மலர்கள்! தழுவத்துடிக்கும் பருவக்கொடிகள்! அவர்தம் இளமையின் பூரிப்பு இறைவனையே தூண்டில் போட்டு இழுத்தது. ஒன்று இரண்டா? ஓராயிரம் பூஜை மலர்களைக் கசக்கி எறிந்தார்! வரம் கோரும் முனிவர்களின் பத்தினிகள்! வரம் தரவேண்டிய பரமன்! கரம் சிவக்குமட்டும் கட்டித் தழுவினர்! கண் சிவக்குமட்டும் காமச்சேட்டை புரிந்தார்! இந்தக் கர்ணகடூரமான கதையைப் பஜனை மடத்துப் பாகவதர் எவ்வளவு நாசூக்காகச் சொன்னர் தெரியுமா?

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளுக்குப் பரமசிவன் அருள் பாலித்து ஆட்கொண்டார் என்று அவர் கூறியதைக் கேட்டு, ஆகா! ஆகா!! என ரசனையை வெளியிட்டுவிட்டுப் பிரசாதங்களை அருந்தி, இலைகளை என் வயிற்றுக்குள்ளே வீசி எறிந்துவிட்டுப் போயினர் பஜனை கோஷ்டியினர். அப்படி வீசி எறிந்த பக்தர் களில் ஒருவர், பிரசாதம் சாப்பிட இலை கிடைக்காத காரணத்தால் ஒரு புத்தகத்தின் தாள் ஒன்றை உபயோகித்தார் போலும். கசங்கிப்போய்ச் சோற்றுக்கறை படிந்த அந்தத்தாளை உற்றுப் பார்த்தேன். எனக்கே வெட்கமாக இருந்தது. ஏதோ ஒரு உணர்ச்சி என்னை வளைத்துக்கொண்டது. குப்பைத்தொட்டி என்றால் உணர்ச்சிகள் இருக்காதா; என்ன? அப்படியென்ன அந்தத்தாளில் இருந்தது என்று அறிய உங்களுக்கும் ஆவல் இருக்கத்தான் செய்யும். அதையும் சொல்லி விடுகிறேனே! குத்து விளக்குச் சுடர் எரிந்து கொண்டிருக்கிறது. அதிலிருந்து நேரம்

இரவாகத்தானிருக்குமென முடிவுகட்டி விடலாம். இரவு நேரத்தில் நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை வர்ணித்து அந்த நிகழ்ச்சித் தலைவனைப் பிரார்த்தனை செய்கிறாள் ஒரு அம்மை! பெண்ணின் பிரார்த்தனையில் இரவு நேரத்து விரசங்கள் எதுவும் இருக்காது என்றுதான் நினைப்போம். ஆனால் நாம் ஏமாந்து விடுகிற அளவுக்கும் பிரார்த்தனையின் ரசம் மேலோங்கி நிற்கிறது. மறுபடியும் வர்ணனையைக் கவனிப்போம். குத்துவிளக்கின் ஒளியில் கட்டில் ஒன்று தெரிகிறது. கட்டில் என்றால் சும்மாவா? அதன்மீது மெத்தென்ற மஞ்சம்! மல்லிகை, முல்லை, ரோஜா மலர்கள் தூவப்பட்ட மஞ்சம்! விளக்கு—கட்டில்–மலர் மஞ்சம் மட்டும் இருந்தால் காட்சி ரசிக்குமா? பல்லாயிரம் நட்சத்திரங்கள் இருந்தாலும் பால் நிலவு இல்லையேல் வானத்திற்கு அழகேது? அந்தப் பால் நிலவாக ஒரு மங்கை; அந்தப் படுக்கையில் இருக்கிறாள். அவள் கொத்தலர் பூங்குழல் கொண்ட கோதை! பெயரோ நப்பின்னை!

கட்டிலும் மெத்தையும் கவினுறு மங்கையும் இருந்து விட்டால் பூரணத்துவம் பெற்றதாக முடியாதே! அந்த மங்கையின் மாங்கனியன்ன மார்பகத்தின் மீது தனது மார்பகத்தை வைத்தவாறு பிரார்த்தனைக்குரிய ஆடவன் படுத்திருக்கிறான். யார் அந்த ஆடவன்? ஆடவனா? அல்ல; அல்ல–ஆண்டவன்! அந்த ஆண்டவனைப் பிரார்த்திப்பதோ ஆண்டாள் அம்மை! "'மலர்மார்பா' வாய்திறந்து எனக்கருள்வாய்"! என்று ஆண்டவனை அழைத்திட விரும்புகிற ஆண்டாள் அம்மையார்; அவனைத் தன் இருப்பிடத்திற்கு அழைக்காமல் அவனது பள்ளியறைக்குள்ளேயே போய் விடுகிறார். போனதும் கண்ட காட்சிதான் குத்து விளக்கு எரிகின்ற அறையின் கோலாகலக் காட்சி!

"குத்துவிளக்கெரியக் கோட்டுக்கால் கட்டிலின்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கை மேல்
வைத்துக்கிடந்த மலர்மார்பா வாய் திறவாய்"

இந்தப்பாடலைத்தான் அந்தக் கசங்கிய தாளில் நான் படித்துப் பார்த்தேன். அய்யோ நான் அமர்ந்திருக்கும் இந்தச் சாக்கடையோரம் அப்படியே சப்ரகூட மஞ்சமாகி விடக்கூடாதா? எனக்குப் பக்கத்திலே ஒரு பெண் குப்பைத் தொட்டிவந்து சேரக்

கூடாதா? அப்படி ஒரு அதிர்ஷ்டம் வந்தால் அவளோடு நான் எவ்வளவு இன்பமாக இருப்பேன்! புதிய புதிய காதல் மொழிகள் எல்லாம் பேசுவேன். "கண்மணீ"! என்று அழைப்பதற்குப் பதில் அவளைக் "குப்பைமணி" என்று அழைத்து அணைத்துக் கொள்வேன். அவளோடு ஊர்க்கதையெல்லாம் பேசுவேன். பிறகு எங்களுக்குப் பொழுது போவதே தெரியாது. இப்படியெல்லாம் காதல் நினைவுகளை ஆண்டாளின் கவிதை, என் நெஞ்சில் உருவாக்கியது. பாவம்; ஆண்டாள் யார்பெற்ற பெண்ணை பெற்றவர்கள் தூக்கியெறிந்துவிட்டுப் போய் விட்டார்கள்; யாரோ ஒரு ஆழ்வார் எடுத்து வளர்த்தாராம்! அந்த அம்மையார், கடவுளைத் தொழுவதில் இவ்வளவு காமரசத்தை ஏன்தான் கலந் தாரோ; தெரியவில்லை. ஒரு பாட்டுப் படித்து விட்டே இந்தப் பாடுபடுகிறேனே; எல்லாப் பாட்டும் கிடைத்தால் என்னைப் பைத்தியக்கார விடுதியின் ஓரத்தில் கொண்டுபோய் வைக்க வேண்டியதுதான்.

எப்போதுமா இப்படிப்பட்ட தாள்கள், நூல்கள் கிடைக் கின்றன! பெரும்பாலும் எச்சில் இலை; வாழைப்பழத் தோல்; ஆரஞ்சு, கமலா தோல்; இப்படித்தான் ஏதாவது வந்து கொண் டிருக்கும். சில நேரங்களில் செத்துப்போன எலிகளை என் வயிற்றுக்குள் போடுவார்கள். முனிசிபாலிடி வண்டி எப்போது வரும் என்று மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பேன். தெருக்கோடியில் ஒரு வீட்டிலிருந்து இரவு 12 மணிக்கு மேல் வேலைக்காரப் பையன் என்னருகே வருவான்.

சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு விஸ்கி, பிராந்தி முதலிய மதுப் புட்டிகளின் மூடிகளை என்னிடம் வீசிவிட்டு விறுவிறு என்று போய்விடுவான். எனக்கு இரவெல்லாம் உடம்பு நடுங்கும்; எங்கே போலீசார் என்மீது சந்தேகப்பட்டு என்னைக் கொண்டு போய் மதுவிலக்குச் சட்டபடி உள்ளே போட்டு விடுவார்களோ என்று! பிறகு எனக்கு நானே ஆறுதல் கூறிக்கொள்வேன்; குப்பைத்தொட்டி எங்கேயிருந்தால் என்ன வென்று!

ஒருநாள் மூன்றுவது வீட்டிலிருந்து என் பக்கமாகக் காரில் போன ஒருவர் சட்டைப் பையிலிருந்த ஒரு கடிதத்தைக் கிழித்து என்மீது போட்டு விட்டுப் போய்விட்டார். பரபரப்புடன் அதைப் படித்தேன். ஒழுங்கற்ற முறையில் அது கிழிந்து போயிருந்ததால் தொடர்பாகப் படிக்கமுடியவில்லை. யாருக்கோ வாத்தியாரம்மா வேலை வாங்கித்தருவதாக வாக்களித்து இதற்குக் கைமாறுக முன்

கூட்டியே முன்னூறு ரூபாய் வாங்கிக் கொண்டு ஏமாற்றி விட்டானும்; எவனே ஒரு எத்தன். அவன் பெயரும் தெரிய வில்லை. அந்தப் பெண்ணின் பெயரும் தெரியவில்லை. இருவரின் பெயரும் அதில் இல்லை. அவை கிழிந்து போய்விட்டன. யாராயிருந்தால் என்ன; எங்கள் "டிபார்ட்மெண்ட்" விஷயம் என்பதை மட்டும் புரிந்துகொண்டேன். யாரிடம் முறையிடப் பட்டதோ அவரும் அதனைப் பொருட்படுத்தவில்லை என்பதற்கு அடையாளமாக அந்த மடலை என்னிடம் தூக்கி எறிந்து விட்டுப் போய்விட்டார். அந்தோ! பரிதாபம்! அந்தப் பெண் என்ன ஆனாளோ! அவளை நான் பார்க்காமலே இருக்க விரும்புகிறேன். அவளைப் போன்ற அபலைகளை மட்டுமல்ல; பொதுவாக மனிதர் களைப் பார்ப்பது என்றாலே எனக்கு வரவர வெறுப்பாகி விட்டது. அவர்கள் பொறுமையற்றவர்கள்—அலட்சியப் புத்தி படைத்த வர்கள்–வெறிகொண்டவர்கள்—விவேகத்தின் விரோதிகள் என் றெல்லாம் சொல்லத் தோன்றுகிறது. என்னுடைய நிழலிலேயே வாழ்ந்து கொண்டிருந்த நன்றிமறந்த ஒரு மனிதனைப்பற்றி நினைத்தாலே எனக்குக் கோபம் பொங்குகிறது. எங்கிருந்தோ ஒரு நாள் வந்தான்; சரியாக நடக்கமுடியவில்லை. உடம்பெல்லாம் நடுங்கிக்கொண்டிருந்தது. என்னையும் மீறி அவன் மீது ஒரே துர்நாற்றம்! போனால் போகிறது என்று சகித்துக் கொண்டு "யாரப்பா?" என்று கேட்டேன் "பார்த்தாலே தெரியவில்லை... இந்த நாட்டு மன்னர்களிலே ஒருவன்; உன் பக்கமிருந்து ராஜ்ய பரிபாலனம் செய்ய வந்திருக்கிறேன். கொஞ்சம் நிழல் கொடுப் பாயா?" என்று அவன் என்னைப்பார்த்தான். "நிழல் தருகிற அளவுக்கு நான் என்ன அவ்வளவு வளர்ந்து வளமாகவா இருக் கிறேன். வேண்டுமானால் என் மறைவில் ஒதுங்கியிருந்து ராஜரீகம் செய்வாயாக!" என்றேன். அவனும் பத்து நாட்கள் என் மறை விலேயே உட்கார்ந்தான்–படுத்தான்–தூங்கினான்–சாப்பிட்டான்! அங்கிருந்தவாறே அவன் சர்க்கார் நடந்தது. போகிறவர்களிடம் பல்லைக்காட்டி அவனது அரசாங்கத்திற்குத் தேவையான வரிகளைக் காசாகவோ பணமாகவோ வாங்கிக் கொண்டிருந்தான்.

பத்துநாள் எனக்கும் அவனுக்கு நல்ல பொழுது போயிற்று. அவன் பாடுகிற சினிமாப் பாட்டுகள் நாடோடிப்பாட்டுகள்—இவைகளில் நான் என்னை மறந்து ரசித்துக் கொண்டிருந்தேன். ஒருநாள் இரவு இந்தப் பரதேசி மகாராஜா ஒரு பெண்ணைத் தன்னுடன் அழைத்துக்கொண்டுவந்தார். நான் தூங்குவதுபோல்

நடித்து நடப்பவைகளைக் கவனித்துக்கொண்டிருந்தேன். அவள் வரும்போதே சீக்கிரம் போகணும் என்று முனகிக்கொண்டு வந்தாள், "அட, பறக்காதே; இந்தா பணம்!" என்று ஒரு எட்டணுவை அவளிடம் கொடுத்தார் மகாராஜா! நான் கண்களை இறுக மூடிக்கொண்டு காதை மட்டும் நீட்டிவைத்துக் கொண்டிருந்தேன்.

'கண்ணு!'

'என் மூக்கு!'

'அய்யோ என் மன்மதராஜா!'

இப்படிச் சில கொஞ்சுதல் வார்த்தைகள் கரகரத்த தொண்டையிலிருந்து வெளிப்பட்டன. அந்தப் பாவி மகாராஜனுக்கு நான் ஒருவன் அவனுடைய நண்பன் அருகே இருக்கிறேனே என்ற நாணம் கூடக்கிடையாது! சிறிதுநேரம் கழித்துக் கண்ணை விழித்துப் பார்த்தேன். என் நண்பன் சுருண்டு படுத்துக் கொண்டிருந்தான். மன்னிக்கவும்; இந்நாட்டு மன்னர் துயில் கொண்டிருந்தார். மகாராணியைக் காணவில்லை. அவள் அடுத்த ராஜ்யத்துக்குப் போயிருக்கக்கூடும். மறுநாள் காலையில் இரண்டு மூன்று போலீஸ்காரர்கள் என் நண்பனிடம் பேசிக் கொண்டிருந்தார்கள். தொலைவில் பேசிக்கொண்டிருந்ததால் எதுவும் புரிகிற அளவுக்குக் காதில் விழவில்லை. பிறகு, என் நண்பன் என்னருகேவந்து; 'போலீசாரைக் கண்டு பயப்படாதே! அவர்கள் என்னைக் கைது செய்ய வந்ததாக நினைக்காதே! வெளிநாட்டிலேயிருந்து யாரோ பெரிய மந்திரி வருகிறாராம்; அவரைப் பார்க்க இந்த ராஜாவை அழைக்கிறார்கள்' என்றான்.

நான் வியப்புடன்; 'அப்படியா? அந்த மந்திரியை எங்கே போய்ச் சந்திப்பாய்?' என்று கேட்டேன்.

'நான் போய் எனது வழக்கமான ஜெயில் மாளிகையில் இருப்பேன். அவர் வந்து என்னைச் சந்திப்பார். நீ கூட அவரைப் பார்க்கக்கூடும். ஏனென்றால் இந்தப்பக்கம்தான் அவர் ஊர்வலம் வருகிறார்'.

என்று கூறிக்கொண்டே அவன் போலீசார் கொண்டு வந்த பெரிய காரில் ஏறிப்போய்விட்டான். அவன் சொன்னபடி மறுநாள் வெளிநாட்டு மந்திரி நான் இருக்கும் வீதிப்பக்கம் வந்தது உண்மைதான். ஆனால் அந்த நண்பன் மட்டும் என்னைத் திரும்ப வந்து பார்க்கவேயில்லை. இந்நாட்டு மன்னர்களிலே ஒருவனல்லவா,

எந்தக் குப்பைத்தொட்டி மறைவுக்குப் போனானே; தெரிய வில்லை! நன்றி கெட்டவன்.

என்னமோ போங்கள்.....சத்தற்ற என் வாழ்க்கையில் எல்லாவற்றையும் சந்தித்தாகிவிட்டது. நான் படித்த கல்யாணப் பத்திரிகைகள் எத்தனை—நான் அருந்திய விருந்துகள் எத்தனை—மங்கல காரிய அழைப்புக்களும்; அமங்கல காரிய அழைப்புக் களும்—எவ்வளவு, எவ்வளவு! காதலன்—காதலிகள் கிழித்துப் போட்ட திருட்டுத்தனமான கடிதங்கள் எத்தனை—நான் படித்துப் பார்த்து அவர்களை நினைத்துச் சிரித்திருக்கிறேன். ஒதுக்கப் பட்டவைகள், ஒளிக்கப்பட்டவைகள் எல்லாமே என்னுடைய இருகரங்களால் அன்போடு வரவேற்கப்பட்டிருக்கின்றன.

எதையும் பொறுத்துக்கொண்டு புன்னகை காட்டுகிற தாய்மை யான துறவிகளைவிட நான் ஒரு படி மேலான பொறுமைசாலி.

இந்த நாட்டில் எத்தனையோ மக்கள் வயிறுரச் சோறின்றி வாடுகிறார்கள். என் வயிறே; காலியாகக் காலியாக நிரம்பிக் கொண்டே யிருக்கிறது. அய்யோ; உங்களோடு பேசிக்கொண் டிருக்கும்போது யாரோ ஒரு பெண் பதுங்கிப் பதுங்கி வருகிறாளே; சற்று மறைந்து கொள்ளுங்கள்; ஆம்; அவளுடைய கையில் ஒரு குழந்தை யிருக்கிறது. பச்சைக் குழந்தை! இப்போது தான் பிறந்திருக்கிறது. அடடா; அதன் கழுத்தெல்லாம் ரத்தம்! குழந்தை தூங்குகிறதா? இல்லை; செத்துவிட்டது.

கழுத்து முறிக்கப்பட்டிருக்கிறது—சரிதான் அவள்தான் குழந்தையின் தாய்! குழந்தையை என் வயிற்றுக்குள் போடப் போகிறாள்—போட்டேவிட்டாள்; அவள் ஓடுகிறாள்; என்னைப் போலீஸ் வரையிலே மாட்டி விட்டு அவள் ஓடுகிறாள்—ஏன் ஓடுகிறாள்? புரிகிறது! புரிகிறது! அவள் கழுத்தில் தாலியைக் காணோம்.

சந்தனக்கிண்ணம்

தலைவர் பேச ஆரம்பித்தார். புது நிலவு போன்ற மணமகளையும், பூரிப்பு வழிய அமர்ந்திருக்கும் மணமகனையும் பாராட்டினர். பழைமையின் அடிச்சுவடுகள் மறையாமலிருக்கிற அந்தப் பட்டிக் காட்டிலே பகுத்தறிவுச் சுடர் கொளுத்திவைத்த அந்த இளைஞனை இதயபூர்வமாக வாழ்த்தி மகிழ்ந்தார். வாழ்வுக்கு ஒளி தரப்போகும் தன் காதலனைத் தலைவர் பாராட்ட, அது கேட்டு வெட்கத்தோடு அமர்ந்திருக்கும் புதுப் பெண்ணின் நெஞ்சம் இன்ப ஓடையாயிற்று.

புரோகித மணம் ஏன் கூடாது—புரட்சித் திருமணம் எப்படி வளர்ந்தது என்பதற்கான விளக்கங்களை வாரி வாரித் தலைவர் இறைத்தார். வந்திருந்த வண்டினங்கள் அந்தத் தீந்தமிழ்த் தேனை உண்டு மகிழ்ந்தன.

பொருந்திய மணம் என்றால் என்ன ; திருமணத்திற்குத் தேவையான—தகுதியான வயது என்ன என்பது பற்றியும் விளக்கம் தந்தார்.

பழைமையும் புதுமையும் மோதிக்கொள்ளக் கூடாது என்று கேலி செய்தார், ஆதாரங்கள் காட்டி.

திராவிடம் என்று ஓர் இனம் உண்டு. "தீராவிடம்" என்று இழித்துரைப்பர், தீயோர். 'தீயோருக்குத் தீராவிடம் தான்!' என்று சான்றுகளை வழங்கினர்.

"திராவிட உட்கல வங்க" என்ற தாகூரின் பாட்டிலே— "தெக்கணமும் அதிற் சிறந்த திராவிட நற்றிரு நாடும்" என்ற மனோன்மணீயம் ஆசிரியர் ஏட்டிலே— "திராவிடர் வரலாறு" என்ற சரித்திரப் புத்தகத்திலே—"மாமல்லன் காலத்தில் திராவிட பாணியில் செதுக்கப்பட்டது" என்ற மகாபலிபுரத்துச் சிற்பக் கல்வெட்டிலே—"திராவிட வித்யாபூஷணம்" என்று சாமிநாத அய்யரவர்களுக்குத் தரப்பட்ட பட்டத்திலே "திராவிட" என்கின்ற தேன்மலர் மணம் வீசுவதைத் தென்றல் நடையில் எடுத்துச் சொன்னார்.

அத்தகைய திராவிடத்தைக் காப்பாற்ற மணமக்கள் முன் வர வேண்டுமென்பதை, 'காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு—கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!' என்ற கவிதை வரிகளால் குறிப்பிட்டார்.

பின்னர் வாழ்வுப் பாதையில் குறுக்கிடும் வளைவுகளை எடுத்துச் சொல்லி எதையும் தாங்கிடும் துணிவு வேண்டும் என்று தைரியமூட்டினர். குடும்பம் என்பது மணல் வீடு கட்டி மரப் பொம்மை வைத்து மழலை விளையாட்டு விளையாடிய கொழுந்துப் பருவ நிகழ்ச்சியல்ல எனக் காட்டி, 'வாழ்க்கை வானில் பறக்கச் சிறகடிக்கும் வெண் புறுக்காள்! வாழ்க நீவிர் வளமெல்லாம் பெற்று!' என வாழ்த்தினர், பலமுறை. புறநானூற்றில் உலவிடும் தாய்மார்கள் பலர் தேவை என்று முழங்கினர். சுருக்கமாகவும் சுவையாகவும் புறநானூறு கூறுகிற ஓர் அழகான கவிதைக்கு மெருகேற்றி எளிய நடையிலே கீதமிசைத்துத் தந்தார். அந்தக் கீதமே ஒரு கதையாக இருந்தது.

குடிசைதான் ஒரு புறத்தில் கூரிய வேல், வாள்
வரிசையாய் அமைந்திருக்கும்,
வையத்தைப் பிடிப்பதற்கும்,
வெம்பகை முடிப்பதற்கும்,
வடித்து வைத்த படைக்கலம்போல் மின்னும், மிளிரும்.
புலியின் குகையினிலே அழகில்லை; புதுமையல்ல!
கிலியும் மெய் சிலிர்ப்பும் கீழிறங்கும் தன்மையும்
தலை காட்டா மானத்தின் உறைவிடம்,
மறவன் மாளிகை!

இல்லத்து வாயிலிலே கிண்ணத்துச் சோற்றோடு
வெல்லத்தைச் சிறிது கலந்து வயிற்றுக்குள் வழியனுப்பப்
பொக்கை வாய்தனைத் திறந்து
பிடியன்னம் எடுத்துப் போட்டாள்
பெருநரைக் கிழவி யொருத்தி ;
ஓடிவந்தான் ஒரு வீரன். 'ஒருசேதி பாட்டி' என்றான்
" ஆடி வந்த சிறுமிபோல் பெரு மூச்சு வாங்குகின்றாய்
ஆண் மகனு நீ தம்பி ?
மூச்சுக்கு மூச்சு இடைவேளை ஏற்படட்டும்—பின்
பேச்சுக்குத் துவக்கம் செய் !" என்றாள் அந்தக்
கிண்டலுக்குப் பேர்போன கிழட்டுத் தமிழச்சி.

" வேடிக்கை நேரம் இதுவல்ல பாட்டி, உன்
வாடிக்கைக் கேலியை விட்டுவிடு.
மடிந்தான் உன் மகன் களத்தில் " என்றான், மனம்
ஓடிந்து நிமிர்ந்தாள் தாய்க்கிழவி ஒருமுறை.

" தாயம் ஆடுகையில் காய்களை வெட்டுவதுண்டு—
களமும் அதுதான் ;
காயம் மார்பிலா ? முதுகிலா ? கழறுவாய் " என்றாள்.
" முதுகில் " என்றான்.
கிழவி துடித்தனள், இதயம் வெடித்தனள்,
வாளை எடுத்தனள்,
முழவு ஒலித்த திக்கை நோக்கி முடுக்கினாள் வேகம் !

" கோழைக்குப் பால் கொடுத்தேன்—குப்புற
வீழ்ந்து கிடக்கும்
மோழைக்குப் பெயர் போர்வீரனும் ! முன்பொரு நாள்
பாய்ந்துவந்த ஈட்டிக்குப்
பதில் சொல்ல மார்பைக் காட்டிச்
சாய்ந்து கிடந்தார், என் சாகாத கண்ணாளர்.
அவருக்குப் பிறந்தானு ! அடடா ! மானமெங்கே !
குட்டிச் சுவருக்கும் கீழாக வீழ்ந்துபட்டான்
இமய வரம்பினிலே வீரம் சிரிக்கும் ; இங்கு
வீணை நரம்பினிலே இசை துடிக்கும் ;
அதுவும் மானம் மானமென்றே முழக்கும் !
மதுவும் சுராவும் உண்டு வாழும்
மானமற்ற வம்சமா நீ ? ஏடா ?

மறத்தமிழ்க் குடியிலே மாசு தூவி விட்டாய்!
மார்பு கொடுத்தேன்; மகனுய் வளர்த்தேன்,
தின்று கொழுத்துத் திமிர் பாய்ந்த தோள்கள் எங்கே?
தினவெடுக்க வில்லையோ? அந்தோ!
வேலுக்கு வழிசொல்ல வகையற்ற கோழையே! என் வீரப்
பாலுக்கு வழிசொல்வாய்!''
என்று கதறினுள், எண்பதை நெருங்கிய ஏழைக் கிழவி.
சென்றங்கு செருமுனையில் சிதறிக் கிடந்த
செந்தமிழ்க் காளைகளைப் புரட்டிப் பார்த்தாள். அங்கு
நந்தமிழ் நாட்டைக் காக்க ஓடிற்று இரத்த வெள்ளம்!
பிணக் குவியலிலே பெருமூச்சு வாங்க நடந்தாள்.
மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை;
மகன் பிறந்தபோதும் மகிழ்ச்சிக்கு எல்லையுண்டு.
அவன் இறந்து கிடந்தான் ஈட்டிக்கு **மார்பு காட்டி!**
இதைக் கண்டாள்—இதயங் குளிர்ந்தாள்;
''எதைக் கண்டாலும் இனிக் கவலையில்லை;
என் மகன் வீரனுய் இறந்தான்!'' என்றுள்,
''அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை;
அடடா!
கருத்தெரியப் பொய் சொன்ன கயவன் எங்கே?
வாளிங்கே! அவன் நாக்கெங்கே?''—

இந்த வீர இசையைத் தலைவர் முடித்தார். பந்தல் அதிர்ந்தது, கைதட்டலால்! கையொலி ஓய்ந்த பிறகு தலைவர் சொன்னர்: ''இந்தப் பாட்டு நான் எழுதியதில்லை. இதோ இருக்கிறாரே; இந்த மணமகன் எழுதியது!'' என்று உற்சாகத்தோடு உரைத்தார். மீண்டும் பந்தல் அதிர்ந்தது! பக்கத்திலிருந்த புதுப்புரவின் இளங்கன்னங்கள் ரோஜாவாயின. இதயம் எப்படி மலர்ந்ததோ யாரறிய முடியும்? தலைவர் வாழ்த்துரையை முடித்தார். பரிசுகள் வழங்கும் படலம் ஆரம்பமாயிற்று. மணமகளின் உள்ளத்தை அருகிருந்த மணமகனைவிட அதிகமாக உணரக்கூடிய சக்திவாய்ந்த ஓர் உருவம் அந்தப் பந்தலிலே அமர்ந்திருந்தது. அதுதான் மணமகளின் தோழி விஜயா. கமலாவும் விஜயாவும் கல்லூரியில் மட்டுமல்ல; இளமையிலேயே இணைபிரியாதவர்கள். விஜயா இல்வாழ்க்கைப் பாதையிலே பயணம் நடத்திக் கொண்டிருப்பவள். கமலா இன்றுதான் அடியெடுத்து வைக்கிறாள், கந்தனின் கை கோத்தபடி. அறிஞர்களின்

பாராட்டுக்குரிய ஓர் அன்புத் துணை தன் தோழிக்குக் கிடைத்தது கண்டு விஜயாவுக்கு அளவிட முடியாத மகிழ்ச்சி! அந்த ஆனந்தத்தில் மெய்ம்மறந்திருந்தாள். கணவன் மணமேடையில் புகழப்படும் போதெல்லாம் கமலா, விஜயாவைக் கெண்டைக் கண்ணால் பார்த்ததை விஜயா மட்டுமே உணரமுடிந்தது. பரிசளிப்புகள் முடியுந் தறுவாயிலிருந்தன. இன்ப வெள்ளத்தில் எல்லாவற்றையும் மறந்திருந்த விஜயா திடுக்கிட்டு எழுந்தாள். பரபரப்புடன் மணமேடைக்கு ஓடினாள். தன் கையிலேயிருந்த ஒரு தாள் சுருளைப் பிரித்தாள்.

> "கண்ணே, கமலா...! நீ அதிர்ஷ்டசாலி இதைப் பெற்றுக்கொள், நம் அன்பின் அடையாளமாக! எந்த நெருக்கடி வந்தாலும் சரி, இந்த அன்புச் சின்னத்தை மறந்து விடாதே! சந்தனக் கிண்ணம்—உன்உள்ளம் சந்தோஷக் கிண்ணமாயிருப்பதை விளக்கும் சின்னம்!"

என்று கூறிக்கொண்டே கமலாவைத் தழுவிக்கொண்டாள். ஆனந்தக் கண்ணீர் பொழிந்தாள். கமலாவும் கண்கலங்கிவிட்டாள் சந்தோஷத்தால். வாழ்வின் ஆரம்பவிழா அரும்பிவிட்டது.

குடும்பம் குதூகலமாய்த் துவங்கியது. கமலா கொஞ்சம் பழைமைப்பித்துப் பிடித்தவள். காதலர்களுக்குள் ஊடல் ஏற்படுவதெல்லாம் பழைமை—புதுமைச் சண்டையிலேயே என்ற நிலைமை சிலநாள் தொடர்ந்தது. பிறகு இருவருமே கடவுளர்களைக் கேலி செய்ய ஆரம்பித்தனர்.

"பரமசிவனையும் பார்வதியையும் தினம் தினம் பள்ளியறைக்குப் பல்லக்கில் தூக்கிக்கொண்டு போகிறார்களே பக்தர்கள்...! ஆனால் அவர்களுக்குக் கணபதி, முருகன் இருவரைத் தவிர வேறு குழந்தைகள் பிறக்கவே இல்லையே! ஏன்?" என்பான் கந்தன்.

"தெரியாதா உங்களுக்கு? அவர்கள் கர்ப்பத்தடை செய்து கொண்டார்கள்!" என்று சிரிப்பாள் கமலா.

"கடலிலே மீனை வெள்ளைக்காரனும் பார்த்தான்; நாமும் பார்த்தோம்....." என்று ஆரம்பிப்பான் கந்தன்.

"வெள்ளைக்காரன் மீனைப் பார்த்து சப்மரீன் செய்தான்; நாம் மச்சாவதாரம் செய்தோம்!" என்று முடிப்பாள் கமலா.

இப்படி வளர்ந்தது அவர்களின் இன்ப வாழ்வு. இந்தப் புதியஜோடி கண்டு கந்தனின் தாய் களிப்படைந்தாள் என்றாலும், "கமலாவும் இப்படியெல்லாம் கடவுளைத் திட்டுகிறாளே! அடுப்பங் கரையில் கிடக்க வேண்டியதுகளுக்கு இந்த வம்புகள் எல்லாம் ஏன்?" என்ற ஆத்திரம் மெல்லத் தலைநீட்ட ஆரம்பித்தது. வெளிப் படையாகக் கண்டித்தால் மகனுக்கு வருத்தம் வருமே யென்று ஜாடைமாடையாகக் கண்டிக்கத் தொடங்கினாள். அப்படிக் கண்டனங்கள் கிளம்பும்போது காதலனின் இன் முகத்தை நினைத்துக் கமலா ஆறுதல் பெறுவாள். அது மட்டு மல்ல; அவள் தோழி விஜயா அடிக்கடி சொல்லியிருக்கிறாள்: "வீட்டிலேயிருக்கிற பெரியவர்களின் மனதை நோகவிடும்படி நடக்காதே! அனுசரித்து நட!" என்ற பொன்மொழிகளை. அவற்றை நினைத்துக் கொள்வாள் கமலா. உடனே ஓடிப் போய் அவள் கொடுத்த அன்புப் பரிசை—அந்தச் சந்தனக் கிண்ணத்தை எடுத்து முகத்திலே அணைத்துக்கொள்வாள். சந்தனக் கிண்ணத்தின் விளிம்புகளிலே அவள் தன் ஆருயிர்த் தோழியின் உயிர்த்துடிப்புள்ள இதழைக் காணுவாள்; அந்தக் கிண்ணத்தின் பளப்பளப்பிலே தோழியின் சிரிப்பைக்கண்டு துள்ளியெழுவாள். காதலன் வீட்டில் இல்லாத நேரத்தில் அவளுக்குப் பேச்சுத்துணை சந்தனக் கிண்ணந்தான்! மாமியாருக்கு மருமகள் மீது ஏற்பட்ட கோபம் அவள் வலுவில் பேசவந்தாலும் அதிகமாகப் பேசுவது கிடையாது. பால்யத்தோழி—பள்ளித் துணை விஜயா அத்தக் கிண்ணத்திலே தன் கன்னத்தைக் காட்டிக் கமலாவைவிட்டுக் கிள்ளச் சொல்லிக் கொண்டேயிருந்தாள். கிண்ணத்திலே மின்னும் "விஜயா" என்ற எழுத்துக்கள் கமலாவிடம் எத்தனையோ பழங்கதைகளைச் சொல்லும்; கமலாவும் கண்ணை மூடிக்கொண்டு அந்த இன்பக்கதைகளைக் கேட்பாள்.

திடீரென்று நாட்டிலே தீப்பொறி கிளம்பிற்று. தமிழை ஒழிக்கத் தருக்கர்கள் படை திரட்டினர். அதற்குத் தடைபோடத் தரணியாண்ட இனத்தவர் புறப்பட்டனர். வடநாட்டு இந்தி மொழி ஏகாதிபத்தியம் திராவிடத்திலே திணிக்கப்பட்டது. அதை எதிர்த்து மொழிப்போர் வீராவேசமாக மூண்டது.

"மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!" என்ற கவிதையை முழங்கியவாறு தமிழர் பட்டாளம் கிளம்பிற்று. சிங்கங்கள் சிறைபுகுந்தன. சிசுக்களுடன் பல தமிழ்த்தாய்களை அடக்குமுறையின் கோரவாய் விழுங்கியது. மொழிகாக்கப் போன இருவர்—தாளமுத்து, நடராசன் எனும் மாவீரர்கள்—தம் மூச்சைக்காக்க முடியாமல் ஆக்கப்பட்டனர் இந்தி வெறியர்களால். தமிழகமெங்கும் கொதிப்பு—குமுறல்—புயல்!

கமலா பலகணி வழியாக வீதிப்புறத்தைப் பார்த்தபடி நின்றுகொண்டிருக்கிறாள். அவளுடைய கையிலே அந்தச் சந்தனக் கிண்ணமிருக்கிறது. சந்தனக் கிண்ணத்தோடு பேசி முடித்தாகி விட்டது; இப்போது அவள் எதிர்பார்ப்பது அலுவலகத்திலிருந்து திரும்பும் கந்தனை.

கண்களும் வலிக்கத் துவங்கிவிட்டன; கந்தனைக் காணோம்; ஒரு பெருமூச்சோடு பலகணியைவிட்டு அகல முயன்றாள். அமைதியாயிருந்த தெருவிலே ஓர் அலைமுழக்கம் புறப்பட்டது. பரபரப்போடு கமலா பலகணி வழியாகப் பார்வையைச் செலுத்தினாள். "தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! தாளமுத்து—நடராசன் புகழ் வாழ்க!" என்று பரணி பாடியபடி ஒரு தமிழர் பட்டாளம் பவனி வந்துகொண்டிருந்தது. ஓலைவைக்கிழவி போன்ற ஒரு மூதாட்டி கம்பீர நடைபோட்டுக் கையிலே கொடி ஏந்திப் பிறை போல வளைந்த கூனல் எப்படி நிமிர்ந்தது என, பார்ப்போர் ஆச்சரியப்படும்படி அந்த அணிவகுப்புக்குத் தலைமை வகித்துச் சென்றாள். நெடிது உயர்ந்த சேரன்—செங்குட்டுவனே வந்து விட்டான் என அதிசயிக்கத்தக்க அளவுக்கு வாட்ட சாட்டமான ஒரு மனிதர்—அஞ்சா நெஞ்சர்—படையின் தளபதியாக வீரநடை போட்டார். அந்தப் புலிநிகர் மாந்தர்களின் ஒலிமுழக்கம் கமலாவை வீறுகொள்ளச் செய்தது.

திருமணத்தன்று, "காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு! கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!" என்று தலைவர் சொன்ன கவிதை நினைவுக்கு வந்தது. நினைவு அலைகளிலே சுழன்றுகொண்டிருந்த அந்த ஏந்திழையை ஒரு குரல் திடுக்கிட வைத்தது. "தமிழ் வாழ்க!"—தென்றல் நடையிலே! "இந்தி ஒழிக!"—புயல் நடையிலே! இரண்டு நடையிலும் கிளம்பிய ஒலி கந்தனுடையதுதான்! கமலா வெளியே ஓடிவந்தாள். கந்தன்,

கையிலே கொடியேந்தியவாறு ஆவேசமுடன் அந்தப் பட்டாளத்தில் பவனி வந்தான். கமலா கூட்டத்துக்குள் ஓடினாள். கந்தனைப் பிடித்து நிறுத்தினாள். கந்தனுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஐயோ, கூட்டத்திலேயுள்ள கொள்கை வீரர்கள் தன்னைப்பற்றித் தவறாக நினைக்கக் கமலா இடமளித்துவிடுவாளோ என்று கலங்கினான். கமலா ஆத்திரத்தோடு கேட்டாள்!

"இந்தி எதிர்ப்புக்கு உங்களை யார் போகச்சொன்னது?"

இதைக் கேட்டுக் கந்தன் விழித்தான். ஆனால், கமலா வார்த்தையை முடிக்கவில்லை .....இப்போதுதான் முடித்தாள்; "....என்னை விட்டுவிட்டு?" என்று!

"இந்தி எதிர்ப்புக்கு உங்களை யார் போகச் சொன்னது, என்னை விட்டுவிட்டு!" என்ற மொழி கேட்டதும் மூதாட்டி ஓடிவந்து கமலாவை அணைத்துக்கொண்டாள். மீண்டும் தமிழ் முழக்கம் தொடர்ந்தது. ஊர்வலம் அந்த வீதியைத் தாண்டியது. போலீசார் பாய்ந்தனர், புள்ளிமான் கூட்டத்திலே புலியென! வேட்டுச் சப்தம், வேதனை ஒலி. 'தமிழ் வாழ்க!' என்ற போர் முரசம். அத்தனைப் பேரையும் சிறைச்சாலைக்கு "வாருங்கள்" என வரவேற்றது அதிகாரத் திமிர்!

கமலாவும் கந்தனும் சிறைச்சாலையிலே, "கணவனுக்கும் மனைவிக்கும் தராவிடமே மூச்சு!" என்பதை மோகனத்திலே முணுமுணுத்துக்கொண்டிருந்தனர்.

அடக்குமுறை தர்பார் துவண்டது. இந்தி வெறியர்கள் 'இனிப் பலிக்காது நம் முயற்சி' என மிரண்டனர். கட்டாய இந்தி, கடையைக் கட்டியது! தமிழர் படை வென்றது. வீரர் உலாப் பாடினர்; கட்டாய இந்தி, கழுதை தேய்ந்து கட்டெறும் பாயிற்று! வென்றது மொழிப்போர்!

கமலாவும் கந்தனும் தமிழ் காத்த தடந் தோள்களிலே வெற்றிமாலை சூடி, வீட்டுக்குத் திரும்பினர். "வீண் வேலையில் ஈடுபட்டாய், இனி வேலை கிடையாது உனக்கு!" என்ற ஆபீஸ் உத்தரவும் அவனுக்கு முன் வீட்டுக்கு வந்திருந்தது. தாயாரோ, புகையும் எரிமலையாக இருந்தாள்.

"அம்மா, உனக்கு ஒரு கேடு என்றால் துள்ளியெழாமாட்டேனா நான்? அது போலத்தான் தாயே, தாய் மொழியைப் பழித்தவரை எதிர்த்தேன்; இது குற்றமா அம்மா?" என்று

அழுதான் கந்தன். மகனைவிட மருமகள்மீது அதிக ஆத்திரம் அந்த மாதாவுக்கு.

வேலையற்ற நிலை—வேலை கிடைக்காத நிலை. வேதனை வாழ்வு. வேலையில்லாத கந்தன் இயக்க வேலையிலேயே முழு நேரமும் ஈடு பட்டான். அந்த ஊர் செயலாளர் அவன்தான். கந்தனைத் தெரியாதார் யாருமில்லை. அவன் புகழ் வளர்ந்தது. ஊரிலே இயக்கச் சார்பிலே ஒரு பொதுக் கூட்டம். எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டான். சொற்பொழிவாளருக்கு வழிச் செலவுக்கு இருபது ரூபாய் அனுப்பியாக வேண்டும்.

பணம் வசூல் ஆகவில்லை. கூட்டம் நின்றுவிடக் கூடாதே யென்று துடித்தான். வீட்டிலே நிம்மதியின்றி அலைந்தான். சிறைச்சாலையிலே கமலாவுக்குச் சரியான உணவும் பாதுகாப்பு மின்றி உடல் நலம் கெட்டது. அது ஏழ்மையின் காரணமாகத் தொடர்ந்தது. டாக்டர் எழுதிக் கொடுத்த மருந்தை வாங்கித் தரப் பணமில்லை. வீட்டிலிருந்த வெள்ளிச் சாமான்களையும் விற்றுச் சாப்பிட்டாகி விட்டது. சந்தனக் கிண்ணம் ஒன்றுதான் பாக்கி வெள்ளியிலே! "அதை விற்றுவது மருந்து வாங்கிக் கொடேன்!" என்றாள் தாயார். அவனுக்கு அதை விற்க மனம் வரவில்லை. மனைவியின் தோழி யளித்தது அந்தச் சந்தனக் கிண்ணம். ஆகவே மறுத்துவிட்டான். இப்போது சொற்பொழி வாளருக்கு அனுப்பப் பணம் இல்லையென்றதும் அவன் விழிகள் அந்தக் கிண்ணத்தைத் தேடின. நோயுற்றிருந்த கமலா தூங்கிக் கொண்டிருந்தாள். கைகள் நடுங்கக் கந்தன் சந்தனக் கிண்ணத்தை எடுத்தான். அடகு வைத்துப் பெற்ற பணத்தைச் சொற்பொழி வாளருக்கு அனுப்பினான்.

கூட்டம் குறிப்பிட்டபடி ஏற்பாடாகியது. புகைவண்டி நிலையத்துக்குக் கந்தன் புறப்பட்டான் சொற்பொழிவாளரை வரவேற்க! அப்போது அவன் தாய் கமலாவைத் திட்டிக்கொண் டிருந்தாள். கூர்ந்து கவனித்தான். சந்தனக் கிண்ணத்தைக் கமலா தொலைத்துவிட்டாள் என்பதுதான் தாயின் குற்றச்சாட்டு. காய்ச்சலோடு கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் கமலா, எதுவும் பேசாமல் அழுது கொண்டிருந்தாள். தன் அருமை விஜயா காணுமற் போய்விட்டதை நினைத்துக் கண்ணீர்விட்டாள். தன் கண்களைத் துடைத்துக் கொண்டு கந்தன் புகைவண்டி நிலையத் திற்கு ஓடினான். புகைவண்டி வந்தது. ஆனால் கூட்டத்திற்கு வரவேண்டிய சொற்பொழிவாளர் வரவில்லை. அசையாமல்

அப்படியே நின்று கந்தன் விம்மி விம்மி அழுதுவிட்டான். தன்னுடைய வீட்டுக் காரியத்திற்கு ஒருவர் வருவதாயிருந்து வராமல் போனாலும் பரவாயில்லை. பொதுக்காரியம்—பொது மக்களிடம் பணம் வசூல் செய்து பொதுமக்களை எப்படி ஏமாற்று வது என ஏங்கினான். மேடைக்கு வந்து மக்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டான். மக்கள் முணுமுணுத்தபடி கலைந்தனர்.

வீட்டுக்கு வந்தான். கமலாவுக்குக் காய்ச்சல் அதிகமாகிவிட்டது. கண்களிலே ஒளி குறைந்துவிட்டது. தாயார் பக்கத்திலே அமர்ந்து அழுதுகொண்டிருந்தாள். கந்தன் ஓடிவந்து "கமலா! கமலா!" என்று அலறினான்.

அவள் மெல்ல வாய் திறந்தாள். "அத்தான் அந்தச் சந்தனக் கிண்ணம்" என்று இதழசைத்தாள்.

"கமலா, அதை நான்தான் திருடி அடகு வைத்திருக்கிறேன்—பணம் வந்ததும் மீட்டுவிடலாம்" என்று கதறினான். அவன் கதறலிடையே கமலா கண்ணை மூடினாள். பிறகு திறக்கவே யில்லை; கந்தன் அழுதான்; அழுதுகொண்டேயிருந்தான்!

இப்போது கந்தன் ஏழையல்லன். பணக்காரனுயில்லா விட்டாலும் பண வசதி இருக்கிறது.

இருபது ரூபாய்க்கு அடகு வைத்த சந்தனக் கிண்ணத்தை வட்டியோடு முப்பது ரூபாய் கொடுத்தால் மீட்டு விடலாம்.

ஆனால்,

அதை மீட்டு யாரிடம் கொடுப்பது? கமலாவா இருக்கிறாள் அவளிடம் கொடுக்க? அவளைத்தான் இந்திவெறியர்களின் சிறைச் சாலை, கொஞ்சம் கொஞ்சமாக விடுதலைக்குப் பிறகும் விடாமல் கொன்றுவிட்டதே!

கந்தன் சந்தனக் கிண்ணத்தை மீட்டுவிடத் தயாரா யிருக்கிறான். எப்போது? கிடைத்ததும் மீண்டும் இலட்சியப் போரின் வெற்றி விழாவிலே, வீரர்களுக்குச் சந்தனம் வழங்கும் சந்தர்ப்பம் வருமே; அப்போது!

சங்கிலிச்சாமி

''சங்கிலியானந்த சாமிக்கு ஜே!''

''சங்கிலியானந்த சாமிக்கு ஜே! ஜே! ஜே!''

பக்தர்கள் குதித்தார்கள்; பரவசத்தால் நர்த்தனமாடினர்கள்; பரமானந்த கீதம் பாடினர்கள்.

''அஷ்டமா சித்துபுரி ஐயனே போற்றி! துஷ்டர் தம் துடுக்கடக்கும் தூயனே போற்றி! கஷ்டங்கள் தீர்த்திடும் எங்கள் கண்கண்ட தெய்வமே போற்றி! போற்றி!!''

இந்தப் பாடலை, சாமியாரின் சிஷ்யன், சம்பந்தம் உரக்கப் பாடினான். சம்பந்தத்தின் முக விகாரங்கள்...தானே வர வழைத்துக் கொண்ட அங்க சேஷ்டைகள்... போற்றிப் பாடலுக்குப் புது மெருகு கொடுத்துப் பக்தர் கூட்டத்தைப் புளகாங்கிதத்தில் ஆழ்த்தின.

'நமப்பார்வதி பதே' ஓரே பேரொலி; திடீரென அமைதி. சின்னப்பண்ணை முதலியார் சாமியாரின் பாதங்களைத் தொட்டுக் கும்பிட்டு மலர்களைத் தூவினர். பக்தர்களும்...பண்ணையாரைப் பின்பற்றிப் பாத பூஜை செய்து...மலர்...காசு...பணம்...இவைகளால் அர்ச்சித்து நின்றனர். 'ஓம் சங்கரா சிவ' இந்த முணு முணுப்போடு சங்கிலிச்சாமி தம்மை வணங்கி எழுந்தவர்களுக்கு ஆசீர்வாதம் வழங்கினர்.

பக்தர்கள் பலப்பல வகைகள்; கோரிய வரங்கள் பலப்பல ரகங்கள்.

"வழக்கில் வெற்றி பெறவேண்டும்"

"வாத நோய் தீரவேண்டும்"

"பிள்ளையில்லை....அருள் தேவை"

"கொள்ளை போய்விட்டது; கள்ளனைக் காட்டுக!"

எல்லாவற்றுக்கும் ஒரே மருந்து.....விபூதி; அதைச் சாமியார் தர, பக்தகோடிகள் வாங்கிக்கொண்ட காட்சியில் ஒரே பக்தி வெள்ளம்.

'சம்பந்தம்!' என்றூர் சாமியார்.

'ஸ்வாமி' என்று அலறி விழுந்தான் சிஷ்யன், அதற்குள் சின்னப்பண்ணை முதலியார் கைகட்டி வாய்புதைத்துக் காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டார்.

"சங்கரன் உத்தரவிடுகிறான்; இன்றைய அருள் போதுமாம்" சங்கிலிச்சாமியாரின் இனிப்பான பேச்சு இது!

"அப்படியே சரி ஐயனே!" இது சம்பந்தம்.

"சாமி சயனிக்கப் போகிறது....ஜனங்களெல்லாம் செல்லலாம்" இது முதலியார்.

"அவரைப் பாரு!.... அப்படியே தேவலோகத்திலிருந்து குதிச்சு வந்தவரு மாதிரி இருக்கார்."

"செக்கச் செவேர்னு....சிவபெருமான் மாதிரி! அடடா! என்ன அருள்! என்ன அருள்! அந்தக் காவி ஆடைக்கும்.... கருணை வழியும் முகத்திற்கும் கைலாசபதி வந்ததுபோல் இருக்கிறதப்பா!"

"பொம்பளைப் பக்கம் அவரு பார்த்துப் பேசும்போது அவரு வாயெல்லாம் புன்சிரிப்படி! ஆனை...எலுமிச்சம்பழம் மாதிரி, கொழு கொழுன்னு இருக்கார். எல்லாம் தெய்வப் பொறப்புடா, தெய்வப் பொறப்பு!"

"நம்மாத்துக்காரருந்தான் இருக்கார், நாலு வார்த்தை இப்படி அழகாப் பேசுவாரா?"

"டேய்....தீராத வினையெல்லாம் இவரு விபூதியினுலே தீருமடா."

"ஆள் சாமான்யமா? ஆயிரம் ஜனங்களை ஆபத்திலேயிருந்து காப்பாற்றினரப்பா!"

"அதென்ன ஆபத்து?"

"இது தெரியாதா?....இவருக்கு ஏன் சங்கிலிச்சாமின்னு பேரு தெரியுமா?"

"சங்கிலிக் கருப்பன் பூஜை செய்வார்."

"அட மூடம், அதில்லை. ஒருநாளு மெட்ராஸ் மெயிலு.... வெகுவேகமாக மெயில்மாதிரி போச்சாம்."

"எந்த ஊருக்கு?"

"மெட்ராசுக்கப்பா."

"உம்; சொல்லு?"

"நம்ப சாமியும் அதிலே இருந்திருக்கு. சாமி....இருந்தாப்போல இருந்தது...."

"மறைஞ்சுட்டுதா?"

"இல்லப்பா....ரயிலில் இருக்கிற அபாய அறிவிப்புச் சங்கிலியைப் பிடிச்சு இழுத்திருக்கு."

"உடனே ரயில் நின்று இருக்குமே!"

"ஆமாம்; ரயில் நின்றதும்....கார்டு வந்து 'யாரப்பா ரயிலை நிறுத்தியது?' அப்படின்னு கேட்டிருக்காரு."

"சாது என்ன சொன்னது?"

"நான் தானப்பா! தண்டவாளத்தில் ஆபத்தப்பா! உடனே போய்ப்பாரப்பா—என்று சொல்லியிருக்கு சாமி."

"ஆஹாஹா....என்ன சக்தி! என்ன சக்தி!"

"எல்லோரும் போய்த் தண்டவாளத்தைக் கவனித்துப் பார்த்தா....தண்டவாளத்தை வெட்டி....ரயிலைக் கவுக்கச் சூழ்ச்சி பண்ணியிருக்கு."

"அடடா!"

"உடனே ஜனங்களெல்லாம்...சாமி காலில் சாஷ்டாங்கமாய் நமஸ்காரம்பண்ணி எங்களைக் காப்பாத்தின கடவுளென்னு கட்டிப்பிடிச்சுகிட்டாங்களாம்."

"த்சு! த்சு!..சாக்ஷாத் கடவுளே அவதாரம்! என்னமோ! இந்தக் கலிகாலத்திலே நமக்கெல்லாம் காணக் கொடுத்து வச்சிருக்கு."

"அதிலேருந்துதான் சங்கிலிச்சாமின்னு பேரு! நம்ப சின்னப் பண்ணை முதலியாரும்....அதே ரயிலில் இருந்திருக்காரு. அவருக்குச் சாமிமேலே....ஒரு மோகம் விழுந்துட்டுது.

"ஓ....அதான்....முதலியார் இவ்வளவு தடபுடல் பண்ணூர்! ....இல்லேன்னு....இந்தக் கருமி....இப்படிக் காசு செலவு பண்ணமாட்டாரே!"

சின்னப்பண்ணையின் மேல்மாடியில் பட்டு மெத்தை ஒன்றில் சங்கிலியானந்தசாமி சயனித்திருக்க....சம்பந்தம் அடிவருட.... பண்ணைக்காரர்...'பங்கா' போட்டுக்கொண்டிருந்தார். இன்னொரு மெத்தையில் பண்ணைக்காரரின் குச்சுநாய் படுத்துக் கிடந்தது.

'ஓம்....சங்கராசிவ'—சாமியாரின் வாயிலிருந்து கால் மணி நேரத்துக் கொருமுறை வெளிக் கிளம்பும் வார்த்தைகள் இவை!..

"என்ன முதலியார்!....நமது பயணம் விரைவில் நடைபெற வேண்டுமென்று பரமன் ஆணையிடுகிறானே."

"ஆண்டவன் ஆணையா?....அவசியம் புறப்படவேண்டும்" —சம்பந்தம் துடித்தான்.

முதலியார் எழுந்து நின்று, "ஸ்வாமி நாளைக் காலையில் முழுவதும் வந்துவிடும். பிறகு அவ்விடத்துப் பிரயாணத்தை ஆரம்பித்தால்...." என்று முடிப்பதற்குள்,

"ஆகாது....ஆகாது; எம்பெருமான் சாமிகளைக் கோபிப் பார். அற்ப விஷயத்துக்காகச் சாமிக்கும், சாக்ஷாத் பரமேஸ்வரனுக்கும் மனத்தாங்கல் ஏற்படக்கூடாது."

சம்பந்தம் தத்தோமென ஆடினன்; அவனைச் சாமியார் கையமர்த்தி, "சம்பந்தம்!...பொறு! முதலியார் நம்பால் காட்டும் அன்புக்கு நாம் அவரை ஏமாற்றக்கூடாது. சரி...சங்கரனிடம் ஒருநாள் தவணை கேட்கிறேன். முதலியாரே! இன்றுவரை எவ்வளவு கிடைத்திருக்கிறது?"

முதலியாரின் முகத்தில் களை உதயமாகிறது.

"ஸ்வாமி...ஆயிர ரூபாய் எடைதான் வெள்ளி கிடைத்திருக் கிறது. காலையில் ஆயிர ரூபாய் எடை வரும்."

"சந்தோஷம். மொத்தம் இரண்டாயிர ரூபாய் எடை. எல்லாவற்றையும் தங்கமாக்கிவிட்டால்...போதுமல்லவா?"

முதலியார் தோளைச் சொரிந்துகொண்டே தலையசைத்துப் பல் இளித்தார்.

சாமியாரின் நெற்றியில் சில சுருக்கங்கள் மின்னி மறைந்தன.

"சம்பந்தம்!"

"ஸ்வாமி!"

"நாளைக் காலை பூஜை முடிந்ததும் யாரும் மேல் மாடிக்கு வரக்கூடாது."

"உத்தரவு."

"நீயுந்தான்."

"ஆகட்டும்."

"இரவு முழுவதும் நான் தனித்திருந்து சிவபூஜை செய்ய வேண்டும்."

"ஆக்ஞை ஸ்வாமி"

"முதலியார்...."

"ஸ்வாமி...."

"தெரிந்ததா?"

"ஆஹா..."

"இரவு பூஜை முடிந்து—மறுநாள் உதயமானதும்....நீர் மாடிக்கு வரவேண்டும்....உமது விருப்பம் நிறைவேறியிருக்கும் ....நீர் கேட்பது தங்கந்தானே?"

"ஆமாம்....அதைவிட உயர்ந்ததாய் ஆக்கமுடிந்தாலும் ....."

"கவனிப்போம்....வைரப் பாளமாகக்கூட ஆக்க முடியும், சிவனருள் எப்படி இருக்கிறதோ....!"

முதலியார் ஒரு கிண்ணம் பாலைச் சாமியிடம் நீட்டினர். அதைச் சிஷ்யன் சம்பந்தம் வாங்கிச் சாமியின் உதட்டில் வைத்தான்....

மறுநாட் காலையில் வழக்கம்போல் பூசையெல்லாம் முடிந்து... வெள்ளிக் கட்டிகளும் வந்து சேர்ந்தன. சாமியார் அந்த வெள்ளிப் பாளங்களைக் கண் குளிரப் பார்த்து "மூடாத்மா ஞானத்மாவாக மாறுவது போல்—நாஸ்திகன் ஆஸ்திகனுய் மாறுவது போல் 'ஏ' வெள்ளியே! நீ தங்கமாகப் போகிறுய்!"

இதைச் சாமியார் சொல்லும் பொழுது சம்பந்தம் தலையாட... முதலியார் முகமும் அகமும் மலர்ந்த காட்சி வெகு ரம்மியமா யிருந்தது.

சாமியார் பூஜை செய்ய உட்கார்ந்தார். சாம்பிராணிப் புகைச்சல், ஊதுவத்திகளின் மணம்.....அரைத்த சந்தனத் தின் வாடை....மல்லிகை மாலைகள் தந்த குளிர்ந்த வாசனை....

"மாடியில் ஒரு சொர்க்கலோகத்தையே சாமி உண்டாக்கி விட்டது" என்றூர் முதலியார்.

"சொர்க்கலோகம் இருந்தால்தானே சொக்கநாதன் வருவான்" என்றூன் சம்பந்தம்.

முதலியாருக்கு இரவெல்லாம் ஒரே கனவு. தங்கமாக மாறிய வெள்ளிக் கட்டிகளின் பிரகாசம், அந்தத் தங்கக் கட்டிகளை உடைத்து வெளியூர் சென்று வியாபாரம் செய்வது, நல்ல விலைக்கு விற்ற பிறகு....பெரிய குபேரனுவது, குபேரன் ஆனதும் உள்ளூர்ப் பெரிய பண்ணையை ஏளனம் செய்வது, இந்தக்கனவுகளில் புரண்டுகொண்டிருந்தார். தங்கத்தை வியா பாரம் செய்யப்போன இடத்தில்....போலீஸ்காரர் கையில் சிக்கி விட்டதாக ஒரு பயங்கரக்கனவால்...பண்ணையார் பதறியடித்து எழுந்தார். கண்களை நம்பமுடியாமல் கசக்கிக்கொண்டார். பொழுது விடிந்தது. தங்கத்தைப் பார்ப்பதற்காக சம்பந்தத்தை யும் அழைத்துக்கொண்டு மேல் மாடிக்கு ஓடினர்.

சாம்பிராணி வாடை நிரந்தரமாகப் பரவி...முதலியாருக்கு உற்சாகமான வரவேற்புக் கொடுத்தபடி இருந்தது. மாடியில் நுழைந்த முதலியார் 'சாமி...சாமி..' என்று கத்தினர். அவ்வளவுதான்; மூர்ச்சையாகி விட்டார்.

சம்பந்தம் முதலியாரைத் தூக்கித் தேற்ற ஆரம்பித்தான். மாடியிலிருந்து தோட்டத்துப் பக்கம் தொங்கிக்கொண்டிருந்த அழுத்தமான கயிறு காற்றில் அசைந்தது. முதலியார் மூர்ச்சை தெளிந்து—சம்பந்தத்தை உற்றுப் பார்த்தார். அந்தப் பார்வையில் "ஹே சம்பந்தம்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளி போச்சே!" என்ற சோகம் பிரதிபலித்தது.

"பேராசை பெருநஷ்டம்" என்பது போலிருந்தது சம்பந்தத் தின் பதில் பார்வை.

"சம்பந்தம்! கருவாடு களவு கொடுத்த பாப்பாத்தி கதையாக அல்லவா என் கதை முடிந்துவிட்டது."

"ஆமாம்...வெளியில் சொன்னுல் வெட்கக்கேடு."

"ஜெயிலுக்குப் போகவேண்டுமப்பா."

"உம்....இந்தச் சண்டாளன் இப்படிப் பண்ணி விட்டானே!"

"சம்பந்தம்....நீயும் இந்தச் சதிகாரனுக்கு உடந்தையா?"

"முதலியார்!...என்னை மன்னித்து விடுங்கள். நானும் உடந்தையாகத் தானிருந்தேன். அந்தப் படுபாவி என்னையும் ஏமாற்றிவிட்டான்."

"பரம பக்தர்கள் போல் நடித்தீர்களே!"

"நடிக்காவிட்டால் நீங்கள் நம்புவீர்களா?"

"அட பாவி...ரயிலில் அவனைப் பார்த்தது முதல் என்னைச் சனியன் பிடித்துக்கொண்டதே."

"சனியனல்ல! சரியான ஆசை பிடித்துக் கொண்டது. முதலியாரே! ஆசையால் விளைவதுதானே ஆபத்துக்கள்."

"போதுமப்பா வேதாந்தம். உங்கள் வேதாந்தத்தைக் கேட்டுத்தான் இவ்வளவு விபரீதம்."

"இனி நான் வேதாந்தம் பேசமாட்டேன். அந்தச் சூதனைத் தொலைக்க வழி தேடுவேன்."

"கடலில் போன என் சொத்து—இனிக் கரையேறுமா?"

"சம்பந்தத்தின் கப்பல்—ஒரு துரும்பு விடாமல் அரித்துக் கொண்டு வந்துவிடும். கலங்காதீர் முதலியாரே!"

"வெள்ளிக் கட்டிகளப்பா...வெள்ளிக் கட்டிகள்!"

"வைரக் கட்டிகளாகத் தருகிறேன். வியாகூலப் படாதீர்."

"ஏன்...உனக்கு ஏதாவது தங்கக் கட்டி வேண்டுமோ?"

"தவறுக என்னை மதிக்காதீர்... முதலியாரே!... என் கதையைக் கேட்டால் என் மீது பரிதாபப்படுவீர்."

"எந்த இழவையாவது சொல்லித் தொலை."

"நான் ஒரு சாதாரண மனிதன்."

"அதுதான் தெரியுமே..."

"சங்கிலிச்சாமியும் ஒரு சாதாரண மனிதன்..."

"யார் இல்லை யென்றது?"

"ரயில் விபத்திலிருந்து மக்களைக் காப்பாற்றினரே..."

"அதில்தானே நானும் மயங்கி விட்டேன்!"

"நீங்கள் மட்டுமென்ன உலகமே மயங்கி விட்டது!"

"ஜால வித்தைக்காரன், என்னமோ மந்திரம் பண்ணி மயக்கி விட்டான்."

"மந்திரமல்ல...மகா பெரிய தந்திரம்."

"தந்திரமா?"

"ஆமாம், தண்டவாளத்தைப் பெயர்த்து வைத்தது யார் தெரியுமா?"

"அந்தத் தடியன் தானே?"

"இல்லை...நான் தான் முதலியாரே! இரவெல்லாம் கஷ்டப் பட்டுத் தண்டவாளத்தை உடைத்தேன். அவன் சங்கிலியைப் பிடித்து இழுத்துச் சாமியாராகிவிட்டான்."

"பிழைப்பதற்கு வழி...பிரமாதமாகத்தான் கண்டு பிடித் திருக்கிறீர்கள்."

"வழி பிரமாதந்தான்! அந்த வஞ்சகப் பயல் என் வாயிலும் மண்ணைப் போட்டுவிட்டானே!"

"சம்பந்தம்...பேச நேரமில்லை. அவனைப் பழிவாங்க வேண்டும். என்ன யோசனை?"

"முதலியார்...அருமையான யோசனை. இப்பொழுதே மேல் மாடிக் கதவை மூடிவிடுங்கள்."

"ஏன்?"

"ஜனங்கள் வந்து...சாமியார் எங்கே? என்பார்கள். சாமி மேல் மாடியில் யோகானந்தம் புரிகிறது. கடவுளோடு பேசுகிறது. கதவை திறக்க முடியாது என்று கூறிவிடுவோம்."

"இதைச் செய்தால் என் வெள்ளி வந்துவிடுமா?"

"வெள்ளியாலேயே நீர் வீடு கட்ட நான் வழி செய்கிறேன். நான் சொல்வதை முதலில் கேட்கவேண்டும்."

"சரி...கேட்கிறேன்."

"சந்தோஷம்! நான் இப்பொழுதே புறப்படுகிறேன்."

"நீ எங்கே போகிறாய் சம்பந்தம்?"

"நான் போகுமிடம் எனக்கே தெரியாது. ஒருவாரத்தில் உமக்கு ஒரு பார்சல் வரும். அதை யாருக்கும் தெரியாமல் மேல் மாடியில் கொண்டுபோய் உடைத்துப் பாரும்."

"நான் இழந்த வெள்ளிக் கட்டிகளின் பார்சலா?"

"ஆமாம். நான் வருகிறேன். பார்சல் வரும் வரையில் மேல் மாடி திறக்கப்படக்கூடாது."

சம்பந்தம் மறைந்து விடுகிறான். முதலியார் முகத்தில் சிந்தனைக் கீறல்கள்! சங்கிலிச்சாமியார் நிஷ்டையில் இருப்பது ஊரெங்கும் பரவி விட்டது.

"சாமி கடவுளோடு பேசுகிறது."

"ஒரு வேளை சொர்க்கத்துக்குப் போனாலும் போய்விடும்!"

"சிவனோடு பேசுகிறாரோ? விஷ்ணுவோடு பேசுகிறாரோ? யார் கண்டது?"

"சக்தி பூஜைக்காரரப்பா! தேவியோடுதான் பேசுவார்."

சின்னப்பண்ணை முதலியாருக்கு ஒரு நாள் ரயில்வே பார்சலில் ஒரு பெட்டி வந்துவிட்டது.

முதலியார் ஆவலோடு பெட்டியை வீட்டில் இறக்கச் சொன்னார்.

பெட்டியின்மேல் 'வாசனைப் பொருள்' என்ற எழுத்துக்கள் தீட்டப்பட்டிருந்தன.

இரவு எப்பொழுது வரும் என்று முதலியார் ஏங்கிக் கிடந்தார்.

சில மணி நேரங்களில் இரவும் வந்து விட்டது.

வேலைக்காரர்கள் எல்லாம் அன்று சீக்கிரம் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள்.

பார்சலில் இருந்து 'கமகம' வென்று வாசனை வந்து கொண்டிருந்தது.

திடீரென்று சம்பந்தமும் வந்து சேர்ந்தான்.

"சம்பந்தம்! எல்லாம் வெள்ளிக்கட்டி தானே!!" என்றார் ஆவலாக முதலியார்.

சம்பந்தம் தலையாட்டிக் கொண்டே "ஆமாம் தூக்குங்கள்" என்று கூறினான் ஆணையிடும் தோரணையில்.

இருவரும் பார்சலைத் தூக்கினர்கள். உழைப்பு என்பது என்னவென்று தெரியாத முதலியார்...பெட்டியின் கனத்திலிருந்து ஒருவாறு தெரிந்து கொண்டிருப்பார். வியர்வைத் துளிகள் சொட்டச் சொட்ட...மேல் மூச்சு வாங்க... 'அப்பாடா' என்று பார்சலை மாடியில் இறக்கினர். "வேலையின் கஷ்டம் தெரிகிறது" என்றான் சம்பந்தம் கிண்டலாக.

"வெள்ளியின் கஷ்டமப்பா!" என்று முதலியார் முணு முணுத்துக் கொண்டார்.

சம்பந்தம் பார்சலை உடைக்க ஆரம்பித்தான். அவசரந் தாங்காத "முதலியார், அப்பா சம்பந்தம்! அது வெள்ளிதானே?" என்று துடித்தார்.

"ஆமாம்"—சம்பந்தம் பெட்டியை உடைத்து விட்டான். முதலியார் மூர்ச்சை போட்டு விழுந்து விட்டார். பிறகு எழுந்தார். அவர் அலறிவிடாமல் வாயைப் பொத்தி விட்டான் சம்பந்தம்.

பெட்டிக்குள் புழுப்போலச் சுருண்டு கிடந்தது ஒரு மனித உருவம்.

ஆமாம்—சங்கிலிச்சாமியாரின் சடலந்தான் அது!

"என்னடா சம்பந்தம்?" முதலியார் பதை பதைத்துத் துடித்தார். "என் வெள்ளியும் போனதுமல்லாமல் என்னையும் கொலைகாரனுக்கிவிட்டாயே....அய்யய்யோ!"

"இல்லே...நாம் கொலைகாரரல்ல, ஆண்டவன் அடிமைகள்; பக்தாதி பக்தர்கள்."

சம்பந்தம் இதைச் சொல்லிக் கொண்டே சங்கிலிச்சாமியின் பிணத்தை எடுத்து நிஷ்டையில் இருப்பதுபோல் நீட்டி மடக்கிப் படுக்க வைத்தான். பக்கத்திலிருந்த விளக்கை ஏற்றி வைத்தான். முதலியாரை இழுத்துக் கொண்டு வெளியே வந்து மாடிக் கதவையும் மூடினான். முதலியார் மிரள மிரள விழித்தார்.

சம்பந்தம் மெதுவாகச் சொன்னான்:—"முதலியாரே! அஞ்சாதீர்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளியை நீர் இழந்தீர். இருபதாயிர ரூபாய் எடை நான் தருகிறேன்."

காலை மலர்ந்தது. சாமியார் நிஷ்டை கலையப் போகிறதாம். கதவைத் திறக்கப் போகிறார்களாம். கனவில் பண்ணை முதலியாரிடம் கதவு திறக்க உத்தரவாகிவிட்டதாம். இந்த விளம்பரத்தையொட்டி முதலியார் வீட்டின் முன் ஒரே ஜனத் திரள்! கதவு திறக்கப்பட்டது. எல்லோரும் மேல் மாடிக்குச் சென்றார்கள். சம்பந்தம் கோவெனக் கதறினான். முதலியாரும் அழுதார்...இருவரும் நாடகத்தைத் திறம்பட நடித்தார்கள்.

அங்கே ஒரு கடிதம் கிடந்தது. அதில்,

நாம் இனி இந்த நாற்ற உடலுடன் வாழ விரும்பவில்லை. ஆவியாக இருந்து அருள் புரிவோம். மக்கள் என் சமாதியை வழிபட்டுச் சகல சம்பத்தும் பெறுவார்களாக!

இங்ஙனம்,

சங்கிலிச்சாமி

என்று எழுதியிருந்தது. சம்பந்தம் அதைப் படித்துக் காட்டினான்.

ஏக ஆடம்பரமாகச் சங்கிலிச்சாமியின் சமாதி விழா நடைபெற்றது. சமாதியில் மக்கள் இறைத்த பணம் அன்றைக்கே

ஆயிரம் ரூபாய்! அடுத்த ஆண்டு சங்கிலியானந்த சாமி குருபூஜை!

சாமிகளுக்கு மாபெரும் மடம், சம்பந்தம் மடத்தின் சாமி! முதலியார் மடத்தின் சொந்தக்காரர்! இரண்டாயிர ரூபாய் எடை வெள்ளிக் கட்டி நஷ்டம்!

ஆனால்...இருபதாயிரம் ரூபாய் எடை வெள்ளிக் கட்டி லாபம்! அதுவும் வளர்கிற லாபம்!....மக்களிடம் மடமை இருக்கும் வரை அந்த லாபம் குறையாது.

கங்கையின் காதல்

கைலாயத்தில் சிவபெருமான் நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார். கழுத்திலிருந்த பாம்பு கீழே இறங்கி மான் குட்டியோடு விளையாடிக்கொண்டிருந்தது. அருகில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த பார்வதி தேவிக்குத் தன் பாதங்களை காளை மாடு சொரசொரப்பான நாக்கால் நக்கிக்கொண்டிருந்ததுகூடத் தெரியவில்லை. தேவலோகத்துப் பெண்களுக்கே தூக்கத்தில் இடி விழுந்தாலும் தெரியாது போலிருக்கிறது; இல்லாவிட்டால் சீதா பிராட்டி தூங்கும்போது அவள் மேனியை இந்திரன் மகன் காக்கை உருவில் ரசித்திருக்க முடியுமா? பார்வதியின் முகத்தில் வியர்வை அரும்பு கட்டி இருந்தது. பரமசிவனுரின் உடலும் தூக்கத்தில் அசைவற்றுக் கிடந்தது. மகேஸ்வரனுக்கு ஐந்து தலைகள் அல்லவா? நான்கு தலைகளைக் கழற்றி மான் தோலில் சுருட்டி ஒரு மூலையில் வைத்திருந்தார், இல்லாவிட்டால் தூங்குவதற்கு வசதிப்படாதே!

ஆழ்ந்த உறக்கம்—அமைதி—அந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு கிளம்பும் சிவன் தம்பதிகளின் பெரிய மூச்சுக்கள்.

சிவனின் தலையிலே ஒரு ஜடை சற்று வேகமாக அசைந்தது. அந்த அசைவைத் தொடர்ந்து கங்கா நடந்துகொண்டிருந்தாள். பூனையைப் போன்ற பஞ்சுப் பாதங்களைச் சிவனின் தலையில் வெகு லாவகமாக வைத்துச் சுற்றுமுற்றும் பார்த்தபடி எங்கேயோ போய்க்கொண்டிருந்தாள்.

ஒரு ஜடையின் அடியில் போய் நின்றுகொண்டு, தங்கக் கரங்களைக் கிளைகளில் நீட்டியபடி யாரையோ எதிர்பார்த்திருந்

தாள். அவள் நீலக் கருவிழிகளைக் கிளைகளின் நடுவே நீண்ட இரண்டு கரங்கள் பொத்தின.

கங்கையின் கைகள் அவளையறியாமல் அந்தக் கைகளைப் பிடித்துக்கொண்டன. அல்லித் தண்டில் ரோஜா மலரைப் பொருத்தி வைத்தது போலிருந்தது அந்தக் கைகலப்பு.

"சந்திரா!" தேனுண்ட மயக்கத்தில் களைப்புற்ற வண்டின் கீழ்ஸ்தாயி ரீங்காரம் போலிருந்தது அந்த அழைப்பு.

சந்திரா....ஆம், சந்திரன்தான். சிவனரின் தலையில் குடியிருக்கும் அந்த வாலிபன்தான். பஞ்சோடு நெருப்பை வைத்திட லாகாது என்பார்கள். முருகனின் மயிலோடு...பாம்பை வைத் திருப்பவர்தானே பரமேஸ்வரன். கங்கையைத் தலையில் கொண் டவர் சந்திரனைக் காலிலாவது வைத்திருக்கலாம்; என்னவோ 'பாவம்' அவர் தலை எழுத்து!

"கங்கா! கண்ணே!"

"சந்திரா!....சல்லாப ரூபா!"

"அன்பே!....நேற்று ஏண்டி வரவில்லை?"

"நேற்று என் முறை; இன்று பார்வதி முறை."

"மெதுவாகப் பேசு....சிவன் விழித்துவிடப்போகிறார்."

"நல்லவேளை....தலையில் கண்ணில்லை; விழித்தாலும் பய மில்லை...."

"நீ கிண்டல்காரி கங்காய்!"

"நீ மட்டும் என்னவாம்!"

"கங்கா....! உனக்கு அந்தக் கிழவனோடு பேசப்பிடிக் கிறதா?"

"பிடித்திருந்தால்....சந்திரனை ஏன் தேடுகிறேன்....?"

"தாரை பேசுகிற மெட்டில் பேசுகிறாயே.....அவளும் இப்படித்தான்; அவள் புருஷன் தாடியும் மீசையுமாய்த் தள்ளாத காலத்தில் அவளைக் கஷ்டப்படுத்துகிறானும்."

"எங்களைப்போலத் தாரையும் கங்கையும் தள்ளாத கிழவன் களுக்கு வந்து சேர்ந்தால், உன்னைப்போலச் சந்திரர்களுக்கு வேட்டைதான்."

"என்ன இருந்தாலும் நாம் செய்வது பாவந்தான்.... இல்லையா?"

"சந்திரா....! பூலோகத்தில் பாவம் செய்தால் கைலாசத்துக்கு வரமுடியாது. நாம்தான் கைலாசத்திலேயே இருக்கிறோமே. இதைவிடப் பெரிய பாவம் இருந்தாலும் கண்டுபிடிக்கவேண்டும் தெரியுமா? இந்த பாபத்துக்கெல்லாம் நாமா பொறுப்பாளி? தாரை உன்னை நேசித்தாள். கணவனுக்கு துரோகம் செய்தாள் என்றூர்கள் மூடர்கள். தாரைக்கு நெஞ்சம்—அதில் ஆவல்—ஆனந்த வாழ்வைச் சுவைக்கும் துடிப்பு—இவற்றையெல்லாம் உண்டாக்கிவிட்டு....அவளை விபச்சாரி என்றூல் யார் கேட்பது? நீ குருபத்தினியைக் கூடியது பாபமாம். பைத்தியக்காரனின் உளறல். குருவுக்குச் செய்ய வேண்டிய தொண்டு, அவர் மனைவியின் கவலையைப் போக்கினனே அது பெரிய தொண்டல்லவா?"

"நான்தான் என்ன செய்துவிட்டேன்! ஆகாயத்திலிருந்த என்னைப் பகீரதன் கூப்பிட்டான். பகீரதனுடைய அழகைக் கண்டு என் மேனி குலுங்கிற்று. மேனி மட்டுமா? இதயமே குலுங்கிற்று, அந்தக் காம தாகத்தை வர்ணிக்க என்னால் முடியாது சந்திரா...! கம்பன் பிறந்து வர வேண்டும்; அவ்வளவு எல்லை மீறிவிட்டது என் உணர்ச்சி. ஒரு நாட்டு மன்னன்; சகல போக போக்கியமுள்ள சக்ரவர்த்தி; அவனோடு சரச சல்லாபமாடி....ஜன்ம சாபல்யமடையலாம் என்று கனவு கண்டேன். ஆனால் அந்தக் கையாலாகாதவன்....என்னை இந்தக் கைலாசக் கிழவனிடம் தள்ளிவிட்டான். இவனை கிழவன்....கிழவன் மட்டுமா....தாருகாவனத்து ரிஷிகளின் மனைவிகளுக்காக..... உடலையே தேய்த்துவிட்ட எலும்புக்கூடு. அதுமட்டுமா சந்திரா! ....பக்கத்திலே பார்வதி. இன்பக் கேளிக்கைக்குக் கால அட்டவணை, ஒருத்திக்கு ஒரு நாள் முறை. என்னால் முடியுமா?.... என் போன்ற யுவதிகளால் முடியுமா?....ஏன்..பார்வதியால் தான் முடிந்ததா?.... பிரமாவையல்லவா கேட்கவேண்டும் அந்தக் கதையை. சந்திரா! தினந்தினம் பூலோகத்துக்குப் போகிறாயே....அந்த மக்களிடம் இந்த ஒரு வார்த்தையை உபதேசம் செய்வாயா?"

"என்ன கங்கா?"

"கிழவனுக்குப் பெண் கொடுக்காதே! இருதார மணத்துக்கு இணங்காதே! இதைச் சொல்வாயா?....என்பொருட்டுச் சொல்

....என் போன்ற பெண்கள் இனியும் தோன்றுமலிருக்க இதைச் சொல்....?''

''ஆகட்டும் கண்ணே....வா—பிடாரிப் பக்கம் போவோம். அங்கேதான் இருட்டாயிருக்கும்.''

சந்திரனும் கங்காவும் மறைந்துவிட்டார்கள். சற்று நேரத்தில் எம்பெருமான் திடுக்கிட்டு விழித்தார், பக்கத்தில் பார்வதி அசைவற்று உறங்கிக்கொண்டிருந்தாள், தலையைத் தொட்டுப் பார்த்தார். அப்போதுதான் அவசர அவசரமாகக் கங்கா ஓடிவந்து அங்கே உட்கார்ந்தாள்.

தாய்மை

"சரசத்தாலும் சாகசத்தாலும் எப்படியோ அரசியின் மீது அரசனுக்கு இருந்த அன்பை அழித்து விட்டேன். அரசனது இருதயத்திலே அழியாத சித்திரமாக அமர்ந்திருந்தாள் அந்தக் கோப்பெருந்தேவி! அந்தக் கலையாத ஓவியத்தைக் கரிகொண்டு மெழுகிவிட்டேன்.

"மன்னரின் மன மாளிகையில் ஜோதி விளக்கு அவள், ஒரு காலத்தில்! அந்த ஜோதி விளக்கு இன்று வீதியிலே வீசப்பட்டு விட்டது. தோழிகள் புடை சூழ—தோகை மயில்கள் ஆடும் நந்தவனத்தில் மலரால் நடைபாதை அமைத்து, அவளும் அரசரும் ஆனந்த பவனிகள் நடத்தினரே—அது அந்தக் காலம்.

"இப்போது வேந்தரின் இருதயத்தில் இந்த சூழற் கண்ணியின் சுந்தர ரூபம் பூஜை அறைப் படம்போல ஜோடித்து வைக்கப்பட்டிருக்கிறது. வேந்தரின் மடியும், மலைத்தோளும் அவளுக்குச் சொந்தம் ஒரு காலத்தில்! இன்றோ என் சொல்லுக்குச் சுழலும் 'மாயப் பதுமை'யாகி விட்டார், மணிமுடி வீரர்! இது எனக்கு வெற்றிதான்—ஆனாலும் என் மனம் அமைதியடைய வில்லை. அரசரின் பாசத்தையும் நேசத்தையும் இழந்தாள் எனினும் பட்டத்து ராணி என்ற மதிப்பை இழந்தாள் இல்லை. அவளது மகன்தான் கிரீடத்துக்குச் சொந்தக்காரன் என்ற பாத்யதையைப் பறி கொடுத்தாள் இல்லை.

"இந்த நிலையில் எனக்கு நிம்மதி ஏது மைத்துனரே! ஊரெல்லாம் அவள் பக்கம் அனுதாபம் காட்டுகிறது. அரசரும் அவளும் பிரிந்திருப்பது நாட்டுக்கு ஏற்பட்ட எதிர்பாராத கேடு என்று புலம்புகிறது மக்கள் மன்றம். என்னுடைய குணாதிசயங்களைக் கொற்றவன் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. அதனால் என் வலையில் வீழ்ந்து விட்டார் என்று மந்திரிகளின் குழு மாரடித்து அழுது கொண்டிருக்கிறது. இளையராணி நான்—என்கிற மதிப்பைக்கூடத் தர மறுக்கிறது அரண்மனை வட்டாரம்.

"அரசரின் மஞ்சத்து ராணியாக மட்டுமன்றி, வெஞ்சமரில் வாளெடுத்து வேலெடுத்துப் போர் புரியும் வீராங்கனையுமன்றோ கோப்பெருந்தேவி—அவள் எங்கே? வளையொலியால் மலை நிகர்த்தவரை வளைத்து விட்ட இவளெங்கே?—என்று வீரர்களின் பாசறைகளில் பேசப்படுகிறது. இத்தனை எதிர்ப்புக்களையும் சமாளிப்பதற்கு நான் தயாராகிக் கொண்டிருக்கிறேன். ஆனாலும் மைத்துனரே! அவள் மகன் இன்பசாகரன் வளர்ந்து, இளவரசு மகுடத்தைத் தலையில் தூக்குவதற்குள் அழிக்கப்பட்டுவிட வேண்டும். சுந்தரபுரி, சுழற்கண்ணியின் சொத்தாக மாற வேண்டும். என் வயிற்றிலே வளர்ந்துகொண்டிருக்கும் சிசு இந்த நாட்டுச் செங்கோலுக்கு உரிமை பாராட்டவேண்டும். அதற்குத் தடை அவளது அருமருந்தன்ன மகன்! தடை இடறப்பட ஒரு வழி கூறும் மைத்துனரே! உமது உதவியோடுதான் நான் ஜெயக் கொடி நாட்டவேண்டும்.

"மைத்துனரே! உமது மறைவிலே நின்றுகொண்டுதான் என் ஜீவ லட்சியத்தை நிறைவேற்ற வேண்டும். ஏன் மௌனமாக இருக்கிறீர்—பேசும்; விலகி நின்று பேசுகிறேனே என்ற கோபமா? வேந்தர் வரும் நேரமாயிற்றே என்றுதான் பயந்தேன். இதோ...மூடிக் கிடக்கும் உமது முரட்டு உதடுகளை எனது ரோஜா இதழ்களால் திறக்கிறேன்...' இச்!... இச்'! போதுமா? நீண்ட விருந்து மற்றொரு நாளைக்கு! மைத்துனரே! சுந்தரபுரியின் ராணி சுழற்கண்ணி—அவள் குழந்தைக்கு இந்த நாடு உரியது—இப்படி ஒரு நல்ல எதிர்காலம் தோன்றுமா? அதற்கான திட்டம், உமது தீட்சண்யமிக்க மூளையிலே இப்போதே உதயமாகுமா?"

"கவலைப்படாதே சுழற்கண்ணி! இந்த தீட்சண்யன் இருக்கும்போது திட்டங்களுக்கா குறைவு? தித்திக்கும் முத்தங்களை நீ தந்ததுபோல், சித்திக்கும் யோசனைகளைத் தரவும்

நான் தயங்கமாட்டேன். அரசரின் இளைய ராணியாவதற்கு அபூர்வமான ஆலோசனை வழங்கினேனே—அதை மறந்தாயா! அதைப் போலவே இளவரசன் இன்பசாகரனை வாழ்க்கைப் புதரிலிருந்து பறித்துப் போடச் சரியான வழி கண்டு பிடிக்கிறேன். இன்பசாகரன் இளம் அரும்பு! அந்த அரும்பை விரலால்கூட நசுக்கி எறிந்துவிட முடியும்—நான் நினைத்தால்! ஆனால், அந்த அரும்பு இருக்குமிடமோ அரண்மனைத் தோட்டம். வேலியற்ற கொல்லையல்ல, வேந்தன் வீட்டு முல்லை மொக்கு இருக்குமிடம்! சர்வஜாக்கிரதையாகச் சதியை நிறைவேற்றவேண்டும். இளவரசன் சாக வேண்டும். ஆனால் நாம் கொன்றதாகத் தெரியக்கூடாது—கொலை செய்யப்பட்டதாகவே செய்தி வருதல் கூடாது. இயற்கையாக இறந்தான் என்று நாடும், நாடாளும் மன்னனும் நம்ப வேண்டும். அதற்கு வழிசொல்லுகிறேன்!''

''சொல்லும் மைத்துனரே சீக்கிரம்!''

''இன்னென்று கொடு, சொல்லுகிறேன்!''

''இதோ! ஒன்றென்ன ; ஒன்பது!''

''ஆகாகா! சுழல்! சொக்கி விட்டேன்—சொக்கிவிட்டேன்! முத்தப்போதையிலே மூளை வேலை நிறுத்தம் செய்து விட்டது. நாளை விடியற்காலை திட்டத்தோடு வந்து உன்னைச் சந்திக்கிறேன்.''

''வேந்தர் பள்ளியறையை விட்டுப் போன பிறகு வாரும்.''

''அவர் இருக்கும்போது வர எனக்குப் பைத்தியமா?''

''சரி! திட்டம் நேர்த்தியாக இருக்க வேண்டும்!''

''உன்னைப் போல?''

''இல்லை ; நம் உண்மைக் காதலைப் போல!''

''கைகாரியடி சுழற்கண்ணி நீ! கட்டிலறையிலே அரசனிடம் கூட இப்படித்தானே கதையளப்பாய்?''

''எனக்கு இரண்டு இருக்கிறது அத்தான் இருதயம்! ஒன்றில் உமது ஆசை ; மற்றொன்றில் சுந்தரபுரியின் சிம்மாசனத்தைப்பற்றிய கனவு! இரண்டாவது இருதயத்தால்தான் அரசனைப் புகழ்கிறேன்—ஆராதிக்கிறேன்—ஆனந்தம் பொழிகிறேன்!''

''சுழல்! நேரமாகிறது வருகிறேன்! அதோ அரசர் வருவது போல் தெரிகிறது!''

" விடியற்காலை—திட்டம்—மறந்து விடாதீர் ! "

" விருந்து—அதையும் நீ மறந்து விடாதே ! "

சுழற்கண்ணி, அவன் பேச்சை ஆமோதிப்பதுபோலத் தலை யசைத்துக்கொண்டு புன்னகை சிந்திஞள். தீட்சண்யனே அந்தச் சிரிப்பை ரசித்தவாறு அந்த இடத்திலிருந்து நகர்ந்தான். தடித்த உதடுகளை அழுத்தமான நாவினால் தடவியபடி ஏதோ ஓர் இன்பச் சுவையை அனுபவித்தவாறு அந்த முரடன் சுழற்கண்ணியின் பார்வையிலிருந்து மறைவதற்கும்— " சுந்தரீ " என்றவாறு சுவைக் காவியம் படிப்பதற்கு அரசன் வருவதற்கும் சரியாக இருந்தது.

மன்னன் வந்தான். தீட்சண்யனிடத்திலே அவள் கூறியவை அனைத்தும் உண்மையே என்பதை நிரூபிப்பது போல் அவள் மடியில் சாய்ந்தான்—பிடியில் சிக்கினன்.

சுழற்கண்ணி சுந்தரபுரி மன்னனின் இளைய ராணி. அவளுக்கு மைத்துனன் தீட்சண்யன். தூரத்து உறவு. அரண் மனையிலே அவனுக்கு மெய்க்காப்பாளன் வேலை. அரசனது மெய் காக்கவும்—ஓய்வு கிடைத்து, நேரம் வாய்க்கும்போது சுழற் கண்ணியின் மெய் தழுவிக் கிடக்கவும்—ஆகிய இரண்டு வேலை களும் மாறிமாறி வந்து கொண்டிருந்தன அவனுக்கு ! கனிரசம் பருகக் கசக்குமா ? அதிலும் அவன் கரடித் திருமேனியன் ! தேன் கூடு போலச் சுழற்கண்ணி, வலிய வலிய வருகிறாள். கொம்பு வளைந்து தேனைக் கொட்டிக் கரடிக்குப் பசி தீர்ப்பது போலக் கற்பனை கூடச் செய்ய முடியாது. சுந்தரபுரி அரண்மனையிலோ இது நித்திய நிகழ்ச்சியாக இருந்தது. பாறுங்கல்லை ஒத்த கரடு முரடான அவனது மார்பகத்தில் பச்சைக்கிளி போன்றவள் தொத்திக் கிடந்தாள்.

அவளை, " என் இச்சைக்கினியவளே ! இனிப்பு தரும் இன்னமுதே ! " எனப் பாழ்த்த குரலெடுத்துப் பாடிக் கொண் டிருந்தான். திரைமறைவில் நடக்கும் இந்த அவமானகரமான அநியாயத்தின் அடையாளமும் தெரியாமல் அரசருக்கரசன் அவளை நோக்கி, " உத்தமியே ! உயர்ந்தவளே ! உல்லாசி ! ஊர்வசி ! " எனப் புகழாரம் தொடுத்துக் கொண்டிருந்தான்.

சுந்தரபுரி சாம்ராஜ்யத்தைச் சுடுகாடாக்க வந்த ' வசந்த சேனை ' சுழற்கண்ணியின் உருவத்திலே உலவுகிறாள் என்பது அந்த ராஜ ரசிகனுக்குப் புரியாமல்தான் போய்விட்டது !

அரசனின் அந்தப்புர மயிலாக, ஆலோசனை வழங்கும் அமைச்சாகக் களம்புகு நேரத்தில் பின் தொடரும் மறத்தியாகச் சுந்தரபுரி மக்களின் சுகத்தைக் கவனிக்கும் பாசமுள்ள தாயாக அந்த மாளிகையிலே சுடர்விட்டுக் கொண்டிருந்த மாணிக்கமாம் கோப்பெருந்தேவியாரைக் கொந்தளிக்கும் கடலாக மாற்ற வந்து சேர்ந்தது கொடுமையான புயல், சூழற்கண்ணி என்ற பெயரில்!

மன்னனுக்கு ராணியாக இருந்த தேவி, இன்பசாகரனுக்குத் தாயாகவும் மாறிய நேரந்தான், சூழற்கண்ணியின் படையெடுப்புக்கு ஏற்ற நேரமாகி விட்டது. முற்றுகையிட்டாள், முடிசூடியை; உடனே வெள்ளைக் கொடியைப் பறக்கவிட்டான் வேந்தன்! ஆயிரந்தேர்—ஐயாயிரம் காலாள்—ஆனைப்படை—புரவிச்சேனை அத்தனையும் தாக்கிலுலும் அசைக்க முடியாது அவன் அரண்மனைக் கோட்டைச் சுவரை. அவளோ, ஒரு விழி வீச்சில், அவனது மனக் கோட்டையைச் சுக்கு நூறாக்கி, நொறுங்கிப்போன ஒவ்வொரு அணுவிலும் நின்றுகொண்டு வெறியூட்டும் நர்த்தனம் புரிந்தாள்.

தேவி இன்பசாகரனுடு தாய்க்குலத்தின் பெருமையைத் தரணிக்கு அறிவித்துக்கொண்டிருந்தாள்.

தேவனே "திராட்சையினும் இனியதடி இந்த ரசம்" என இதழ் பருகிக்கொண்டு கிடந்தான், இளையவளோடு! அதுவும் அவனுக்குப் புதியவளோடு!

கதிர் மறைந்த உலகிற்கு இருள் நீக்கும் நிலவு போலக் கோப்பெருந்தேவியின் கவலை படிந்த வாழ்விற்கு வாட்டம் தவிர்க்கும் வைரமாக இன்பசாகரன் திகழ்ந்தான்.

பலகணியின் வழியாகத் தூரத்திலிருக்கும் பூரணச் சந்திரனைப் பார்த்து ரசிப்பதிலே ஒரு மகிழ்ச்சி இல்லையா? அதுபோலவே அரசனை அருகிலே வைத்து அன்பு காட்ட முடியாவிட்டாலும் தொலைவிலேயிருந்து அவனைத் தொழுதுகொண்டிருந்தாள் கோப்பெருந்தேவி.

பலகணிப் பார்வையாளர் மீது நிலவு, ஒளி மழையையாவது பெய்கிறது; அதுவும் கிடைக்கவில்லை அந்த 'அபாக்கியவதிக்கு'!

இன்பசாகரன் மட்டுமே அவளுக்கு ஆறுதல் பொருளானான். அந்தப் பொருளையும் பூமியிலே புதைத்துவிடத் துடித்துக் கொண்டிருந்தாள் சூழற்கண்ணி. அதற்கான திட்டத்தையும் தீட்சண்யன் தயாரித்து விட்டான்.

"இந்தச் சதியில் ஜெயம் நமக்கே!" என்று ஒருவரை யொருவர் தழுவியபடி உரக்கக் கூவி மகிழ்ந்தனர்—ஊர் கெடுக்க வந்த ஜாலக்காரர்கள்.

திட்டத்தின் முதற் கட்டம் மிகத் தீவிரமாக அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

திடீரெனச் சுழற்கண்ணி இளவரசன் இன்பசாகரன் மீது அன்பு மழை பொழிய ஆரம்பித்தாள். "அக்காளுக்கும் என்னைப்போலத்தானே ஆசையிருக்கும். அவளோடும் பேசி மகிழ்ந்து, கூடிக் குலவியிருப்பதுதானே தங்களைப்போன்ற தர்மம் தவறுதவர்களுக்குத் தகுதியான காரியம்!" என்று உபதேசம் செய்ய ஆரம்பித்தாள் மன்னனிடம்!

"தேவீ! நான் எப்படியோ விதியின் மாயையால் உங்கள் வாழ்வில் குறுக்கிட்டு விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். இனி நான் எங்கே போவேன்? தங்கள் தங்கையாக என்னைக் கருதி எனக்கு வாழ்வு அளியுங்கள்" என்று கோப்பெருந் தேவியின் பாதங்களில் கண்ணீரைச் சொரிந்தாள்.

மன்னன்—மகாராணி—இளவரசன் அனைவருமே அவளது மாய்மாலத்தில் மயங்கினர்.

"அரண்மனையில் புதிய இன்பம்! சந்தோஷமான திருப்பம்! அரசரும் அரசியும் ஒற்றுமைப்பட்டு விட்டனர். சுழற்கண்ணி, தன் தவறுகளை உணர்ந்து திருந்தி விட்டாள். அப்பப்பா! இளையராணி இப்போது இன்பசாகரனை எப்படிக் கவனிக்கிறாள் தெரியுமா! பெற்ற தாய்கூட இவ்வளவு அன்பு காட்ட முடியாது!" என்று சுந்தரபுரி முழுதும் குரல் கிளம்பியது.

இளவரசன் இப்பொழுதெல்லாம் தாயிடம் கூட அவ்வளவு அதிகமாகத் தங்குவதில்லை. இளைய ராணியின் மாளிகையிலே விளையாடிக் கிடக்கிறான். அவள் கையால்தான் அவனுக்கு உணவு தரவேண்டும். அவள் சொன்னால்தான் எதையும் கேட்பான். இது கண்டு அரண்மனையே அதிசயித்தது. அரசரும் சுழற்கண்ணியின் மீது புதிய பாசம் கொண்டார். அரசியும் அவளைத் தன் அருமைத் தங்கைபோல நடத்தினாள். தங்கையின் நெஞ்சிலே புகையும் நெருப்பை அவள் எங்கே கண்டாள்?

ஒருநாள் சுழற்கண்ணியின் மாளிகையில் இன்பசாகரன் குழல் வாத்தியக் கருவியுடன் நுழைந்தான். தெரியாதவள்போல

அவள், "ஏது இந்தக் குழல் வாத்தியம்?" என்று கேட்டு வைத்தாள்.

"தீட்சண்யன் கொடுத்தானம்மா!" என்று கூறியபடி அதை ஊதிக்கொண்டு கூத்தாடினான், இன்பசாகரன்.

சதித்திட்டம் இரண்டாவது கட்டத்தை அடைந்து விட்டது. இனி ஆரம்பிக்க வேண்டியதுதான் நமது வேலையை என்ற முடிவோடு, அவள் அவனைத் தழுவி யெடுத்துத் தன் மஞ்சத்தின் பக்கம் உட்கார வைத்து முத்தங்களால் அவன் முகத்தைச் சிவக்க வைத்தாள்.

தின்பதற்காக ரோஜாப் பூவைப் பறிப்பவர்கள் அதன் மென்மையையும் வண்ணத்தையும் வியந்து கொண்டா இருப்பார்கள்! இதழ்களைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டே கடைசியில் அந்தக் காம்பை எறிந்து விடுவார்கள்!

அப்படித்தானிருந்தது, அவள் அந்த மலரொத்த இளைய மன்னனை எடுத்து முத்தமிட்டதும், அருகே உட்காரவைத்துக் கொண்டதும்!

"கண்மணி! உனக்கு ஓர் அருமையான பண் கற்றுத் தருகிறேன். அதை இந்தக் குழலில் நீ ஊதினால் பிரமாதமாக இருக்கும்!" என்று பேச்சை ஆரம்பித்தாள் வயதில் இளமையும், வஞ்சத்தில் முதுமையுங் கொண்ட அந்த வடிவழகி.

"கற்றுக் கொடம்மா!" என்று குழலை அவளிடம் கொடுத்தான் இளவல்.

அவளும் குழல் மூலம் பண் எழுப்பினாள். "இனிமை! இனிமை!!" எனப் பாராட்டினர் தோழியர்.

அந்தப் பண் பாலகனின் மனத்தையும் கொள்ளை கொண்டது. தானும் அதைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்கிற ஆர்வம் இளம் நெஞ்சில் கொழுந்து விட்டது.

"எப்படியாவது எனக்கு இந்தப் பண்ணைக் கற்றுக் கொடம்மா?" எனப் பிடிவாதம் செய்தான்.

அவளும் அந்த வேண்டுகோளைத்தானே அந்தப்பிஞ்சு மனத்திலேயிருந்து எதிர்பார்க்கிறாள்.

இரண்டு நாள் சிரமம் எடுத்துக்கொண்டான் இளவரசன் —பண், பாடமாகிவிட்டது!

"அருமை தம்பீ! அருமை! நான் வாசித்ததைவிட நீ வாசிக்கும்போது, பண்ணிலே மழலையின் இனிமை மறைந் திருக்கிறது! பெருமையை அதிகமாக்குகிறது. ஆகா! இந்தக் கீதத்தை அரண்மனை நந்தவனத்திலே உட்கார்ந்து வாசித்தால் மயில்கள் எல்லாம் தாமே வந்து எதிரே நின்று ஆடும்!" என்று சாகசப் பேச்சைத் தாய்க் குரலிலே கலந்து தந்தாள் சூழற்கண்ணி!

"இதோ இப்போதே போய்த் தோட்டத்தில் வாசிக்கிறேன். தோகை மயில்கள் ஆடுகின்றனவா என்று பார்க்கிறேன்" எனக் குழலுடன் ஓட்டம் பிடித்தான் இளவரசன்.

சூழலியின் கண்கள் அகல விரிந்தன. அவள் முகத்தில் புதிய தேஜஸ் காணப்பட்டது. "வெற்றி! வெற்றி!" எனத் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள், மகிழ்ச்சியோடு!

அரண்மனைத் தோட்டம்—அடுக்கு மல்லிகைப் புதரின் ஓரம் —அழகே உருவெடுத்த அரசிளங்குமரன் ஆரம்பித்து விட்டான் குழல் வாத்தியத்தை! இளையவள் கற்றுத் தந்த பண்ணை மாறி மாறி ஊதினான். பாவம்; அவனுக்கென்ன தெரியும்—அவள் கற்றுத்தந்த கீதம் பாம்புகளை அருகே வரவழைக்கும் கீதமென்று!

பண்ணை அவனுக்குப் பாடமாக்க வேண்டும். அவன் அதை ஊதிக் கொண்டிருக்கும்போது தோட்டத்தில் தொலைவிலே விஷப் பாம்பை விட்டுவிட வேண்டும். குழலோசை கேட்டுப் பாம்பு அவனருகே வந்து படமெடுத்து ஆடும். பண்ணை அவன் நிறுத்தினால், உடனே பாம்பு அவன் மீது சீறிப் பாய்ந்துவிடும்.

இப்படியொரு திட்டத்தைத் தீட்சண்யன் தீட்டித் தந்து, அதற்கு வெகுமதியாக அவளிடம் பெற வேண்டியதைப் பெற்று, அவளும் இளவரசனை அரண்மனைத் தோட்டத்திற்கு அனுப்பி விட்டாள். இன்பசாகரனின் குழலோசை குளிர்ச்சியை மொண்டு மொண்டு ஊற்றியது! ஆனந்தத் தென்றல் வந்து ஆரத் தழுவுவது போன்ற உணர்ச்சியைத் தந்தது!

மகுடியிலும் இல்லாத மயக்க உணர்வை அந்தக் குழலிலே யிருந்து புறப்பட்ட பண் கிளப்பியது.

நேரம் பார்த்துக் கொண்டிருந்த கோர மனிதன் தீட்சண்யன், தான் பிடித்து வைத்திருந்த பாம்பை இளவரசனுக்கு அருகே யுள்ள புதரின் பக்கமாகக் கீழே விட்டான். விடுபட்ட பாம்பு, குழலோசை நோக்கி நகர்ந்தது. தன்னை நோக்கி ஆபத்து ஊர்ந்து வருகிறது என்பதை அறியாத அந்த அழகுப் பிறை நிலவு,

சின்னம்மா கற்றுத்தந்த பண்ணை விடாமல் ஊதிக்கொண்டே இருந்தது.

இன்னும் சிறிது நாழிகையில் மயில்கள் எல்லாம் வந்து தன் முன்னே ஆடப்போகின்றன என்ற நினைவோடு, இன்னும் —இன்னும் அதிக உற்சாகத்தோடு குழல் ஓலி புறப்பட்டது!

நகர்ந்து வந்த நாகம், படமெடுத்தபடி பாலகனின் எதிரே மயங்கி நின்றது. அதைப் பார்க்காத இளவரசன் குழலூதும் கவனத்தில் கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

கண்களை மூடிக்கொண்டே குழல் ஊதுவது—திடீரெனத் திறந்து பார்த்தால் எதிரே மயில்கள் ஆடும்—அதைப் பார்த்து மகிழ்வது! இப்படி ஓர் இன்பக் கனவோடு அவன் இசை முழக்கம் செய்து கொண்டிருந்தான்.

அவன் என்ன கண்டான்—எதிரே உயிர் வாங்கும் பாம்பு பல்லிலே விஷம் தேக்கியபடி ஆடிக் கொண்டிருக்கிறது என்பதை!

மயங்கி நிற்கிறது நாகம்! மயக்கம் தெளிந்தால் இளவரசன் அதற்கு இரையாவான்!

இசை நின்றால், உடனே பாம்பின் மயக்கமும் தெளிந்து விடும்!

என்ன நடக்கப்போகிறது என்பதை உப்பரிகையில் இருந்த படியே இளையவள் பார்த்துக் கொண்டிருந்தாள்.

புதரின் மறைவில் இருந்தபடியே தீட்சண்யன் புன்னகை சிந்திக் கொண்டிருந்தான்.

அந்தக் கொடுமையைக் காண்பதற்குக் கோப்பெருந்தேவியும் அங்கு வந்து சேர்ந்தாள். கீதம் அவளைக் கவர்ந்தது. எங்கிருந்து வருகிறது எனக் கவனித்தாள். இன்பநாதம் எழுப்புவது தன் மகன் எனக் கண்டாள். மகிழ்ந்தாள். அடுத்த கணம் மகிழ்ச்சி மறைந்தது. சுந்தரபுரியின் எதிர்கால மன்னன்—அவனை திரை சாவின் நர்த்தனம்!

வயிற்றிலே கிடந்த வைடூரியம்! அதை விஷத்தால் குளிப் பாட்டி வேகவைக்க எதிரே மரணத்தின் மயக்கம் நிறைந்த சதிராட்டம்!

"அய்யய்யோ—என்ன செய்வேன்!" என நிமிர்ந்தாள். இளையவள்—தீட்சண்யன் இருவரும் இருப்பதை உணர்ந்தாள்.

அவர்களை பார்க்காதவள்போல் பாலகன் பின்னே வந்தாள். அவளுக்குப் புரிந்து விட்டது—சதி பற்றிய விளக்கம். குழலோசை நின்றூல், பின் குமரனைப் பாம்பு தீண்டிவிடும் என்பதையும் தெரிந்து கொண்டாள். அவளது தாய் உள்ளம் தணலிலிட்ட புழுவாயிற்று.

எந்தத் தாய்க்குத்தான் சகிக்கும்! தான் பெற்ற தங்க விக்ரகத்தின் மேனியெங்கும் நீலம் பாய்ந்து, அலங்கோலமாக விழப்போவதை எந்த அன்னைக்குத்தான் தாங்கிக் கொள்ள முடியும்!

"இன்பசாகரா!" என்று சப்தம் போட்டால் அவன் திடீரெனக் குழல் வாசிப்பதை நிறுத்தி விடுவான்—உடனே நாகம் தன் வேலையை முடித்து விடும். என் செய்வாள் தாய்? கத்தினாள். எப்படி? "இன்ப சாகரா!...வாத்தியத்தை நிறுத் தாதே! நிறுத்தாதே! ஊதிக்கொண்டேயிரு!" என்று அலறி னாள். தாயின் குரல் அந்த இளவலின் காதிலே ஒலித்தது. கண்ணைத் திறந்தான். எதிரே பாம்பு! நடுக்கம் தாங்க முடிய வில்லை. எழ முடியாதபடி ஆகி விட்டான்!

தாயோ தொடர்ந்து சப்தமிட்டுக் கொண்டேயிருந்தாள்:

"நிறுத்தாதே! ஊது!! ஊது!" என்று.

அவனும் ஊதிக் கொண்டே யிருந்தான், ஏன் எதற்கு என்று புரியாத நிலைமையில்!

"ஊது! ஊது!!" என்று கூறிக்கொண்டே தாய் அவனருகே வந்து கொண்டிருந்தாள்.

குழலோசை உச்சக் கட்டத்தை அடைந்தது. நாகமும் இன்னும் மேலே உயர்ந்து படந்தூக்கி ஆடியது.

"நிறுத்தாதே! ஊது! ஊது!"—தொடர்ந்து அலறல்! அதையொட்டி "ஆ!" என்ற சப்தம்!

ஆம்; கோப்பெருந்தேவி, 'தடா'ரென்று அந்தப் பாம்பின் முன்னே விழுந்தாள்.

படமெடுத்திருந்த பாம்பு அவள் மீது பாய்ந்தது—அவள் உடலில் விஷம் பரவியது. இனியென்ன? பாம்பு ஓடியது. ஓடுகிற பாம்பை வாளால் வீசிக் கொன்று விட்டு அங்கு ஓடிவந்து விழுந்தான் மன்னவன்.

"பிரபு! பிரபு!"

கோப்பெருந்தேவி அழுதாள்.

"செல்வத்தை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று இன்பசாகரனை இழுத்து அரசனின் கையிலே ஒப்புவித்தாள்.

"அம்மா!" என ஓலமிட்டான் இளவரசன்.

தாய்மை தன் கடமையைச் செய்து விட்டுக் கண்ணை மூடிக் கொண்டது.

அரசன் இளைய ராணியையும் தீட்சண்யனையும் வெறித்துப் பார்த்தான். அவர்கள் அங்கிருந்து ஓட்டம் பிடித்துக் கொண்டிருந்தனர்.

"விடாதீர்கள், அவர்களை!" என்று கத்தினான்.

"அய்யோ! ஒரு விநாடி தவறி விட்டது—இல்லையேல் நாகத்தை வாளால் நறுக்கிவிட்டு, மனைவி, மகன் இருவரையுமே காப்பாற்றியிருப்பேன்!" என அங்கலாய்த்துக் கொண்டான் அரசன்.

என் செய்வது? தாய்மையின் மதிப்பு தரணிக்குத் தெரிய வேண்டுமே—அதனால்தான் போலும் அவன் சிறிது தாமதமாக அங்கு வர நேர்ந்தது!

தப்பிவிட்டார்கள்

ஊரில் ஒரே ரகளை—மூலைக்கு மூல போலீஸ் லாரிகள் பறந்து கொண்டிருந்தன! இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு சிவப்புத் தொப்பிக்காரர்களின் கூச்சல், ஊரெங்கும்—தெருவெங்கும்—வீடெங்கும் ஊடுருவிப் பாய்ந்தது. எந்த வீட்டிலும் கதவு மூடியிருக்க வில்லை. குறட்டைச் சப்தம் கேட்கவுமில்லை. தாய் தகப்பன்மார்களின் பேச்சு வார்த்தைகளையும்—பரபரப்பையும் கண்டு சின்னஞ்சிறு குழந்தைகள்கூட வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன. ஒரு வீட்டின் வாயிற்படியில் அமர்ந்து ஒரு கிழவி பாக்கு இடித்துக் கொண்டிருப்பவள்...தன்னையறியாது தூங்கிவிட்டாள்...பாவம் பழுத்துப்போன இமைகள்! 'பூம் பூம்' என்ற காரின் சப்தம் அவளைத் திடுக்கிட வைக்கவே, பாக்கு உலக்கையைத் தடதடவென்று தரையில் இடிக்க ஆரம்பித்தாள். இதைக் 'கட கட' வென்று கைகொட்டி ரசித்தான் அவள் பேரன்.

காரிலிருந்து இறங்கிய போலீஸ் வீரர்கள் வீட்டில் புகுந்து கிழவியை ஏதும் கேட்காமலேயே சோதனை போட ஆரம்பித்தனர். பரணியைப் பார்த்தனர். அடுக்களையை ஆராய்ந்தனர். கதவிடுக்கைக் கவனித்தனர். கடைசியில் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு வெளியே வந்தனர். 'ஐயோ பூச்சாண்டி' என்று கிழவியின் பேரன் கீழே விழுந்ததுதான் மிச்சம். இப்படி எல்லா வீடுகளிலும் சோதனை. அந்த ஊரே அல்லோலகல்லோலப்பட்டது! காரணம், லீலா மில் சொந்தக்காரர் ராமதுரை அன்று இரவு ஏழு மணிக்கு

இறந்துவிட்டார்!.....இல்லை.....இல்லை; கொலை செய்யப்பட்டார்! கொலை செய்தவன் ஒரு மில் தொழிலாளி; பெயர் விட்டல்.

அன்றிரவே கொலைகாரனைப் பிடித்துக் கூட்டில் அடைப்பதற்காகப் போலீசார் லாரிகளிலும், கார்களிலும், சைக்கிள்களிலும் புயல் வேகத்தில் முயன்று கொண்டிருந்தார்கள். ராமதுரை என்றால் யார்?—காலையிலெழுந்து, 'கடவுளே' என்று கூப்பிட்டு ஒருமுறை தலைவிதியை நொந்துகொண்டு வயிற்றுப்பாட்டைப் பார்க்கும் ஓர் ஏழை மனிதரா? ஏழை கொல்லப்படுவது ஓர் எறும்பு நசுக்கப்படுவது போல! ராமதுரை போன்ற பணக்காரருக்குச் சாவு வரலாமா? வாழ வசதியும், வளமும், வற்றாத இன்பமும் அளித்திருக்கிற கடவுள், ஆயுளையும் ஆயிரமாக அதிகப்படுத்தக்கூடாதா என்ற கவலை அவர்களுக்கு வளர்பிறையாகுமே!

"ஐயோ பாவமே! ராமதுரைக்கு நாற்பது வயதுகூட இருக்காதே! நல்லவராயிற்றே! நாடு புகழ் வள்ளலாயிற்றே! நாகேஸ்வரன் கோயில் நவராத்திரி அவர் உபயந்தானே! அகிலாண்டேஸ்வரி ஆலயத்தில் ஆயிரக்கால் மண்டபம் கட்டியது அந்தப் புண்ணியவான்தானே! ஒரு தர்ம தாதாவைப் பாவிப் பயல் குத்திக் குவித்து விட்டானே!"

"அப்படித்தான் என்ன, அவர் தொழிலாளர்கட்குத் துன்பம் அளித்தாரா? ஒரு 'ஸ்ட்ரைக்' உண்டா—அவருடைய மில்லில்? ஒரு தொழிலாளியை வேலையை விட்டு நீக்கினர் என்றுதான் இருக்குமா? ஒன்றுமே இல்லாமல், இவன் இழவுக்கு இருநூறு ரூபாய் கடன் கொடுக்க மறுத்தார் என்பதற்காக இப்படி ஒரு மகாபாதகம் செய்வதா? பாவி, அவன் நல்லாயிருப்பானா?"

"அந்தக் குபேரனுடைய மனைவி—மகாலட்சுமி மாதிரி; இரண்டு மழலைக் குழந்தைகள். அவர்களுடைய மனம் என்ன பாடு படும்? ஏழேழு ஜன்மங்களுக்குத் தவமிருந்தாலும் கிடைக்க முடியாத கணவனைப் பிரிந்து அவள் எப்படித்தான் துடிக்கிறாளோ? அடப் பழிகாரா, பஞ்சமா பாதகா, உன்னை இப்படிக் குத்திக் கொன்றால் உன் மனைவிக்கு வயிறு எரியாதா? உம்... உன்னையும் கொல்லாமலா விடப் போகிறார்கள்?"

"தூக்கிலே போடக்கூடாது அந்தச் சண்டாளனை! துண்டு துண்டாய் அவன் சதையைக் கழித்துக் கழித்துக் கொல்ல வேண்டும்!"

இப்படி ஊரின் பல பகுதிகளில் பேச்சுக்கள். கொலைக்குக் காரணம்—விட்டலுக்கு இருநூறு ரூபாய் தரவில்லை. ஆகவே கொன்றுன் என்பதுதான்.

லீலா மில்—நகரத்தின் ஓர் அழகான பகுதியில் அமைக்கப் பட்ட பெரிய தொழிற்சாலை. அங்கே சுமார் மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்தனர். பஞ்சை நூலாக்குவதும், நூலை நூதன ஆடைகளாக்குவதும் அந்த மில்லின் வேலை. தொழிலாளர்கள் வசிப்பதற்கென்று நகரையடுத்துச் சிறிது தொலைவில் லீலாபுரம் என்ற இடமுண்டு. அங்குதான் மூவாயிரம் தொழிலாளிகளும் வாழ்க்கைத் தோணியை நகர்த்திக் கொண்டிருந்தனர். அந்த மூவாயிரத்தில் ஒருவன்தான் விட்டல்.

அன்று மாலை ஐந்து மணிக்கு வழக்கம்போல் ஆலையின் சங்கு ஊதிற்று. அடைபட்டுக் கிடந்த பாட்டாளிக் கூட்டம் அணி அணியாக வெளியேறிப் பெருமூச்சு விட்டபடி வீடு நோக்கிச் சென்றது. அவர்களோடு வெளியேறிய விட்டலும் மில்லுக்கு எதிரேயுள்ள மரத்தடியில் நின்றுகொண்டு பெண்கள் போகும் வழியைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டே இருந்தான். சுமார் ஆயிரம் பெண்களை வெளியே அனுப்பும் வாயில் அது. எல்லாப் பெண்களும் வெளியேறி விட்டனர். அவளை மட்டும் காணவில்லை. ஆம், அவன் மனவியைத்தான்! அவன் கால்களும் ஓய்ந்து விட்டன.

முன்னே போய்விட்டாளோ என்று அங்கிருந்து அவன் வேக மாக நடந்தான். வீட்டுக்கு ஓடினுன்—வீடு பூட்டியிருந்தது. மீண்டும் திரும்பினுன். 'காலையில் மில்லுக்குப் போகும்போதே தலையை வலிக்கிறது என்றுளே—ஒருவேளை காய்ச்சல் வந்து விட்டதோ?' என்ற சந்தேகம் அவனுக்கு. மனவியின்மேல் ஓர் எறும்பு கடிக்கக்கூடப் பொறுக்கமாட்டான் விட்டல். அவ்வளவு ஆசை! ஏழைக்கு, அதைத் தவிரத்தான் வேறென்ன இன்பம்? விட்டல், மில்லை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்தான்.

ஆலைச் சங்கு ஊதியதும், அத்தானைக் காண வேண்டுமென்று ஆவல் ததும்பப் புறப்பட்டாள் தங்கம். பகலெல்லாம் மில்லில், பஞ்சைப் பதப்படுத்த வேண்டிய பணி அவளுடையது. அவளுடைய கருத்த மேனியும், முகத்தில் அவளுக்கென்றே அமைந்த தனிக் களையும் விட்டலின் பயங்கரக் கவலைகளை

யெல்லாம் எத்தனையோ முறை விரட்டி யிருக்கின்றன. காலை முதல் கஷ்டப்பட்டுக் கை கால் வலியெடுத்து நிற்கும் அவனுக்கு, அவளுடைய 'தரிசனம்' தான் மருந்தாக இருக்கும். அதைப் போலவே அவளும் அவனைப் பார்த்துக் குளிர்ச்சி பெறுவாள். வேலை முடிந்ததும் தலையில் ஒட்டிக்கொண்டிருக்கிற பஞ்சைத் தட்டக்கூட நேரமிருக்காது. அவசர அவசரமாகப் புறப் படுவாள் அத்தானைப் பார்க்க.

அன்றும் அப்படித்தான் தங்கம் வந்துகொண்டிருந்தாள். பியூன் சிங்காரம் பின்னாலேயே ஓடிவந்து, தங்கத்தைப் பார்த்து —"உன்னை முதலாளி கூப்பிடுகிறார்" என்றான். என்ன காரணம் என்றே புரியாத தங்கம் திடுக்கிட்டாள்.

முதலாளியின் அறைக்குச் சென்று அடக்க ஒடுக்கமாக ஒதுங்கி நின்றாள். ராமதுரை ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்டு "தங்கம், வேலையெல்லாம் முடிந்ததா?" என்றார். தங்கம் "உம்" என்று தலையை அசைத்தாள். "நீ ரொம்பத் திறமையாக இருக்கிறாயாம்; மானேஜர் சொன்னார்." இதற்குப் பதில் கூறவில்லை. ஒரு புன்சிரிப்புத்தான். அந்தப் புன்முறுவலை ராமதுரை உற்றுக் கவனித்தார். "இந்த மாதத் திலிருந்து உனக்குச் சம்பளம் அதிகமாக்கச் சொல்லியிருக் கிறேன்."

தங்கம் இப்போதும் பேசவில்லை; கன்னங்கள் மட்டும் குழியாயின. இந்தச் சந்தோஷ சமாசாரத்தை அத்தானிடம் சொல்ல வேண்டுமே என்று துடித்தாள். அங்கு நின்றுகொண்டு, இளித்துக்கொண்டிருந்த சிங்காரத்தைப் பார்த்து, "ஏய் போடா..... காப்பி கொண்டு வாடா" என்று அதட்டினார். அவன் ஓடி விட்டான்.

ராமதுரை சிகரெட் சாம்பலைத் தட்டிக்கொண்டார். சாம்பல் பூக்காதிருக்கும் போதே, அதைப் பல முறை தட்டிக்கொண்டிருந் தார். இன்னொரு சிகரெட்டை எடுத்தார். தீக்குச்சி அணைந்து விட்டது. சே! ஒரே காற்று! ஜன்னல் கதவுகளைச் சாத்தி விட்டு, மீண்டும் தீக்குச்சியைத் தட்டினார். ஆனால் சிகரெட் கொளுத்தப்படவில்லை. "அடாடா என்னகாற்று! சனியன்! தங்கம், அந்தக் கதவைச் சாத்து" என்று சொல்லும்போதே ராமதுரையின் குரல் நடுங்கிற்று, குளிரில் நடுங்கும் கிழவனின் குரல்போல். தங்கம் முதலாளியைப் புரிந்துகொண்டாள்.

"நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு ஓர் அடி எடுத்து வைத்தாள். ராமதுரைக்கு அதற்கு மேலும் பொறுக்க முடிய வில்லை. தங்கத்தின்மேல் தாவினர். கதவுகள் மூடிக்கொண்டன.

அவள் 'ஐயோ!' என்று அலறினுள். ராமதுரையின் வாயி லிருந்து போதை நிரம்பிய வார்த்தைகள் உதிர்ந்தன. "பச்சைப் பசுங்கிளியே! பேசும் பொற்சித்திரமே! என் இச்சைக்கு இணங்கிவிடு—தங்கப் புருவே!" அவள் நடுங்கினுள். "நடக்கும் பொன்வண்டே—ஏன் நடுங்குகிறாய்?" ராமதுரை தங்கத்தை அணைத்துக்கொண்டார். அவள் திமிறிக்கொண்டு கோவெனக் கதறினுள். முதலாளியின் காலில் விழுந்து "என் கற்பைக் காப்பாற்றுங்கள்" என்று கதறினுள். "போர்க்களத்தில் ஒப்பாரியும்—போகக்களத்தில் புலம்பலும் கோழைகள் செயலடி கோமளாங்கி!" என உபதேசம் செய்தார் அவர்.

தங்கத்தால் அந்தக் காண்டா மிருகத்தின் பிடியிலிருந்து மீள முடியவில்லை. தங்கத்தின் மென்மையான அதரங்கள்—விட்டலின் அதரங்களை மட்டுமே சுவைத்த அதரங்கள்—சூடேறிய ராமதுரை யின் அதரங்களோடு அழுத்தப்பட்டன. அவள் மூர்ச்சித்தாள். அந்த மிருகம் ஆசை கொண்ட மட்டும் தன் பசியைத் தீர்த்துக் கொண்டது. தங்கம் துவண்டு போனுள்.

மணி ஆறு அடித்தது. அறைக் கதவு திறந்தது. ராமதுரை தங்கத்தின் கையில் ஒரு நூறு ரூபாய் நோட்டை வைத்து அழுத்தினர். அதைச் சுக்குச் சுக்காகக் கிழித்தெறிந்து விட்டுத் தங்கம் ஓடினுள்.

விட்டல் மில்லுக்கு மிக அருகில் வந்து விட்டான். தங்கத்தைக் கண்டதும், அவனுக்கு ஒரே ஆனந்தம். அருகே ஓடி வந்தான். .....ஆனல் தங்கம் தணல்பட்ட புழுவாய் இருந்தாள்.

"அத்தான் என்னைத் தொடாதீர்கள். நான் எச்சிற் பண்டம்"—அவள் அழுதாள்.

"என்ன தங்கம் சொல்கிறாய்?"

"முதலாளி.....என் கற்பை..." அவள் முடிக்கவில்லை. முடிக்கவும் முடியவில்லை...விம்மிக்கொண்டே விட்டலின் கால் களில் விழுந்தாள். அவன் அவளைக் கவனிக்கவேயில்லை. மில்லை நோக்கிப் பாய்ந்தான்.

வாயிலில் நின்று கொண்டிருந்த கூர்க்கா ஆச்சரியத்தோடு விட்டலைப் பார்த்தான். விட்டல், அவன் இடுப்பைப் பார்த்தான். பளப்பளப்பான கட்டாரி. ஒரே பாய்ச்சலில் அதைப் பிடுங்கிக் கொண்டு, முதலாளியின் அறையை நோக்கி ஓடினான். அவ்வளவு தான்—தங்கத்தை ருசி பார்த்த அந்தச் சுவை மாறுவதற்குள் ராமதுரை பிணமானார்.

கட்டாரியைத் தன் இடையில் செருகிக் கொண்டு வெளியே ஓடிவந்தவனை வாயிற் காப்பாளன்—கூர்க்கா வழிமறித்துக் கொண்டான். கூர்க்காவின் கத்தி விட்டலின் விலாவில் பாய்ந்தது. விட்டல், கூர்க்காவின் கழுத்தில் கட்டாரியை நுழைத்து, அவனைத் தூக்கி வீசிவிட்டு, விலாவைப் பிடித்தவாறு—'குபு குபு' வென்று பெருகும் ரத்தத்தை அடைத்துக்கொண்டு தங்கத்திடம் ஓடிவந்தான்.

தங்கம் தரையில் சுருண்டு கிடந்தாள். அவளை ஒரு கையால் அணைத்துத் தூக்கிக் கொண்டு மில்லுக்கு ஓரமாக நீர் வற்றிப் போயிருந்த ஒரு வாய்க்காலுக்குள் ஒளிந்து கொண்டான்.

மில்லிலிருந்து ஆட்கள் சிதறினர். "டெலிபோன்"கள் அலறின.

தங்கம் தன் சேலையைக் கிழித்துச் சுற்றினாள். விட்டலால் நிற்க முடியவில்லை. தள்ளாடினான். அவன் இரத்தமெல்லாம் விலாவில் ஏற்பட்ட ஓட்டை வழியாக வெளியேறிக் கொண் டிருந்தது. "அத்தான், என்னையும் கொன்று விடுங்கள்" என்று தேம்பினாள் தங்கம்; "உஸ்..." என்று அவளைத் தட்டிக்கொடுத் தான். அவன் இமைகள் ஈரமாயின. இருவரும் தழுவிக் கொண் டார்கள். தங்களிருவர்களிடையே ஏற்படப்போகும் பெரியதொரு பயங்கரமான நிகழ்ச்சி, அவர்களைப் பைத்தியம்போல ஆட்டி வைத்தது.

"இந்த வாய்க்காலுக்குள்ளேயே நடந்தால், அடுத்த ஊர் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய்விடலாம். எப்படியாவது தப்ப முயல்வோம்" என்று தழுதழுத்த குரலில் கூறினான் விட்டல். தங்கம் கண்ணீர் பொழிந்தாள்.

இருவரும் நடந்தார்கள்...நடந்தார்கள்...நடந்துகொண்டே இருந்தார்கள்...கொலைகாரனை, போலீஸ் வலைபோட்டுத் தேடும் போதெல்லாம் நடந்து கொண்டுதானிருந்தார்கள்.

இங்கு—போலீஸ் வீரர்கள் ஊரை ரகளை செய்தார்கள். ஆகாயத்தைத் தவிர மற்ற இடங்களில் பார்த்து விட்டதாகப் பெருமையடித்துக் கொண்டனர். ஊருக்குள் பார்க்காத இடமில்லை. எதிலும் பயனில்லை என்றதும், ஒன்பது மணிக்குப் புறப்படுகின்ற ரயில் வண்டியில் கொலைகாரன் தப்பிவிடலாம் என்ற யோசனையின் பேரில் எல்லா ரயில்வே ஸ்டேஷன்களுக்கும் லாரிகள் பறந்தன—பத்து மைலுக்குட்பட்ட இடங்களுக்கு. கமலாபுரம் ஸ்டேஷனை நோக்கி ஒரு லாரி ஓடிற்று.

ஆம்! அந்த ஸ்டேஷனை நோக்கித்தான் தங்கமும் விட்டலும் போய்க்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பத்து நிமிடங்கள் பாக்கி, வண்டி வருவதற்கு! அவர்களும் கிட்டத்தட்ட நெருங்கி விட்டார்கள். ஆனல் விட்டலால் ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியவில்லை. விலாவின் வலி அதிகமாகி விட்டது. ''ஐயோ ஐயோ'' என்று கத்த ஆரம்பித்தான். தங்கத்தின் நெஞ்சு 'படக் படக்' என்று அடித்துக் கொண்டது அவள் காதில் தட்டுவது போலிருந்தது. ஆலை வேலை முடிந்து ஆனந்த லாகிரியில் மூழ்கி அத்தானுடன் படுத்துறங்கும் தங்கம் எங்கே?...இப்போது மரண மூச்சு விட்டுக்கொண்டிருக்கும் இந்த அபாக்கியம் நிறைந்த தங்கம் எங்கே?...

''அத்தான்!'' என்று கொஞ்சியபடி அவன் கைகளை எடுத்துத் தன் தோளின்மேல் போட்டுப் பிடித்துக் கொண்டே மூச்சைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள்.

எப்படியும் அவனை ஸ்டேஷனுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்து விடலாம் என்ற அசட்டுத் தைரியம் அவளுக்குப் பிறந்து விட்டது. அந்த ரயில் மட்டும் கிடைத்துவிட்டால்?..... பிறகு எங்கேயாவது போய், எப்படியாவது தப்பித்து விடலாம் என்ற ஒரே ஆசைதான் அவர்களை விரட்டியடித்தது. விட்டல் திணறித் திணறி மூச்சு விட்டான். தங்கம் ஆவேசங் கொண்டவளாய் நடந்து கொண்டிருந்தாள்.....

திடீரென அவள் முகம் மலர்ந்தது. ரயில்வே ஸ்டேஷன் சிவப்பு விளக்கு தெரிந்து விட்டது. இன்னும் சில நிமிஷங்கள்; வாய்க்காலிலிருந்து மேலே ஏறவேண்டும்; அவ்வளவுதான்..... சற்று நேரத்திற்கெல்லாம் ரயில் வந்து விடும்; தப்பிவிடலாம்.

தங்கம் விட்டலைக் கட்டிக்கொண்டு ''அத்தான்!'' என்றாள். அழுகையும் சிரிப்பும் கலந்து சோகத்தை அதிகமாக்கின. கரையில்

ஏறிக்கொண்டு பலங் கொண்ட மட்டும் முயன்று தன் ஆசை அத்தானைத் தூக்கிக் கரை சேர்த்தாள். "இதோ ஸ்டேஷன்!" என்று அவனை இறுகப் பிடித்துக்கொண்டாள். அந்தத் தழுவலில் அவன் விலாவின் வலிகூட இருந்த இடம் தெரியவில்லை. "தங்கம்" என்றான்—இன்பம் பொங்கிடும் கீழ்ஸ்தாயியில்! "ஐயோ" என்று அலறினாள் தங்கம்!

லாரியிலிருந்து போலீஸ்காரர்கள் வேகமாக இறங்கிக் கொண்டிருந்தார்கள். 'டார்ச் லைட்டு'கள் பல திசைகளிலும் சென்றன. தங்கத்தின் நினைவு சுழன்றது. தலை கிறுகிறுத்தது. விட்டல் கையில் விலங்கு—பிறகு தூக்கு மேடையில் அவன்—தங்கம் விதவைக் கோலம். இந்தப் பயங்கரம் அவளை ஓர் உலுக்கு உலுக்கிற்று. "அத்தான்! அகப்பட்டுக் கொண்டோம்!" என்று வீறிட்டாள். விட்டல் விழிகளை உருட்டிப் பார்த்தான். அவள் கன்னங்களும் நனைந்து விட்டன. தங்கம் தன் ஆசை யனைத்தையும் ஒருசேர உதட்டில் சேர்த்து விட்டலை முத்த மிட்டாள். முத்தம் முடிந்தது.

போலீஸ் படை "விடாதே! பிடி!" என்று கத்திக் கொண்டு ஓடி வந்ததைக் கண்டார்கள். விட்டலின் இடுப்பிலிருந்த கட்டாரியைத் தங்கம் எடுத்துக்கொண்டாள். போலீஸாரிட மிருந்து தப்புவதற்கு அவளுக்கு இப்போது வழி தெரிந்து விட்டது. தன் அன்பு அத்தானின் நெஞ்சில் ஓங்கி ஒரு குத்து—அவன் பிணமானான்! அந்த இரத்தம் சொட்டும் கட்டாரி அவள் கழுத்துக் குழியிலும் பாய்ந்தது! போலீஸாரிடமிருந்து விட்டலைக் காப்பாற்றினாள். வேதனையிலிருந்து தன்னையும் காப்பாற்றிக் கொண்டாள்.

சமுதாயக்கொடுமையிலிருந்து இருவருமே தப்பிவிட்டார்கள்.

தப்பவில்லை

கண்ணுடித் துண்டுகளின் வேல் போன்ற கூரிய முனைகள் மேல் நோக்கியவாறு புதைக்கப்பட்டிருந்தன, அந்த நெடிய சுவரின் நெற்றியில்! அதனையொட்டி மின்சாரம் பாய்ச்சப்பட்ட கம்பிகள் அமைக்கப்பட்டிருந்தன. பார்த்தாலே மலைப்புத் தட்டுமளவுக்கு உயர்ந்திருந்த பெருஞ் சுவரின் கம்பீரத்தை உற்று நோக்கியவாறு விழிகளில் மின்னுகின்ற கண்ணீரையும் துடைக்காமல் கிணற்றடியில் உட்கார்ந்திருந்தான், அந்தக் கைதி! மரப் பலகைகளால் மூடப்பட்ட அந்தக் கிணற்றின் ஆழம் வெளியே தெரியாத்து போலவே அவன் உள்ளத்தின் ஆழத்தில் ஊறுகின்ற உணர்ச்சி மிக்க எண்ணங்களும் தெரியாமலே போய்விட வேண்டும் என்று ஆசைப்பட்டான் போலும்!

கட்டுடலும், கவர்ச்சிகரமான முகமும், எடுப்பான மீசையுங் கொண்ட அந்த வாலிபனின் முகத்திலேயுள்ள புத்தொளி, சிறை வாசத்தால் முழுதும் மங்கி விடவில்லை. அவனையும் உலகத்தையும் பிரித்து ஆணவமாக நின்றுகொண்டிருக்கும் அந்தக் கனமான சுவரினைச் சபிப்பதுபோல் உதடுகளை அசைத்துக் கொண்டிருந்தான்.

பெரிய பெரிய ராஜ்ஜியங்களின் தலைநகரங்களையும், மாமன்னர்களையும் பாதுகாப்பதற்கு எழுந்த வானளாவிய கோட்டை கொத்தளங்கள் பொடிப் பொடியாகப் போய்விட்ட சரித்திரங்களை அவன் படித்தானே இல்லையோ; அதுபோல இந்தக் கோட்டையையும் சரித்துத் தகர்த்துவிட்டால் என்ன என்று

மனக்கோட்டை கட்ட அவன் தவறவில்லை. பிரான்சு நாட்டில் 'பாஸ்டிலி' சிறையை உடைத்து ஒரே நாளில் புரட்சித் தலைவர்களை மீட்டார்கள் என்ற வரலாற்று உண்மை அவனுக்குத் தெரியாமலேகூட இருக்கலாம். ஆனால் அவன் எண்ணினான்— யாராவது இந்தச்சுவரைத் துளைத்துத் தன்னை மீட்டுக் கொண்டு போய்விட மாட்டார்களா என்று!

அப்படி அவன் எதிர்பார்ப்பதிலே விடுதலைத் துடிப்பு இருக்க முடியுமே தவிர, நிச்சயமாக அர்த்தமிருக்க வழியில்லைதான்! ஏனெனில் அவன் அரசியல் கைதி அல்லன்! ஆள் தூக்கிச் சட்டம், தடுப்புக்காவல் சட்டம்—இன்ன பிற அடக்குமுறைச் சட்டங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுப் போலீசார் தங்கள் கித்தாப்பை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக, நாட்டிலே அமளியை அவர்களாகவே தூண்டிவிட்டு, அதற்கெனவே முன்கூட்டிச் சிறையில் அடைக்கிறோம் இவர்களையென்று கைது செய்யப்பட்ட விடுதலை இயக்க முன்னணி வீரர்களிலே ஒருவனல்லன் அவன்! 'தங்கம் நிகர் தலைவர்களைக் காராக்கிரகத்தில் தள்ளி, நாட்டிலே இருளை மேய விடுபவர்கள் யாராயிருப்பினும் அவர்களைத் துச்சமெனக் கருதித் தூளாக்குவோம் சிறைக் கோட்டத்தை' என எழுந்த பெரும் புரட்சிகள் உலக வரலாற்று நூலில் காணப்படாத ஏடுகள் அல்ல!

இவை எதனையும் அந்தக் கைதியின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்க்க இயலாத அளவில் அவன் குற்றம் சாட்டப்பெற்றுத் தண்டனை பெற்றிருக்கிறான். அதனாலேயே குமுறல் எழுந்து எழுந்து சோகப் பின்னணி போல அடங்கிவிடுகிறது. அப்படித் தீ அணையும் போதெல்லாம் ஒரு நீண்ட பெருமூச்சு அவனது மூக்கின் நுனியைக் கருக்கிக்கொண்டு வெளிப்படுகிறது.

வீட்டின் வாயிற்புறத்துத் திண்ணையில் பனை நாரினால் பின்னப்பட்ட மூங்கில் கழிக் கட்டிலில் அவன் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தான். தூங்காத நேரங்களில் துள்ளிப் பாயும் எண்ணங்கள் காட்சிகளாக வடிவெடுக்கும் கனவுலகில் ஆடிப் பாடி மகிழ்ந்தான்...

அவனுடைய ஏழைப் பெற்றோர், தங்கள் ஒரே மகனுக்குத் திருமணம் நடத்திவிடத் தீர்மானித்துப் பல இடங்களில் பெண் தேடி இறுதியில் இலட்சணவதியான ஒருத்தியை மணமகளாகத்

தேர்ந்தெடுக்கிறார்கள். அவளது சிவப்பு நிறத்தையும், சேல் கெண்டை விழியையும், சேவல் கொண்டை நிறமொத்த இதழ் களையும் அவன் பார்த்துப் பார்த்துப் பரவசமடைகிறான். மணம் நிறைவேறுகிறது.

முதல் இரவுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. ஓலை வேய்ந்த வீட்டின் ஒரு மூலையில் பன ஓலைத் தட்டியொன்று மறைக்கப்பட்டு அதுவே முதல் இரவுக்கான பள்ளியறையாகத் திகழ்கிறது. ஒரு தட்டில் கொய்யாப்பழம்; ஒரு தட்டில் மலை வாழைப்பழம்; எருமைப் பால் ஒரு சிறிய கலயத்தில்; புதிய கோரைப் பாய்கள்; தேங்காய் நார் அடைக்கப்பட்ட தோல் தலையணைகள்.

அவள் வருகிறாள். நாணிக் கோணி நிற்கிறாள். சிறிது நேரம் அவளையே விழுங்குகிறான்—பார்வையால்! "தங்கம்" என்கிறான்; நா குழறுகிறது. உதடுகள் உலர்ந்துவிடுகின்றன. நடுங்கும் கரங்களால் அவள் கையைப் பற்றுகிறான். அவள் நகர்கிறாள். எழுகிறான். தோள் தழுவுகிறான். இருவரும் அமர்கிறார்கள். அவள் அவன் பிடியிலிருந்து நழுவ முயல்கிறாள், அவன் விடவில்லை. அந்த இன்ப வம்பில் அகல் விளக்கு கீழே சாய்கிறது. அறை இருளாகிறது...

அவன் விழித்துப் பார்க்கிறான். கண்டதெல்லாம் கனவு.

எதிரே போலீசார் நிற்கிறார்கள். கண்களை நன்றாகத் துடைத்துக்கொண்டு பார்க்கிறான். ஆம்; போலீசார்தான்! 'அய்யோ!' என அலற நினைக்கிறான். தொண்டை அடைத்துக் கொள்கிறது.

"டேய்! பண்ணையார் கொலை சம்பந்தமாக உன்னைக் கைது செய்கிறோம்" என்று பயங்கரமாகக் கூச்சல் எழுப்புகிறார் சப் இன்ஸ்பெக்டர். அவனிடமிருந்து பதில் இல்லை. கைகளில் விலங்கு மாட்டப்படுகிறது. இழுத்துச் செல்லப்படுகிறான். கல்யாணக் கனவை நினைத்துப் பார்த்து ஏங்கவோ அல்லது இன்ப மடையவோ கூட அவனுக்கு நேரமில்லை. 'லாக் அப்'பில் போட்டு அடைத்து விடுகிறார்கள். பரந்த வெளியில் வீசுகின்ற வீலை யில்லாத தென்றலை அனுபவித்துக் கொண்டிருந்தவனை அடிமை யாக்கிப் புனுகுப் பூனைக் கூண்டு போன்ற அசுத்தமான ஓர் அறையில் தள்ளிவிடுகிறார்கள். மறுநாள் 'ரிமாண்டு' எனச் சொல்லப்பட்டு, சப்ஜெயிலில் பதினைந்து நாள் இருக்கவேண்டு மென்று உத்திரவு!

பண்ணையாரை அவன்தான் கொலை செய்தானு? அவன் இரவு—பகல் "இல்லை; இல்லை" யென்றே ஓலமிட்டுக் கொண்டிருந்தான். அவனது முதிர்ந்த பெற்றோர்கள் ஒரே ஒரு மகனைக் கூண்டிலே போட்டுத் தங்களிடமிருந்து வேறுபடுத்திவிட்ட கொடுமையினை நினைத்து நினைத்துப் புலம்பிக் கொண்டிருந்தனர்.

"அய்யோ! எங்கள் பிள்ளை தங்கமாச்சே—வைரமாச்சே! ஊர் வம்புக்குப் போகாத ராஜாவாச்சே! பண்ணைக்காரரைக் கொலை செய்ய ஊரிலே எத்தனையோ பேருக்கு ஆத்திரம்! உத்தண்டிக் கோனரின் வயல் வரப்புகளையெல்லாம் அநியாயமாக அபகரித்துக்கொண்ட சண்டாளனே, பண்ணையார். அதனால் அந்த உத்தண்டிக்கு ஆத்திரம் வந்திருக்கக் கூடாதா என்ன? சிவராமன் தங்கச்சி ஓடைக்குப் போனபோது உபத்திரவம் பண்ணின அயோக்கியப் பெரிய மனுஷன்—அந்தச் சிவராமனுக்கு அரிவாள் தூக்கத் தெரியாதா என்ன? அபின் வியாபாரத்திலே கூட்டுச் சேர்ந்துகிட்டு இந்தத் துரைபாண்டியை ஏமாத்திட்டான்னு ஊரே பேசுது—அந்தத் துரைபாண்டி துண்டிச்சிருக்கக் கூடாதோ அந்தத் துரோகியின் தலையை? எல்லாத்தியும் விட்டு விட்டு, நிலத்தை விட்டு வெளியேற்றப்பட்ட எங்க மகன்தானு வஞ்சம் தீர்த்திருக்கணும்? அய்யோ கடவுளே! ஏழை பாழைங்கதானு இந்த உலகத்திலே இளிச்சவாயனுங்க? இந்த வருஷம் எப்பாடுபட்டாவது தை மாசத்திலே அவன் காலிலே ஒரு கட்டையைக் கட்டிப் போடணும்னு தவங்கிடந்தோமே; அவன் கதி இப்படி முடிஞ்சுதே! நாங்க என்ன செய்வோம்!"

எந்நேரமும் அழுது புழுங்கினர் தாயும் தந்தையும்! சப் ஜெயிலில் ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்த அவனுக்கு ஒரு நம்பிக்கை மட்டும் இருந்தது. நிரபராதிகள் தண்டிக்கப்படமாட்டார்கள் என்பதே அது!

ரிமாண்டுக் காலமான அந்தப் பதினைந்து நாட்களில் சோகமயமான அவன் உள்ளத்தில் ஒரு சொட்டுத் தேன் விழுந்தது போன்ற ஒரு நிகழ்ச்சியும் நடைபெற்று விட்டது. அவனிருந்த சப் ஜெயில் கொட்டடியில் அவன் அடைக்கப்பட்டிருந்த கூண்டுக்கு அருகில் நாலைந்து பெண்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள்.

அவர்களில் ஒருத்தி, ஏறத்தாழ அவன் கனவில் கண்ட அந்த மங்கை போலவே இருந்தாள். விசாரித்ததில் அவள் பெயர்

தங்கமில்லாவிட்டாலும், அதனையொட்டிய 'பொன்னு' என்பது தான் என அறிந்து பெரு வியப்படைந்தான். அந்தப் பெண்ணின் முகத்திலே களங்கத்தின் நிழல்கூட இல்லை, இருபது இருபத் திரண்டு வயதுதானிருக்கும். இளமையின் பெருமிதம் அவள் அங்கமனைத்திலும் பூரித்துப் பொங்கிகொண்டிருந்தது. 'அவள் யார்? அவள் ஏன் சிறையில் வாடுகிறாள்? ஒரு வேளை அவளும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டவளா?' கேள்விகள் குடைந்தன. மெல்ல விசாரித்தான்—மற்றவர்களை! கேள்விக்குக் கிடைத்த முதல் பதில் அவனுக்குப் பெரிய திருப்தியை ஏற்படுத்தியது. அவள் திருமணமாகாதவள்! என்னவோ சப் ஜெயிலிலேயே சிறை அதிகாரி மூலம் திருமணப் பேச்சை முடித்து, நிச்சயதார்த்தம் செய்து கொள்வது போலக் கற்பனை செய்து கொண்டு, மகிழ்ச்சி அடைந்தான்.

கள்ளச் சாராய வழக்கில் ஈடுபடுத்தப்பட்டவள் அவள். இரண்டாவதாக அவளைப்பற்றி அவனுக்குக் கிடைத்த தகவல் இது! அவனால் நம்ப முடியவில்லை. அப்படியே சாராய வழக்கில் அவள் கைது செய்யப்பட்டிருந்தாலும் அதை அவன் கேவலமாகக் கருதவில்லை. அவளைப் போலவே சிறு குழந்தைகளுடன் சிறைக் கம்பியை எண்ணிக் கொண்டிருந்த ஏழைத் தாய்மார்கள் சிலரைப் பற்றியும் அவன் தவறுகக் கருதவில்லை. மாறுக அனுதாபப்பட்டான்.

தேசத்தில் பிழைக்க எந்த வழியும் இல்லை. வழியில்லாத காரணத்தால் வயிறு காய்கிறது. மனைவி—மக்கள் பட்டினி கிடக்கிறார்கள். அந்தக் கொடுமையைச் சகிக்க முடியவில்லை, குடும்பத் தலைவனால்! பெரிய மனிதர்கள், 'பர்மிட்' வாங்கிக் கொண்டு குடிக்கிறார்கள். அதற்கு ஒரு தனி கௌரவமே சமுதாயத்தில் அளிக்கப்படுகிறது. கவலையைத் தீர்க்கக் கள்ளச் சாராயம் அருந்தும் ஏழைகளும், அந்த ஏழைகளை நம்பிக் கள்ளச் சாராயம் காய்ச்சும் பரம ஏழை வியாபாரிகளும் பரவுகிறார்கள். குடும்பத் தலைவர்களுக்கு அது சுலபமானதும்—அதைத் தவிர வேறில் லாததுமான பிழைக்கும் வழியாகத் தென்படுகிறது. போலீசில் பிடிபடும் வரையில் குடிசைத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். பாவம் அவர்களுக்குப் பெண்டாகவும், பிள்ளையாகவும், பெண்ணுகவும் வாய்த்தவர்கள் என்ன செய்ய முடியும்? தொழிலில் பங்கு கொள்ளத்தான் நேரிடுகிறது. எண்ணெய் வியாபாரி வீட்டில் இருக்கும் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் செக்கு ஓட்டத் தெரியும்.

சுருட்டுக் கம்பெனி நடத்துகிறவர் குடும்பத்தினர் அனைவருமே சுருட்டு செய்யும் பயிற்சி பெறுகிறார்கள். அதுபோலவே கள்ளச் சாராயத் தொழிலும் பல பகுதிகளில் குடிசைத் தொழிலாக உருவெடுத்து வருகிறது. பங்குப் பணமும், வியாபார லாபநஷ்டக் கணக்கில் ஏற்படுகிற தகராறும் தலைமைநிர்வாகிகளைக் கூண்டிலே அடைபடச் செய்கிறதே தவிர, நீதியும்—நேர்மையும்—சட்டமும் அழுல் நடத்தப்படுகின்றன என்று யாரும் பெருமைப்பட்டுக் கொள்ள வழியே இல்லை.

அந்த நிலையில் கூண்டுக் கிளி ஆனவள்தான் பொன்னு! குடிசைத் தொழிலில் கூட்டு வியாபாரம் செய்த குள்ளனின் ஆசைக்கு இணங்க மறுத்தாள். அதன் விளைவாகச் சாராயக் குடத்துடன் ஓர் இரவு போலீசாரிடம் காட்டிக் கொடுக்கப் பட்டாள்.

பண்ணையாரைக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ரிமாண்டில் இருக்கும் முத்துவுக்கு அவளைப் பார்ப்பதிலே ஓர் ஆறுதல்! அவளுக்கும் கூட அப்படித்தான் என்பது இரண்டொரு நாட்களில் அவனுக்குப் புரிந்துவிட்டது. சிறைச்சாலையில் தனிக் கூண்டுகளில் அடைக்கப்பட்டு, வார்டர்களின் கவனிப்பும் இருப் பதால் ஒருவரை யொருவர் சந்தித்துப் பேசி அளவளாவ இயலாது என்பது உண்மை. விழிகளுக்குத் திரைபோட—வெண் பற்கள் சிந்துகின்ற சிரிப்புக்கு அணை போட யார் இருக்கிறார்கள் அங்கே?

மாலையில் கூண்டிலே அடைக்கப்படும் முத்து, காலையில் சிறைக் கம்பிகளுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டு வானம் வெளுப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பான். அப்போது, பெண் களுக்குத் தனிச் சலுகை என்ற முறையில் முதலில் திறந்துவிடப் பட்டுக் கிணற்றங்கரைப் பக்கம் போகும் பொன்னு, முத்து அடைபட்டிருக்கும் கூண்டினை ஆவலுடன் பார்ப்பாள். அவனும் பார்ப்பான். இருவர் விழிகளும் ஏதேதோ பேசி முடிவெடுக்கும்.

இப்படிப் பதினைந்து நாட்கள் நடைபெற முடியவில்லை. காரணம், பொன்னுவின் மீது போடப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு, அவள் திடீரென விடுதலையாகி விட்டாள். விடுதலையாகிற நாளன்று அவள் துணிந்து, முத்துவிடம் "போய் வருகிறேன்" என்று விடைபெற்றுக்கொண்டாள்.

அவள் போனதும் அவன் மீண்டும் சிறைக் கொடுமையை அனுபவிக்கும் கஷ்டத்திற்குள்ளானான். இதுவரையில், தன் மீது கூறப்பட்ட பழியிலிருந்து தப்பவும், தன் தாய் தந்தை மனம் குளிரவும் எப்படியாவது விடுதலையாகிவிட வேண்டுமென்று பிரார்த்தனை செய்துகொண்டிருந்த அவனுக்கு, விடுதலைக்கான புதிய காரணமும் தோன்றி விட்டது. அதுதான் அவள்! அவளை எப்படியாவது மீண்டும் சந்திக்கவேண்டும் என்று எண்ணித் துடித்தான் முத்து!

'ரிமாண்டு' முடிந்தது. வழக்கு விசாரணைகள் தொடர்ந்தன. செஷன்ஸ் கோர்ட்டுக்கு வழக்கு சென்றது. தீர்ப்பு கூறப்பட்டது, பண்ணையாரை அவன்தான் கொலை செய்தான் என்று நீதி மன்றம் முடிவு செய்தது, முத்து தூக்குத் தண்டனையிலிருந்து தப்பினான், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது அவனுக்கு! மத்திய சிறைச்சாலையில் கடுங்காவல் தண்டனையை அனுபவிக்கத் தள்ளப்பட்டான். பதினைந்து ஆண்டுகள் சிறை வாசம்! ஆனல் அவன் நடந்துகொள்வதைப் பொறுத்தும், விடுமுறைகளைப் பொறுத்தும்—ஏறத் தாழ எட்டு ஆண்டுகளுக்குள் அவன் வெளி உலகைக் காண இயலும். அய்யோ—அதுவரையில் அவன் பெற்றோர்கள் கதி? அவன் காதலித்த அந்த அழகி பொன்னு அதுவரையில் காத்திருப்பாளா என்ன? உயர்ந்த சுவரை வெறித்த கண்களால் பார்த்துக்கொண்டு உட்கார்ந் திருந்தான் முத்து.

"என்னப்பா, முத்து!" என்று முதுகில் தட்டியவாறு அவன் சிறைச்சாலை நண்பர்கள் சூழ்ந்தனர்.

"நீ என்னடா முத்து! முட்டாளாயிருக்கிறே! இதபார்... எனக்குச் செஷன்சில் தூக்குத் தண்டனை கிடைச்சுது... ஹைகோர்ட்டில் அப்பீல் செஞ்சேன்; ஆயுள் தண்டனையா குறைஞ்சுது. அதேமாதிரி...நீயும் அப்பீல் பண்ணினு... தண்டனை குறையும்—இல்லே, விடுதலையே ஆயிடுவே!"

ஒரு கைதி, பிரசங்கம் செய்ய ஆரம்பித்தான். அவன் மட்டு மல்ல; சிறையில் உள்ள எல்லாக் கைதிகளுமே அவனை 'அப்பீல்' செய்து கொள்ளுமாறு தூண்டினர். முத்து யோசித்தான். தன் இளமைக்காலத்தின் ஒரு பகுதி சிறையிலேயே சீரழிவதா? அப்பா, அம்மா வெளியில் அழுது புலம்புவதா? காதலியைக் காணாது வாடுவதா? தனக்குத் தானே கேட்டுக்கொண்டான்.

அப்பீல் செய்ய வசதி வேண்டாமா? முத்துவின் இந்தக் கேள்விக்குப் பதில் கூற யாரும் முன் வரவில்லை.

ஒருநாள் முத்துவைப் பார்க்க யாரோ வந்திருப்பதாக அழைப்பு வந்தது. 'இண்டர் வியூ' அறைக்குச் சென்றான். என்ன திடுக்கிடும் நிகழ்ச்சி! பொன்னுவும் அவளுடன் ஒரு கிழவனும் நின்றுகொண்டிருந்தார்கள். கிழவன் பேசினான். பொன்னு கண்கலங்க நின்றுகொண்டிருந்தாள்.

"தம்பீ! எனக்கு எல்லாம் தெரியும். என் மகள் பொன்னு எல்லாம் சொன்னது! உனக்காக உசிரை விடக்கூட என் மகள் தயாராயிருக்கு. அப்பீல் பண்ணுனு கட்டாயம் உனக்கு விடுதலை கிடைக்கும்னு எல்லாரும் சொல்றாங்க. நீ விடுதலை ஆயி வந்துட்டா அடுத்த வாரமே உங்க கல்யாணம்!

"அப்பீலாவது ஒண்ணுவது! அதுக்கெல்லாம் பணம் வேண்டாமா?"—முத்து அங்கலாய்த்துக்கொண்டான்.

"பணத்தைப்பத்திக் கவலைப்படாதே தம்பீ!...ஏதோ இந்த உலகத்திலே 'அகடு பகடு' பண்ணி ரெண்டு காசு சம்பாதிச் சுருக்கேன். கெட்ட வழியிலே வந்த பணம் இப்படி நல்ல வழியிலே பயன்பட்டுப் போகட்டும் தம்பீ!"

"நீங்க நினைக்கிறபடி அப்பீல்ல விடுதலை ஆகலேன்னு பத்து வருஷம் கழிச்சுப் பொன்னு என்னைக் கல்யாணம் பண்ணிக்குமா? அதுக்குத் தயாரா?"

இந்தக் கேள்விக்குப் பொன்னுவே பதில் கூறினாள்.

"தயாராயிருக்கேன்னு சொல்லுங்கப்பா!"

முத்து கண்களில் நீர் கலங்கியது—அது ஆனந்தக் கண்ணீரே தான்!

முத்து, தன் கைதி நண்பர்களிடம் செய்தியைக் கூறினான். அவர்களும் அவனுக்கு நல்ல காலம் பிறந்ததாக வாழ்த்துக் கூறினர். இவர்களில் ஒரு ஜோசியக்கார கைதி, முத்துவைப் பிடித்திருந்த ஏழரைநாட்டான் சனி அன்றோடு விலகியதாக சாஸ்திர ரீதியாக எடுத்துக் கூறினான்.

நாட்கள் ஓடின...

உயர் நீதி மன்றத்தில் 'அப்பீல்' வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்தது. முத்துவின் கனவுகள் அவனுக்குப் புதிய பரபரப்பைத் தந்தன. அன்றொரு நாள் போலீசாரால் கைது செய்யப்பட்டபொழுது அவன் கண்ட இன்பக் கனவை மீண்டும் கண்டவாறு சிறைச்சாலையில் ஒரு மேடையில் தூங்கிக்கொண் டிருந்தான். அழகி பொன்னுவுடன் முதல் இரவைச் சுவைக்கும் கட்டம். இருவரும் சப் ஜெயிலில் சந்தித்ததை—விழிகளால் பேசியதைத்—திருமண முடிவைத் தங்கள் மனத்திற்குள் செய்ததை—ஒருவருக்கொருவர் பேசி மகிழ்கின்றனர்.

"உன் விரல்களை நினைத்துக் கொண்டு சிறைக் கம்பிகளைத் தடவிக்கொண்டே யிருந்தேன்" என்கிறான் முத்து!

"அவ்வளவு முரட்டு விரலா எனக்கு?" எனக் கேட்டுச் சிரிக்கிறாள் பொன்னு!

கேலியால் வெல்லப்பட்ட முத்து அவள் உதடுகளைத் தன் உதடுகளால் மூடுகிறான்.

கனவுதானே! விழித்துக்கொள்கிறான். இன்னும் சிறையிலே தானிருக்கிறோம்—என்பதை உணருகிறான். அப்பீல் என்ன ஆகுமோ என்று எண்ணுகிறான். எதிரே சிறை அதிகாரி வருகிறார்; வார்டர்களும் வருகிறார்கள்.

"வா முத்து!" என அழைக்கிறார் அதிகாரி! அவர்களோடு அவன் போகிறான். அதிகாரியின் முகக் குறிப்பிலேயிருந்து அவன் எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ரசம் பூசப்படாத கண்ணாடிபோல சில அதிகாரிகளின் முகங்கள் காட்சியளிக்கும். அப்படிப்பட்ட முகமே அந்த அதிகாரிக்கு!

தனக்கு அப்பீலில் வெற்றி கிடைத்திருக்குமா என்ற ஆவல் அவனை ஆட்டிப் படைக்கிறது. அதிகாரி, தூக்குமேடைக் கைதிகளை அடைத்துப் போடும் கொட்டடிக்குள் நுழைகிறார். கூண்டு திறக்கப்படுகிறது. முத்து உள்ளே தள்ளப்படுகிறான். கூண்டு பூட்டப்படுகிறது, முத்துவுக்கு ஒன்றுமே புரியவில்லை. விழிக்கிறான்.

"அய்யா! அய்யா! என்ன இது?" என்று கத்துகிறான்.

"அப்பீல் செய்துகொண்டாயே; அதில் ஏற்பட்ட முடிவு இது!"

"அய்யோ எனக்கு விடுதலை இல்லையா?" என்கிறான்.

"விடுதலைதான்! அப்பீலில் கிடைத்த விடுதலை இது! உலக விடுதலை! செஷன்ஸ் கோர்ட் தண்டனை போதாதென்று ஹைகோர்ட் கொடுத்த தண்டனை இது!"

எனக் கூறி, கதவை மூடிப் பூட்டிவிட்டுச் சிறை அதிகாரி போய்விடுகிறார்.

"நிரபராதிகள் தண்டிக்கப்படமாட்டார்கள்!" என்று யாரோ ஓர் உபதேசி கூறிய வாசகம் அவன் கண்ணெதிரே எழுத்து உருப்பெற்று அவனைப் பார்த்துக் கேலி செய்தபடியே யிருந்தது.

ஆதரிக்கிறார்

புண்யகோடி என்பது அவருக்குப் பெயர். அவர் ஈடுபடாத பொதுப் பணிகளே கிடையாது. அகில உலகப் புகழ் பெறுவிட்டாலும், அனைத்திந்தியப் பெயர் கிடைக்காவிட்டாலும், தமிழக மெங்கணும் அவரை அறிவார்கள் என்ற நிலை பிறக்காவிட்டாலும், அவரது சொந்த நகரத்திலே அவரைச் சுற்றிப் பலர் சூழ்ந்தபடி இருப்பார்கள். நகரசுத்தித் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்ற ஒரு செய்தி கிளம்பும். செய்திக்கு முன்பாக இவர் கிளம்புவார்; "நகரசுத்தியாளர்களே! தயாராகுங்கள். ரத்தம் சிந்துவோம். எத்தர்களை விரட்டுவோம்" என்று முரசு கொட்டுவார். அந்தத் தொழிலாளர்களின் தலைவர்களால்கூட அப்படிக் கர்ச்சனை செய்ய முடியாது; இவர் அவ்வளவு பிரமாதமாகச் சங்கநாதம் செய்வார். அந்தக் கிளர்ச்சி அடியோடு செத்துச் சுடுகாடு போகிற வரையிலே தூங்கமாட்டார். தோல்விக்கு இவரே பல காரணங்களை எடுத்துச் சொல்லிவிட்டு, அடுத்த போராட்டம் என்ன துவக்கலாம் என்று மூக்கில் விரல் வைத்துக்கொண்டு யோசிப்பார். நகரசுத்தியாளருக்கு அதுவரையிலே கிடைத்துவந்த சலுகைகள் சிலவும் புண்யகோடியின் பிரவேசத்தால் குறைந்துபோகும்.

அப்படிக் குறைந்தால்தான் ஆத்திர உணர்ச்சி அதிகமாகப் பெருக்கெடுக்கும் என்று புது விளக்கம் தந்துவிட்டுப் பொதுக் கூட்டத்திலே விழுகிற மாலைகளிலே ரோஜா மலர்கள் இருக்கின்றனவா; இருந்தால் எத்தனை நாளைக்குக் காப்பி போடலாம் என்று கணக்குப் போடுவார்.

திடீரென ஒருநாள் நகரசபையார் ஆயிரம் பிராமணர்களுக்கு அன்னதானம் என்று அறிவிப்பு விடுவார்கள்.

"ஆமாம், செய்யவேண்டியதுதான். அந்தணர் மனங் குளிர்ந்தால்தான் ஆண்டவன் மனங்குளிரும்" என்று அதற்கும் வியாக்யானம் தருவார்.

பிராமண போஜனத்திலே புண்யகோடி ஆற்றிய பணிதான் தலைசிறந்து நிற்கும். வயிறு புடைக்கத் தின்று ஏப்பமிடும் கூட்டத்தினரும் நகரசபைத் தலைவரை வாழ்த்துவதைவிட அதிக மாகப் புண்யகோடியை வாழ்த்துவார்கள்.

நகரசபைத் தலைவர் வெள்ளையப்ப பிள்ளை பெயருக்கேற்றபடி மிகவும் வெள்ளை இருதயமுள்ளவராயில்லாவிட்டாலும், அதிகக் கெட்டவரல்ல. நகரத்தின் முன்னேற்றத்திலே சிறிது நாட்டங் கொண்டவர்தான். சிரமங்களை ஏற்றுச் செல்வக் குவியலிலே ஒரு பகுதியைக் கரைத்து எப்படியும் நகரசபைத் தலைவராக வந்துவிட வேண்டுமென்று கங்கணம் கட்டி வெற்றி பெற்றவர். அவருக்கு புண்யகோடியின் மீது பற்றும் பாசமும் உண்டு, புண்ய கோடிக்குப் பொதுமக்களிடத்திலே ஏற்பட்டிருக்கிற ஆதரவும்— சேர்மன் வெள்ளையப்ப பிள்ளைக்கு அவர்பால் அன்பு உண்டாக்க ஒரு காரணமாயிருந்தது. அதேநேரத்தில் வெள்ளையப்பருக்கு வரவேண்டிய புகழையெல்லாம் புண்யகோடி புத்தி கூர்மையுடன் தன் பக்கம் திருப்பிக்கொள்வதை வெள்ளையப்பர் அறிய முடிய வில்லை. அறிந்தாலும் அதுபற்றிக் கவலைப்படப் போகிறவரில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் உயர்ந்த பதவி. அவர் உயர்ந்த பதவியென்று கருதுவதெல்லாம் நகரசபைத் தலைவர் பதவிதான். ஆகவே, யார் பக்கம் பொதுமக்கள் இருந்தாலும், புகழ் தேங்கி இருந்தாலும் அவர் கவலைப்படுவதில்லை. தேர்தல் நேரத்திலே பொது மக்களின் ஏஜண்டை கைக்குள் போட்டுக்கொண்டால் போதும் என்று எண்ணுகிறவர். அதற்கென்ன, அதிக சிரமமா வேண்டும்? பணத்தால் அடித்தால் சுருண்டு விழக்கூடிய பொது நலவாதி புண்யகோடி பக்கத்திலே இருக்கும்போது!

அந்தரங்கத்திலே அந்தஸ்து படைத்தவர்களின் அடிமை யாகவும், அம்பலத்திலே பொதுநலத் தொண்டராகவும் புண்யகோடி உலவிக் கொண்டிருந்தார்.

"ஆகா, எவ்வளவு நல்ல மனிதரப்பா! ஏழைகள் துடித்தால் அவரும் துடிக்கிறாரே! அவரல்லவா ஏழைப் பங்காளர்" என்று ஏற்றிப்போற்றினர், குடிசைவீட்டுக்காரர்கள்.

ஆற்றிலே வெள்ளம்—அணைபோட மக்கள் பட்டாளம் திரளும். உழைப்பாளர்கள், யார்யாரோ! நகரசபை, பணம் செலவழிக்கும். அங்கே தளபதியாக நின்று அதிகாரக்குரல் எழுப்புவார் நமது புண்யகோடி. தேகம் வாடாமல்—வியர்வை சிந்தாமல்—'ஆற்று வெள்ளத்தைத் தடுத்த தலைவன் புண்யகோடி' என்ற பட்டத்தைச் சுலபமாகப் பெற்றுக்கொண்டு போய் விடுவார்.

அழகான வீடு—அருமையான வாழ்வு—பளபளப்புக் கெடாத பொதுநலத் தொண்டு—பகட்டு வெளிப்படாத அளவுக்குத் தந்திர மிக்க வாழ்வு—புண்யகோடியின் சக்கரம் அப்படி உருண்டு கொண்டிருந்தது.

நகரசபையிலே ஒரு நல்ல தீர்மானம் நிறைவேறியது தேர்தல் நெருங்கிவிட்ட காரணத்தால் நன்மை பயக்கும் தீர்மானங்கள் சிலவற்றினுல் பொதுமக்களைக் கவரவேண்டிய நிலைமை ஏற் பட்டது பதவியிலிருக்கும் வெள்ளையப்பருக்கு!

வீதிகளையெல்லாம் தார் போட்டவைகளாக்க வேண்டும். ஒரே ஒழுங்காகத் தெருக்கள் அமைய வேண்டும். அதற்கான வேலையை உடனடியாகத் துவங்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் நிறைவேறியது.

அடுத்தபடியாக நகரசபைக் கட்டிடத்தைப் புதுப்பிக்க வேண்டும் என்று ஒரு அவசரத் தீர்மானமும் கொண்டுவரப் பட்டது.

கட்டிடம் புதுப்பிக்கப்படும் வரையிலே, நகரசபை அலுவல கத்தை எங்கே வைத்துக்கொள்வது என்ற பிரச்சினை கிளம் பியது. அப்போது பொதுநலத் தொண்டர் புண்யகோடி புறப் பட்டார். மக்கள் நலனுக்காக என் வீடுகளில் ஒன்றைத் தற்காலிக மாக நகரசபை அலுவலகத்திற்கு வாடகையில்லாமல் தருகிறேன் என்று தம்பட்டமடித்தார்.

ஊரெல்லாம் பேசியது அவரது உதார குணத்தை மெச்சி!

நகரசபைக் கட்டிட வேலை துவங்கியது. புண்யகோடியின் வீட்டிலே அலுவலகம் பணியாற்றியது.

புதிய கட்டிடத்தின் திறப்புவிழா நடைபெற்றது. திறப்பு விழாவிலே தற்காலிக அலுவலகத்திற்குத் தன் வீட்டைத் தாராள

மாகத் தந்த தந்தை புண்யகோடி என்று வாழ்த்திப் போற்றினர்கள், நகர சபையார்—விழாத் தலைவர்—விரிவுரையாளர்கள்—அனைவருமே!

பொதுமக்கள் அரங்கிலே புண்யகோடிக்கு நல்ல பெயர் வந்துவிட்டது. இனி அவருக்கு வேண்டியது பணமல்லவா? அதுதானே புண்யகோடியின் இலட்சியம், அதற்கான முயற்சிலே ஈடுபட்டார். நகரசபைக்கு ஒரு ரகசிய விண்ணப்பம் அனுப்பினர். அதில்,

"என் சொந்த வேலைகளைக்கூடக் கவனியாமல், என் சொந்த வசதிகளைக்கூட எதிர்பார்க்காமல், பலர் எதிர்த்துங்கூடப் பொருட்படுத்தாமல், என் வீட்டை நகரசபை அலுவலகத்திற்கென இதுவரை கொடுத்திருந்தேன். அதனால் என் வீட்டிலே ஏற்பட்டிருக்கிற பழுதுகளை மீண்டும் புதுப்பிக்கப் பத்தாயிரம் ரூபாய் தேவைப்படுகிறது. அந்தப் பத்தாயிரத்தை எனக்கு நஷ்டஈடாகத் தரும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்."

என்பதாகக் குறிப்பிட்டிருந்தார் அந்த விண்ணப்பம் நகரசபைத் தலைவரின் பார்வைக்குப் போவதற்கு முன்பே நகரசபைத் தலைவர் வெள்ளையப்பர், தேர்தல் வேலைகளிலே ஈடுபட வேண்டியதாயிற்று, பலத்த போட்டி. பணம் நீராக ஓடியது. முடிவு பரிதாபகரமாக மாறிவிட்டது. வெள்ளையப்பர் கௌன்சிலராகக் கூட வர முடியவில்லை!

புண்யகோடிக்கு உள்ள வருத்தமெல்லாம் அந்தப் பத்தாயிரம் வரவேண்டியது போய்விட்டதே என்பதுதான்.

பொதுநலத் தொண்டன் என்ற பெயர்மட்டுந்தானே மிச்சம் என்று பெருமூச்சுவிட்டார்.

நகரசபையில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டது. வெள்ளையப்பரின் ஆதிக்கம் அறவே ஒழிக்கப்பட்டு, அந்த ஊரில் அப்போது பிரபலமடைந்த மஞ்சள் கட்சி என்ற புதுக் கட்சி பதவி ஏற்றது. அந்தக் கட்சியின் தலைவர்தான்—நகரசபைத் தலைவராகப் பதவியேற்ற **ராஜ நிலையத்தார்** என்பவர். அவருக்கும் நமது புண்ய கோடிக்கும் ஒற்றுமை கிடையாது. இவ்வளவு சீக்கிரம் தேர்தல் வரப்போகிறது; அதில் ராஜ நிலையத்தார் ஜெயிக்கப் போகிறார் என்று முன்கூட்டியே தெரிந்திருந்தால், புண்யகோடி அவர் பக்கம் சேர்ந்துகொண்டு பொதுப்பணியாற்றியிருப்பார். இப்போதும் ஒன்றும் முழுகி

விடவில்லை; ஒரு கை பார்ப்போம் என்று வேட்டியை வரிந்து கட்டிக்கொண்டு புண்யகோடி புறப்பட்டார்.

புதிய நகரசபைத் தலைவரின் பார்வைக்குத் தனது பழைய விண்ணப்பத்தை அனுப்பிப் பத்தாயிரத்தைக் கேட்டார். புதுத் தலைவர் "இதெல்லாம் பழைய சமாச்சாரம்—வெள்ளையப்பரையே கேட்டுக்கொள்ளும்" என்று பதில் எழுதிவிட்டார்.

அம்மாமி ஆட்டுக்கறியைக் களவு கொடுத்த கதையாகப் புண்யகோடி மனத்துக்குள்ளேயே புலம்பினர். வெளியில் சொன்னால் மக்கள் சிரிப்பார்கள், "இனாமாகத் தந்த இடத்துக்கு இவ்வளவு ரூபாய் கேட்கிறானே" யென்று!

"கிளர்ச்சி கிளர்ச்சி" என்று ஒலி கிளம்பியது. புண்ய கோடி உண்டாக்கிய புயல்தான் அது! ஆனால் அந்தப் புயல்க ளெல்லாம் புஸ்வாணமாகிவிட்டன. புதிய தலைவரை இழித்தும் பழித்தும் பேசிப் பொதுஜன செல்வாக்கைத் திரட்டிக்கொண்டே இருந்தார், புண்யகோடி. அதன் விளைவாக ராஜ நிலையத்தார், புண்யகோடியின் மீது வழக்குத் தொடர்ந்தார். நகரசபையின் மீது மானநஷ்டமுண்டாக்கியதாகக் கூறப்பட்டுப், புண்யகோடி பத்தாயிரம் ரூபாய் நஷ்டஈடு தர வேண்டுமென்று தீர்ப்புத் தரப் பட்டது, நீதிமன்றத்திலே.

புண்யகோடியின் வயிறு எரிந்தது. பொதுமேடைகளிலே முழக்கினர். பொதுமக்கள் நன்கொடைகள் வசூலித்தனர். பத்தாயிரம் ரூபாயைப் பொதுமக்களே தந்தனர். நஷ்ட ஈட்டைப் புண்யகோடி கட்டினர்.

பொதுத்தொண்டுச் சிங்கம் புண்யகோடி பூரிப்போடு உலவினர்—பொதுமக்களின் இருதயங்களை மிதித்துக்கொண்டு!

மீண்டும் நகரசபைத் தேர்தல் வந்தது. இந்தத் தேர்தலிலே புண்யகோடி ராஜ நிலையத்தாரை மூர்க்கமாக எதிர்த்தார். ராஜ நிலையத்தார் மட்டுமே தோற்றூர். மஞ்சள் கட்சி உறுப்பினர்கள் பலர் வெற்றி பெற்றுவிட்டார்கள். அதன் காரணமாகத் தலைவர் பதவிதான் மாறியதே தவிர, நகரசபை எதிர்கட்சியினரிடமே இருந்துவிட்டது. நகரசபைக்குத் தலைவராக இந்த முறை வந்தவர் மிகவும் கொடியவர். நகரத்துக்கே நாசம் விளைவிப்பவர் என்று எல்லாரும் கருதினர். புண்யகோடியிடம் வந்து புலம்பினர். "இவ்வளவு கஷ்டப்பட்டீர்களே; கடைசியிலே அந்தக் காதகன்

நகரசபைத் தலைவனுக வந்துவிட்டானே'' என்று அலறினர். புண்யகோடியும் கண்ணீர் விட்டார்.

மாதங்கள் சில உருண்டன. புதிய நகரசபைத் தலைவரின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. பொதுமக்கள் குமுறும் எரிமலைகளாகி விட்டனர். அப்போது, புண்யகோடி புதிய தலைவரைப் பற்றி ஒரு மேடையில் பேசப்போவதாக விளம்பரம் செய்தார். மக்கள் திரண்டு வந்தனர். முதலில் புண்யகோடியின் காரியதரிசி பேசினர். புதிய தலைவரைக் காரசாரமாகத் தாக்கினர். மக்கள் குதூகலித்தனர். அடுத்துப் புண்யகோடி எழுந்தார். பொதுமக்கள் ஆவல் ததும்பியபடி அவர் பேச்சை எதிர்நோக்கினர்.

புண்யகோடி பேசினர். ''நண்பர்களே! நான் புதிய தலைவரை ஆதரிக்கிறேன்'' என்று கூறிவிட்டு மேடையிலிருந்து கீழே இறங்கினர்.

பொதுமக்கள் வாயடைத்துப் போயினர்.

''காரியதரிசி கர்ச்சிக்கிறார்; புண்யகோடி இப்படிப்பேசுகிறார். என்ன ஆச்சரியம்!'' என்று நகரமே வியந்தது.

''நீ தாக்கு, நான் ஆதரிக்கிறேன்'' என்று திட்டம் போட்டிருக்கிறார்கள் என்றனர் சிலர்.

''புதிய தலைவருக்கும் புண்யகோடிக்கும் ஏதோ பேச்சு நடந்திருக்கிறது'' என்றனர் சிலர்.

''எல்லாம் நன்மைக்குத்தான்'' என்றனர் புண்யகோடியின் பரம்பரைப் பக்தர்கள்.

பாவம்; அவர்களுக்கெல்லாம் தெரியாது—புண்யகோடி, மீண்டும் அனுப்பிய பழைய விண்ணப்பத்தைப் புதியசேர்மன் கவனித்துப் பத்தாயிர ரூபாயை வீடு பழுது பார்க்கத் தந்து விட்டார் என்ற சேதியும்—புண்யகோடியிடம் பழைய நகரசபை நஷ்ட ஈடாகப் பெற்ற பத்தாயிரத்தைத் திருப்பிக் கொடுத்து விட்டார் என்ற தகவலும். எல்லாம் எப்படியோ மறைக்கப்பட்டு விட்டன. **புண்யகோடி பொதுஜனத் தொடர்போடுதான் உலவு கிறாராம்;** இதை மட்டும் அவர் காரியதரிசி சொல்கிறார்.

இரகசியம்!

அவன் கவிஞன், பொன்னும் மணியும் மின்னும் வைரமும் பூட்டி மகிழ்வான் தமிழ்த்தாய்க்கு! தந்தத்தால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டிலிலே தமிழ்க் குழவியைச் சீராட்டிப் பாராட்டுவான். கண்ணே! முத்தே! தமிழ்ப்பண்ணே! என்றெல்லாம் கவிதைக் காதலியோடு கொஞ்சுவான். அவன் புகழ், குன்றின் மேல் ஜோதியாயிற்று.

எழுத்தின் வேந்தர் என்றனர் அவனை.

கருத்தின் செல்வன் எனக் கவி பாடினர் மக்கள்.

பழுத்த அனுபவம். கொழுத்த சொற்கள். இவைகளை வைத்துக் கொண்டு அவன் தமிழுலகில் நிமிர்ந்து நின்றான்.

ஏடுகள்... அவன் எழுத்துக்கோவை இல்லாவிட்டால் இனிக்காது!

நாடகம்... அவன் பாடல் ஒலிக்காவிட்டால் சோபிக்காது!

திரை உலகம்... அவன் கீதங்கள் முழங்காவிடில் சுவைக்காது! இப்படி வளர்ந்தான் அவன்.

ஏழைகளை ஊக்குவிப்பான்! கோழைகளை வீரராக்குவான்! "தாழையின் முள்ளும் வாழையின் குருத்தும் சேருமோ?" எனக்கேட்டுத் "தமிழர் பண்பும் ஆரியர் கலையும் ஒட்டாது; கிழிந்துவிடும்" என்பதற்கு விளக்கம் தருவான். அவனைப் பாராட்டிப் பலர் எழுதினர்.

"கவிஞனே! கலைவாணனே! கருத்துச் செல்வமே! கண்டேன் உமது கவிதையை. விதவைத்துயர் பற்றி வேதனை நிரம்பிய கீதம் அமைத்தீரே; அதுகண்டு விழியிலே நீர் பெருக்கினேன். இத்தகைய பெருமை மிகுந்த உம்முடன் இருந்து பணி செய்ய விழைகிறேன். விருப்பம் நிறைவேறுமோ? விடுத்திடுவாய் பதில். இங்ஙனம் வில்லவன்."

இப்படி ஒரு மடல்!

"ஏட்டிலே பாட்டு கண்டேன்; எழுத்தின் வித்தகனே! என் இதயங் கவர்ந்தவனே! ஏழை நான். எனக்கோர் உதவி செய்வாயோ? கவிதை எழுதுவதில் அடியேன் திறமை யுடையவன். என் கவிதைத் தொகுப்புகளைப் புத்தகமாக்கும் பணியை மேற்கொள்வாயேல் என் ஆசை நிறைவேறும். உடன் பதில் தருவாய்! காத்திருப்பேன். இப்படிக்கு இன்மொழியான்."

இப்படி ஒரு முடங்கல் வரும்!

"கடல் மடை திறந்தாற்போல் கருத்து மழை பொழியும் கவிஞர் ஏறே! கடையேன் கண்ணப்பனின் கண்ணீரைத் துடைப்பீர்! எனக்குக் கவிதை எழுதப் பல நாட்களாய்ப் பேரவா! அந்த எண்ணத்தை ஈடேற்றுவீராக!"

இப்படி ஒரு கடிதம்!

"நாடகத்தில் உமது சொற்றிறன் போற்றற்குரியது. கதா நாயகனும் கதாநாயகியும் பாத்திரத்தால் உயர்வு பெற்றதைவிட உமது பாட்டால் அதிகம் மதிப்புப் பெற்றனர். உமது பாட்டை இசைக்கும் பெரும் வாய்ப்பு எனக்குக் கிட்டுமோ? உம் நாடக மேடை எனக்கு எட்டுமோ? தர்பார் காட்சியில் சாமரம் ஏந்தி னாலும் சரி; உமது பாட்டொலிக்கும் அரங்கில் அரிதாரம் பூசி நின்றேன் அடியேன் என்ற புகழ் வந்தால் போதும்; புண்ணியனே! கண்ணியனே! புலியே! சிங்கமே! புனிதனே! பொற்புடன் எனக்கோர் புதுப்பணி தருவீர்! வணக்கம், வணங்காமுடி."

இப்படி ஒரு தாள்!

"திரையுலக ஜோதியே! ஆதியே! நீதியே! வீதியே கதியென்று கிடக்கும் இந்த வீணன் கலையுலகில் காலெடுத்து வைக்கக் கனவு காண்கிறான். கடலில் செல்லக் கட்டுமரம் வேண்டு மென்பார்கள். காசாசைக்காக அல்ல; கலையுலகத்துப் பணிபுரிய—

அதுவும் உன் கவிதைகளைப் பாடித் தொண்டாற்றத்—தோழனே தொல்லைப்படும் நான் எல்லையில்லா ஆவல் கொள்கிறேன், துணை புரிவாய்! இங்ஙனம் தூயமணி.''

இப்படி ஓர் அஞ்சல்!

''ஏழைகளைப்பற்றி எழுதும் என் அய்யனே! என் கதை சோகம் நிறைந்தது. எனக்கோர் வழிகாட்டு!''

''நாடகத்தில் ஒரு வேடம்''

''திரையுலகில் ஒரு காட்சி''

''நீ எழுதும் ஏட்டினிலே ஒரு வாய்ப்பு''

''பணமல்ல எனக்குத் தேவை! பணிபுரிவேன் கலைத் துறைக்கு''

''உன் பாடலை என் வாயால் பாடவேண்டும்''

''சரியென்று சொல். இல்லையேல் என் சாவை ஏற்றுக் கொள்''

''பல முடங்கல் எழுதினேன்—பதிலில்லையே; ஏன்?''

''‘வேலையில்லை’ என எழுதிவிட்டீர் வேதனை தாங்கவில்லை''

''நாடக மேடை!''

''திரை உலகம்!!''

''பத்திரிகை அலுவலகம்!!!''

ஆயிரக்கணக்கிலே அவன் புகழ்பாடிக் கடிதங்கள் குவிந்தன. புகழ் பாடும் கடிதங்கள் எல்லாம் அவன் உதவியை நாடி நின்றன. அவன் வளர்ச்சிக்கு அளவே இல்லை. வளர்ந்தான்; வளர்ந்தான்; வளர்ந்து கொண்டே போனான்!

ஒரு நாள் திடீரென அவன் இல்லத்தில் ஒப்பாரி கேட்டது! அலறல் வந்தது கேட்டு அனைவரும் ஓடினர். ஊரே திரண்டு ஓடியது! அவன் இறந்துவிட்டான். இறவாப் புகழ்பெற்ற அந்தக் கவிஞன் இறந்துவிட்டான். அதுவும் தற்கொலை செய்து கொண்டு இறந்துவிட்டான். கோழைகளை வீரராக்கிடப் பாடிய அந்தக் கோமான் இறந்துவிட்டான். தற்கொலை செய்து கொண்டான், தமிழ்த் தாய்க்குச் சிலம்பு பூட்டிச் சிங்கார அணிகள் சூட்டி மகிழ்ந்தவன்.

உத்திரத்திலே தொங்கிக்கொண்டிருந்தது அந்த உத்தமனின் பிணம்!

ஊர் கேட்டது 'ஏன் வலுவில் உயிர்விட்டான்?' என்று!

உலகமே வியந்தது; ஒரு குறைவுமில்லாதவன் உயிர்விட்டுக் கொள்ள யாது காரணமென அறியாமல்! அவனே நிம்மதியாகத் தொங்கிக் கொண்டிருந்தான். போலீசார் வந்தனர். பிரேதத்தைப் பரிசோதித்தனர். கவிஞனின் சட்டைப் பையிலே ஒரு காகிதத் துணுக்கைக் கண்டனர். அதில் அவன் எழுதியிருந்தான்—

"என் சாவுக்குக் காரணம்; என் காலடியிலே உள்ள பெட்டிதான்"—என்று!

போலீசார் பெட்டியைத் திறந்து பார்த்தனர். பொது மக்களும் ஆவலோடு கவனித்தனர். பெட்டி திறக்கப்பட்டது. அதில் ஆயிரக்கணக்கான **சிபாரிசுக் கடிதங்கள்** இருந்தன; "எனக்கு வேலை கொடு"—"நான் பாடுவேன். திரையுலகில் வாய்ப்பு வேண்டும்" என்பது போல!

இப்போது புரிந்துவிட்டது எல்லோருக்கும்
அவன் ஏன் செத்துக்காட்டினான் என்று!

முந்நூறு ரூபாய்

''அம்மாவுக்குக் கண் தெரியாது; அப்பா நடமாட முடியாதவர். ஒரு வருடமாகப் பக்கவாதம்—அக்காள் ஒருத்தி; விதவை. ஒரு குழந்தையை விட்டு விட்டுச் செத்து விட்டாள்.

''குடும்பத்தைத் தாங்கும் தூண் நான். வெற்றிலை பாக்குக் கடை யொன்றில் பத்து ரூபாய் சம்பளத்தில் வேலை; அதுவும் போய்விட்டது. வேலையிருந்தபோதே வீட்டில் இரண்டு வேளைப் பட்டினி. இப்போது கேட்க வேண்டுமா? நீங்கள் ஏதாவது வழி செய்யுங்கள்; இல்லாவிட்டால் ஒரு முழக் கயிறுதான் செலவு!'' என்று கூறிக் கண்ணீர் வடித்தான் அந்த ஏழை வாலிபன். பெயர் மாத்திரம் லக்ஷ்மிநாராயணன். ஆனால் தரித்திர நாராயணனுய்த் துடித்தான்.

அவன் வேலை கேட்ட இடமோ...பெரிய ஆபீஸ் அல்ல; அல்லது மில் முதலாளியிடமுமல்ல; மாதம் நூற்றைம்பது ரூபாய் வருமானமுள்ள ஒரு பள்ளிக்கூட ஆசிரியரிடம். தங்கப்பன் உயர் நிலைப் பள்ளியில் கணித ஆசிரியர். நூற்றைம்பதைக் கொண்டு தன் பெரிய குடும்பத்தையே நடத்தக் கஷ்டப்படும்போது, லக்ஷ்மி நாராயணனைக் காப்பாற்ற எப்படித் துணிய முடியும்? தங்கப்பன் இளகிய மனமுடையவர். சீர்திருத்தக்காரர். சீர்திருத்த உலகில் அவரது புனைப்பெயர் மார்க்ஸ். மேடையில் ஏறுகிறார் என்றாலே மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி ஏற்படும். அவ்வளவு சிறந்த பேச்சாளி. ஏழை, ஈவு, இரக்கம் என்றெல்லாம் பேசுகிறாரே—நாமும் கொஞ்சம் கை நீட்டிப் பார்க்கலாமே என்று எத்தனையோ

பேர் தங்கப்பனை யாசகம் கேட்டிருக்கிறார்கள். தன் சம்பளத்தில் அவர்களுக்கென ஒரு பகுதியைச் செலவழித்துக் கொண்டிருந்தார் தங்கப்பன். அவர்களில் ஒருவன்தான் லக்ஷ்மிநாராயணன். அவன் கதை தங்கப்பனுல் கேட்க முடியவில்லை—அவ்வளவு வேதனையடைந்தார்.

"பத்து நாள் வீட்டிலேயே சாப்பிட்டுக் கொண்டிரு; எங்கேயாவது, வேலை தேடிப் பார்க்கிறேன்" என்று உறுதியளித்தார். ஏழெட்டு நாட்களாகி விட்டன. இன்னும் வேலை கிடைத்தபாடில்லை.

ஒரு நாள் தங்கப்பனுக்கு, அவரிடம் ஆறுமாதத்துக்கு முன் கடன் வாங்கியிருந்த ஒரு தோழரால் அனுப்பப்பட்ட, ரூபாய் முந்நூறு மணி ஆர்டர் வந்தது. போன பணம் திரும்பி வந்த ஆனந்தத்தில் அதைப் பெட்டியில்கூட எடுத்து வைக்காமல் மேசை மேல் வைத்தபடியே மறந்துவிட்டுப் பள்ளிக்கூடத்திற்குச் சென்றுவிட்டார். பாடம் நடந்து கொண்டிருக்கும்போது பணத்தின் நினைவு வந்தது. லக்ஷ்மிநாராயணன்மேல் திடீரெனச் சந்தேகமும் பிறந்தது. பாடத்தைச் சீக்கிரம் முடித்துவிட்டு வீட்டுக்குப் புறப்பட்டார். வரும் வழியிலே யெல்லாம் நல்ல உயிர் இல்லை. "என்னதான் நல்லவனுயிருந்தாலும் ரூபாய் முந்நூறு அல்லவா?" என்று எண்ணியவாறு நடந்தார். வீட்டுக்கு வந்தார். வாசலில் உட்கார்ந்திருக்கும் லக்ஷ்மிநாராயணனைக் காணவில்லை. உள்ளே போனர்; பணத்தையும் காணவில்லை. வீட்டில் விசாரித்தார்...பணம் போய்விட்டது. தங்கப்பன் ஒரு அலட்சியமான புன்சிரிப்புடன் மீண்டும் பள்ளிக்குத் திரும்பினர். சேலம் ரயிலடியில் பிற்பகலே வண்டியைப் பிடித்து ஈரோடு வந்து சேர்ந்தான் லக்ஷ்மிநாராயணன். ஈரோட்டில் ரெடிமேடு கடையில் நுழைந்து வெளியே வரும்போது மைனராய் மாறி வந்தான். அவன் மனம் ஏதோ பேசிக் கொண்டிருந்தது. "முந்நூறு ரூபாய்க்கு ஒரு வெற்றிலைப் பாக்குக் கடை; நானே முதலாளி" என்று திரும்பத் திரும்பப் பேசிற்று. கடைத் தெருவில் ஒரு பொடிப் பையன், எலும்புந் தோலுமாய் அழுக்கு மயமாய் நின்றுகொண்டு 'ஐயா' என்றான்.

லக்ஷ்மிநாராயணன் அவனைப் பார்த்ததுமே ஏதோ யோசனை செய்துவிட்டான். "டேய் பையா! என்னோடு வருகிறாயா? என் வெற்றிலைப் பாக்குக் கடையில் வியாபாரம் செய்ய முடியுமா?"

என்று அவனைக் கேட்டான். பையன் சந்தோஷமாய்த் தலையாட்டினான். அவனைத் தன்னோடு கூட்டிக்கொண்டான். முதலாளி நடை தானாகவே வந்துவிட்டது. 10-30 மணிக்கு ஈரோட்டில் வண்டி. ஒன்றரை டிக்கெட் எடுத்துக்கொண்டு இருவருமே ரயில் ஏறினார்கள். அந்த ஏழைச் சிறுவனுக்கு ஒரே மகிழ்ச்சி. லக்ஷ்மி நாராயணன் பிளேயர்ஸ் சிகரெட்டைப் புகைத்தவாறு கம்பீரமாக ரெயிலில் உட்கார்ந்திருந்தான். வண்டியும் திருச்சியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

லக்ஷ்மிநாராயணன் வெற்றிலை பாக்குக்கடை துவக்க விழா, குதூகலமாய் நடைபெற்றது. முதலாளி ஸ்தானத்தில் லக்ஷ்மி நாராயணன். வேலைக்காரனுய்—ஓடும்பிள்ளையாய் அந்தப் பொடிப் பயல். என்ன சுறுசுறுப்பாய் வேலை செய்கிறான் தெரியுமா? வெற்றிலைப் பாக்குக்கடையும் வியாபாரச் செழிப்பில் வளர்ந்தது. திருச்சியில் இந்தக் கடைக்குத்தான் அபார மதிப்பு,

லக்ஷ்மிநாராயணன் கண்ணை விழித்துப் பார்த்தான். திருச்சி ஜங்ஷனில் வண்டி நின்றது—மணி நான்கு. பக்கத்திலிருந்த பயலைப் பார்த்தான்—காணவில்லை. பையைப் பார்த்தான்; பணமில்லை. ஒரு பெருமூச்சு—தங்கப்பன் எதிரே வந்து நின்று சிரிப்பது போலிருந்தது. நல்லவேளை வெளியே செல்ல டிக்கட்டாவது இருந்தது!

ஏழை

வழக்கம்போல் பானுவின் தள்ளு வண்டி 'பார்க்' நோக்கிப் புறப்பட்டது. பானுவின் சின்னஞ் சிறு வாயிலிருந்து சிதறிக் கொண்டேயிருக்கும் மழலை மொழிகட்குப் பதில் பேசியவாறு வண்டியைத் தள்ளிக்கொண்டு போனாள் பார்வதி. பானுவுக்கு வயது ஆறு கூட ஆகவில்லை. வீட்டில் 'துரு துரு' என்று சும்மா யிருப்பதில்லை. முக்கியமாக அப்பா அம்மாவைப் பேச விடுவ தில்லை யென்றால் பாருங்களேன்! காலையிலிருந்து கிராமக் கணக்கு வழக்கு, குத்தகைதார் பணம் பட்டுவாடா, கிசான் தொல்லை, வியாபாரப் பிரச்சனை இவ்வளவையும் கவனித்துவிட்டு, மாலை ஆறு மணிக்கு மேல்தான் நல்லக்கண்ணுப் பிள்ளைக்கு ஓய்வு. அந்த ஓய்வு நேரத்தில் ஒரு விநாடிகூட வீணுகப் போய்விடக் கூடாது என்பது பிள்ளையின் நோக்கம். ஆறு மணி எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்திருக்கும் கருணம்பாள்—ஆமாம் அவரது மனைவி—அந்த அம்மையாரும் அந்த ஓயா உல்லாசத் தைத்தான் விரும்பினர்கள். அவர்களின் இனிய பொழுதை— அந்தத் தீராத விளையாட்டுப் பிள்ளை தொடர்ச்சி கெடும்படி நடு நடுவே அறுத்துவிடும். என்னதான் புத்திர பாசமிருந்தாலும் சற்று நேரம் யாருடைய தொந்தரவுமின்றி இருக்கத்தான் கருணம்பாளின் மனம் விரும்பியது. அதுவுமென்ன; அந்தத் தம்பதிகள் ஏழைகளா—இன்பம் என்ன நிறம் என்று கேட்க? குடிசை மன்னர்களுக்கும் ராணிகளுக்கும்தான் தங்கள் வறுமை ராஜ்யத்தில் இன்பத்துக்காக ஒரு சில நிமிடங்கள் கூட ஒதுக்க

முடியவில்லை. கடன்காரர் படையெடுப்பு ; தயிர்க்காரி முற்றுகை ; இவ்வளவையும் சமாளித்து விட்டு, இரவு கருணை கூர்ந்து தருகிற சில மணி நேரங்களில் கர்ம வினையை நினைத்துப் புலம்பவும் கடவுளை எண்ணி அழவும் போனதுபோக, மிச்ச நேரத்தை எப்போதாவது பயன்படுத்திக் கொள்ளலாம். அதுவும் ஏழை சாம்ராஜ்யத்தில் பிரஜைகள் அதிகம். ஏழெட்டுக் குழந்தைகளுக்குக் குறையாது. ஏழாவது குழந்தை, முதல் குழந்தையை விட ஆறு, வயதுதான் இளையதாயிருக்கும். கருணைபாளைப் போலக் காசைத் தூசாக மதித்துக் கர்ப்பப் பையை மாற்றிப் போட வசதியா படைத்திருக்கிறார்கள் அந்தப் பரிதாப ஜந்துக்கள்!

இளமை தேயாதவன்—எழில் குறையாதவன்—இப்பேர்ப் பட்டவனைத்தான் பார்வதி கணவனுகப் பெற்றிருந்தாள். அவன் 'மில்' வேலை முடிந்து ஐந்து மணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்திருப்பான். அவனை வரவேற்று உபசரிக்க அவளுக்கு வேலை ஒழியவில்லை. எஜமானுக்கும் எஜமானிக்கும் தேவையான ஓய்வுக்காக—அந்த ஏழையின் இளம் மனைவி பார்வதி தன் பருவ உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு பானுவைப் 'பார்க்கு'க்கு அழைத்துச் சென்றுள். ஒருநாள் மட்டுமா? இல்லை. நாள்தோறும். அவள் பெண்ணல்ல ; இந்த உலகத்தில் ஒரு மாடு பகல் முழுவதும் எலும்பு முறிய உழைப்பதுபோல வீட்டு வேலைகள். அவளுக்கு எஜமான் மாளிகைதானே வீடு. மாலையில் சூரியனுக்குக்கூட வேலை முடிகிறது, ஆனல் பார்வதிக்கு...? இதை அவளால் நினைக்கத்தான் முடியவில்லை. நெஞ்சைத்தான் படைத்தானே அந்த நேர்மையற்றவன், வயிற்றையும் ஏன் படைத்தான்?

யார்....யாரைக் கேட்பது?

பூஞ்செடிகளின் அசைவைப் பூங்கொத்துகளின் அழகைப் பானுவுக்குக் காட்டித் தானும் ரசித்துக்கொண்டிருக்கையில்.... வானம் கறுத்துக் கொண்டு வருவதைக் கண்டாள். மாதம் முடிந்து சம்பளம் கேட்கும்போது, அதைவிட அதிகமான கறுப்பை எஜமானின் முகத்தில் பார்வதி அடிக்கடி பார்த்திருக்கிறுள். பழகிப்போனபடியால் வானத்தின் மாற்றத்தை லட்சியம் செய்யாமலே வீடு நோக்கி நடந்தாள். அவள் மன அலைகள் எல்லாம் அன்று...அத்தான்...மூக்குத்தி...முத்துப் போட்டி...இவைகளிலே மோதிக்கொண்டிருந்தன. இன்பக்

கனவு இல்லாவிட்டால் அவள் உலர்ந்த உதடுகளில் புன்னகை தலைநீட்டியிருக்காதல்லவா? சுவையான கனவு என்பதால்தான் கண்கள் அப்படி மின்னிக்கொண்டிருக்க வேண்டும். அத்தான் முத்தம் தருவது போன்ற கனவோ—அல்லது முதல்நாள் தந்த நினைவோ—அவள் கன்னங்கூடக் குப்பென்று சிவந்து விட்டது.

ஒன்றுமில்லை; மூக்குத்தி வாங்கி வருகிறான் அத்தான். பல நாளாகச் சேர்த்த காசு மூக்குத்தியாக உருவெடுக்கிறது. துடைப்பக் குச்சியை எடுத்துத் தூர எறிந்துவிட்டுப் பார்வதியின் மூக்கில் அவனே அந்த ஆபரணத்தை அணிவிக்கிறான். கறுத்த மேனியில் அந்த வெள்ளை மூக்குத்தி பளிச்சிடுவது, நீல வானத்தில் நிலா கிளம்புவதை நினைவூட்டுகிறது. "பார்வதி...எங்கே?" என்று அத்தான் தன் உதடுகளை மொக்காக ஆக்குகிறான். பார்வதியின் இதழ்களும் குவிகின்றன. மொட்டுகள் மோதி மலர்ந்துவிடுகின்றன. 'சஞ்சீவி பர்வதத்தின் சாரல்'—ஒரு முக்கிய பகுதி நடந்தேறுகிறது.

கனவு மங்களம் பாடுகிறது. பார்வதி சுய நினைவு பெறுகிறாள். வண்டியில் பானு "மழை வருது மழை வருது" என்று பாட ஆரம்பித்து விடுகிறது. இரண்டு கனமான மழைத் துளிகள் பார்வதியின் முகத்தில் விழுந்து சிதறின.

உலகை அதிரச் செய்யும் இடிகள்—வான மனிதனின் அகோரச் சிரிப்பு பயங்கர மின்வீச்சு—கடலைக் கவிழ்த்து விட்டதுபோல மழை—இமயம் உருண்டு விந்தியத்தில் மோதிடுவது போன்ற அதிர்ச்சி.

பார்வதிக்கு பானு நினைந்து விடுவாளே என்ற பயந்தான். பாவம்—அந்த ஏழைக்கு எஜமான் வீட்டில்—இல்லை, இல்லை குழந்தையின்மேல்—அவ்வளவு பாசம். மனித வர்க்கம் என்பது ஏழைக்கும்பல்தானே! பணக்கார மனிதர், மிருகக் கூட்டம். அதில் மனிதர்களும் தவறிப் பிறப்பதுண்டு. ஏழை மனிதர் குழுவில் துன்பம் தாங்கமாட்டாமல் மிருக வளர்ச்சியடைவோரு முண்டு. அந்த வளர்ச்சி இன்னும் பார்வதியைப் பீடிக்கவில்லை. இதெல்லாம் அவருக்கு ரஷ்யப் பேச்சு என்பார் நல்லக்கண்ணுப் பிள்ளை. ரஷ்யா என்றால் அவருக்கு விஷம் சாப்பிடுகிற மாதிரி.

பார்வதி நன்றாக நினைந்து விட்டாள். குழந்தைக்கு ஒரே பயம்; அலற ஆரம்பித்துவிட்டது. மரத்தடியில் நின்றுவிட்டாள்

பார்வதி. அவ்வளவு கஷ்டத்திலும், பயங்கரத்திலும் வரப் போகிற அந்த இன்ப வரவு அவள் முகத்தில் தனித் தெளிவை அதிகப்படுத்தியபடி இருந்தது.

திடீரென்று அந்த மரத்தின் ஒரு பெரிய கிளை முறிந்து விழுந்தது. மழை நின்று விட்டது; புயல் ஓய்ந்துவிட்டது.

நல்லக்கண்ணுப் பிள்ளையின் மோட்டார் வெகு வேகமாகச் சாலையில் பறந்து வந்தது.

முறிந்து கிடக்கும் அந்த மரத்தடியில்...'பானு' என்று சப்தம் போட்டபடி இறங்கினர் பிள்ளை. பானு மயக்கமாய்க் கிடந்தது. தூக்கி மூர்ச்சை தெளிவித்தார். 'அப்பா' என்று கண் விழித்தது குழந்தை. காரில் குழந்தையோடு ஏறி உட்கார்ந்தார். கார் புறப்பட்டு விட்டது—டாக்டர் வீட்டை நோக்கி!

மரத்தடியில் கிடந்த இன்னொரு உருவம் கண் விழித்தது "அத்தான் அய்யோ..." நீண்ட பெருமூச்சு. கண்கள் மூடிக் கொண்டன. யார் அது? "ஏழை"!

ஒரிஜினலில் உள்ளபடி

"இதைப் பெரிய டைப்பில் போடு"

"சரி சார்"

"கதா காலட்சேபம்!....உம். ஏனப்பா! 'கேஷ்' என்று போடாமல் 'ட்சே' போட்டுத் தொலைக்கிறாய்? ஒரிஜினலில் உள்ளபடிதானே உன்னைக் கம்போஸ் பண்ணச் சொன்னது?"

".....''

"அம்மன் 'பிளாக்'கை இப்படி நடுவில் போடு. இந்த ஓரத்தில் அழகாய் 'பார்டர்' கட்டிச் செட்டியார் 'பிளாக்'கைப் போடு!"

"சரி சார்"

"உம், ஆமாம். என்ன புரியுதா? உன் சுத்தத் தமிழையெல்லாம் இதிலே காட்டாதே. ஒரிஜினலில் உள்ளபடி போடு!"

".....''

"செட்டியார் பொல்லாத கோபக்காரர். உன் செந்தமிழ் நடையைக் காட்டினால் நம்ப அச்சாபீஸ் கடையைக் கட்ட வேண்டியதுதான்."

"அதான் ஒரு தடவை சொன்னீங்களே சார்!—ஒரிஜினலில் உள்ளபடியே கம்போஸ் பண்றேன் சார்."

"உனக்குத்தான் மறதி ஜாஸ்தியாச்சே! உம் போ."

கம்பாசிட்டர் கந்தசாமி, வேதாந்தி பிரஸ் மானேஜர் வேலாயுதம் பிள்ளையிடம் 'தான் அச்சுக் கோத்த' ஒரு 'நோட்டீஸ்' மாதிரித்தாளைக் காட்டியபோது நடந்த உரையாடல்!

கந்தசாமி, மானேஜரால் குற்றம் சொல்லப்பட்ட மாதிரித் தாளைக் கிழித்தெறிந்து விட்டு, ஓரிஜினலை எடுத்து ஒரு முறை படித்தான்.

மணி மணியான எழுத்துக்கள். கந்தசாமியின் முகத்திலே ஒரு பரிதாபம் பிரதிபலித்தது.

"**திரௌபதி அம்மன் கோவில் மகா கும்பாபிஷேகம்**" விளம்பரத்தின் தலைப்பு இது. நிகழ்ச்சி நிரல் என்ற பகுதியில் "**ஸ்ரீ ஜகத் யோகானந்த சுவாமிகள் பாஞ்சாலி சுயம்வரம் என்பது பற்றி உபன்யாசிப்பார்கள்**" என்ற குறிப்பு இருந்தது. கந்தசாமி உதடுகளைக் கடித்துக் கொண்டான். ஒரு ஏளனம் பிதுங்கும் குட்டிச் சிரிப்பும், அதைத் தொடர்ந்து ஓர் ஆபாசமான பெரு மூச்சும் வெளிக் கிளம்பின.

"நானும் இந்தப் பிரசுக்கு வந்து ஐந்து வருஷமாயிற்று. இந்த ஆபாசம் பிடித்த புராணக் குப்பைக்கு அச்சுக் கோப்பதை விடத் தூக்கு மாட்டிக் கொள்வது எவ்வளவோ மேல்! அட தமிழ் எழுத்துக்களே! மலர்களை, மகாகாளிக்குக் காவு கொடுக்கும் ஆட்டுக் குட்டிக்குப் போடும் மாலையாகவும் கட்டுகிறார்கள்; மணமாலையாகவும் தொடுக்கிறார்கள். அதே போல் நீங்களும் தேன் சுவைக் கவிதைகளை—வாழ்வுக்கு வழி வகுக்கும் வசன நடைகளைப்—புத்தக வடிவில் பின்னுகிறீர்கள். பொய்ம்மை, பித்தலாட்டம், புனை சுருட்டு பொங்கி வழியும் புராணங்களும் உங்கள் சிருஷ்டியாகின்றன. ஆமாம்—மனிதர் கையில் அலைக் கழியும் மலர்க் கூட்டம் போலத்தான் இந்த எழுத்துக் கூட்டமும்!"

அவன் இதய அலைகள் ஓய்ந்தன. எதையோ கண்டுபிடித்து விட்டவன்போலக் கந்தசாமி கண்களை விசாலமாய்த் திறந்தான். மீண்டும் கையில் இருந்த 'ஓரிஜினலை' ஒரு முறை பார்த்தான். அதில் ஒவ்வோர் எழுத்தும் அவனை உற்றுப் பார்த்தன; அவன் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்தன. வாய்க்குள் உளறினான். "மகாகும்பாபிஷேகம்.....ம்.....மட உலகம்....." அலட்சியம்

நிறைந்த வெறுப்பு அவன் முகத்தில் கோடுகளைக் கிழித்தது. மீண்டும் தனக்குள் பேசிக் கொண்டான்.

"கொள்ளையடிக்கிற செட்டியார் செய்கிறதும் கும்பாபிஷேகம்!.....கும்மாளம் போட்டு ஊரைக் குட்டிச் சுவராக்குகிறான். இந்தக் குருடர்களும் நம்புகிறார்கள். எனக்குத் தெரியுமே...இவன் ஏகாம்பரம் மனைவியைக் கற்பழித்த கதை! பெரியண்ணப் படையாச்சி பிராணாவஸ்தையில் இருக்கும்போது அவர் வீட்டுப் பணப்பெட்டியை அமுக்கியதில்தானே இவன் வீட்டுக்குப் 'பெரிய பண்ணை' பட்டம் கிடைத்தது! வேதாளபுரம், வெங்கடாசலபதி கிரீடத்தின் வைரங்களைப் பெயர்த்து விற்றதில்தானே விசாலமான வீடு கட்டினான்! இவற்றையெல்லாம் மறைக்கக் கும்பாபிஷேகம் செய்து விட்டால் போதுமா?.....அடப் படுபாவி! நரகம் என்று ஒன்று இருந்தால் உன் நரம்புக்கு நரம்பு ஒரு நாகப்பாம்பை விட்டுக் கடிக்கச் சொல்லணுமேடா!...நீ கோயில் கட்ட வந்து விட்டாய்—கோயில்! ராமநாதன் செட்டியாரே, இரு! இரு!—ஒரு கை பார்க்கிறேன். உயிர் போனாலும் கவலையில்லை."

கந்தசாமியின் தலை கம்பீரமாய் நிமிர்ந்தது; எதிரே நிற்கும் படைத் தலைவனைப் பார்த்து "எடு வாளை" என இறுமாந்து உரைக்கும் பண்டைய திராவிடப் போர்வீரனைப்போலக் கந்தசாமி நின்றான். அவனுக்கெதிரே ராமநாதன் செட்டியார் நிற்பதாக அவன் நினைவு!...பிறகு மளமளவென்று அச்சுக் கோக்க ஆரம்பித்தான். அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டேயிருந்தது.

"என்று கம்பாசிட்டர், ஆச்சா?" என்று அதட்டினார் மானேஜர்!

அச்சுக்கோத்த மாதிரித் தாளை எடுத்து நீட்டினான் கந்தசாமி.

அருமையான கட்டம், அழகான முறை. அந்த விளம்பரத் தாளின் அமைப்பே அலாதியாக இருந்தது.

அச்சு நிலையத்து வாயிலில் கார் வந்து நின்றது. ராமநாதன் செட்டியார் இறங்கிவந்தார். "ஆச்சா?" என்றார்; ஆவல் பார்வையுடன். சில்க் சட்டையில் நிற்காமல், வழுக்கிக் கீழே விழுந்த வெண்பட்டு ஆடையை எடுத்துச் செட்டியாரின் தோளில்

போட்டுவிட்டான். பின்னல் வந்த வேலைக்காரன்! அந்த அடிமையின் நிலைகண்ட கந்தசாமியின் தொண்டைக்குழி விம்மிற்று. செட்டியார் வாயிலிருந்து எப்படி விமர்சனம் வரப் போகிறதோ என்று வாய் பிளந்தபடி நின்றார் மானேஜர்.

"பேஷ், ஜோராயிருக்கு; பத்தாயிரம் நோட்டீஸ் போடுங்க"

"எஸ்" மானேஜர் கூனன்போல் நின்றுகொண்டிருந்தார்.

செட்டியார் வேலைக்காரனைப் பார்த்து, "டேய்! ரத்தினம் இங்கேயே இருந்து நோட்டீசை யெல்லாம்...வாங்கி..."

"சுவத்திலே ஒட்டி விடுகிறேனுங்கோ"

"அடமடையா!.....இது 'வால்போஸ்ட்டர்' இல்லடா, தெருவுக்குத் தெரு கொண்டுபோய்க் கொடுடா; பத்தாயிரம் நோட்டீசும் சாயந்திரத்திற்குள்ளே செலவாகி விடணும்... ஆமாம்"

"உத்தரவு எஜமான்"

மானேஜர் தலை வணங்கிக் கும்பிட்டு வழியனுப்ப, ராமநாதன் செட்டியாரின் கார் பறந்தது.

"ஓய்! மிஷின்மேன்! பத்தாயிரம் 'நோட்டீஸ்' உடனே போடு. 'புளூ' மையில் போடு...ம்...ஓய்! கம்பாசிட்டர்!... நோட்டீசைத் தயாராக்கிக் கொடு...சீக்கிரம்"

மானேஜர் அவசரத்தால் குதித்துவிட்டுச் சாப்பாட்டுக்குப் புறப்பட்டார். கந்தசாமி, மாதிரித்தாளுடன் உள்ளே சென்றான். அச்சுக் கோவையை எடுத்து இரும்புச் சட்டத்தில் பொருத்தினான். அப்போது அவன் கைகளில் சிறிய நடுக்கம் காணப்பட்டது. அவன் முதலில் கோத்திருந்த சில எழுத்துக்களைப் பிடுங்கினான். வேறு எழுத்துக்களைப் பொறுக்கி.....அந்தக் காலி இடங்களில் அமைத்தான்.

அச்சு இயந்திரத்தில் இரும்புச் சட்டம் ஏறிற்று. ஒன்று... இரண்டு.....,மூன்று...நூறு.....ஆயிரம்.....பத்தாயிரம்..... 'நோட்டீஸ்'கள் அடித்து முடிந்தன. கந்தசாமியே அதை எடுத்துக் கட்டிக் கொடுத்தான். வேலைக்கார ரத்தினம், விளம்பரச் சுமையோடு நடையைக் கட்டினான். செட்டியார் உத்தரவுப்

படி 'பத்தாயிரம் நோட்டீசை'யும் ஊரெங்கும் பரப்பி விட்டுத் தான் உட்கார்ந்தது அந்த அடிமை.

மறுநாள் கும்பாபிஷேகம். தாங்க முடியாத கூட்டம். செட்டியார் சர்வாலங்கார பூஷிதராய் தம் சகாக்களுடன் காரில் வந்து இறங்கினர். மற்றொரு காரில் ஒரு மங்கையர் கூட்டம் வந்து இறங்கிற்று. கூட்டத்தை ஒரு முறை பார்த்தார். "எல்லாம் என் பெருமை" என்று அவருடைய நிமிர்ந்த தலை சொல்லிற்று. ஓர் அலட்சியமான புன்னகை—வேண்டுமென்றே வரவழைத்துக் கொண்டது! அகம்பாவம் தெறிக்கும் கண்கள் அகலமாகிக் கொண்டன.

கூட்டம் அவரைப் பார்த்து விட்டது. ஒரே ஆரவாரம்!..... "ஏய் காமநாதன் செட்டியார்.....காமநாதன் செட்டியார்"... இப்படி ஒரு பேரிரைச்சல் கிளம்பி விட்டது. அநாவசியமான கைத்தட்டல். ஒரே நையாண்டிச் சிரிப்பு. இடையே, "காமநாதன் செட்டியாரே! போகாநந்த சுவாமிகள் எங்கே?" என்ற கேள்விகள்! "பொருத்தமான பெயர்களப்பா.....காமநாதன்—போகாநந்தர்..." இப்படி ஒரு விமர்சனம். மீண்டும் கைத்தட்டலும் சிரிப்பும். "கண்ட பெண்களைக் கற்பழிக்கும் காமநாதன் செட்டியாருக்கு" என 'ஒற்றைக்குரல்.' இதைத் தொடர்ந்து 'ஜே ஜே' கோஷம். இதற்குள் ஒன்றும் புரியாத சிறுவர்கள் 'திரு திரு' வென விழிக்கும் செட்டியாரைப் பணக்காரப் பைத்தியமென்றெண்ணி வீசிய சிறுசிறு கற்கள். எல்லாம் சேர்ந்து பெரிய குழப்பத்தில்—போலீசாரின் குண்டாந்தடிப் பிரயோகம் வரையில்—கொண்டு வந்து விட்டன. செட்டியாரின் முகத்தில் விளக்கெண்ணெய் வடிந்தது. "கும்பாபிஷேகமும் வேண்டாம்; எழவும் வேண்டாம்; திருப்புடா காரை" என்று கர்ஜித்தார். கார்கள் கல் மாரியோடு திரும்பின. செட்டியார் தோற்றோடுகிறார் என்ற நினைப்பில் மீண்டும் பலத்த கரகோஷம்!.....

'லெக்னம்' தவறக்கூடாது என்ற சாஸ்திரிகளின் முடிவுப் படி, செட்டியார் இல்லாமலேயே கும்பாபிஷேம் நடைபெற்றது. நிகழ்ச்சி நிரலில் கண்டவாறு யோகானந்த சுவாமிகள் உபன்யாசத் திற்காகச் செட்டியார் வீட்டில் வந்து இறங்கினர். செட்டியார் சோக உருவமாகச் சாய்ந்திருந்தார். யோகானந்த சுவாமிகள் முகத்திலும் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"செட்டியார்வாள்..என்னை அவமானப்படுத்த எத்தனை நாள் எண்ணியிருந்தீர்?" என்று ஆத்திரத்தோடு அள்ளிக் கொட்டினார் சுவாமிகள்.

"என்ன சாமீ!..புரியாமல் பேசுது!" என்ரூர் சாவதானமாகச் செட்டியார்.

"இதோ பாரும்"

யோகானந்த சுவாமிகள் விளம்பரத் தாளை எடுத்துச் செட்டியாரிடம் வீசினர்.

"திரௌபதி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேகம்" செட்டியார் படித்தார்.

"இதற்கென்ன சுவாமி!"

"முழுதும் படியும் ஐயா"

செட்டியார் படிக்க ஆரம்பித்தார்.

"ஸ்ரீஜத் போகானந்த சுவாமிகள் பாஞ்சாலி விபசாரம் என்பது பற்றி உடன் யாசிப்பார்கள்".....'' அடடா!... யோகானந்தர் போகானந்தர் ஆகியிருக்கு! பாஞ்சாலி சுயம்வரம் —பாஞ்சாலி விபச்சாரம் என்று மாறியிருக்கு. உபன்யாசிப்பார்கள் என்பது உடன் யாசிப்பார்கள் என்று இருக்கு!..... இது எந்த அயோக்கியன் செய்த வேலை?" செட்டியார் சிம்மம்போல் உறுமினர். யோகானந்த சுவாமிகளுக்கு வாய் பேசாமலேயே கையும் காலும் ஆடின. அப்போது எதையோ புதிதாகக் கண்டுபிடித்த கணக்குப்பிள்ளை "இதோ பாருங்க இதோ பாருங்க" என்று 'நோட்டீசை'க் காட்டினர்.

"இப்படிக்கு அம்பாள் ஊழியர் காமநாதன் செட்டியார்" என்ற கொட்டை எழுத்துக்கள் அவை! ராமநாதன் செட்டியார் எழுந்து அகோர நர்த்தனத்தை ஆரம்பித்து விட்டார். பல்லைப் படபடவென்று கடித்துக் கொண்டார்.

"அச்சாபீசுக்காரன் உண்மையைத்தான் போட்டிருக்கிரூன்" என்று (சொல்லவில்லை) தனக்குள் எண்ணிக்கொண்டார் கணக்குப்பிள்ளை.

"ஏய் டிரைவர் காரை எடு"— செட்டியார் உத்தரவு.

வேதாந்தி பிரசின் முன்னே கார் நின்றது. மானேஜர் ரூம், யானைகள் புகுந்த வெண்கலக் கடையாயிற்று.

"ஏய் கம்பாசிட்டர்! டேய்" என்று ரௌத்திராகாரமாக அழைத்தார் மானேஜர் வேலாயுதம் பிள்ளை.

கம்பாசிட்டர் கந்தசாமி வந்து நின்றான்.

ஓங்கி ஓர் அறை—கந்தசாமி மானேஜரால் தாக்கப்பட்டான்; அடிபட்ட கந்தசாமி அழவுமில்லை; ஆத்திரப்படவுமில்லை; சிரித்தான்.

"என்னடா சிரிக்கிறாய்...தடிப்பயலே?" மானேஜர் நோட்டீசை அவன் முகத்தில் எறிந்தார்.

"ஒன்றுமில்லை சார். ஒரிஜினலில் உள்ளபடியே அச்சுக் கோத்திருக்கிறேன்."

"ஒரிஜினலா? எதுடா ஒரிஜினல்! ஒரிஜினலில் பாஞ்சாலி விபச்சாரம் என்றுதான் போட்டிருக்கோ?"

"ஆமாம்....இதற்கு உண்மையான ஒரிஜினல் பாரதம். இந்தக் கையெழுத்து நோட்டீஸ் அல்ல!....பாரத ஒரிஜினலில், ஐவருக்கும் தேவியாகவும், ஆறுவது புருஷனுக்குக் கண்ணன் மேல் ஆசை கொண்டவளாகவும் தான் பாஞ்சாலி சித்தரிக்கப்பட்டிருக்கிறாள். அந்த லட்சணப்படிப் பாஞ்சாலி சுயம்வரத்தைவிடப் பாஞ்சாலி விபச்சாரம் என்று போடுவதுதான் எனக்குச் சரியான ஒரிஜினலாகத் தெரிந்தது.

அதுமட்டுமல்ல....இந்தச் செட்டியார், காமக் காண்டா மிருகம்! அதுதான் இவர் வாழ்க்கை வரலாற்றின் ஒரிஜினல்! அதன்படி காமநாதன் செட்டியார் என்று 'கம்போஸ்' செய்தேன்.

உபன்யாசத்திற்கு வரும் சாமியார் ஒரு போகப் பூனை. அவன் பகலில் பரம பக்தன். இரவில் பரம பாதகன். இந்த உண்மை ஒரிஜினலை நான் மாற்ற விரும்பாமல், போகானந்த சுவாமிகள் என்று போட்டேன். இது குற்றமா?"—கந்தசாமி கலகல வென்று சிரித்தான்.

"ஆ!"—மானேஜர் வாயைப் பிளந்தார்.

"பொறும். நீர்தானே சொன்னீர், ஒரிஜினலில் உள்ளபடி போடு என்று!" கந்தசாமி மீண்டும் சிரித்துக் கொண்டே வேதாந்தி பிரசை விட்டு வெளியேறினான்.

செட்டியாரும் மானேஜரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டனர்.

பனங்குலை

''உன் அப்பா-அம்மா இருக்கிறார்களா?''

''இல்லே. அம்மா இறந்து விட்டாங்க! அப்பா உயிரோடே இருக்கிறாரோ இல்லியோ எனக்குத் தெரியாது. என் தாயாரு வயத்திலே நான் இருக்கும்போதே அப்பா மேலே ஒரு அபாண்டமான கொலைக்குற்றம் சுமத்தப்பட்டு, அவரு எங்கேயோ கண் காணுத சீமைக்கு ஓடிப்போயிட்டாராம். எனக்கு மூத்தது ஆண் பிள்ளேயாம். அதுவும் ரெண்டு வயசிலே காணுமப் போயிட்டதாம். குடும்ப சுகத்து மேல் விழுந்த இடியை நினைச்சு அழுது அழுது எங்கம்மாவும் கண் மூடிட்டாங்க! இப்ப நான் அனுதை!''

''அனுதையென்று சொல்லாதே! நேற்று வரையில் அப்படி! இன்று முதல் அந்த வார்த்தைக்கே இடமில்லே; கமலம்! ஏறத்தாழ என் வாழ்வும் உன் வாழ்வும் ஒரே மாதிரிதான்! நீயாவது தாயின் அரவணைப்பிலே வளர்ந்தாய். அன்னையின் முகத்தைக் கண்டு, அவர்கள் பொழியும் அன்பை உண்டு, செழித்து வளர்ந்திருக்கிறாய். தாயின் மடியில், தந்தையின் தோளில் கிடைக்கின்ற சுகம் எப்படிப்பட்டது என்பதையே நான் அறியமாட்டேன். அவர்கள் முகத்தைக் கண்டதாகக்கூட எனக்கு ஞாபகமில்லே. அனுதை விடுதியொன்றின் கடமைக் கரங்கள்தாம் என்னை வளர்த்து ஆளாக்கிவிட்டன. இன்று இரு அனுதைகளும் கூடினோம். அனுதை என்ற அடைமொழிக்கு வேலையில்லாமல் விரட்டிவிட்டோம்!''—என்றவாறு அவன் கமலத்தைத் தழுவிக் கொண்டான்.

அவள் கண்கள் நீரைப் பொழிந்தன. எத்தனையோ நாட்களாக எதிர்பார்த்த இன்பம்—இருவருக்கும் அப்போது கிடைத்தது. கமலத்தின் தாயார் காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றபடி இட்லிக் கடை, அங்காடி வியாபாரம், இளநீர், பனை நுங்கு இப்படிப் பற்பல வியாபாரங்களைச் செய்து தன் மகளைக் காப்பாற்றி வந்தாள். அவள் இறந்து போன பிறகு, கமலம் தாயாரின் தொழில்களை மேற்கொள்ள நேரிட்டது. 'பனை நுங்கு' பருவமாதலால் கமலம் அந்த வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தாள். பனங்காய் மொத்தமாக விலை பேசி வாங்கி, அவைகளை விற்றுவரும் சிறிய லாபத்தைக் கொண்டு வயிறு கழுவிக் கொள்ள வேண்டிய நிலைமை.

அப்போதுதான் ஒருநாள் அவளிடம் 'பனை நுங்கு' வாங்க வந்தான் வேலன். ஒரு நாள் வந்தவன் மறு நாளும் வந்தான். அடிக்கடி வந்தான். அவன் வந்து 'பனை நுங்கு' வாங்கா விட்டால் அவளுக்கும் அன்று வியாபாரம் நடந்ததாகவே தெரியாது. வியாபாரத்தில் பெரிய நஷ்டம் வந்தது போலவே முகத்தை வைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்புவாள். ஒரு நாள் அவன் அவளைக் கேட்டான்,

"இந்த வியாபாரத்தில் என்ன லாபம் வரும்?" என்று.

அவள் விவரம் சொன்னாள். "நாளை முதல் நானே பனங் குலைகள் கொண்டு வருகிறேன். வெட்டி வியாபாரம் செய். நிறைய லாபம் கிடைக்கும்" என்றான். "அதெல்லாம் வேண் டாம்" என்று தலையசைத்து விட்டு, வீட்டுக்குத் திரும்பிச் சென்றாள் கமலம்.

மறுநாள், நாலைந்து பனங் குலைகளைத் தூக்கிக் கொண்டு வேலன் வந்தான். "ஏது இவைகள்?" என்று கமலம் கேட் டாள். "நானே பனை மரத்தில் ஏறி வெட்டிக் கொண்டு வந்தேன்" என்று பூரிப்போடு பதில் கூறி அவளது முகத்தையே நோக்கிக்கொண்டு நின்றான். உங்களுக்குச் சொந்தமான மரமா?" என்று அவள் கேட்டாள். "புறம்போக்கிலே இருக்கிற மரம் யாருக்குச் சொந்தம்? எல்லோருக்கும் சொந்தந்தானே!" என்று அவன் கூறி முடிப்பதற்குள், "அடேய்! திருட்டுப்பயலே! யாருடைய மரத்திலேடா திருடுகிறாய்? என்னை யாருன்னு நினைச்சே?" என்றவாறு ஒரு முரட்டு மனிதன் வேலனின் தலையில் பெரிய தடியொன்றால் தாக்கினான்.

வேலன் சுருண்டு வீழ்ந்தான். கமலம் வேலனைக் கவனிக்க ஓடினாள். முரடன் அங்கு கிடந்த பனங்குலைகளையெல்லாம் தூக்கிக் கொண்டு, "குட்டி ஆசைக்குப் பயல் பனங்காய் திருடுகிறானே? அதுவும் என்கிட்ட?" என்று கேலி செய்தவாறு அதை விட்டு நடந்தான். நடந்தவன் நின்றான். கமலத்தின் பரபரப்பைக் கவனித்தான். அங்குமிங்கும் ஓடி அவள் வேலனின் முகத்தில் தண்ணீர் தெளிப்பதையும், முன்தானையால் விசிறுவதையும் கண்டான். முரடன் முகத்தில் சபலக் குறி தலை காட்டியது. கமலத்திடம் திரும்பி வந்தான்.

"இந்தா குட்டி! பனங்காய் வேணும்னு, என்னைக் கேட்டா தரமாட்டேன்? இந்த மாதிரிப் பயலுகளை நம்பலாமா? இந்தா எல்லாத்தியும் வச்சுக்க! உனக்கு ஏன் இள வயசிலே இந்த வியாபாரம்! என்னைக் கேட்டிருந்தா நம்ப நாடகக் கம்பெனியிலே அயர்ன் ஸ்த்ரீ பார்ட்டா ஆக்கியிருப்பேனே..." என்றவாறு முரடன் பல் இளித்தான்.

"சரிதான் போய்யா, வேலையைப் பார்த்துகிட்டு!" என்றவாறு வேலனைக் கவனிப்பதில் முழுமூச்சாக ஈடுபட்டாள் கமலம். முரடன் தலையை அசைத்தவாறு ஏதோ முடிவுடன் அதை விட்டகன்றான். முருகானந்த மோகனகான சபாவின் உரிமையாளர் மோதக விநாயகம்பிள்ளைதான் அந்த முரட்டு மனிதன் என்பது கமலத்துக்குத் தெரியாமல் இல்லை. அவர் ஊர் சொத்தைத் திருடி வாயில் போட்டுக் கொள்ளும் பெருச்சாளி என்பதும் அவளுக்குத் தெரியும். புறம்போக்கு நிலத்தில் உள்ள பனை மரங்களுக்கு அவரே பாத்யதை கொண்டாடி வருகிறார் என்பது மட்டுமே அவளுக்குத் தெரியும். விரைவில் கமலத்துக்கும் தானே பாத்யதை கொண்டாடப் போகிறார் என்பது யாருக்கும் தெரியாது.

அடிபட்டு வீழ்ந்த வேலனுக்கு மயக்கம் தெளிந்ததும் அவனைத் தன் குடிசைக்கு அழைத்துச் சென்றாள் கமலம். தேவையான சிகிச்சைகளுக்குப் பிறகு, அவன் அவளுக்கு நன்றி தெரிவித்துவிட்டுப் புறப்படும்போது கமலம் விடையளிக்க மறுத்து விட்டாள். அவனும் காரணம் புரிந்து கொண்டான். இருவரும் தங்கள் பிறப்பு வளர்ப்புகளைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். இருவருமே அனைதைகளாய்ச் சந்தித்தார்கள். இருவரையும் விட்டு அனைதைப் பட்டம் ஓடிவிட்டது. ஆரத் தழுவினர்; ஆனந்தங் கொண்டனர். அன்றைய இரவு இன்ப கீதம் பாடி, மெல்ல மெல்ல

நகர்ந்தது. அவர்கள் தடுத்தும் கேளாமல் சேவல் கூவிற்று. சேவல் கூவா விட்டாலும் நான் உதித்தே தீருவேன் என்றது கதிர். வாழ்விலே புதிய களிப்பு! உற்சாகம்! தனியொரு பெண்ணின் பெரு மூச்சுக்களை எதிரொலித்துக் கொண்டிருந்த அந்தக் குடிசை, காதல் பாடல்களை எதிரொலித்து மகிழ்ந்தது.

ஒரு நாளிரவு—பல நாட்களுக்குப் பிறகு! நடுநிசி. காதலர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர். கதவு தட்டப்பட்டது. கமலம் சென்று திறந்தாள். வாட்ட சாட்டமாக வளர்ந்து, ஆஜல் வயதெறிக் காணப்படும் வெண்தாடிக் கிழவன் ஒருவன் எதிரே நின்றான்.

"யார் நீங்கள்?" கமலம் கேட்டாள். அதற்குள் வேலனும் எழுந்து வந்தான்.

"என்னை யாரென்று கேட்கிறாய்? மகளே! கமலம்! என்னைத் தெரியவில்லையா உனக்கு? தெரியாதுதான்; இந்தப் பாவியைத் தெரியாதுதான்! வயிறும் வாயுமாக உன் தாய் மீனாட்சியைத் தனியே விட்டுவிட்டு ஓடிய இந்தப் படுபாதகனை உனக்குத் தெரியாதுதான்! அம்மா மகளே! நான்தானம்மா உன் அப்பன் அய்யாச்சாமி!"

"ஆ! அப்பா! என் அப்பா!..." கமலம் கதறினாள். கிழவரைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதாள்.

"இதுதான் உன் அண்ணன் வேலனா?—வேலா என் ஆசை மகனே! அருமந்தச் செல்வனே! உன்னை இரண்டு வயதிலேயே நானும் என் மீனாட்சியும் இழந்துவிட்டு வடித்த கண்ணீர் கொஞ்சமா? அப்பா தம்பீ! இதுவரை எப்படியடா வாழ்ந்தாய்! உன் தங்கை கமலத்தை எப்போதடா பார்த்தாய்? தலைமறைவாகப் போலீசுக்கு பயந்து திரிந்து கொண்டிருந்த நான் நேற்றுத் தான் வந்து, நீ வளர்ந்த அனுதை விடுதியிலே விசாரித்தேன். அவர்கள் விவரம் எல்லாம் சொன்னார்கள். உன்னைப் பறி கொடுத்ததாக நினைத்துக்கொண்டிருந்தேன். பிறகு என் நண்பன் ஒருவன் சொன்னான்; நீ அனுதை விடுதியில் வளர்வதாக! அங்கு போனேன். நீ உயிரோடு இருப்பதையும், வளமாக வளர்ந்திருப்பதையும் அறிக்து கொண்டேன். குழந்தைப் பருவத்தில் உன்னை யாரடா திருடியது? ஞாபகமிருக்கிறதா மகனே! திருடியவர்கள் என் விரோதிகளாம். அவர்கள் போலீசுக்குப் பயந்து உன்னை நடுப்பாதையிலே போட்டுவிட்டுப் போய்விட்டார்களாம். அதன்

பிறகே, அனைத இல்லம் உன்னை எடுத்து வளர்த்ததாம். ஆகா... என் மகன் எவ்வளவு பெரியவனுகி விட்டான்—தம்பீ ! நீ எப்படி உன் தங்கையைத்:தேடிப் பிடித்து இங்கு வந்தாய் ?''

கிழவர் பேசிக்கொண்டேயிருந்தார் ; பூரிப்பு தாங்காமல் !— வேலன், '' அய்யோ! அப்பா!'' என்று கத்தினன். அவ்வளவுதான், எங்கேயோ ஓட ஆரம்பித்தான். ஓடினன் ; ஓடினன்—இருளில் ஓடி மறைந்தான். கமலம் பிரக்ஞையற்றுக் கீழே விழுந்தாள். '' கமலம் ! கமலம் !!'' என்று கிழவர் கூப்பிட்டார். அவளைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டார். இறுக அணைத்துக் கொண்டார். அவள் கன்னங்களில் மாறிமாறி முத்தமிட்டார். இதழ்களை இதழ்களால் பற்றியிழுத்தார். ஏதோ ஓர் உணர்வு கிழவருக்கு ! கமலத்தைக் கீழே படுக்க வைத்தார். கால்களைத் தொட்டுப் பார்த்தார். ஜில்லிட்டு விட்டது. கமலம், போய் விட்டாள். கிழவர், விரக்தியுடன் எழுந்தார். அவர் மனம் பேசிற்று.

'' சே ! நினைத்தது ஒன்று, நடந்தது ஒன்று ! அண்ணன் தங்கையென்று அபாண்டம் சுமத்தி இருவரையும் பிரித்து விட்டால் அவன் ஓடிவிடுவான்—இவளைத் தட்டிக் கொண்டு போகலாம் எனத்திட்டமிட்டேன். வேஷம் பலித்தது ; ஆனல் வெள்ளாட்டுக் குட்டி கிட்டவில்லையே !''

கிழவர் பெருமூச்சுடன் தாடி மீசைகளைக் களைந்தார். முரட்டு மோதகவிநாயகம் பிள்ளையாக அந்தக் குடிசையை விட்டு வெளி யேறினர். அவர் உரிமை கொண்டாடும் புறம் போக்கு நிலத்தின் வழியே வீடு திரும்பினர். ஒரு மரத்திலிருந்து ஏதோ தொப் பென்று வீழ்ந்தது. பனங்குலையை யாரோ வெட்டுகிறார்கள் என்று, '' யாரடா திருட்டுப்பயல் ?'' என்று கர்ச்சித்தவாறு மரத்தடிக்குப் போனர். மரத்திலிருந்து விழுந்தது ; பனங்குல யல்ல !—வீழ்ந்தவன் வேலன் ! தீக்குச்சியைக் கிழித்து உற்றுப் பார்த்தார். தலை சிதறிவிட்டது, குலை சிதறுவதுபோல ! குடும்பத்தைச் சிதற அடித்த அந்தக்குணுளர் எந்தவிதச்சலனமும் உள்ளத்தில் மோதாமல் சாதாரணமாக வீட்டுக்குப்போய் நிம்மதி யாகத் தூங்க ஆரம்பித்தார்.

இப்படியும் பல பிறவிகள் உண்டு உலகத்தில் !

செத்தவள் கதை

" முன்னையிட்ட தீ முப்புரத்திலே !
பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே !
அன்னையிட்ட தீ அணைந்த அடுப்பிலே !
யானுமிட்ட தீ யானைமார்க் சிகரெட்டிலே !
மூள்க மூள்கவே !"

யாரப்பா 'நவீன பட்டினத்தார்' என்று கேட்கத் தூண்டும்.

பட்டினத்தாருமல்ல.....கிட்டினத்தாருமல்ல.....எல்லப்பன் தயாரித்த வேடிக்கை விருத்தம்.

சிகரெட்டில் புகை கிளம்புவதற்குள் செல்லாயி கலகலவெனச் சிரித்துவிட்டாள். முதல் நாள் இரவுதான் அவள் பட்டினத்தார் படம் பார்த்து விட்டு வந்தாள்.

" என்னங்க ! என்னவோ பேசுறீங்களே. ஓட்டப்பம் வூட்டைச் சுடும் அப்படின்னு ஆப்பத்தை வீசி எறிந்தாரு..... உடனே வீடு எரிய ஆரம்பிச்சுட்டது. "

" எரியும்.....எரியும்.....நாடகத்தைவிடச் சினிமாவிலே நல்லா எரியும்."

" பட்டினத்தாரு அப்படி எரிக்காமலா.....படம் எடுத்துக் காட்டுறுங்க ? "

" பாஸ்பரசுன்னு ஒரு சாமான் இருக்கு. அதை ஆப்பத் திலே வச்சு வீசியிருப்பாரு. வீடு பஸ்பமாகி இருக்கும்."

"சரி! அதுதான் ஆப்பத்திலே வச்சு எரிச்சாரு. சுடுகாட்டிலே தாயார்மேலே வாழை மட்டையை அடுக்கி...ஒரு பாட்டுப் பாடி எரிச்சாரே...அது எப்படி?"

"எல்லாம் அப்படித்தான்! பேசாமல் கிட. நீ படம் பார்க்கப்போறதும், நான் உன்கிட்டே அடிபட்டு முழிக்கிறதும்... இதுவே பெருந் தொல்லையாப் போச்சு!"

"நான் இனிமேல் படம் பார்க்கப்போறது இல்லேன்னு வைராக்கியம் வச்சுட்டேனே."

"அதென்ன கூத்து? அப்பன்னு மானம் கவிழ்ந்து மழையா ஊத்துமே!"

"இந்த ஆம்பளைகள் இருக்கிறவரையிலும்...பொம்பளைங்க வெளியே கிளம்ப லாயக்கு இருக்கா?"

"சரி சரி!.....ஆம்பளையெல்லாம் சாகச் சொல்றீயாக்கும்."

"பொம்பளைங்க வெளியிலே கிளம்புவதாயிருந்தால் பெட்டியிலே வச்சிப் பூட்டிக்கொண்டு போகணும். இல்லேன்னு...ஆம்பளைங்க அத்தனை பேரும் கண்ணை இறுகக் கட்டிக்கிட்டு வெளியிலே புறப்படணும்."

"செல்லாயி!...செல்லாயி!...என்னமோ செல்லாத சட்டமெல்லாம் போடுறியே!.....என்னு நடந்துச்சு? விவரமாகச் சொல்லு."

"என்னுத்த நடக்க! தெருவிலே நடக்கமுடியலே! வாசலில் வந்து நிற்க வகையில்லே! சினிமாவுக்குப் போனுல் அங்கே சிங்காரிச்சுட்டு நடை போடறான்"

"யாரு?.....யாரு?"

"அவன்தான் கோடி வீட்டுக் கோவிந்தன். கொட்டாப்புளித் தடியன் மாதிரி...ஒரு மீசை முளைச்சவன் பெஞ்சாதிங்கிறதையும் மறந்துட்டு, என்னைப் பார்த்துக் கொட்டாவி விடுகிறான்."

"உம்!...அப்புறம்."

"நீங்க—இப்ப மீசையிலே கை போடுறீங்க பாருங்க—அது மாதிரி—அவனும் மீசையை முறுக்கிக் காட்டுகிறான். புன்சிரிப்பு வழங்குகிறான். சிகரெட்டும் பத்தவைக்கிறான். நான் போற இடமெல்லாம் வருகிறான்."

"செல்லாயி! இது சகஜம். கல்யாணமாகாத பயல்! அதிலும் நீ கறுப்பாயிருந்தாலும் கண்ணைப் பறிக்குறுப்பலே இருக்குறே! சதா உன்னைப் பார்த்துக்கிட்டே இருக்கிற எனக்கே...உன்னைப் பார்க்கும்போது ஒரு புது உயிரு வராப்புலே இருக்குது!"

"சரி...சரி...நெறுத்துங்க!...இதான் வேலை."

செல்லாயி சடக்கென எழுந்து அடுக்களைக்குள் நுழைந்தாள். பேச்சுச் சுவையில் அணைந்துபோயிருந்த 'சிகரெட்'டை மீண்டும் கொளுத்திக்கொண்டு எல்லப்பனும் வெளியே கிளம்பினான்.

"என்ன உடம்புடா? என்ன உடம்புடா!..."

"அவ...சிரிக்கும்போது பாத்தியா...பால் வழியிற மாதிரி!"

"யாரையாவது மதிச்சுப் பேசுறுளா?...அச்சம், நாச்சம், கூச்சம் ஏதாவது இருக்கா?"

"பட்டாளத்துக்காரன் மாதிரியல்லவா நடக்கிறுள்"

"நம்ப...வீரையா செட்டியார், இந்தப் பக்கம் குடி வந்திருக்கிற விஷயம் இப்பத்தான் புரியுது."

"அது என்னடா?"

"அவளை எப்படியாவது மயக்கி..."

"நடக்காது தம்பி நடக்காது"

"செட்டியார் பணக்காரன் பாரு; பணத்தாசை காட்டி..."

"பணமாவது கிணமாவது, பொம்பளைக்குப் புருஷன் பிடிக்கலன்னுத்தான்...அந்த வலையெல்லாம் நடக்கும். குபேரனே யிருந்தாலும் மனசுக்குப் பிடிக்காதவனே யிருந்தால்...பொம்பளைங்க மனசும் மாறிடும்."

"செல்லாயி புருஷன் அசல் அர்ஜுனராஜன் மாதிரி இருக்கான். அவனைப் பிடிக்காமல் இந்தக் கோணங்கிச் செட்டியின் பணத்துக்கா...?"

"எல்லப்பன் மாத்திரம் அதிஷ்டக்காரன்டா! ஆயிரம் பத்தாயிரம் செலவழிச்சு கல்யாணம் பண்றவனுக் கெல்லாம் கண்ணு சொத்தையும், காது ஓட்டையுமாகப் பெண்டாட்டி வாய்க்குது. இவனுக்குப் பாரு, கடைஞ்சு எடுத்த பம்பரம் போலப் பெண்ணு அமைஞ்சுருக்கு."

"ஜோடி சரியான பொருத்தம். நீலப்புரு மாதிரி அவளும்... அவளுக்கேற்ற அவனும்."

எல்லப்பன்—செல்லாயி தம்பதிகளைப் பற்றி "வாலிபர் மாநாட்டு விமர்சனங்கள்" மேலே தீட்டியவை.

இரவு உணவு முடிந்தது. செல்லாயிக்குத் தூக்கம் வரவில்லை. அன்று மாலை கட்டாயம் திரும்புவதாகச் சொல்லிவிட்டு வெளியூர் சென்ற எல்லப்பன் ஏனோ வரவில்லை. நாலைந்து தடவை கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்து வழி பார்த்தாள். தெருவில் நடமாடுகிற கிழவர்களின் உருவங்கள்கூடச் செல்லாயிக்குத் தெளிவு பிறக்கும்வரையில்...எல்லப்பனுகத் தோன்றி ஏமாற்றிக் கொண்டிருந்தன. கோபுரத்துச் சிலைபோல் கூரை வீட்டின் முகப்பைப் பிடித்துக் கொண்டு நிலாவின் வெள்ளிச் சிரிப்பில் கண்களை நீட்டுவதும்...பிறகு அவைகளை வாங்கி வழியில் வைப்பதுமாக நின்றுள்...நின்றுள்...நின்றுள்...காலொடிய நின்றுள்! நிலவொளி பட்டு ஒரு நிழலாடிற்று. அது எல்லப்பனே தான் என்ற மகிழ்ச்சி போலும்...தன் வைரச் சிரிப்பால் நிலாவைக் கொன்று விட்டுத் துள்ளியோடி வீட்டிற் புகுந்தாள்.

ஆனால் தெருவழியாக, அவள் வீட்டில் போட்ட விழிகளை எடுக்காமல் கோவிந்தன் போய்க்கொண்டிருந்தான்.

"கோடி வீட்டுக் கோவிந்தன்" செல்லாயியினுடைய இதயத்தில் இந்த ஒலி சிதறி ஒய்ந்தது. ஏமாற்றத்தின் பிரதிபலிப்பாகச் செல்லாயி வீட்டுக் கதவு, சப்தத்தோடு சாத்திக் கொண்டது.

கல் பட்டு விழும் கனிபோல அவள் தரையில் படுத்துக் கொண்டாள். அவள் படுத்த வேகத்தில் விரிக்காதிருந்த படுக்கைப் பாயைச் சுரண்டி விளையாடிய பூனைக்குட்டி பாய்ந்து பறந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் செல்லாயியின் மூச்சில் கனம் ஏற்பட்டது; அவள் அயர்ந்து தூங்கி விட்டாள்.

கீற்று இடுக்குகளின் வழியாக உள்ளே எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த நிலவு சாயச் சாயக் கூரையின் ஓட்டையால் வார்க்கப்பட்ட ஓர் ஒளிக்கம்பி தெருக்கதவின் தாழ்ப்பாளுக்கு வெளிச்ச வட்டம் போட்டது. தாழ்ப்பாளின் அடிப்புறமாகத் திடீரென்று முளைத்ததுபோல, ஒரு சிறு இரும்புக் கம்பி ஆடிக்

கொண்டிருந்தது. பல கோணங்களிலும் அந்தக் கம்பி ஆடிய பிறகு தாழ்ப்பாளை மேலே தூக்கி எதிர்ப் புறமாகச் சுற்றித் தள்ளிவிட்டுத் தானிருந்த துவாரத்தின் வழியாகவே பின்வாங்கி மறைந்தது.

கதவு சந்தடியின்றி மெதுவாகத் திறக்கப்பட்டது. அவன் உள்ளே வந்தான். ஆம்...கோடி வீட்டுக் கோவிந்தன்.

அவன் கையிலே ஆரஞ்சுப்பழத் தோல்கள், அரை குறையாகச் சாப்பிட்டிருந்த அல்வா, ஒரு தாளில் சில காராபூந்தித் துண்டுகள்! அவைகளை ஒருமுறை பார்த்துக்கொண்டான்.

செல்லாயி தன்னைக் கண்டு அலறிவிட்டால் ஊரார் ஓடி வருவார்கள். உயிரை எடுத்து விடுவார்கள். அந்தப் பயங்கரத்திலிருந்து தப்ப, தான்கொண்டு வந்த சாமான்கள் தக்க அரண்கள்! வருகிறவர்களைப் பார்த்து "வாருமையா வாரும்! இவள் பத்தினிபோல் பாசாங்கு ஆடுகிறாள். இந்தப் பழங்களை நாங்களிருவருமே தின்றோம். அல்வாவை நான்தான் அவளுக்கு ஊட்டினேன். இந்தக் காராபூந்தியில் பாதியை அவள் என் வாயில் கொட்டினாள். யார்மேல் குற்றம்? ஏதோ...வேறு விஷயத்திற்காக ஏற்பட்ட சச்சரவால் அவள் கத்தினாள் என்பதற்காக நீங்கள் அலறி அடித்து ஓடி வருகிறீர்களே! பேசாமல் போய்த் தூங்குங்கள்" என்று துரத்தி அடித்துவிடலாம். அல்லது இவ்வளவு பெரிய முன்னேற்பாட்டோடு வந்திருக்கிறேன் என்று செல்லாயியிடம் கூறிப் பழத்தோலையும் பாதாம் அல்வாவில் பாதியையும் காட்டினால் அவளும் பயப்படுவாள். நம் காரியமும் பழுதில்லாமலே முடியும்.

கோவிந்தனது உதடுகளின் துடிப்பிலே இத்தனை கொடுமையான எண்ணங்களும் கோரத் தாண்டவமாடின.

செல்லாயி தூங்கிக்கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தைப் பார்த்தபடியே கோவிந்தன் பக்கத்தில் உட்கார்ந்தான். கைகளை மெதுவாக எடுத்து அவள் கன்னங்களைக் கிள்ளினான். அயர்ந்த உறக்கம் அவளுக்கு. கன்னங்களைத் தடவிக்கொண்டு வேறு பக்கம் திரும்பிப் படுத்தாள். கோவிந்தன் துடித்தான். உதடுகளைக் கடித்துக் கொண்டான்.

"செல்லாயி! செல்லாயி!" வறண்ட நாக்கிலிருந்து கிளம்பிய உளறல் மொழிகள்! வார்த்தையின் ஒவ்வொரு எழுத்தும்

நடுங்கின. அவளுடைய நீண்ட கூந்தல்; அதைக் கோதினன்! மீண்டும் கன்னத்தில் கிள்ளினன். செல்லாயி திடுக்கிட்டெழுந்தாள்.

"ஆங்!" இந்தக் கூச்சலில் எவ்வளவு ஆவேசமிருந்தது என்பதைக் கோவிந்தனின் கன்னத்தில் விழுந்த அடி சொல்லிற்று. செல்லாயியின் வாய் மூடப்பட்டது.

ஓர் ஊமைப் போர்க்களம் செல்லாயியின் குடிசையில்! கடைசியில் செல்லாயி வெற்றி பெறவில்லை. தோற்றுவிட்டாள். கோவிந்தனின் கன்னங்களில்—கண் இமைகளில்—கழுத்தின் ஓரத்தில்—கைகளில்—இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

செல்லாயியின் வாய் இப்போது கட்டுப்பட்டிருக்கவில்லை. ஆனாலும் ஊமையாக இருந்தாள்.

"இந்தப் பாரு!...நடந்தது நடந்துட்டுது; உன் புருஷன் வந்தா விளம்பரம் பண்ணி உன் பேரைக் கெடுத்துக்காதே! அவ்வளவுதான் நான் சொல்லுவேன்."

செல்லாயியின் கண்களில் அரும்பிக்கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளைக் கூடக் கவனிக்காமல் கோவிந்தன் கிளம்பி விட்டான்.

"முன்னை யிட்ட தீ முப்புரத்திலே!

பின்னையிட்ட தீ தென்னிலங்கையிலே!!

என்னுடைய மனைவியிட்ட தீ மங்காத மானத்திலே!!!"

என்று எல்லப்பன் பாடுவதுபோல் அந்த வீட்டுக் கூரையின் ஓலைகள் ஓலமிட்டசைந்தன.

காலையில் எல்லப்பன் வந்தான். அதற்கு முன்பாகவே அவள், வீட்டில் இறைந்து கிடந்த பழத்தோல்களைப் பொறுக்கி எறிந்து விட்டாள்.

"ஏன் ஒரு மாதிரி இருக்கிறாய்?"

"ஒன்றுமில்லை; தலை வலிக்கிறது."

"இந்தா...இந்தத் தைலத்தைப் போட்டுக்கோ!"

செல்லாயி விஷயத்தை மறைத்தே விட்டாள் கணவனுக்கு. "அந்த இரவு" பற்றித் தெரிந்தால் களங்கமடைந்த தன்னேடு குடும்பம் நடத்துவானே என்ற சந்தேகம். நாட்கள் ஓடின.

கோவிந்தன் செல்லாயி வீட்டுப் பக்கம் ஒரு நாளைக்கு ஆயிரம் தடவை நடந்தான், பலப்பல அலங்காரங்களில்; பலப்பல உடைகளில்! ஒரு நாள் செல்லாயி வாயிற்படியருகே நின்று கொண்டிருந்தாள். கோவிந்தன் தெருவழியே நடந்து கொண்டிருந்தான். செல்லாயியின் காலடியில் ஒரு 'தாள் முடிச்சு' வந்து விழுந்தது. எல்லப்பன் வருவதற்குள் அதிலிருந்த 'ஜிலேபி'யைத் தின்றுவிட்டு இலையையும் தாளையும் கொல்லையில் எறிந்து விட்டாள். பின் ஒருநாள் தெருவில் சென்ற கோவிந்தன் சிரித்தான். செல்லாயியும் சிரித்தாள். மற்றொரு நாள் ஒரு பொட்டலம் அவள் முன் விழுந்தது. அதை எடுத்தாள். அதில் பத்து வெள்ளி ரூபாய்கள். பத்திரமாகப் பெட்டியில் வைத்துக்கொண்டாள்.

அன்று எல்லப்பன் வெளியூர் போயிருந்தான். அன்று நிலா இல்லை; அமாவாசை.

நள்ளிரவு முடிந்து விட்டது. உதயசூரியனை எதிர் நோக்கி உலகம் உருண்டபடி இருந்தது. எல்லப்பன் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தான். செல்லாயியைச் சந்திக்கவேண்டுமென்ற ஆவல், அவன் ஒவ்வொரு அசைவிலும் நர்த்தனமாடிற்று.

கதவு தட்டப்பட்டது. முதலில் மெதுவாக—பிறகு வேகமாக—பிறகு உரத்த சப்தத்தில்! கதவு திறக்கப்படவில்லை.

"பாவம் அசந்து தூங்குகிறாள்—பகலெல்லாம் வேலை—என்ன செய்வாள்? இந்த நேரந்தவிர அவள் வர்க்கத்திற்கு வேறு ஒய்வேது?" இதை எண்ணிக்கொண்டே வீட்டுக் கூரையைச் சுற்றிப் பார்த்து விட்டுக் கடைசியில் ஒரு கம்பியை எடுத்தான். கதவின் சிறு துவாரத்தில் கம்பி நுழைந்தது; உள் தாழ்ப்பாள் சுற்றிச் சுழன்று திறந்து கொண்டது—முன்பு கோவிந்தன் திறந்தது போல!

கதவைத் தள்ளிக்கொண்டு எல்லப்பன் உள்ளே சென்றான். விளக்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. "செல்லாயி" என்று அன்பொழுக அழைத்துக்கொண்டு வந்து படுக்கையில் அவளைத் தொட்டான்.

"யார் அது?"

வாரிச் சுருட்டிக் கொண்டு செல்லாயி எழுந்தாள். எல்லப்பன் பேசவே இல்லை; கோவிந்தன் கதவு வரையில் நடந்தான். பிறகு பறந்து விட்டான்.

"மன்னிச்சுடுங்க" செல்லாயி அழுதாள்.

"அழாதே! ஏன் அழுகிறுய். உலகத்திலே அழுவதற்கு அர்த்தமே தெரியலியே. விபசாரியும் அழுகிறுள். பத்தினியும் அழுகிறுள். நல்லவனும் அழுகிறுன். கெட்டவனும் அழுகிறுன். பணக்காரனும் அழுகிறுன். பாட்டாளியும் அழுகிறுன்."

"நான் அழுது".....செல்லாயி முடிக்கவில்லை.

"தெரியும்; குற்றம் செய்து விட்டோமே என்று அழுவில்லை நீ! செய்த குற்றம் தெரிஞ்சு விட்டதென்னு அழுகிறுய், செல்லாயி! உலகத்திலே விபசாரம் நடப்பதற்கு என்னென்னவோ காரணங்கள் சொல்றுங்களே! சமுதாயக் கோளாறுன்னு சங்க நாதம் செய்றுங்களே! இப்ப உன் விஷயத்துக்கு என்ன சொல்லப்போறுங்க! விதவைங்க—இளமையிலே அறுத்துப் போன பெண்ணுங்க—கிழவனுக்கு வாழ்க்கைப்பட்ட கன்னிங்க—இவுங்க எல்லாரோடு—உன்னைப்போன்ற பேராசைப் பேய் களையும் சேர்த்துக் கொள்ளவேணும். நீ ஏன் இந்த விபசார வேலையில் ஈடுபட்டாய் சொல்லு; ஏன் இந்த துரோகம் செய் தாய்? சொல்லு ஏதாச்சும் ஒரு காரணம்."

"என் தலைவிதிதான்!"

"தலைவிதி! தப்பித்துக் கொள்ளுவதற்குச் சரியான தந்திரம்! யாராவது பக்தர் கிட்டே போய்ச் சொல்லு."

"என் புத்தி கெட்டதனம்!"

"உம்! ஆசைப்பட்ட புருஷன் கிடைக்காவிட்டால் பொம்பளைங்க வாழ்க்கை பொசுங்கிவிடும் என்பாங்க. வாலிபனு இல்லாட்டா வாழ்க்கை வதங்கிடும் என்பாங்க. எல்லாம் உன் மனசுப்படி இருந்தும் நீ கெட்டதற்கு காரணம் என்ன சொல் வாங்களோ தெரியலியே! மரத்துக்கு மரம் தாவுகிற குரங்கு என்பாங்களா?"

"செல்லாயி!...உன்னைப் பற்றி நான் எவ்வளவு மேன்மையா நினைச்சு இருந்தேன். வெளியூருக்குப் போனு வீட்டைப் பத்தியே நினைப்பு. வேற பெண்களைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன். என் நெஞ்சிலே உன்னைப் 'போட்டோ' படமாக்கி

வச்சிருந்தேன்! எல்லாத்தையும் ஒரே அடியில் உடைச்சு எறிஞ்சுட்டாயே!''

''செல்லாயி! நீ சாக்கடையில் மிதக்கிற புழுவை விடக் கேவலமானவள். ஆடம்பரத்திலே மயங்கி, அறிவைக் கொலை செய்துகொண்ட அற்பமான விட்டில் பூச்சி நீ! ஒரு விஷயம் தெரிஞ்சுகிட்டேன். பொம்பளைகள் குரங்கு மனசாலும் கெடுவ துண்டு. எல்லாத்துக்கும் சமுதாயம் பொறுப்பாக முடியவே முடியாது.''

''பேச்சால் என்னைக் குத்திக் குடைய வேண்டாம்; வேணும்னு என்னைக் கொன்னு போடுங்க.''

''கொல்லத்தான் போகிறேன். நாளைக்குக் கோவிந்தன் முகத்திலே ஒரு 'கோசா' வாக முழிக்கமாட்டேன். ஒரு கொலை காரணுகத்தான் தரிசனம் கொடுப்பேன். செல்லாயி நீ செத்தால் நானும் சாவேன் என்று எத்தனையோ தடவை, இந்தப் படுக்கையி லேயே சொல்லியிருக்கேன். இப்ப உன்னைச் சாக அடித்துவிட்டு நான் வாழப்போகிறேன்.''

பேச்சு முடிவதற்குள் எல்லப்பன் பாய்ந்தான்.

''ஆ அய்யோ.....ஹ்ற.....ஹ்ற''

செல்லாயி சுருண்டு கீழே விழுந்தாள். அவள் தொண்டைக் குழியில் அழுத்தியிருந்த பெருவிரலை எல்லப்பன் எடுத்தான்.

செல்லாயியின் சவம் சுடலையில்! எல்லப்பன் கையால் தீ மூட்டப்பட்டது.

''தங்கமான பெண். தணலாகப் போகிறாள்''

தெருவின்ஒப்பாரி.

''தங்கமல்ல. மெருகு பூசிய மட்டப் பித்தளை''

எல்லப்பனின் இதய இடிகள்!

செல்லாயி எரிந்தாள்.

'' முன்னையிட்டதீ முப்புரத்திலே!

பின்னையிட்டதீ தென்னிலங்கையிலே!

என்மனைவியிட்ட தீ மங்காத மானத்திலே!

யானுமிட்ட தீ விபசாரக் கோட்டையில் மூள்க மூள்கவே!''

எல்லப்பன் பாடவில்லை.

'செத்தவள் கதை'க்கு அவன் மனத்தில் அலை மோதிய 'மங்களம்' இது.

பிரேத விசாரணை

டாக்டர் பிச்சுமூர்த்தி நல்வழிப் புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே, 'வில்ஸ்' சிகரெட்டின் புகையை அறையெங்கும் பரப்பிக்கொண்டிருந்தார். கம்பவுண்டர் கந்தசாமி நாயுடு மருந்து பாட்டில்களை ஒழுங்காக அடுக்கி வைத்து பீரோவைப் பூட்டினர். தன் நீலக் கோட்டை ஒரு முறை சரி பார்த்துவிட்டு 'ஆபரேஷன் ரூம்' பக்கம் சென்று அங்கு எரிந்து கொண்டிருந்த 'ஐநூறு பவர்' மின்சார விளக்கை நிறுத்திவிட்டு ஒரு கணப்புக் கனத்தபடி பொடி டப்பாவைத் தட்டினர். கெடிகாரம் 'டாண் டாண்' என்று அடித்தது; மணி ஒன்பது. 'சீக்கிரம் பூட்டி விட்டு கிளம்புங் காணும்' என்று சொல்லிக்கொண்டே சிகரெட்டை எறிந்து விட்டுப் புத்தகத்தையும் மேஜை மேல் போட்டபடி டாக்டர் எழுந்தார்.

தெருப் பக்கமாகத் தம்பட்ட ஓலியும் அதைத் தொடர்ந்து ஓர் ஆண் குரலும் கிளம்பின. "நாளைக் காலை எட்டு மணிக்கு வினதீர்த்த ஸ்வாமி கோயிலில் அரிஜன ஆலயப் பிரவேசம் அதி விமரிசையாக நடைபெறும். பக்தர்கள் வருக..வருக" ஆலயப் பிரவேச விளம்பரமது. "என்ன கம்பவுண்டர்! ஊர் ரகளைப் படுதே—உமக்கெல்லாம் சம்மதந்தானே?" டாக்டர் இந்தக் கேள்வி யைக் கேட்டுவிட்டு நாயுடுவின் முகத்தை ஆவலோடு நோக்கினர்.

"நமக்கென்னுங்க....தின விதைச்சவுங்க....தின அறுப் பாங்க....உம்....உலகம் பெரளப் போகிறது போங்க" என்று ஆயாசமாகக் கூறியபடி சாவிக் கொத்தை எடுத்து விரலில்

சுழற்றிக்கொண்டே நகர ஆரம்பித்தார் நாயுடுகாரு. 'ஆபீஸ் ரூம்' டையும் அணைத்து விட்டு டாக்டர் பிச்சுமூர்த்தி வெளியே வந்தார்.

இருவரும் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். அந்த இருளில், வாயிற் பக்கத்து விளக்கின் ஒளிமட்டும் மங்கலாகத் தெரிந்தது. ஆஸ்பத்திரியின் வாசற்படியண்டை ஒரு உருவம் ஆடியசைந்து வந்துகொண்டிருந்தது. "ஆ....அய்யோ.... அப்பா சாமி...." அது இன்னும் கொஞ்சம் வேகமாக வந்து ஆஸ்பத்திரியின் படியில் ஏறிற்று.

டாக்டர் கையிலிருந்த 'டார்ச்' விளக்கை அடித்தார். முப்பது வயதுக்குட்பட்ட ஒரு பெண். கிழிந்துபோன ஒரு சிவப்புச் சேலை. வறண்டு, காற்றில் பறந்து கொண்டிருக்கும் அலங்கோலமான கூந்தல். வெளிச்சத்தில் கண்களை மூடிக்கொண்டாள். பூரண கர்ப்பவதி. பிரசவ வேதனையில் எவ்வளவு கஷ்டப்படுகிறாள் என் பதைத் துடித்துக்கொண்டிருந்த அவளது கை கால்கள் காட்டின. நிற்க முடியவில்லை. வாயிற் கதவின் முகப்பைப் பிடித்துக் கொண்டு குனிந்து கொண்டாள். "ஆ....அய்யோ....கடவுளே ....சாமி என்னைக் காப்பாத்துங்கோ....கோடி புண்யமுண்டு." அவள் பேசவில்லை; கதறினாள்.

"ஏதடா சனியன்" டாக்டர் முணுமுணுத்துக் கொண்டார்.

"உன் ஆம்படையான் எங்கே? ஒருத்தருமில்லாமல் வந்து ஒபத்திரவம் பண்றே?...." கம்பவுண்டர் அலுத்துக்கொண்டே தெரு விளக்கையும் அணைத்தார். "எனக்கு ஒருத்தருமில்லிங்க.. நீங்கதான் கடவுள் மாதிரி என்னைக் காப்பாத்தணும்....ஆ.... அய்யோ....அப்பா" மீண்டும் கதற ஆரம்பித்தாள் கர்ப்பவதி.

"உம்....சீக்கிரம் 'கேட்'டைப் பூட்டு" டாக்டர் கம்பவுண் டருக்கு உத்தரவிட்டுவிட்டு....அந்தப் பெண்ணின் முகத்தில் மீண்டும் ஒரு தடவை 'டார்ச்சை' அடித்து...." அனைதையாம் அனைதை....அனைதைக்குப் பிள்ளை ஆசை!"....என்று கிண்டல் செய்தார். "எல்லாம் காசுக்குத்தான்" கம்பவுண்டர் சிரித்துக் கொண்டே இந்த வார்த்தைகளை டாக்டரின் முன்னே சமர்ப்பித்து ஏதோ மேதாவித்தனமாகப் பேசிவிட்டதாகப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

"ஏ.... நீ.... என்ன ஜாதி? டாக்டருக்குக் கொடுக்கப் பணம் இருக்கா?" நாயுடுகாரு மீசையை முறுக்கிக் கொண்டே அவளைப் பார்த்தார்.

"நான்....பறைச்சி சாமி—எங்கிட்ட ஏதுங்க பணம்?"

இதை அவள் முடிக்கவில்லை...." தூ....பற நாயே.... துரத்து கழுதையை....உம்....ஒத்தி நில்லு!" டாக்டர் பிச்சு மூர்த்தி அவசரமாகக் கீழே இறங்கினர். கம்பவுண்டர்....கனல் தெறிக்கும்படியாக ஒரு கோரச் சிரிப்புச் சிரித்துவிட்டு.... "அரிஜன மங்கையா?....ஆஸ்பத்திரியில் பிரசவமாக்கும், அத்த ராத்திரியிலே! காலையிலே ஆலயப் பிரவேசம் பண்ணு போ!" என்று குட்டி உபதேசமும் செய்து முடித்து...."போர்டு லூட்" டையும் நிறுத்தினர்.

"வினதீர்த்தவூர் கிராம தர்ம ஆஸ்பத்திரி. எந்நேரமும் சிகிச்சை செய்யப்படும்." என்ற விளம்பர போர்டு இருட்டில் மறைந்து கொண்டது.

டாக்டரும் கம்பவுண்டரும் வேகமாக நடக்கத் துவங்கினர். "அட கடவுளே....தயவில்லிங்களா?" பறைச்சி உரக்கக் கதறினாள்; ஏமாற்றத்தோடு கலந்த அந்த மொழிகள் ஆஸ்பத்திரியின் அருகேயுள்ள வினதீர்த்த ஆண்டவன் கோயில் சுவரில் மோதி எதிரொலித்தன.

'கிர்' ரென்று ஒரு மோட்டார் கார் வந்து நின்றது..... "டாக்டர் சார்....பண்ணையிலே அய்யாவுக்குத் தலைவலியாம். அவசரமாகக் கூப்பிட்டு வரச்சொன்னார்"—டிரைவர் இதைச் சொல்லி முடித்தான்.

"கம்பவுண்டர்! கைப்பெட்டி இருக்கிறதா?" என்று கேட்டுக் கொண்டே காரில் ஏறி அமர்ந்து கொண்டார் டாக்டர். "இருக்கிறது" நாயுடுகாரு தலையசைத்துக் கொண்டே முன் சீட்டில் உட்கார்ந்தார். "ரொம்ப சீரியஸோ!" பிச்சுமூர்த்தி டிரைவரிடம் வெகு அவசரமாகப் பதிலை எதிர்பார்த்தார். மோட்டார் கார் பறந்து விட்டது.

இங்கே....வாயிற்படியைப் பிடித்துக் கொண்டு, வேதனை யால் வாடிய பறைச்சி. "ஆ....அம்மாடி....அய்யோ கடவுளே ...." சப்தம் ஓயவில்லை. ஆனால் 'அந்த' வார்த்தைகள் அவள் நெஞ்சத்தில் சவுக்கடிகளாக இன்னும் விழுந்து கொண்டிருந்தன. சம்மட்டியால் தாக்கப்பட்ட வைரத்தைப் போல அவள் நினைவு சிதறியது.

கம்பவுண்டர் கிண்டலாகக் கேட்ட கேள்வி...." உன் ஆம்படையான் எங்கே?".... 'ஆம்படையா—' அவதி தாங்க

மாட்டாமல் அனலிடைப் புழுப்போல் துடித்த அவள் வாய் இந்த வார்த்தையை முணுமுணுத்தது ; ஆனல், சற்று ஆத்திரமாக.

'ஆம்படையான்'—அழவில்லை அவள் ! அப்படியே மரமாக நின்ருள். அவள் இதயத்தின் முன் ஒரு ஏடு புரண்டது. மூன்று வருட வரலாறு !

கருப்பாயி காத்தமுத்துவின் பெண்சாதி. காத்தமுத்து சோலையூர்க் கிராமத்துப் பெரிய பண்ணையில் ஒரு பண்ணையாள். பண்ணைக்கார அண்ணுமலை முதலியார் 'தருமதுரை' என்று பெயர் வாங்கின ஆசாமி. கோயில்கள் கட்டுவது, கும்பாபிஷேகங்கள் செய்வது என்ருல் அமோகப் பிரியமுள்ளவர் அண்ணுமலை முதலியார். "அடடா எத்தனை தர்மம்? எத்தனை சத்திரம்? தர்மமே உருவாகவந்த உத்தமரய்யா அவர் !" பண்ணை முதலாளியின் பகுதி மனையில் குடியிருக்கும் பார்த்தசாரதி அய்யங்காரின் நாமாவளி இது.

"அண்ணுமலை முதலியார் கட்டிய கோயிலய்யா அது. அவர் ஆட்டினபடி ஆடணுமாக்கும் ; ஆமா ! ஆலயப் பிரவேசமாவது மண்ணுவது ! பள்ளு பறைகளை உள்ளே விடறத்துக்கு, அவர் சம்மதிக்க மாட்டாருதான். அக்கிரம விஷயத்திலே அவரு இணங்க மாட்டாராக்கும், தெரியுமா ?" பண்ணையில் கணக்கு வேலை பார்க்கும் கண்ணையிரம் பிள்ளையின் கர்ஜனை இது !

மூன்று வருடங்களுக்கு முன் மூஷிக விநாயகர் கோயில் திருப்பணி பிரம்மாண்டமாக நடைபெற்றது. இப்பொழுது உலவும் ஆலயப் பிரவேச சீசனில் அதில் அரிஜனங்களை நுழைய விடுவதற்குப் பகீரதப் பிரயத்தனங்கள் நடைபெறுகின்றன. கோயில் கட்டும்பொழுது கர்ப்பக் கிரகத்திற்கு ஏற்றப்பட்ட கருங்கல் விழுந்து கருப்பாயி புருஷன் காத்தமுத்து உயிர் விட்டான்.

உருண்டு திரண்டு ஓய்யாரமாக இருந்த காத்தமுத்து நசுங்கி நாசமானன். மகா கணபதியின் கோயிலுக்கு மண்டையைத் தேங்காயாக உடைத்து, இரத்தத்தால் முதல் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தான். உயிருக்குயிரான கருப்பாயியை விட்டுவிட்டு அவன் ஆண்டவன் ஆலயத்திலேயே பலியானன். காத்த முத்துவைக் காவு கொடுத்து கணபதி ஆலயத்தைக் கட்டி முடித்தார் அண்ணுமலை முதலியார். ஆண்டு நகர்ந்தது.....

கருப்பாயி உயிர் வாழ்ந்தாள். ஒரு நாள் கருப்பாயி பண்ணையாரின் மாட்டுத் தொழுவத்தில் சாணம் எடுத்துக் கொண்டிருந்தாள். அண்ணாமலை முதலியார் "என்ன; வேலை முடிந்ததா?" என்று கேட்டுக்கொண்டே நுழைந்தார். முதலியாரின் என்றுமில்லாத பிரவேசம் கண்ட கருப்பாயி திடுக்கிட்டாள்....முதலியாரின் காம வெறி தலைவிரித்தாடியது. பாவம்! கருப்பாயி பலி ஆனாள்.

நாட்கள் உருண்டோடின. கருப்பாயி கசந்த வாழ்வில் கற்கண்டின் சுவையைக் கண்டாள். எஜமானின் தயவு யாருக்குக் கிடைக்கும்? கருப்பாயி கர்ப்பவதி. வெளியே தலை நீட்ட வெட்கம். ஊரிலிருந்தால் தலையை வெட்டி விடுவேன் என்று முதலியார் இறுதி எச்சரிக்கை விடுத்தார். அவசரச் சட்டம்; அந்த அபலைப் பறைச்சியால் அதைத் தாங்க முடியுமா? எஜமான் உத்தரவல்லவா? கருப்பாயி தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டாள்.

மாட்டுத் தொழுவத்திலே ஆவலாக நுழைந்த அதே முதலியார், "எங்காவது காட்டுப்பக்கம் ஓடிவிடு!" என்று தன் காதலிக்குக் கட்டளையிட்டார். முதலாளியின் கருணை, ஜாதி பேதம் பாராட்டாத பரந்த மனப்பான்மை, ஏழையிடம் அன்பு காட்டும் பொதுவுடைமைத் தத்துவம்—இவைகளை நினைத்து மகிழ்ந்ததோடல்லாமல் தன் கட்டுமஸ்தான தேகத்தின் அழகு பற்றியும் இறுமாந்திருந்தாள். இழந்த வாழ்க்கையை முதலியாரின் தயவால் ஓரளவு செப்பனிட்டுத் தன் குழந்தையை யாவது வளர்க்கலாம் என்று கனவு கண்ட கருப்பாயி, கடைசியில் தேச சஞ்சாரம் செய்ய ஆரம்பித்தாள். தேச சஞ்சாரத்தின் முடிவு? வினதீர்த்தவூர் தர்ம ஆஸ்பத்திரியின் வாசற்படியில், வேதனையோடு நிற்கிறாள்.

காலை வந்தது. ஆலயப் பிரவேசத்துக்கான ஏற்பாடுகள் ஆடம்பரமாக நடந்து கொண்டிருந்தன. டாக்டர் பிச்சமூர்த்தி ஒரு கதர்த் தொப்பி சகிதம் கோயில் டிரஸ்டியோடு அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

கோயிற் குளக்கரையில் ஒரே கூட்டம்.

"தூக்கு...தூக்கு...மெள்ள மெள்ள...மெதுவாகத் தூக்கு"

"ஹாங்....அப்படித்தான்..."

"ஏய்...நீயுங் கூடப்போடா..."

"படி வழுக்கப் போறது; மெதுவா ஏறுங்க..."

குளத்தில் இறங்கியிருந்த ஆட்களிடம் கரையில் நின்ற கும்பல் இப்படி எச்சரிக்கை செய்துகொண்டு இருந்தது.

"சண்டாளனைக் கோயிலில் விடுகிறதுன்னு சாமிக்கே அடுக்கவில்லை...சகுனத்தடை ஏற்பட்டு விட்டது" இப்படி ஒருவர் பீடிகை போட்டுப் பிரசங்கம் செய்தார்.

"தலைமுறை தலைமுறையாய்க் காணுத பழக்கம். இந்த அக்கிரமத்தை ஆண்டவன் சகிப்பாரா? திருக்குளத்தையே தீட்டாக்கி விட்டாரப்பா"—மற்றுமிருவரின் உரையாடல் இவ்விதம்.

"போயும் போயும் இன்னைக்கா விழுந்து சாகணும்? அடப் பரிதாபமே"—ஒரு இரக்க ஜீவன் இப்படிப் பேசிற்று.

"கர்ப்பவதியப்பா" ஒரு கிழவி அனுதாபப்பட்டாள்.

"இரண்டு ஆத்மா.....இன்னைக்குக் கங்காதேவி ஆட் கொண்டாள்" ஒரு ஆத்ம ஞானியின் சொற்பொழிவு இது!

குளத்தில் விழுந்து தற்கொலை செய்துகொண்ட கருப்பாயி யின் பிரேதம் கரைக்குக் கொண்டுவரப்பட்டது. போலீசார் பிரேதத்தைப் பார்வையிட்டனர். பிரேத விசாரணைக்கு ஏற்பா டாயிற்று. எந்த ஆஸ்பத்திரியில் பறைச்சிக்கு இடமில்லையென்று முதல் நாளிரவு விரட்டியடித்தார்களோ, அதே ஆஸ்பத்திரியில் அந்தப் பறைச்சியின் பிரேதம் தாராளமாக அனுமதிக்கப்பட்டது. பிச்சுமூர்த்தி பிரேத விசாரணைக்கு உதவியாகத் தன் வேலை யைத் தொடங்கினர். அவருக்கும் அவருடைய கம்பவுண்டருக்கும் கருப்பாயி இறந்த காரணம்?...

ஊர் கூறிற்று கடவுளின் திருவிளையாடல் என்று! டாக்டர் நடித்தார் காரணம் கண்டுபிடிப்பதாக! உலகத்துக்குத் தெரியுமா; சமுதாய அமைப்பிலே, நாட்டு நடப்பிலே உள்ள கோளாறு நஞ்சாக மாறிக் கருப்பாயியைக் கொன்று விட்டது என்ற உண்மை? யாருக்குத் தெரியும்? அது தெரிந்தால்தானே பிரேத விசாரணையில் வெற்றியடைந்ததாக அர்த்தம்?

கண்டதும் காதல் ஒழிக!

“முறுக்கு மசால்வடை!”

“கரம் சாயா/”

“நாதன் சோடா, கலர், ஆரஞ்சு!”

“ரொட்டி, பிஸ்கத், வெத்திலை பாக்கு, அசோகா!”

“எலிபென்ட் சிகரெட், தாஜ்மகால் பீடி!”

“ஏய் சாயா! ஒரு சிங்கள் கொடுடா!”

“காலணை பீடி கொடு!”

“அம்மா..எனக்கு ரொட்டி!”

“அப்பா..சோடா வாங்கித் தா!”

“சும்மா இருடா கழுதை! ராத்திரியிலே சோடா சொரிக்காது.”

“ஏய்! ஆரம்பிக்கிறியா இல்லையா?”

“ஆரம்பிக்கலேன்னு....டிக்கட்டை வாபஸ் பண்ணுடா!”

“அர்த்த ராத்திரியிலே ஆட்டம் போடுவானுவபோலிருக்கு.”

“காலிப் பசங்கள்!....எல்லோரும் விடாமல் கை தட்டுங்கப்பா....அப்பதான் சீன் தூக்குவான்.”

“ஏய்! விசிலடிக்கத் தெரியுமா?”

"நல்லாத் தெரியும். அதுக்குத்தானே நான் டிராமாவுக்கு வர்றது."

"அப்ப..ஆரம்பிச்சிடு."

"ஷ் ஷ் ஷ்..ஷ்...."

"ஓகோ கோ கோ கோ உஷ்.."

தேவி கான சபையில் "திரௌபதி வஸ்திராபஹரணம்" நாடக ஆரம்ப தினத்தன்று நாடக நேரம் தவறி நாழிகை நகர நகர நாலாபக்கங்களிலுமிருந்து கிளம்பிய பேரொலிகள் ஒன்றோடொன்று மோதித் தெறித்து அந்தக் கீற்றுக் கொட்டகையையே நடுங்க வைத்தன.

நாடக சம்பந்தமான ஒத்திகைகள் பார்ப்பதில் சுறுசுறுப்புத் தேவையில்லை என்ற கொள்கையுடைய நாடக முதலாளி, நடிகர்கள் அலங்காரம் செய்து கொண்டிருக்கும்போதுதான் காட்சி ஒத்திகைகள் நடத்திக்கொண்டிருந்தார். அந்த அலட்சியத்தை அவர், தம் தொழில் மேதாவித்தனத்தைக் காட்டுகிறது என நம்பினர்.

இனிச் சமாளிக்க முடியாது என்ற ஆபத்தான கட்டத்தில் நாடக மணி ஒலித்தது. முதற் காட்சி பஞ்ச பாண்டவர் ஆலோசனை மண்டபம். அவசரத்தில் அர்ச்சுனன் 'கதை'யையும், வீமசேனன் வில்லையும் தூக்கிக் கொண்டு வந்து நின்றார்கள்.

"வீமசேனு" என்று தருமர் அழைக்கவும், வில் வைத்த ஆசாமி அண்ணு என வணங்கவும், கொட்டகை பூகம்பத்தால் ஆடுவது போலச் சிரிப்பு முழங்கிற்று. திரை சடக்கென விழுந்தது. ஆயுதங்களை அவர்கள் சரிப்படுத்திக் கொண்ட பின் மீண்டும் திரை சுருண்டது. திரௌபதி குலுக்கு நடை போட்டுக் கொண்டு பிரவேசித்தாள் —கொட்டகையில் அமைதி.

"ஆள்..நல்ல அழகப்பா!"

"ஆமாம்! பாத்திரத்திற்கேற்ற முக வெட்டு"

"அலட்சியச் சிரிப்பு அப்படியே வழியுது பார்"

"வழியும் வழியும்!"

"என்னடா கிண்டல்?"

"கிண்டல் இல்லை..குமார்! நாடகக்காரி மேலேயே இப்படியென்றால்....?"

"நாடகக்காரி யென்றூல் மட்டமா? நளினம், நாகரிகம், பாவ உணர்ச்சி எல்லாம் அவளுக்கு அடிமை. வாழ்க்கையில் சுவை வற்றிப் போகாமலிருக்க இவள் போன்ற கலையரசிகளின் காதலைத்தான் பெறவேண்டும்."

"அப்படியானுல்—காதல் ஆரம்பமாகி விட்டதுன்னு சொல்லு."

"ஆமாம்! கன்னி யொருத்தியைக் கண்டதும்,
உள்ளம் களவு போவதுதானே காதல்?"

"என்னடா கவிதை பொழிகிறுய்?"

"காதல் மழையடா செவிடு!"

"சரி பைத்தியம்....முற்றி விட்டது."

"யார் பைத்தியம்? முட்டாள்! இது, கண்டதும் காதல்!"

"குமார்!"

"நடராஜ்! என்னைத் தொந்திரவு செய்யாதே. உன்பேச்சைக் கேட்க நேரமில்லை. அவள் வாய் திறக்கப்போகிறுள்."

"இந்த எழுத்தாளர்களே இப்படித்தான்" முணுமுணுப் போடு நடராஜ் நாடகத்தைக் கவனித்தான்.

குமார், புயலும் படகுமானுன்.

"இந்த முட்டாள் தருமன் ஒரு மரக்கட்டை மகாராஜா! தங்க விக்கிரகம் வந்து நிற்கிறது; தழுவிடாமல் தர்பார் நடத்து கிறுனே" என ஏளன மொழி பேசிற்று அவன் உள்ளம்.

"நான் மட்டும் தருமனுய்; தருமன் என்ன, சகாதேவனுய் நடித்தால்கூடப் போதும்.....இந்நேரம் இந்தச் சிங்கார மயிலை!...." குமார் சுரக்கும் உமிழ் நீரை உறிஞ்சிக் கொண்டான்.

"சரி, நாளைக்கே இந்தச் சபாவில் ஒரு நடிகனைச் சேர்த்து விடுவது!" மகோன்னத முடிவைக் கண்டுபிடித்ததுபோல அவன் தலை நிமிர்ந்து கொண்டது.

வீமசேனனிடம் வசனம் முடிந்த பிறகு, தருமர் திரௌபதியை நோக்கினர். திரௌபதி வணங்கி நின்றுள். மலர்ந்த முகத்தோடு தருமர் அவளை பார்த்து, "**அன்பே! சீதா! அருகில் வா!**" என்று

முடிக்கவில்லை; கொட்டகை "சே! உள்ளே போடா!" என்று சிரித்தது.

முதல் நாள் நடந்த "**ராமாயணம்**" நாடக வசனத்தை தருமர் வேடம் போட்டவர் இப்போது தவறிச் சொல்லிவிட்டார் என்று யாரும் மன்னிக்கத் தயாராயில்லை. கொட்டகை, தருமருக்குத் தடையுத்தரவு போட்டதும், அவர் மௌன விரதம் ஆரம்பித்து விட்டார். மிரள மிரள விழித்தபடி திரௌபதி நின்றாள். தருமர் வசனத்தை நாமாவது பேசுவோ மென்று அர்ச்சுனன் வேஷக்காரன் "அன்பே திரௌபதி அருகில் வா! என் தம்பி அர்ச்சுனன் திக்விஜயம் செய்யப் போகிறானும்...." என்று ஆரம்பித்தான்.

"ஏய்! நீயும் உள்ளே போ!" கொட்டகை ஆத்திரத்தோடு உத்தரவிட்டது.

நாடக முதலாளி புஷ்பராகம் பிள்ளை மேடைக்கு ஓடிவந்து... "சகோதரர்களே" என்று எடுத்தார்.

"அஞ்சு சகோதரர்கள் அசையாமல் நிக்கிறுங்கோ...அவுங்க கிட்டே பேசப்பா!" என்று குரல் கொடுத்தது கொட்டகை.

ஐவரும் உள்ளே ஓடினர். "ஏய் பஞ்சபாண்டவர் ஓட்டம். திரௌபதி தனியா நிற்கிறாள். பிடி பிடி!" கொட்டகையில் கெக்கலிப்பு.

திரௌபதியும் உள்ளே ஓடினாள். திரை விழுந்தது. கொட்டகையில் யாரும் உட்கார்ந்திருக்கவில்லை. முன் திரையில் காட்சியளித்துக்கொண்டிருந்த காளிகாதேவியின் முகத்தில் ஒரு கல் வந்து விழுந்தது. "குய்யோ முறையோ" வெனக் கூவியபடி பெண்கள் திசைகெட்டு ஓடினர்கள்.

கீற்றுகளைக் கிழித்துக்கொண்டு கற்கள் உள்ளே நுழைந்து கொண்டிருந்தன. நாடக முதலாளி ஒலி பெருக்கி மூலமாக உள்ளிருந்தபடி கத்தினர்; பயனில்லை. நீங்களெல்லாம் மனிதர்கள் தானா? என்று ஒலிபெருக்கி கேள்வி போட்டது. அதற்கும் பதில் வரவில்லை. ஆனால் ஒலிபெருக்கி மட்டும் உடைந்து விழுந்தது. காவற்காரர்களுக்கும் பொதுமக்களுக்கும் கைகலப்பு.

"டேய் பாரத யுத்தம்!" என்றான் ஒரு கிண்டற்கார தடியன். இதற்குள் யாரோ ஒருவன் நெருப்புக் குச்சிக்கும் வேலை கொடுத்து விட்டான். "லங்கா தகனம்" நாடகம் ஆரம்பமாயிற்று. தி

வளர்ந்து, தாவியது. முதலாளியைக் காணவில்லை. காளிதேவி திரை தீப்பிடித்துக் கொண்டது. கொட்டகை முறிந்து எரிந்தபடி சாய்ந்தது. பக்கத்திலிருந்த வயற்புறத்தை நோக்கி நடிகர்கள் சிதறினர். 'நடராஜ்' 'நடராஜ்' என்று கத்திப்பார்த்தான் குமார். தன் உள்ளக் கோயில்கொண்ட அந்தக் குயில், வெந்து கருகிவிடுமோ என்ற குமுறல் எழுந்தது அவனுக்கு! என் கோமளவல்லி எங்கேயென ஓடினான். அப்போதுதான் திரௌபதி சிங்காரிப்பு அறையை விட்டுப் பறந்து கொண்டிருந்தாள். குமாரும் தொடர்ந்தான்...கொட்டகையில் தீ! குமாரின் இதயமெல்லாம் தீ!—அந்தத் தீ—தீங்கனியாக மாறப் போகிறதென்ற ஆசை அவனைக் காற்றுக்கிற்று. ஓடிக்கொண்டே யிருந்த திரௌபதி ஒரு வரப்பில் தடுக்கி விழுந்தாள். அவனும் விழுந்தான். அவன் இதயராணிக்குப் பேச்சு மூச்சில்லை. குமார் அவளைத் தன் மடியில் சாய்த்துக்கொண்டு அவள் கன்னங்களைத் தடவிக் கொடுத்தான். துண்டை எடுத்து முகத்தில் விசிறினான். நெஞ்சைத் தடவிக் கொடுத்தான். சில நிமிடங்கள் ஆனந்த மௌனம்.

"கண்ணே!"

கட்டுமீறி யெழுந்த அந்த வார்த்தை...ஒரு பெரு மூச்சுடன் கலந்துகொண்டது. அவன் கலையரசியின் தலையை மெதுவாக உலுக்கினான். திரௌபதி தெளிவு பெற்று விழித்தாள். எழுந்து உட்கார்ந்தாள். வெகு தூரத்தில் எரிந்துகொண்டிருந்த கொட்டகையின் செந்நிற ஒளியில், தன் காதலியின் தங்கமேனி மெருகேறுவதை ரசித்தபடியே குமார் அசைவற்று விட்டான்!

அவள் நன்றுக நிதானம் பெற்றுவிட்டாள். குமாரின் குதூகலம் கொள்ளிடத்து வெள்ளமாயிற்று. "கண்மணி!" என்று அவளைக் கட்டியணைத்தான்...

திரௌபதி சிரித்துக்கொண்டே, தன் தலையில் கை வைத்து 'டோபா' முடியை எடுத்தான்!

ஆலமரத்துப் புறுக்கள்

அருவிகளின் சலசலப்பு ஓசையும், அதைச் சுருதியாகக் கொண்டு குயில்கள் மீட்டிய கீதமும், அதற்கேற்றாற் போல மயில்கள் காட்டிய நடனமும் அந்தக் காட்டையே ஒரு சுந்தரபுரியாக விளங்கச் செய்யும்.

காட்டின் நடுவிலே ஒரு பெரிய ஆலமரம். ஆலமரத்துப் பொந்துகளிலே அழகுற விளங்கும் சிறு சிறு புறுக்கூடுகள். அந்தக் கூடுகளிலிருந்து எட்டிப் பார்த்தபடி கானகத்து உற்சாகத்தை ரசித்திடும் மணிப்புறுக்கள்.

"மயிலாட்டத்தைப் பார்த்தாயா?" என்றிடும் ஒரு புறு. 'மைனர்' புறுவின் மயக்கத்தைக் கிண்டல் செய்தபடியே "அதோ கேள், குயிலின் கீதம்!" என்றிடும் மற்றொரு சங்கீதப்புறு. "மயிலாடக் கண்டு வான்கோழிகள் ஆடிப் பார்த்து முடியாத காரணத்தால், ஆட்டமே கூடாது என ஆர்ப்பரிக்கும் வான்கோழியின் வறட்டுமதி பற்றிக் கேள்விப்பட்டீர்களா?" எனப் பிரசங்கம் செய்யும் ஓர் இளம் புறு. "எல்லாம் சரிதான், இன்றைக்கு எனக்கும் என்னைச் சார்ந்தவர்களுக்கும் உணவே கிடைக்கவில்லை!" என்று ஏக்கக் குரல் எழுப்பும் ஓர் இளைத்த புறு. "எனக்குக் கிடைத்த உணவை ஒரு பருந்து பற்றிக்கொண்டு போய்விட்டது!" என பரிதாபச் சிந்து பாடி வரும் ஒரு புறு. "நல்ல வேளை! பருந்துக்கு விருந்தாகாமல் நீ தப்பினையே!" என்று மகிழ்ச்சி கொள்ளும் இன்னொரு புறு. இப்படி இவைகள் பேசிக்கொண்டிருக்கும் போதே விர்ரெனப் பறந்துவந்து மரத்தின் கிளையிலே அமரும்

வல்லூறு! அதைக் கண்டதும் அதிர்ச்சியுற்ற புருக்கள் அலறியடித்துக்கொண்டு காடுகளிலே புகுந்திடும். அவசரத்திலே அலேமோதிக் கிடந்திடும் சில புருக்களை வல்லூறு வயிற்றுக்குள் தள்ளிவிட்டு ஏப்பம் விடும். அந்த ஏப்பத்திலே "வந்தேன் ஏமாத்தினேன்" என்ற வார்த்தைகளும் இறுமாப்போடு கலந்து வரும். இது வாடிக்கையாக அந்த ஆலமரத்திலே—ஆமாம்; புருக்கள் ராஜ்யத்திலே நடைபெறும் நிகழ்ச்சியாகிவிட்டது.

இந்தக் கொடுமைபற்றிப் புருக்கள் யோசிக்கத் தொடங்கின. "நிம்மதியற்ற வாழ்வு நித்திய நிகழ்ச்சியாகிவிட்டதே! இதற்கு நிவர்த்தியே கிடையாதா?" என ஏக்கக் குரல் எழுப்பின.

இதற்கொரு முடிவுகட்ட வேண்டுமென்று இரண்டு புருக்கள் முதலில் கிளம்பின. ஒன்று கரும்புரு. மற்றொன்று வெண்புரு. வல்லூறை எதிர்த்திட இரண்டு திட்டங்கள் வகுத்தன. இரண்டு புருக்களுக்கும் ஏற்கனவே "கொள்வினை கொடுப்பினை" விஷயத்தில் சிறிது தகராறு இருந்தபோதிலும் வல்லூறை விரட்டிடும் கொள்கையில் இரண்டும் கச்சையை வரிந்துகட்டிப் புறப்பட்டன. இது கண்டு ஆலமரத்துப் புருக்கள் அனைத்தும் "விடுதலை விருத்தம்" பாடி "வெற்றி முரசொலி" கொட்டத் தொடங்கின. ஆனந்த ஆரவாரம் செய்து கருப்புப்புருவும், வெள்ளைப்புருவும் இடும் கட்டளையை எதிர்பார்த்திருந்தன.

அந்தச் சமயத்தில் ஒரு நாள், ஒரு கலர்ப்புரு அவசர அவசரமாக துடித்துப் பறந்தபடி ஆலமரத்திற்கு வந்தது. அது பறந்து வந்த காரணம் ஒரு வேடன் அதைக் குறிபார்த்ததுதான். அந்த வேடன், 'உணவுக்காகப் புரு தேவையில்லை; கலர்ப்புரு அழகாயிருக்கிறதே! அதைப் பிடித்துச் சென்றால் நல்ல விலைக்கு விற்கலாமே' என்ற ஆசையாலேயே அதைப் பின்தொடர்ந்தான். கலர்ப்புரு ஆலமரத்தில் நுழைந்துவிட்டதைக் கண்ட வேடன் அதை எப்படியாவது உயிரோடு பிடிக்கவேண்டுமென்று எண்ணி மரத்தடியிலே சுற்ற ஆரம்பித்தான். இதைக் கண்ட கலர்ப்புரு கலங்கிவிட்டது. ஆலமரத்துப் புருக்களிடம் சென்று அபயங் கோரியது. அந்தப் புருக்கள் "எங்களால் வேடனை எதிர்க்க முடியாது" என்று கூறின. எப்படியோ கலர்ப்புரு தன் வேதனைக் குரலை அதிகப்படுத்தி மரத்திலுள்ள சில புருக்களைத் தன் வசப்படுத்திக்கொண்டது. இந்த நிலைமையைக் கரும்புருவும், வெண்புருவும் கண்டன. வல்லூறை எதிர்க்கும் வேலையோடு வேடனை விரட்டும் வேலை வேறு சேர்ந்துவிட்டதே; இதற்குக் காரணம்

கலர்ப்புருவின் செயல்தானே ; கலர்ப்புரு இங்கு வராமலிருந்தால் இந்தப் புதுத் தொல்லை வராதே என்று வெண்புரு வருத்தப் பட்டது.

அதற்குள் கலர்ப்புரு, கரும்புருவைத் தனியே அழைத்துச் சென்று ஏதோ பேசியது. இரண்டும் சேர்ந்து வேடனை விரட்டுவது என்று திடீரெனத் திட்டம் தீட்டின. பிறகு கலர்ப் புரு, வெண்புருவிடம் ஓடிவந்து—"வேடனை விரட்ட நீயும் வா !" என்று கூப்பிட்டது,

"வேடனை வெற்றிகொள்ள நான் வருகிறேன். நீ பிறகு வல்லூறை விரட்டிவிட்டு, ஆலமரத்தைப் புருக்களின் தனி மாளிகையாக்கும் முயற்சியில் ஒத்துழைப்பாயா ?" என்று வெண் புரு கலர்ப்புருவிடம் ஒரு நிபந்தனை போட்டது. கலர்ப்புரு அதற்கு இணங்கவில்லை.

மரத்தின்கீழ் நின்றுகொண்டிருந்த வேடன், புருக்கள் கூடிக் கூடிப் பேசுவதைக் கண்டான். அந்தப் புருக்களிடமே சொல்லிக் கலர்ப்புருவைத் தான் பிடித்துக்கொள்ளலாம் என்று கருதிப் புருக்களைப் பார்த்து "ஓட்டு ; ஓட்டு கலர்ப்புருவை" என்று கத்தினான்.

இறுதியாக வேடன் மரத்திலேறிக் கலர்ப்புருவை உயிரோடு பிடிக்கத் திட்டம் போட்டு, ஏற ஆரம்பித்தான். கலர்ப்புருவோ பறந்து சென்றால் வேடன் கணைக்கு இறையாவோம் என அஞ்சி, கரும்புருவின் துணையோடும் வேடனை எதிர்க்கக் கிளம்பியது. கடைசி நேரத்திலும் வெண்புருவுக்குக் கலர்ப்புரு அழைப்பு விடுத்தது.

"உன் காரியத்தை மட்டும் சாதித்துக் கொள்ள முடியாது ; நம் காரியமென்ன ?" என்று கேட்டது வெண்புரு.

உடனே கரும்புரு, வெண்புருவிடம், "ஏதோ ஆனது ஆகி விட்டது ; வேடனை விட்டால் நம்மையெல்லாம் கொன்று விடுவானே" என்று உபதேசம் செய்தது.

அது கேட்ட வெண்புரு "வேடனை எனக்கு வீழ்த்தத் தெரியும். அதற்காகக் கலர்ப்புருவின் துணை எனக்குத் தேவை யில்லை" என்று கூறிவிட்டது கம்பீரமாக !

கரும்புரு வெண்புருவைக் கோபித்துக்கொண்டது. கங்காணி என்றது. வெண்புரு அதற்காக அயரவில்லை.

வேடன் மரத்தில் ஏறிவிட்டான். கரும்புருவும் கலர்ப் புருவும் தங்கள் மூக்குகளில் குச்சிகளைப் பிடித்துக்கொண்டு வேடனை எதிர்க்கத் தயாராயின. அந்தச் சமயத்தில் வெண்புரு, பின்புறமாகச் சென்று வேடனின் காலில் பலமாகக் குத்தியது அலகுகளால். அதைச் சேர்ந்த புருக்களும் வேடனின் காலைக் குத்தி ரத்தம் வழியச் செய்தன. வலி தாங்கமுடியாமல் வேடன் மரத்திலிருந்து கீழே விழுந்து மண்டையில் அடிபட்டு மாண்டான்.

வேடன் வீழ்ந்ததும் கரும்புருவும் கலர்ப்புருவும் வெற்றிச் சிரிப்புச் சிரித்தன. வெண்புரு தன் கடமையை செய்து முடித்து விட்டதாகக் களிப்படைந்தது.

மறுநாள் காலையில் பத்துப் புருக்களை வல்லூறு அடித்துக் கொன்று குவித்தது. அது மட்டுமல்ல; வல்லூறு அந்த ஆலமரத்தில் **"இது வல்லூறின் மரம்"** என்று எழுதிவைத்தது.

அந்த எழுத்தை அழிக்க வேண்டுமென்று கரும்புருவும் வெண்புருவும் புறப்பட்டன. கரும்புரு, கலர்ப்புருவைக் கூப்பிட்டுப் பார்த்தது. கலர்ப்புரு, ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி, அதில் கலந்து கொள்ள முடியாமைக்கு வருத்தம் தெரிவித்தது.

ஆலமரத்திலிருது வல்லூறை விரட்டும் பணியிலே வெண் புரு தீவிரமாக ஈடுபட்டது.

கரும்புருவும் அந்த முயற்சியில் இறங்கியது. அதற்குக் கலர்ப்புருவைக் கூப்பிட்டது.

"வல்லூறு கொடிய பறவைதான், ஆனாலும் அதையும் இணைத்துக்கொண்டு எல்லோரும் ஆலமரத்தில் இஷ்டபூர்வமான குடும்பம் நடத்தலாம்," என்று கலர்ப்புரு விளக்கம் தர ஆரம்பித்து விட்டது. கரும்புருவுக்கு ஒரே கோபம். வெட்கம் வேறு, வெண்புரு சிரிக்குமே என்று! 'அப்போதே சொன்னது அந்த வெண்புரு' என்று அங்கலாய்த்துக் கொண்டது கரும்புரு.

"உனக்கு நான் உதவினேனே; நீயேன் எனக்கு உதவக் கூடாது" என்று கரும்புரு அலகால் குத்தியது. **"தலை"**யால் மோதியது. கலர்ப்புருவும் தன் **"சக்தி"**யைத் திரட்டி கரும் புருவை எதிர்த்தது. இப்படி இரண்டும் ஒன்றோடொன்று அலகால் குத்தியும், சிறகால் அடித்தும், ஆலமரத்தையே ஒரு குழப்பத்திற்கு உள்ளாக்கி விட்டன.

வல்லூறு தன் வேலையைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. வெண்புறு, இந்த விசித்திரத்தை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று தெரியாமல் விழிக்கிறது. ஆனாலும் எதிரியைத் தாக்கத் தன் பலத்தை வளர்த்துக் கொண்டேயிருக்கிறது.

சில சில்லறை உதவிகளுக்காகவும், உடல் சுகமில்லா விட்டால் மருந்து கேட்கவும், கலர்ப்புறு வெண்புறுவிடம் வரும். அந்த உதவிகளை வெண்புறு செய்யும். ஆனால் இப்போது அந்த உதவிகளைக்கூடக் கரும்புறு, கலர்ப்புறுவுக்கு செய்வதில்லை.

இந்தக் கதையைக் கேள்விப்பட்டுக் காட்டிலுள்ள பறவைகள் எல்லாம் சிரிக்கின்றன ; ஆச்சர்யப்படுகின்றன. அதே நேரத்தில் வெண்புறுவின் அறிவுத்திறனைக் கண்டு பாராட்டிப் புகழ்ந்திடவும் செய்கின்றன. பாராட்டையும் புகழ்ச்சியையும் கேட்கவா வெண்புறுவுக்கு நேரம்! அதனுடைய லட்சியமெல்லாம் **வல்லூறை விரட்டுவதுதான்!**

தொத்துக்கிளி

அன்றைய 'எக்ஸிபிஷன்' அண்ணுமலைக்குச் சுவைக்கவில்லை. ஏனெனில் அன்று அழகிகள் வரவில்லை. எழிலரசிகளின் அதரங்களிலே தவழும் புன்னகையிலே பூரிப்புப் பெறுபவன் அண்ணுமலை. அழகற்ற பெண்கள் இந்த உலகத்தில் வாழ லாயக்கற்றவர்கள் என்பது அவனது கொள்கை. பிரம்மா சரசாவுடன் இன்பப் பொழுது போக்கிக் கொண்டிருந்தபோது தனது படைப்புத் தொழிலைச் செய்யவேண்டுமேயென்ற எரிச்சலோடு சில மாமிசப் பிண்டங்களைப் படைத்தானும். அவர்கள்தான் அழகற்ற பெண்களாகி இந்த உலகத்தில் தொல்லை கொடுப்பவர்களென்று அண்ணுமலை அடிக்கடி சொல்லுவான். அவனுக்கு வாழ்வு ஒரு பூஞ்சோலை; அதில் பறந்து திரியும் கிள்ளைகள்தான் பெண்கள்!

"சே! என்ன எக்ஸிபிஷன் இது! அழகிகளில்லாத 'எக்ஸிபிஷன்' குஷ்டரோகம் பிடித்த 'ஜூலியட்'டுக்குத்தான் சமம். ரோமியோகூட அவளைத் தீண்ட மாட்டானே இந்த உலகிலேயே அழகானவன் தமிழன் என்கிறார்களே! ஒரு அழகான தமிழச்சியை இங்கே காணமுடியவில்லையே....."—என்றெல்லாம் முனகிக் கொண்டிருந்தான் அண்ணுமலை. வளையல் கடைகளையும், ரிப்பன் கடைகளையும் வலை போட்டுத் தேடினான். சேல் கெண்டைக்கு வலைபோட்டான், வரால் குஞ்சுகள்தான் சிக்கின. அங்கே காணப்பட்ட பெண்கள் தாங்கள் எவ்வளவு விகாரமாய் இருக்கிறோம் என்பதைப் பற்றிக் கவலைகொள்ள

வில்லை. ஆனால் அழகான வளையல்களைப் பொறுக்குவதில் மட்டும் என்னவோ தயங்கவில்லை! உலகமே அப்படித்தானே! தான் அழகாயில்லை என்பதற்காக குயில் பாடாமலிருந்தால்...அழகாயிருக்கிறோம் என்பதற்காக மயில் கானம் இசைக்கத் துவங்கினால்...இயற்கையே மாறியிருக்குமே!

துவண்ட உள்ளத்தோடு சுற்றிக்கொண்டிருந்தான் அண்ணாமலை. 'களுக்' என்று சப்தம் கேட்டுத் திரும்பினான். ஆம்... சேல் கெண்டையே சிக்கிவிட்டது. அவளுடைய அலையும் விழிகளிலே அவன் அற்புதத்தைக் கண்டான். தன் புருவ வில்லினால் அண்ணாமலையை அக்கக்காகக் குத்திக் கொன்றுவிட்டாள். அந்த மாதுளை மலர் போன்ற அதரங்கள் அண்ணாமலையின் உள்ளத்திலே உணர்ச்சிப் புயலைத் தூண்டிவிட்டன. கண்டாரைக் கவரும் அவள் அண்ணாமலையையா விட்டு வைப்பாள்?

அண்ணாமலையை மட்டுமென்ன; அவன் போன்ற மற்ற ஆண்களையும்தான் அவள் தன் புன்சிரிப்பினால் கவர்ந்தாள். அண்ணாமலை ஒவ்வொரு திக்கிலும் சென்று, ஒவ்வொரு கோணத்திலும் அவளை ரசித்தான். ஆனால் அந்தப் "பூங்கோதை" அந்த வளையல் கடையை விட்டு அசையவில்லையே! அழகியாயிருந்தாலென்ன, கல்லூரி மாணவியாயிருந்தாலென்ன, கம்பனின் சூர்ப்பனகையாயிருந்தாலென்ன, அவர்கள் அனைவரையும் கவர்ந்துவிடுகிறார்கள், துணிக் கடைக்காரரும், வளையல், ரிப்பன் கடைக்காரரும்! அவர்கள் பொறுக்கும் "டிசை"னில் தான் வித்தியாசமே தவிர அவர்கள் வாங்குவது என்னவோ கண்ணாடி வளையல்களும், 'இமிட்டேஷன்' நகைகளும் தான்!

ஆம்! பெண்கள் இமிட்டேஷனில் உள்ளத்தைப் பறி கொடுத்து விடுகிறார்கள். இதைப்போலத்தான் விமலாவும் அண்ணாமலையிடம் தன் உள்ளத்தைப் பறி கொடுத்தாள், அவன் ஒரு 'இமிட்டேஷன்', 'டால்' அடிக்கும் பட்டை தீட்டப்பட்ட கண்ணாடி என்பதை அறியாமல்! பெண்களைப் போலத்தான் சில ஆண்களும். அவளுடைய அழகையும் "மேக்-அப்" பையும் அளக்கிறார்களேயன்றி, உள்ளத்தை, அவளுடைய பண்பை அளப்பதில்லை. சிலர் காதல் செய்யப் பழகிக்கொள்கிறார்கள்; பழக்குகிறார்கள். ஆனால், இதற்கு எத்தனை பேர் பலியாகிறார்கள் தெரியுமா?

பாவம்! விமலா அண்ணுமலைப் படுமடுவிலே வீழ்ந்து விட்டாள்; குளிர் நீரோடை என்றெண்ணி! அவள் மேலும் தப்பில்லை, அவள் என்ன செய்வாள்? அவள் ஒரு காம்பொடிக்கப் பட்ட குண்டு மல்லிகை. மலர், செடியிலிருந்து பறிக்கப்பட்டதே யொழிய, மணத்திலிருந்து பறிக்கப்படவில்லை. இன்னும் வாசனை வீசிக்கொண்டேதான் இருக்கிறது. ஆம்.....அவள் ஒரு இளம் விதவை. ஆனல் அவளுடைய பெற்ரோர்கள் புத்திசாலிகள்; அஞ்சாத நெஞ்சர்கள். அதனல்தான் கல்லூரியிலே சேர்த்து விட்டனர், விமலாவை!

இந்தக் கன்னி கல்லூரியிலேதான் சிக்கினுள் அண்ணுமலை யிடம். அவனுடைய அழகை ரசிக்கும் தன்மைக்கு இரையானுள், விமலா. விமலாவின் மனே நிலையை அறியாது அழகி வேட்டை யாடுகிருன் அண்ணுமலை; ஆனல் அவன் ஒரு குண்டுமல்லிகையை முகர்ந்து கொண்டிருக்கும் போதே மற்ருரு ரோஜாவுக்கு ஆசைப்பட்டான். அங்கேதான் அண்ணுமலை ஒரு பெருத்த கொலை செய்துவிட்டான். ஆம்! அந்த மலரைக் கசக்கிவிட்டான்.

பாவம்! விமலா கெடுக்கப்பட்டாள். இன்னும் ஒன்பது மாதத்தில் அவள் ஒரு குழந்தைக்குத் தாயாகி விடுவாள்.

இப்போது அண்ணுமலை விமலாவைப் பற்றிக் கவலைப் படுவ தில்லை. அவனுக்குத்தான் எத்தனேயோ விமலாக்கள் 'சந்தை' யிலே கிடைக்கிருர்களே!

விமலா அழுதாள்; புரண்டாள்! ஆனல், பலன்...? அண்ணுமலை அவளைத் திரும்பியே பார்ப்பதில்லை. வகுப்பு முடிந்ததும் அவளைப் பார்க்காமலே எழுந்து சென்றுவிடுவான், வேருரு பக்கமாக!

கிளி பாய்வதில்லையா மரத்துக்கு மரம்! எந்த மரம் பச்சை யாக இருக்கிறதோ, எந்த மரத்தில் அதிகமாகப் பழங்கள் இருக்கின்றனவோ, அந்த மரத்துக்குத்தான் தாவும் பச்சைக் கிளி. அண்ணுமலையும் அப்படித்தான்! அவன் அழகியாகப் பார்த்துத் தாவுகிருன். அவன் ஒரு தொத்துக் கிளி. அந்த மரம் அல்லவா முன்பே ஆராய்ந்து தெளிய வேண்டும், அது நிரந்தர மாகத் தங்கக்கூடிய கிளியாவென்று. எண்ணத் தவறினுள் விமலா; அந்தோ, அவதிப்படுகிருள்.

விமலா மெள்ள மெள்ள அறிந்துகொண்டாள் அண்ணுமலை யின் ரகசியத்தை. அவள் புலியானுள்! அவள் முன்னே கண்ணகி

யும், மாதவியும் வந்து வந்து போயினர். மணிமேகலை அமுத சுரபியுடன் காட்சிதந்தாள். நல்லதங்காள் தற்கொலைக்கு முயற்சிப்பதையும் பார்த்தாள். அவள் உடம்பு ஒருமுறை வியர்த்துப் பின் சில்லிட்டது. அவள் இருதயத்திலிருந்து இரத்தம் புது வேகத்துடன் பாய்ந்தது உடலிலெல்லாம்.

"அவன் அழகாயிருப்பதால் தானே அவன் வலையில் நான் வீழ்ந்தேன். தத்தளிக்கிறேன். அவன் அழகாயிருப்பதால் தானே பல பெண்களைக் கெடுக்கிறான். அவன் அழகைக் கெடுத்துவிட்டால்....?" என்னென்னவோ எண்ணிக்கொண்டே சென்றாள், விமலா கல்லூரிக்கு!

"கெமிஸ்ட்ரி பிராக்டிகல்" நடந்துகொண்டிருந்தது. பையன் ஒருவன் கண்ணாடிக் குவளையை உடைத்ததைப் பற்றி விசாரணை செய்துகொண்டிருந்தார் பேராசிரியர். விமலா முக்கி முணகிக் கொண்டே சோதனையைச் செய்துகொண்டிருந்தாள். என்ன வென்று கேட்டவர்களுக்கு வயிற்றுவலியைக் காரணமாகச் சொல்லிக்கொண்டிருந்தாள். அவளுக்கல்லவா தெரியும் நடந்தும், இனி நடக்கப் போவதும்!

அண்ணாமலை ஒரு மூலையில் சோதனை செய்து கொண்டிருந்தான். முன்பு போல இப்போது அவன் விமலாவைக் கவனிப்பதில்லை. விமலா மெதுவாகத் தன்னிடத்தை விட்டு நகர்ந்தாள். அணையப் போகும் விளக்கு பிரகாசத்துடன் எரிவதில்லையா? அதைப்போல அவள் முகத்திலே ஒரு ஒளி; சிறு மகிழ்ச்சி காணப்பட்டது. அவள் கையிலே ஒரு 'பாட்டில்' இருந்தது. விமலாவை மாணவர் யாரும் கவனிக்கவில்லை.

விமலா பாட்டிலை மெதுவாகத் திறந்தாள். கொஞ்சம் தயங்கினாள். நெருப்புக் குழியில் விழப்போகுமுன் அனலைக் கண்டு அஞ்சலாமா? கடலிலே குதிக்கத் தீர்மானித்தபின் அலையைக் கண்டா மனங் குலைவது? பாட்டிலில் உள்ளதை அண்ணாமலையின் முகத்திலே கொட்டினாள். 'ஆ' வென்று அலறி விழுந்தான் அண்ணாமலை. அவன் முகத்திலே கடுகு தாளிக்கப் பட்டது. அதே சமயத்தில் விமலாவும் கீழே சுருண்டு விழுந்தாள். ஆம்! அண்ணாமலை முகத்திலே விமலா "நைட்ரிக் ஆசிடைக்" கொட்டினாள், அவன் அழகு மடிவதற்காக. அவளும் குடித்து விட்டாள், குடல் அறுபடும் அளவுக்கு அக்கினித் திராவகத்தை!

கெமிஸ்ட்ரி ஆய்வுக்கூடத்தில் ஒருத்தி இந்த உலகிலிருந்து விடுதலை பெற்றுக்கொண்டிருந்தாள். ஒருவன்—தாமரையன்ன முகமுடையோன்—தன் அழகினுல் அழகிகளைக் கெடுத்த அண்ணுமலை—குரூபியாக்கப்பட்டுக் கீழே கிடந்தான். இனி அவனைப் பெண்ணினம் திரும்பியே பார்க்காது; உதைத்துத் தள்ளிவிடும்.

எல்லா மாணவர்களுக்கும் ஒன்றும் விளங்கவில்லை; திகைத்துப் போனுர்கள், அந்தத் தொத்துக்கிளி அண்ணுமலைக்கு மட்டும் தெரியும் அந்தக் காரணம். அவன் முன்னே புதுவைப் புரட்சிக் கவிஞர் சிரித்தபடி நின்ருர். அவர் உதடு அசைந்தது. "செல்வப் பிள்ளாய்! இன்று புவியில் பெண்கள் சிறுநிலையில் இருக்கவில்லை; விழித்துக்கொண்டனர்! விளையாட நினைத்து விட்டாய் ஊர்ப்பெண்கள் மேல்! பொல்லாத மானிடனே, மனச் சான்றுக்குள் புகுந்து கொள்வாய்! நிற்காதே!" கவிஞர் மறைந்துவிட்டார். அண்ணுமலை கண்களை இறுக மூடிக் கொண்டான், எரிச்சல் தாங்க மாட்டாமல்.

காதல் கடிதம்

எந்த இடத்தில் நாங்களிருக்கிறோம் என்றே சொல்ல முடியாது. எந்த நேரத்தில் எங்களது முகாம் வேறிடத்துக்கு மாற்றப்படும் என்றும் கூறமுடியாது. எப்போது நாங்கள் சாவோம்; அல்லது சாவிலிருந்து மீள்வோம் என்றும் கூறமுடியாது. எதிரிகளின் தாக்குதல் எத்தன்மைத்தாயிருக்கும் என்றும் நிச்சயிக்க முடியாது. வெறிபிடித்த இட்லர்–முஸோலினியின் பக்கந்தான் வெற்றி மழை பொழிகிறது என்ற செய்திகள் நிமிஷத்துக்கு நிமிஷம் காதிலே விழுந்து கொண்டிருக்கின்றன. கடலிலே சென்றூல் கண்ணி வைத்துப் பிடிக்கின்றனர். பறந்தால் சுட்டு வீழ்த்துகின்றனர். நடந்தால் சுற்றிலும் நாசம் படையெடுத்து வருகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலை-கூடாரத்தைவிட்டு வெளியிலே சென்றூல் தலையிலே செடிகொடிகளை வைத்துக் கட்டிக் கொண்டு நடக்கவேண்டும்—இல்லை இல்லை; நகரவேண்டும். அப்போதுதான் எதிரியின் விமானத்தை ஏமாற்ற முடியும். ஏதோ மரஞ்செடி கொடி அசைகிறது என்று பகைவர்கள் போய் விடுவார்கள். மனிதன்; அதுவும் ராணுவத்தொப்பி அணிந்த நேசதேசப் படையைச் சேர்ந்தவன் என்று தெரிந்தால் போதும்; விமானத்திலிருந்து குண்டு பொழியும். சிதறிப்போய் விட வேண்டும் தூள் தூளாக! இதுபோன்ற பயங்கரம் நிறைந்த; விநாடிக்கு விநாடி மரணத்தோடு போராட்டம் நடத்திய அந்த சமயத்திலேகூட, நான் அவளுக்குக் கடிதம் எழுதத் தவற வில்லை. பட்டாள முகாமிலே பயிற்சி பெற்ற நேரம்போக, மிச்ச

முள்ள நேரமெல்லாம் என் காதலிக்கு ஓலை எழுதுவதிலேயே உற்சாகமாகக் கழிந்தது. அன்று கடிதம் எழுதிக்கொண்டிருந்தேன். என் நண்பன் **பாலன்** அதைப் பின்னலிருந்து கவனித்துக் கொண்டிருந்ததைக் கூட நான் பார்க்கவில்லை. பாலன் தமிழ் நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலிருந்து பட்டாளத்திற்கு வந்தவன். என்னோடு நெருங்கிப் பழகிய நண்பன். சொல்லப் போனால், எனக்குத் தமிழ் கற்றுக்கொடுத்த ஆசிரியர்கூட அவன் தான். என்னிடம் அவன் இந்தி கற்றுக்கொண்டான். ஒருவருக் கொருவர் உபாத்தியாயர்களாக மட்டுமில்லாமல் உழுவலன்பு பூண்ட தோழர்களாகவும் இருந்தோம். கடிதத்தை எழுதித் தபாலில் போட்டுவிட்டு வந்தேன். பாலன் என்னைப் பரிகாச மாகப் பார்த்தான். 'என்ன பாலா?' என்றேன். பாலன் ஆரம்பித்து விட்டான்.

" அன்புள்ள கண்மணி சுதேஷுக்கு சுந்தர்பாபுவின் ஆசை முத்தங்கள். அல்லும் பகலும் அனவரதமும் உன் அழகு முகத்தை எண்ணியெண்ணி ஏங்கிக்கொண்டிருக்கிறேன். எதிரி விமானங்கள் வட்டமிடும் போதும், எங்கள் பாசறையை நோக்கி ஆபத்து வருகிறது என்று அபாயச் சங்கு ஒலிக்கிற போதும், இடியோசை கேட்டு " அர்ச்சுனா—அர்ச்சுனா " என்று அலறு வார்களே ; அதுபோல நானும் பகையோசை கேட்டு, " சுதேஷ்— சுதேஷ் " என்று முணுமுணுக்கிறேன். அந்தக் காதல் மந்திரந் தான் கண்ணே, எனக்கு ஆறுதல் வழங்கும் அமுதமாக இருக் கிறது. எப்போது இந்தப் பொல்லாத போர் முடியுமோ ; பொன்னழகே ; உன்னை ஓடிவந்து அணைப்பேனே தெரியவில்லை, சுதேஷ் ! தினந்தோறும் நான் உனக்குக் கடிதம் எழுதுகிறேன் ; நீ பதிலுக்கு ஏன் நாள்தோறும் கடிதம் எழுதக் கூடாது? தெவிட்டிவிடும் என்று கருதுகிறாயோ? என் தேனே ! முன் பெலாம் தினம் ஒரு மடல் எழுதினாய் ; 'தினம் கடிதம் எழுதுங்கள்' என்று எனக்கு மட்டும் கட்டளையிட்டாய். உன் கட்டளையை சிரமேற் கொண்டு நான் எழுதிக்கொண்டிருக்கிறேன். நீ மட்டும் ஏன் திடீரென்று ஒருமாத காலமாக மௌனம் சாதித்து விட்டாயோ தெரியவில்லையே—சுதேஷ்—சுருண்டு போகிறேன் நான் ! கனவிலே உன்னைக் கண்டு கலங்குகிறேன். சதா என் இருதய பீடத்திலே அமர்ந்து என் பூசைக்குரிய பொன் விக்கிரக மாக அமைந்திருக்கும் உனக்கு என்மீது என்னம்மா கோபம்? என் உயிரே ! இதற்காவது பதில் எழுதி எனக்கு உயிர்ப்பிச்சை கொடு!

விரைவிலே திரும்பிவந்து விவாகம் செய்து கொள்ளவில்லை என்ற ஒரு தவறைத் தவிர நான் வேறென்ன தவறு செய்தேன்? விரைவில் வெற்றி வீரனுக வருகிறேன்! பதில்–பதில்.

அன்புக்கு அடிமை,

சுந்தர் பாபு''

நான் அவளுக்கு எழுதிய கடிதத்தை அப்படியே மனப்பாடம் செய்து ஒப்புவித்தான் பாலன். அப்போதுதான் தெரிந்தது அவன் என் பின்னல் மறைந்திருந்து கடிதம் முழுவதையும் படித்திருக்கிறான் என்று!

காதல் விவகாரங்களில் ஈடுபடும் போதாகட்டும்; காதல் கடிதம் எழுதும் போதாகட்டும்; காதலியின்பால் கண்ணை வீசும்போதாகட்டும் பக்கத்தில் யார் இருந்து நம்மை கவனிக்கிறார்களோ என்ற பயமே மனிதனுக்கு ஏற்படுவது கிடையாதே! சும்மாவா சொன்னார்கள் காதலுக்குக் கண்ணில்லை என்று! அது என் விஷயத்தில் உண்மையாகத்தான் முடிந்துவிட்டது. என்னை யறியாமல், பாலன் கடிதத்தைப் படித்ததுமட்டுமல்ல நான் குறிப்பிடுவது; என் காதல் மாளிகையின் அஸ்திவாரமே குருட்டுக் கொத்தனரால் அமைக்கப்பட்ட போலி அஸ்திவாரமாகத்தான் முடிந்துவிட்டது! அப்போதே சொன்னான் பாலன்; அடிக்கடி கடிதம் எழுதாதே, கசந்துவிடும் என்று! கைவலிக்க வலிக்க எழுதினேன். கருத்து இனிக்கப் படிப்பாள் என்று நம்பினேன். ஆனால் நம்பிக்கை நாசமாயிற்று. உலகத்தை நிலை கலக்கிய போர் முடிந்துவிட்டது—ஆனால் என் உள்ளத்தை நிலை கலக்கிய போர் முடிவடையவில்லை.

ஆயிரம்மடல். அதற்கு பதில் எழுதவில்லை. பாலன் சொன்ன சமாதானங்கள் எதுவும் என் காதிலே ஏறவில்லை. ''யுத்தச் செய்திகள் யாருக்கப்பா சரியாகக் கிடைக்கிறது? எங்கேயோ ஒரு மூலையில் இந்தியாவிலே குடியிருக்கும் உன் காதலியின் குடும்பத்தார் யுத்த வெறியினால் எப்படி பாதிக்கப்பட்டார்களோ; யார் கண்டது? சுதேஷாவின் மீது வீணுக ஆத்திரப்படாதே! நேரில் சென்று உண்மை நிலையை அறியணும்'' என்று பாலன் அடிக்கடி கூறினான். அவனது ஆறுதலால் உயிர் வாழ்ந்தேன். அவன் கூறியது உண்மைதான் என்பது போல அவளுக்கு நான் கடைசியாக எழுதிய கடிதங்கள் எல்லாம் எனக்கே திரும்பிவர ஆரம்

பித்தன. யுத்தத்தினுல் என் அன்புக்கரசியும், அவளது குடும்பத் தினரும் பாதிக்கப்பட்டு விட்டனர் என்பதை நம்பினேன். சுதேஷாவின் அன்பையும் காதலையும் சாதாரணமாக எடை போட்டு விட்டோமே என்று எனக்குள்ளாகவே வருந்தினேன். போர் முடிந்தது; எங்களை யெல்லாம் மகிழ்ச்சியோடு ஊருக்கு அனுப்பினர்கள். நண்பன் பாலனையும் அழைத்துக்கொண்டு சுதேஷாவைப் பற்றிய விவரமறியப் புறப்பட்டேன். சுதேஷா வின் வீடு பூட்டப்பட்டுக் கிடந்தது. பக்கத்திலே விசாரித்தேன். அவர்கள் சொன்னர்கள்—அவளுக்குக் கல்யாணமாகி விட்ட தென்று!

என் மனம் சூன்யமாகிவிட்டது! மயக்கம் வரும் போலிருந் தது! அவ்வளவுதான்; கீழே சாய்ந்துவிட்டேன்! மயக்கம் தெளிந்து எழுந்தேன்! பக்கத்திலே பாலன் இருந்தான்; அவனைக் கேட்டேன்;

"சுதேஷாவின் கணவன் யார் என்று யாரிடமாவது விசாரித் தாயா?" என்று.

"விசாரித்து விவரமறிந்தேன் சுந்தர்! சுதேஷாவுக்குக் கணவனை தேடிக் கொடுத்ததே நீதானே!" என்றான் பாலன்.

"நானு?"

"நீ இல்லை—நீ எழுதிய கடிதங்கள்!"

"கடிதங்களா.....?"

"ஆமாம்—தினம் ஒரு கடிதம் எழுதும்படி சுதேஷா உனக்கு எழுதினள் அல்லவா.....?"

"ஆமாம்"

"அது ஏன் தெரியுமா?"

"ஏன்?"

"கடிதம் கொண்டுவருகிற அந்த தபால்காரனின் அழகை ரசிக்கத்தான்!"

"என்ன?"

"ஆமாம்—சுந்தர்! அக்கம் பக்கத்தார் கூறிய உண்மை இது! தினந்தோறும் அந்த அழகும் வாலிபமும் இணைந்த தபால் காரனைச் சந்தித்த சுதேஷா, தன் நிலை மறந்தாள்; நீ அடிக்கடி

கூறுவாயே இந்துப் பெண்ணின் தர்ம நெறியைப் பற்றி ; அந்த நெறியிலிருந்தும் விழுந்தாள். அவ்வளவுதான் ; தபால்காரனுக்கும் சுதேஷாவுக்கும் கல்யாணம் முடிந்து விட்டது!''

பாலன் அந்தச் செய்தியைக் கூறிய பிறகு, உலகப் போர் இன்னும் முடியவில்லை என்றே எனக்குத் தோன்றியது—தோன்றுகிறது. பாலன் என்னோடு இரண்டு நாள் தங்கியிருந்தான். அவனும் போய்விட்டான் ; அவனது 'அத்தை மகள்' அவசர அழைப்பு அனுப்பினாள் என்று. நான் என்ன செய்வேன்? என் கடிதத்தைச் சுமந்து வந்தவன் பெற்ற பாக்கியம்கூடக், கடிதம் எழுதிய நான் பெறமுடியவில்லையே! அதிகமாகக் கடிதம் எழுதுவதிலும் இப்படி ஒரு ஆபத்து இருக்கிறது என்று எனக்குத் தெரியாமல் போய்விட்டதே! அப்போதே அந்த ஜெர்மனியரின் குண்டுகள் என் தலையில் விழுந்திருக்கக்கூடாதா?

கண்ணைடக்கம்

பக்தன் ஒருவன் பதைக்கப் பதைக்க ஓடினான். அவன் கால்கள் தடுமாறின. வியர்வையால் மேனி குளமாயிற்று. தலை முடி அலங்கோலமாய் விரிந்து காற்றில் பறந்தது. நெற்றியிலே பூசி யிருந்த திருநீறும், அதன் மேல் வைத்திருந்த அகலமான குங்குமப் பொட்டுங்கூட வியர்வையிலே கரைந்து ரத்தமும் சீழும் போல அவன் கன்னங்களில் வழிந்துகொண்டிருந்தன. புரையோடி விட்ட புண்ணிலிருந்து கிளம்பிய துர்நாற்ற அருவிபோல் இருந்தது அந்த பக்தனின் முகக் காட்சி. "தேவீ! தேவீ!! காளிகா தேவீ!!!" என்ற அலறல் வேறு!

நல்ல இருட்டு. கரைபுரண்டோடும் ஆற்று வெள்ளம். அதன்மீது ஒரு மூங்கில் பாலம். அதிலே நிதானமின்றி பக்தன் ஓடினான். கரையோரத்துச் சுடலையிலே எரிந்து கொண்டிருந்த ஒரு பிணத்தை ஆற்றுத் தண்ணீர் இழுத்துக் கொண்டு வருகிறது. அதை பக்தன் பார்த்தான். "லோகமாதா!" என அலறிக் கொண்டே திரும்பினான். தீவட்டிகளோடு நாலைந்து பேர் வந்து கொண்டிருந்தனர். ஒருவன் கையிலே கொள்ளிச்சட்டி. பிணந் தூக்கிக்கொண்டு வந்தார்கள். இது ஆற்றிலே மிதக்கும் ஈரப் பிணமல்ல; புதிய பிணம். மூங்கில் பாலத்தில் பக்தன் நின்றான். ஓரே அமைதி. புதியபிணம் எரிய ஆரம்பித்தது. அதன் சொந்தக்காரர்கள் பிரிந்துவிட்டார்கள். இனி அது நெருப்புக்கோ, அல்லது ஆற்றில் தெரியும் வாளை மீனுக்கோ சொந்தம்.

காலையில் சொந்தக்காரர்கள் உயிரோடிருந்தால் எலும்பு அள்ளிக் கொட்ட அங்கே வருவார்கள். அதற்குள் ஆறு அந்த வேலையைச் செய்தாலும் செய்துவிடும். பெரு மூச்சு விட்டபடி மீண்டும் ஓட்டப் பயணத்தைத் தொடர்ந்தான் பக்தன். எதிரே சில தீவட்டி.கள். பாடையல்ல! நீண்ட கழியில் ஒரு துணி ஏணை; அதிலே ஒரு குழந்தை. விழிக்காத நித்திரை. கொள்ளிச்சட்டி கிடையாது. மண்வெட்டிகள் தூக்கி வந்தார்கள் சிலர். புதைக் கும் பிணம் போலும்! பக்தன் முன்னிலும் பன்மடங்கு வேகமாக ஓட ஆரம்பித்தான். காலிலே கருவேல் முட்கள் தைத்துக் கொண்டன. அதையும் அவன் கவனிக்கவில்லை. கரையோர முள்ள தாழை மடல்களிலே அவன் முகம் உராய்ந்தது. அதையும் அவன் கவனிக்கவில்லை. பழனிக்குப் பால் காவடி எடுப்பவனின் உடலிலே காணப்படும் அலகுகள் போலச் சிலாகைகள் போல அவன் உடலெங்கும் முட்கள் நீட்டிக்கொண்டிருந்தன. எதிரே யுள்ள பாழுங்கிணற்றை எப்படித்தான் தாண்டினானே தெரியாது. பார்ப்பதற்கே பயங்கரத் தோற்றமளிக்கும் பாவாடைராயன், காத்தவராயன் கோயில்களை எப்படித்தான் கடந்தானே அவனுக்கே தெரியாது! ஊர்க்கோடிக்கு வந்து சேர்ந்தான். அதோ ஒரு கோயில். சுற்றிலும் காடு. உள்ளே அந்த ஆலயம்! "அம்மா! தாயே!!" எனக் கத்தினான். ஆவேசம் வந்தது போல் ஓடினான். கதவு பூட்டியிருந்தது. மதிற்சுவரின் மீது தாவினான். அடுத்த பக்கம் குதித்தான். எதிரே காளிகா தேவியின் உக்கிர மான உருவம். உறுமும் சிங்கம்—உதிரம் கொட்டும் தலை—எல்லாம் சிலைவடிவில்தான்! அதனால் பக்தன் அச்சமின்றி அம்மையின் அருகே சென்றான். "பத்ரகாளி? மகாதேவி!! மகிஷாசுர மர்த்தனி!!!" என்று கூவினான்.

"யார் அது?" காளி கேட்டாள்.

"என்னைத் தெரியவில்லையா?" என்று கதறினான் பக்தன்.

"தெரியவில்லை...சொல்!"

"நான் தான் உன் பக்தன்—காளிதாசன்!"

"எந்தக் காளிதாசன்? நாக்கிலே எழுதி நாவலனைக ஆக்கி னானே; அந்தக்காளிதாசனா?"

"இல்லை தாயே...நான் அவனில்லை! நான் இயற்கையிலேயே கொஞ்சம் புத்திசாலி! ஆனாலும் உன் பக்தன்!"

"சரி போகட்டும்—பக்தா! என்ன வேண்டும் உனக்கு?"

"என்ன தாயே இப்படிக் கேட்கிறாய்? ஊரிலே சூறை நடக்கிறே உனக்குத் தெரியாதா?"

"சூறையா?"

"ஆமாம் தேவி! கொள்ளை கொள்ளையாக மக்கள் சாகிறார்கள். கொடுமையான வாந்தி பேதி! கொடிய விஷக்காய்ச்சல்! பிளேக்காம்; புதுவித இங்கிலீஷ் வியாதி! காமாலை!.... அய்யய்யோ...சொல்லத்தரமல்ல தாயே; கூடை கூடையாகக் குழந்தைப் பிணம்; பாடை பாடையாகப் பெரிய பிணம்!"

"அய்யோ...அப்படியா? எனக்குத் தெரியாதே!"

"உண்மைதான் அம்மா உண்மைதான்! உன் மக்கள் அனைவரும் இன்னும் ஓரிரு நாட்களில் ஒழிந்து விடுவார்கள்!"

"பக்தா! நான் ஒன்று சொல்லுகிறேன், கேட்கிறாயா?"

"ஆயிரம் சொல் அம்மையே!"

"கொடிய நோயினால் அழிந்து விட்ட குடும்பங்களில் மிச்சமிருப்பவர்களிடம் என்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தைச் சொல்!"

"அனுதாபத்தைக் கேட்க அடியேன் வரவில்லை சக்தி! அபயங் கேட்க வந்திருக்கிறேன். மாளுகின்ற மக்களை மீட்பதற்கு மாதாவிடம் முறையிட வந்திருக்கிறேன். இங்கு நான் வந்து விட்டேன். இந்நேரம் எத்தனை ஜில்லிட்ட உடல்களோ; கணக்குத் தெரியவுல்லை! சுடலைக்கு ஓய்வு இல்லை. நெருப்புக்குச் சரியான தீனி! எழுந்தருளுவாய் என் அம்மையே!"

"இயலாது அப்பனே! இயலாது! என்னை மன்னித்து விடு. பக்தா போய்வா!"

"மன்னிப்பதா? நானா? அகிலாண்டேஸ்வரியை இந்தப் புல்லன் மன்னிப்பதா? மண்டியிடுகிறேன்; என்ன கோபம் இருந்தாலும் மறந்துவிட்டுப் புறப்படு; பராசக்தி!"

"புலம்பினாலும் அழுதாலும் புண்யமில்லை!"

"ஏன் காளி—ஏன்? துஷ்டர்களை அழித்துத் தூயவர்களைக் காப்பாற்றும் அருள் விழி பெற்றவளே! அனந்த நாயகி! கருணை பொழியும் உன் கண்களைத் திறந்து, கதியற்றுச் சாகும் அபலைகளை, அனைதைகளை, உன் திருப்புதல்வர்களைக் காப்பாற்ற ஏனம்மா தயக்கம்?"

"கருணை பொழியும் கண்கள் எனக்கு இப்போதில்லையடா மகனே!"

பக்தனின் மெய் நடுங்கிற்று. குரல் கம்மிற்று. கனைத்துக் கொண்டான் பீதியோடு! காளியை நிமிர்ந்து பார்த்தான்; கர்ச்சித்தான்!

"கருணைக் கண் இல்லையா? காளியா நீ? அல்லது கள்ளியா? பிணக்கொலு கண்டு பெரு மகிழ்வு கொள்ளும் பேய்க்கும் உனக்கும் என்ன வேறுபாடு? எருமையை வதைத்தாய்—சிங்கத்தை அடக்கினாய்—மமதையாளன் சிரசை நறுக்கினாய்—அப்போதெல்லாம் உன் கண்களிலே கனல் உண்டு! மற்ற வேளைகளில் அன்புப் புனல்தானே உண்டு! அப்படித்தானே கேள்விப்பட்டிருக்கிறேன்; உன்னைப் பற்றி! நீ என்ன ஏமாற்றத்தானே பார்க்கிறாய்? உன் பிள்ளைகளின் உயிர்கள் பொல பொலவென உதிரும்போது உனக்கு இந்தக் காட்டோரத்து "பங்களா" விலே ஓய்வு பெறும் வேலையா? மிக நன்றாயிருக்கிறதம்மா தாய்ப்பாசம்!"

"மகனே! என்னதான் நீ திட்டினாலும், தீப்பொறி பறக்க வசை புராணம் பாடினாலும் என்னிடமிருந்து கருணையை எதிர் பார்க்க முடியாது! காளிதாசனைக் காளமேகத்தைக் கவிதை பாடச் செய்த காளியல்லடா நான்—இப்போது நான் கருணை யற்றவள்! என் கண்களிலே அன்பின் ஒளி கிடையாது!"

இதைச் சொல்லும்போது காளியின் தொண்டை கரகரத்தது. அழுகுரல் கேட்டது. விம்மும் ஒலி பக்தனின் காதைக் குடைந்தது. பக்தன் பதறினான்.

"ஏன் தேவி அழுகிறாய்? என்ன நடந்தது?"

"உன்னைப் போல ஒரு பக்தன் செய்த வேலைதானடா எல்லாம்!"

"என்ன செய்தான்? எந்த பக்தன் பாதகம் புரிந்தான்? பார்வதி தேவியார் அழவேண்டிய கட்டத்தைச் சிருஷ்டித்தவன் யார்? பத்மாசனீ! சொல்லம்மா!"

"கேள் கவனமாக! உலகத்து மக்களை யெல்லாம் ஒரு சேரக் காப்பாற்றும் திறனும் திறமையும் பெற்றவள்தான் நான்! அதுபோலக் காப்பாற்றியும் வந்தேன். இப்போது ஊரிலே நடப்பதாக வர்ணித்தாயே பயங்கரச் சாவும், அதற்குக் காரணமான நோய்களும்; அவைகள் எல்லாம் என் பார்வை பட்ட

மாத்திரத்தில் பஞ்சாய்ப் பறக்கும். பரமசிவனுரின் நெற்றிக் கண்ணுக்குமில்லாத சக்தி என் நேத்திரங்களுக்கு உண்டு என்று அவரே கூறிடுவார் என்னை அணைத்திடும்போது! அநீதியை அழிக்கும் அக்கினியும் உண்டு; அணைதனை ரட்சிக்கும் அருள் நோக்கும் உண்டு என் திருவிழிகளுக்கு! அந்தச் சக்தியைப் பாழ் படுத்தி விட்டானப்பா ஒரு பரம பாதகன்!''

''எப்படித்தாயே எப்படி?'' பக்தன் பதறினன் மறுபடியும்!

''குறுக்கிடாமல் கேள் மகனே! ஒரு பக்தன்—பணக்காரன். அவனுக்கு ஒரு குழந்தை. அந்தக் குழந்தையின் கண்ணிலே ஏதோ சிறு கோளாறு! எனக்குப் பிரார்த்தனை செய்து கொண்டான். குழந்தையின் கண் வரவரக் கெட ஆரம்பித்தது. மருத்துவர்கள் மருந்துப் பச்சிலைகள் மூலம் சிகிச்சை ஆரம்பித் தனர். குழந்தைக்குக் கண்கள் சுகம்பெறத் தொடங்கின. அப் போது பக்தன் எனக்கு வேண்டுதல் விடுவதாகப் பிரார்த்தனை செய்துகொண்டான். அதன்படி **'கண்ணடக்கம்'** செய்து வைப் பதாக வேண்டிக்கொண்டான். கண்ணடக்கம் என்றூல் உனக்குத் தெரியுமல்லவா?''

''ஆமாம் தேவி! தங்கத்தாலோ வெள்ளியாலோ கண் போலச் செய்து விக்ரகத்தின் விழிகளிலே பதிப்பது என்று சொல்வார்கள்; நான் பார்த்ததில்லை!''

''பார்த்ததில்லையா? இதோ என் கண்களில் பதித்திருப் பதைப் பார்! இதுதான் கண்ணடக்கம்! அந்தப் பக்தன் செய்த பிரார்த்தனை.''

''அதற்கும் நான் வந்த காரியத்திற்கும் தொடர்பு என்ன தாயே!

''முட்டாளே! இன்னும் புரியவில்லையா? கருணை காட்டிக் காப்பாற்றும் சக்தி பெற்ற என் விழிகளைத்தான் வெள்ளிக் கண்ணடக்கம் என்ற மூடி போட்டு அடைத்து விட்டானே; நான் எப்படியடா வெளியிலே கிளம்புவது?—கண்கட்டப்பட்ட எனக்குக் கதி ஏதடா? அடைபட்ட கண்ணிலேயிருந்து அருள் எப்படியடா கிளம்பும்?''

''பக்தனல்ல அவன்; பாதகன்! தாயே, அவன் தான் அக்கிரமம் செய்தான் என்றூல், நீயாவது உடனே இந்த வெள்ளி மூடியை அகற்றியிருக்கக் கூடாதா?''

"அகற்றுவதா? பக்தன் செலுத்திய காணிக்கையப்பா இது! அகற்றுவது ஆகுமா? தகாது—தகாது!"

"பக்தன் அளித்ததை நீ அகற்றுவது தகாது! இதோ நான் அகற்றுகிறேன். உன் கண் திறக்கட்டும். கருணை பொழியட்டும். ஊரார் வாழட்டும்! உன் உலா நடை பெறட்டும்!!" என்று ஆவேசமாகப் பக்தன் பாய்ந்தான். காளியின் கண்களில் பதிக்கப் பட்டிருந்த வெள்ளிக் கண்ணடக்கத்தைப் பிடுங்கி எறிந்தான்.

காளியின் கண்களைப் பக்தன் உற்றுப் பார்த்தான்.

"இப்போது என்னைத் தெரிகிறதா தாயே?"

"தெரிகிறது—என்மீது பிரியமுள்ள முட்டாள் என்று!"

"என்னம்மா மீண்டும் பழி சுமத்துகிறாய்? நன்றிகாட்டு தாயே எனக்கு! நமனுலகு செல்லும் மக்களை மீட்க அன்பு மழை கொட்டும் விழிகளைத் திறந்திருக்கிறேன் நான்!"

"விழிகளைத் திறந்தாய்; ஆனால் ஒளிதர உன்னால் இயலாது! பத்து வருடமாக மூடிக் கிடந்ததால் தூர்ந்து விட்ட கிணறுபோல் ஆகிவிட்டதப்பா என் கண்கள்! ஒரு ஆண்டா, இரு ஆண்டுகளா? பத்து ஆண்டுகள் அல்லவா இந்தக் கண்ணடக்கம் என் விழியை மறைத்துக் கொண்டிருந்திருக்கிறது. இனி என் கண்களுக்கு ஒளி தர, அந்த ஒளியிலே கருணை ததும்பச் செய்ய யாராலும் முடியாது! தயவு செய்து போய்விடு!"—காளி அழுகுரலோடு ஆத்திரமாகப் பேசினாள்.

பக்தன் சற்று நேரம் நின்றான்—காளியைப் பார்த்து ஏளன மாகச் சிரித்தான். நெற்றியிலே மிச்சம் மீதி ஒட்டிக் கொண்டிருந்த குங்குமம், திருநீறு ஆகியவற்றை நன்றாக அழித்து நெற்றியைத் தூய்மைப்படுத்திக் கொண்டான். கோயிலிலிருந்து விடுபட்டு ஊரை நோக்கி ஓடினான்.

எதிரே, இரண்டு மூன்று கார்களில் டாக்டர்களும் அவர்கட்கு உதவியாளர்களும் வந்திறங்கினார்கள். ஊர் மக்கள் அனை வருக்கும் நோய்த் தடுப்பு ஊசிகள் அவசரமாகக் குத்தப் பட்டன. ஊருக்குத் தேவையான உடனடியாகச் செய்யவேண்டிய சுகாதார வேலைகளை இரவோடு இரவாக டாக்டர்கள் செய்யத் துவங்கினர். பக்தனும் அந்தப் பணியில் முன்னின்றான்.

திடீரென விழித்துக் கொண்டேன். கண் வைத்திய சாலையில் இரண்டு கண்களும் கட்டப்பட்ட நிலையில் படுத்திருப்பதை உணர்ந்தேன். எனக்குச் செய்தது போல எத்தனை ஆபரேஷன் செய்தாலும் அந்தக் காளிக்குக் கண் திறக்காது என்பதை எனக்கு நானே எண்ணிக் கொண்டு சிரித்துக் கொண்டேன்; அந்த வேதனையான வேளையிலும்!

வாழமுடியாதவர்கள்

'டாண் டாண்' என்று மணிக்கூண்டு கெடிகாரம் பத்து ஒலிகளை முழங்கிற்று. நட்சத்திர டாக்கீசின் கதவுகள் திறக்கப்பட்டன. 'திலோத்தமா' படம் முடிந்து விடுதலை பெற்ற சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் வர்ணங்கள்—திடீரெனச் சிரித்த பாதரச விளக்குகளால் சோபையிழந்தன. அந்தச் சோபையிலும் சொகுசு மின்னிடுவதாகத் தொடர்ந்து வந்த வாலிபப் பட்டாளம் 'கம்ப ரசம்' பாடிற்று.

"பெண்களுக்குச் சுதந்திரம் அளிப்பதாயிருந்தால் முதலில் இந்த ஆண்களை எல்லாம் அரபிக்கடலில் தூக்கி எறியவேண்டும்" என்றுள் ஒருத்தி; சிவப்புச் சேலைக்காரி.

"உலகம் அழிந்துபோக உன்னை யோசனை கேட்டால் அப்போது சொல்லடி இந்த அபிப்பிராயத்தை" எனப் பதில் வீசினுள் பச்சைச் சேலைக்காரி.

"திலோத்தமா எப்படியடா?" என்றுன் ஒரு இருபத்து நாலு வயது.

"படத்தைக் கேட்கிறுயா?...அல்லது" என்று இழுத்தான் ஒரு மைனர்.

"படம் சுமார். டைரக்ஷன் பரவாயில்லை. கதை தான் பிடித்தமில்லை" என்ற விமர்சனத்தை ஒரு மேதை, பேச்சில் நுழைத்தார்.

"என்ன சார் உங்களுக்குக் கதை பிடிக்கவில்லை?" சினிமாப் பைத்தியம் ஒன்று இடையே குறுக்கிட்டது.

"பிரம்மாவைப் போட்டு கலாட்டா செய்கிறான் சார்" ஒருவர் இப்படி அனுதாபப்பட்டார்.

"புராணக் கதையை.....அப்படியே எடுத்திருக்கான்."

"பிரம்மா...மும்மூர்த்திகளில் ஒருவர். அவர் சிருஷ்டித்தார் திலோத்தமையை! அவளையே அவர் காதலிப்பதென்றால்... தகப்பன் மகளை...சேச்சே!...அபத்தம்!!"

"பொறுங்கள், வாந்தியெடுத்து விடாதீர்கள்" கிண்டல் காரன் பேச்சை முடித்தான் இவ்விதமாக. திலோத்தமை பட விமர்சனங்களோடு அந்தக் கூட்டம் நகர்ந்தும்–சிதறியும்–வர வரக் குறைந்தும்–தேய்ந்துங் கொண்டிருந்தது. அந்த நடக்கும் பொன்வண்டுகள் .....பறக்கும் பட்டுப் பூச்சிகளாயின. 'காலேஜ் வேடர்'களும் வேறு பக்கம் திரும்பினர்.

அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளாமம் ஓரமாக ஒதுங்கி சின்னச்சாமியும் காந்தாவும் வந்துகொண்டிருந்தார்கள். காந்தாவின் கண்கள் கலங்கரை விளக்கு போலச் சுற்றியபடி யிருந்தன.

"உம்.....பார்த்து நட!" சின்னச்சாமி அதட்டினான்.

சின்னச்சாமி போலீஸ்காரர். வயது நாற்பது இருக்கும். வலுவேறிய உடம்பு. வாட்ட மற்ற நடை. திரண்டுஉருண்ட தோள்கள். நிமிர்ந்த நெஞ்சு. கம்பீரமான தோற்றம். கண்களிலே எப்போதும் சிவப்பு நிறம். கறுப்புக் குலையாத மீசைகள்.

காந்தா அவனுடைய வேகமான நடையோடு போட்டி போட முடியாமல் திணறித் திணறிப் பின் தொடர்ந்தாள். நீண்ட சாலையின் ஓரத்தில் நெடுக நிழல் தரும் மரங்கள் நின்றிருந்தன. அங்கே ஒரு பெரிய புளியமரம். மனித நட மாட்டத்தில் அதன் கிளைகளில் இருந்த பறவைகள் அடிக்கடி சிறகை யடித்துக் கொண்டன. அந்த மரத்தின் பக்கமாகச் சின்னசாமி சாலையிலிருந்து இறங்கினான். சாலைக்குக் கீழ்ப் புறமாகச் சிறிது தூரம் சென்றால், 'போலீஸ் லைன்.' அங்கே 18-வது எண்ணுள்ள வீடு சின்னச்சாமியுடையது.

"காந்தா! கீழே பார்த்து வா. பூச்சி பொட்டு இருக்கும்."

இதைச் சொல்லியபடிக் கொஞ்சம் மெதுவாக நடந்தான், பின்னல் திரும்பிப் பார்த்தபடி. வீட்டையடைந்ததும் சின்னச் சாமி பூட்டைத் திறந்துவிட்டு, நெருப்புக் குச்சியைக் கொளுத் தினன். காந்தா விளக்கை ஏற்றிக்கொண்டு அடுக்களைப் பக்கம் சென்றாள். போலீஸ் லன் வீடுதான் நமக்குத் தெரியுமே; குருவிக்கூடு! அடுக்களை படுக்கையறை எல்லாம் ஒன்றுதான்.

சின்னச்சாமி செருப்புகளைக் கழற்றிவிட்டு, ஒரு பீடியைப் பற்ற வைத்தபடி வாயிலில் உட்கார்ந்தான். பீடியின் சுருள் புகையோடு அவன் சிந்தனையும் ஒரு சுற்றுச் சுற்றியது. அதற்குள்,

"அப்பா! சோறு போட்டுவிட்டேன்" என்ற காந்தாவின் அழைப்பு கிடைத்தபடியால் பாதி பீடியை அணைத்துத் தீப்பெட்டியில் போட்டுக்கொண்டு உள்ளே சென்றான் சின்னச் சாமி.

மார்கழி மாதக் குளிருக்கேற்ற நல்ல பழைய சோறு; விறுவிறுப்பாகச் சுண்டக்குழம்பு. சாப்பாடு முடிந்தது.

"நீ சாப்பிடம்மா" என்று சொல்லிவிட்டுச் சின்னச்சாமி மீதி பீடியை வாயில் வைத்தபடி வெளிப்பக்கம் வந்தான். வயிற் றின் ஜிலு ஜிலுப்பை பீடிப்புகை சிறிது மாற்றிக்கொண்டிருந்தது.

காந்தாவின் சாப்பாடு முடிந்ததும் பாத்திரங்களைக் கழுவி விட்டுப் படுக்கிற இடத்தைக் கூட்டினாள். இரண்டு கிழிந்த பாய்களை எடுத்து விரித்து, எண்ணெய் வாசனை வீசுவது மட்டுமின்றி, உறை தேவையில்லை என்கிற அளவுக்கு நிறத்தைக் கறுப்பாக மாற்றிக் கொண்ட தலையணைகளை எடுத்துப் போட்டாள்.

"அப்பா, நான் படுக்கட்டுமா?"

"ஒரு டம்ளர் வெந்நீர் கொடு. இருக்கா?"

"பச்சத் தண்ணிதான் இருக்கு. வெந்நீர் போட விறகு ஏது?" முணு முணுத்தபடி ஒரு குவளைத் தண்ணீரைக் கொடுத்து விட்டுப் படுக்கையில் படுத்தாள்.

தெருப்பக்கம் உட்கார்ந்திருந்த சின்னச்சாமியின் உதட்டில் இன்னொரு பீடி அமர்ந்து கொண்டது. பீடியைப் புகைத்தவாறு நிமிர்த்திய தலையைத் தாழ்த்தாமலே உட்கார்ந்திருந்த அவனிடம்,

வான வெளியில் மேகத்தைத் தொட்டுத் தொட்டு விளையாடிய சந்திரன் பேசுவது போலிருந்ததோ என்னவோ; அவன் வைத்த விழியை எடுக்காமல் அசைவற்றிருந்தான்.

சந்திரன்! சின்னச்சாமியின் மனைவியின் பெயர்கூடச் சந்திராதான். அவள் மண்ணோடு கலந்து பத்து வருடமாகிறது. சின்னச்சாமியின் முப்பதாவது வயதில் சந்திரா பத்து வயது நிரம்பப் பெறுத காந்தாவைத் தாயில்லாப் பிள்ளையாக்கி விட்டுப் போய் விட்டாள். தகப்பனுர் உயிரோடிருந்த காலத்தில் சின்னச்சாமிக்குச் சந்திராவை எப்படியோ கல்யாணம் செய்துவைத்துப் பார்த்துக் கண்ணை மூடினுர். இடையே சாவு தன் கொடிய கரங்களை நீட்டிச் சந்திராவின் கழுத்தை நெறித்தது மட்டுமின்றிக் காந்தாவைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பை அந்தப் பரிதாபத்துக்குரிய போலீஸ்காரருக்குக் கொடுத்துச் சென்றது. மறு கல்யாணம் செய்துகொள்ள எத்தனையோ முறை முயன்று பார்த்தான். முன்னூறு ரூபாய் கூட இல்லாமல் எப்படி கல்யாணம் பண்ணுவது! கஷ்டப்படும் போது—கண்ணீர் விடும்போது—கதியில்லையே எனக் கதறும் போது—கைகொடுக்க வராத உறவினர்கள் கல்யாணமென்றுல் நாக்கைத் தட்டிக்கொண்டு வருவார்கள். பத்திரிகை தராவிட்டால் பல்லைக் கடிப்பார்கள். இந்த நிலையில் ஏழைக்குக் கல்யாண எழுவா?.....

அப்போதைய போலீஸ் சம்பளத்தைத்தான் கேட்கவேண்டியதில்லை; அன்ருடம் சாப்பாட்டுக்கே கஷ்டம். இதில் நோய் நொடிகள் ஏற்பட்டால், டாக்டர் தர்மவானுக மாறவேண்டும். காலில் முள் குத்திவிட்டால், முறிந்துவிட்டால், வண்டிக்காரன் பயந்தவனுக இருக்க வேண்டும். என்னதான் மேல் வரும்படி வந்தாலும் காப்பி, தேத்தண்ணீருக்குத்தான் சரியாக இருக்கும். கல்யாணம் செய்துகொள்கிற அளவுக்குச் சாதாரண போலீஸ் காரருக்குக் 'கிம்பள சான்ஸ்' கிடைக்குமா?

மனைவி இறந்துபோன துக்கம் மறைந்து, அடுத்த கல்யாணம் கிடையாதா என்ற கேள்வி ஏக்கமாக வளர்ந்து, சின்னச்சாமியின் இருதயத்தைத் துறட்டிபோட்டு இழுக்க ஆரம்பித்தது. வைகாசி—ஆவணி—தை—இப்படி மாதக் கணக்குகள் புரண்டு இந்த வருடம் அடுத்த வருடம் என்று ஒத்திபோடப்பட்டு அவனுக்காகப் பார்த்த பெண்கள் எல்லாம் கல்யாணம் செய்துகொண்டு பிள்ளையும் பெற்றுவிட்டார்கள். அவன் கதிதான் இப்படி என்றுல், பருவ

மடைந்து ஆறு வருடமாக வீட்டிலிருக்கும் காந்தாவுக்கும் கணவன் வரவில்லை. காந்தா விகாரமில்லை; சுமாரான அழகி. கறுப்புதான். கவின் பெறு முகமும் எடுப்பான தோற்றமும் வாய்ந்த திராட்சைக்கொடி அவள். பெண் பிடிக்கவில்லை என்று யாரும் சொல்லவில்லை; 'சீர்வரிசை என்ன செய்வார்கள்? கல்யாணச் செலவு பெண் வீட்டாருடையதுதானே?' இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமலேயே காந்தா அரும்புப் பருவம் அழியாமலிருந்தாள். சின்னச்சாமியின் இருதயம் நைந்து விட்டது. **சின்னச்சாமி வாழமுடியாதவன். காந்தா அவனுல் வாழவைக்கப்பட முடியாதவள்.**

மன அலைகளால் மயங்கிப் போயிருந்த அந்தத் துயர உருவம் திடீரென விரலில் சுட்ட பீடியின் நெருப்பால் உணர்ச்சி பெற்றுத் திடுக்கிட்டது. நிலாவும் மேகத்தில் மறைந்து கொள்ளவே சின்னச்சாமி ஒரு பெரு மூச்சோடு எழுந்தான். கதவைத் தாழிட்டுவிட்டு, விளக்கைக் கொஞ்சமாக அடக்கிவிட்டு, அந்தக் கிழிந்த பாயில் படுத்துக் கொண்டான். அவன் கண்களில் சோகம் படர்ந்திருந்தது. காந்தா உடம்பை நெளித்துக்கொண்டு சோம்பல் முறித்ததிலிருந்து அவளுடைய இருதயத்திலும் ஒரு பெரும் போராட்டம் நடந்திருக்கத்தான் வேண்டும் என்பது தெளிவாகத் தெரிகிறது.

வாழ்நாளின் வனப்பு மிக்க ஒரு பகுதி வீணே கழிவ தென்றுல்?...கொஞ்சு மொழியும் கோலாகலமும் அனுபவிக்க வேண்டிய பருவத்தில் ஊமையாக முடங்கிக் கிடப்பதென்றுல்?... காதல் கீதத்திற்கேற்ற இன்பக் கேளிக்கையாடவேண்டிய இளமை நாட்கள், நொண்டியாகி விடுவதென்றுல்?...எந்தப் பெண்ணுல்தான் தாங்கிக்கொள்ள இயலும் அந்த வேதனையை!

இந்த இருண்ட உலகில் ஒரு மனித ஜந்துவின் வீடு. அங்கே இரண்டு கிழிந்த பாய்கள். பாயைவிட அதிகமாகக் கிழிந்துபோன இரண்டு உள்ளங்கள்! தகப்பன்–மகள். தணலில் தவிக்கும் புழு! தாங்கொணு வேதனைப் புயலில் சிக்கிய தளிர்!

காந்தாவின் நீண்ட பெரு மூச்சும், அந்த மூச்சைத் தொடர்ந்து முனகிக்கொண்டே கிளம்பிய சின்னச்சாமியின் அசைவும்! அந்தோ...பரிதாபமான நிலைமை.

"அட பாழாய்ப்போன கடவுளே! அவர்கள் என்ன பங்களாவா கேட்கிறுர்கள்? பட்டு மெத்தையும், பவளக் கட்டி

லும், பன்னீர்க் குளியலும், பாதம் பருப்பும், பசும்பாலுமா அவர்கள் கேட்பது? பணக்காரனின் இருதயப் பசிக்கு எத்தனை எத்தனை இளம் பெண்கள் பலியிடப்படுகிறார்கள்! காசை வீசியெறிந்து நினைத்த இடத்தில் இந்திரனுக மாறும் மனித மகாவிஷ்ணுக்களையும்; வயிற்றையும் நெஞ்சையும் உடலுணர்ச்சிகளையும் உலரப்போட்டு வற்றலாக்கிக் கொண்ட வறுமை உருவங்களையும் "**ஆண்டவன் படைப்பு**" என்று சொல்ல மனித அறிவு அவ்வளவு மழுங்கியா விட்டது"—அந்தச் சிறிய வீடு இதைத்தான் உரத்த குரலில் அதட்டிப் பேசுவது போலிருந்தது.

சின்னச்சாமியின் மனம் தொடர்ந்து பேசத் துவங்கிற்று:—

"பணமில்லையென்றால் அவனுக்கு வாழ்வு கிடையாதா? உணர்ச்சி கிடையாதா? கடவுளே! ஏழைகளுக்கு வயிற்றையும் நெஞ்சையும் ஏன் உண்டாக்கினாய்? உனக்குப் படைப்புத் தொழிலில் தேர்ச்சியிருந்தால் ஏழைகளை வெறும் நடமாடும் பொம்மைகளாக அல்லவா சிருஷ்டித்து, முதலாளிகளுக்கு வேலை செய்யும் இயந்திரங்களாக ஆக்கியிருக்க வேண்டும்?

காட்டில் திரியும் மிருகங்களுக்குக்கூடச் சந்தோஷமுண்டே! ஜோடிப் புறுக்கள்—ஓடி விளையாடும் மான்கள்—பாடிப் பறக்கும் குயில்கள்—அவைகளை விடவா ஏழைகள் குறைந்துவிட்டார்கள்! நான் என்ன பாவம் செய்தேன்? உன் பக்தியில் குறைச்சலா? உனக்குப் பயந்து நடக்கவில்லையா? ஏன் இந்தச் சோதனை?"

அந்த மாஜி மனிதனின் அழுத்தமான கேள்விகளுக்குப் பதில் சொல்ல எந்த ஆண்டவனும் தயாராயில்லை. அவன் சோகக் குமுறலை காந்தாவின் உள்ளமும் ஒப்பாரியாக்கி விம்மிக்கொண்டிருந்தது. அவள் கண்களில் நீர் தேங்கி வழிந்து, கன்னத்தின் கூட்டில் காய்ந்துவிட்டது.

சின்னச்சாமியின் தொண்டையில் ஒன்றுமே அடைக்கவில்லை; ஆனாலும் லேசாகக் கனைத்துக் கொண்டான்.

"எம்மாடி!" காந்தாவும் தூக்க அசதியில் அலுத்துக்கொண்டதுபோல இந்த வார்த்தையோடு உடம்பை வளைத்துப் புரண்டு படுத்தாள்.

ஏதோ ஒரு பயங்கரமான முடிவால், அவன் முகத்தில் அசடு வழிவதை அந்த மங்கலான விளக்கின் வெளிச்சம் எடுத்துக்

காட்டிற்று. சரியாகப் படுத்துக்கொண்டான். முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். கண்களைக் கொஞ்சமாக மூடிக் கொண்டான்.

"சின்னச்சாமி!...சின்ன புத்திக்காரா!.....

என்ன காரியமடா...கசடனே!"

என்று ஒரு பயங்கரமாள குரல் அவன் நெஞ்சுக்குள்ளேயே கிளம்பியது.

ஒரு நிமிடம் அமைதி. அய்யோ! அந்த ஒரு நிமிடத்தில் அவன் இரத்த ஓட்டத்தில் எவ்வளவு கொதிப்பு! நரம்புகள் எல்லாம் நடுங்கின. நாவில் நீரில்லை. உதடுகள் வறண்டு விட்டன. கையை மெதுவாக எடுத்தான். உள்ளங்கையில் வியர்வை கொட்டிற்று. வேட்டியில் துடைத்துக்கொண்டு, கையைக் காந்தாவின்மேல் மெதுவாகப் போட்டான். அவள் ஆயாச மூச்சோடு நகர்ந்து படுத்தாள்.

"ஏய்!...பாதகா!...பரம சண்டாளா!...மகளடா மகள்!... நீ பெற்ற மகள்!...மகா பாதகத்தைச் செய்யாதேடா மடையா!... மண்டை வெறி பிடித்தவனே!...."

அவன் தலையில் ஆயிரம் சம்மட்டி அடிகள். ஆங்காரமான குத்துக்கள். கொடூரமான அரிவாள் வெட்டுக்கள். சின்னச்சாமி யின் மார்பு படபடவென்று அடித்துக்கொண்டது. ஈரமற்ற நாக்கால் உலர்ந்துபோன உதடுகளை ஒரு முறை நக்கிக்கொண்டு பேசாமல் படுத்திருந்தான். சற்று அமைதி. அந்த அமைதியும் மின்னலாய் மறைந்தது. விஷமேறி நடுங்கும் அவன் ஈர விரல்கள் மீண்டும் காந்தாவின் முகத்தில் விழுந்து, நத்தைகள் ஊர்வது போல நகர்ந்துகொண்டிருந்தன. அந்த விரல்களைக் காந்தாவின் நடுங்கும் கரம், லேசாகப் பற்றியது....பற்றியது மட்டுமா? மெதுவாக அழுக்கியது.

இடிகள் பல இடிப்பதுபோல...மின்னல்கள் பல மின்னுவது போலத்...திடீரெனப் புயல் கிளம்பிப் பூகம்பம் ஏற்பட்டுக் கடல் கள் குமுறி யெழுந்தது போலத்...தடதடவென ஆட ஆரம்பித்தன இரண்டு இரத்த பாசமுள்ள உடல்கள். கால் பக்கமிருந்த விளக்கைச் சின்னச்சாமி உதைத்தான். அது கீழே சாய்ந்து அணைந்துபோய், எண்ணெய் தரையில் கொட்டியபடி உருண்டது.

கடவுள்—அந்தக் கற்பனைக் பெயரால் ஏற்பட்ட தலைவிதி—தலைவிதிக்காளான சமுதாயம்—அந்தச் சமுதாயத்திற்கேற்பட்ட சட்டம்—அந்தச் சட்டத்தை முறை தெரியாமல் உடைத்தெறிந்த இரு சண்டாளர்கள்—வாழ முடியாதவர்கள்!

பொழுது சரியாக விடியவில்லை. மங்கலான வெளிச்சம் வீட்டுக்குள் நுழைந்தது. சின்னச்சாமி விழித்துக்கொண்டு, காந்தாவின் முகத்தைப் பார்க்கத் திரும்பினான். அவன் கண்கள் அவனையறியாமல் மூடிக்கொண்டன. காந்தா அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தாள். வேகமாக எழுந்து வெளியே வந்த சின்னச் சாமி நிற்கவேயில்லை; பைத்தியக்காரனைப் போல நடந்து கொண்டேயிருந்தான்.

காலையில் ஒன்பது மணியிருக்கும்; காந்தா கன்னத்தில் கைவைத்துக்கொண்டு வாயிற்படியில் சாய்ந்திருந்தாள். 'திலோத்தமா' சினிமாப் பட விளம்பர வண்டி தெருவில் போய்க் கொண்டிருந்தது.

அபாக்ய சிந்தாமணி

அதோ தெருவிலே பிச்சை எடுத்துக்கொண்டிருக்கிறாளே ; அவள் யார் தெரியுமா ? **" அவள் பரம்பரைப் பிச்சைக்காரியல்ல ; பணக்காரியாகத்தான் வாழ்ந்தாள் ; காலத்தின் சுழற்சியால் இந்தக் கதிக்கு ஆளாகிவிட்டாள் "** என்று அவளுடைய பழைய கதையைச் சொல்லி உங்கள் பொறுமையைச் சோதிக்கப் போகிறேன் என்று எண்ணுதீர்கள். அவள் பரம்பரைப் பிச்சைக்காரியேதான். அதாவது அவளது பாட்டிகூட ஒரு பிச்சைக்காரிதான் ! நீங்கள் பார்க்கிற இந்தப் பிச்சைக்காரிக்கு வயது என்ன இருக்கும் என்று நினைக்கிறீர்கள் ? சுமார் நாற்பது இருக்கும் என்று கூறுகிறீர்கள் அல்லவா ? அல்ல அல்ல ; சரியாகவே சொல்லுகிறேனே ; அவள் வயது முப்பத்தைந்துதான் ! ஆனால் அப்படி மதிக்கத் தோன்றாது. நாற்பது ஐம்பதுதான் மதிக்கத்தோன்றும். இந்தக் காலத்தில் ஐம்பது அறுபது ஆனதுகள் பன்னீராட்டைப் பிராயத்துப் பருவச் சிட்டுகள்போலப் பற்களைப் பூட்டிக்கொண்டு, பவுடரால் முகப் பள்ளங்களை மூடிக்கொண்டு, சாயத்தால் கொவ்வை இதழும் மையால் பிறைப் புருவமும் அமைத்துகொண்டு, நாகரிகத்தின் எவரெஸ்டை எட்டிப்பிடித்து எக்களிக்கும் காட்சிகளை நாம் காண்கிறோம். இந்த ஏழைப் பிச்சைக்காரி அப்படி யெல்லாம் தன்னுடைய வயதை மாற்றிக்கொள்ள விரும்பவில்லை. விரும்பினாலும் பணமில்லை. ஆகையினால், பருவக் காற்றால் படிந்த முதுமைத் தூசுகளை மேனியிலே சுமந்தவளாய் அவள் திருவாரூர்த் தெருவிலே அலைந்துகொண்டிருக்கிறாள்.

வீட்டுக்கு வீடு வாயிலிலே நின்று கரகரத்த குரலிலே பாடுகிறாளே ; அந்தப் பாட்டு என்ன பாட்டு என்று புரிகிறதா? புரியாவிட்டால் என்னைக் கேளுங்கள் சொல்லுகிறேன்.

"ஏற்பதிகழ்ச்சியென்ற
எங்கள் ஔவைப் பாட்டிதான்
ஐயமிட்டுண் என்றும் பாடியிருக்காளே !"

"பிச்சைபுகினும் கற்கை நன்றே
எச்சில் இலையாவது போடுதல் நன்றே !"

இப்படி வசனத்தையே, அவள் கண்டுபிடித்த புதியதொரு ராகத்திலே தேவைப்பட்ட பிர்க்காக்களைப் போட்டுக்கொண்டு வீட்டுக்குத் தகுந்தாற்போலப் பாடுகிறாள்.

அவளைப்பற்றி உனக்கென்ன இவ்வளவு விவரம் புரிகிறது என்று என்னைக் கேட்கிறீர்களா? ஒரு நாள் எங்கள் வீட்டில் இவளது சங்கீதக் குரல் கேட்டது. அவள் யார் என்று தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசையால் பலநாள் காத்திருந்த நான், அன்றைய தினம் அவளது வரலாற்றைக் கேட்க ஆரம்பித்தேன். அவளும் ஆரம்பித்து அரைமணி நேரத்திற்குப் பிறகுமுடித்தாள். அந்தக் கதையைக்கேட்ட பிறகும் அவளுக்குப் பிச்சை போடாமல் இருப்பது யாராலும் முடியாத காரியம்தான். எங்கள் வீட்டில் என் தந்தை நினைவு நாள் வேறு அன்று! அதனல் அவளுக்குப் பாயசம் வடையுடன் நல்ல சாப்பாடு கிடைத்தது. "மகராஜனு யிருக்கணும்சாமி" என்று வாழ்த்தி விட்டு அவள் விடை பெற்றுக் கொண்டாள்.

சாதாரண மனுஷனுயிருக்கும் போதே சங்கடமும் சலசலப்பும் தாங்கவில்லை ; இன்னும் மகராஜனுக வேறே போய் மாட்டிக் கொண்டு விழிக்க வேண்டுமா என்று மனத்திலே நினைத்துக் கொண்டு, அவளை வழியனுப்பினேன். அந்தப் பிச்சைக்காரியின் சொந்த ஊர்—இல்லை—மன்னிக்கவேண்டும் ; அவள் பிறந்த ஊர் திருச்சிக்குப் பக்கத்திலேயுள்ள **சிந்தாமணி** என்ற பகுதி.

அதனல் அவளுக்கும் அவள் தாயார் சிந்தாமணி என்றே பெயர் வைத்துவிட்டாள்போலும்! பிச்சைக்காரியின் வயிற்றிலே இந்த அபாக்கிய சிந்தாமணி அவதரித்து, நாளொரு வியாதியும், பொழுதொரு கண்டமுமாக வளர்ந்து, தாய்க்கு ஒத்தாசையாகப் பிச்சையெடுக்கிற வேலையிலும் ஈடுபட்டாள். சிந்தாமணிக்குப்

பத்து வயது நிரம்பியபோது, அவளுடைய தாயார் நோய்வாய்ப் பட்டாள். சிந்தாமணிப் பகுதியில் உள்ள ரோடு ஓரத்து ஐந்தடியிலேதான் சிந்தாமணியின் தாயார் மரணத்தோடு போராடும் களம் அமைக்கப்பட்டிருந்தது. தாய்க்குக் கஞ்சி காய்ச்சி ஊற்றித் தானும் வயிற்றுப் புயலை அடக்கிக் கொள்ள வேண்டிய சமாளிக்க இயலாத பிரச்சனை, அந்தப் பத்து வயதுப் பசலையின் தலையிலே வந்து விழுந்தது. இரண்டொரு நாட்கள் எப்படியோ கஷ்டப்பட்டு வெளியேறத் துடிக்கும் தாயாரின் மூச்சை இழுத்து நிறுத்தி, அவள் ஆயுள் அணைந்து விடாமல் அருகிலிருந்து பாதுகாத்தாள் சிந்தாமணி.

பிச்சைக்காரப் பெண்ணுக்குத் தாய்ப் பாசம் இருக்காதா என்ன? பிச்சைக்காரத் தாயாருக்குத்தான் மகளின் எதிர் காலத்தைப் பற்றிய ஏக்கம் பிறக்காமல் இருக்க முடியுமா?

"மகளே, இனிமேல் என்னை நம்பாதே கண்ணே! என் காலம் ஒரு வழியாக முடிந்துவிட்டது! பல் காட்டியவனுக்கொல்லாம் சம்மதப்பட்டுப் பாழும் உடலை வளர்த்தேன். அதோ சாக்கடை யிலே சொறிபிடித்த உடலில் எடுக்கும் எரிச்சலை அடக்க விழுந்து புரளுகிறதே நாய்; அதைப் போலவே வெறிபிடித்த நாய்கள், மனித உருவிலே என்னை நெருங்கி நாசப்படுத்தி விட்டார்கள். என் கண்ணே! நீயும் என்னைப்போல ஆகிவிடாதேயம்மா! நமது குடும்பம் பிச்சைக்காரக் குடும்பம்தான்; ஆனாலும் உனது பாட்டி, மிகக் கௌரவமாக வாழ்க்கை நடத்தினாள். என்னையும் பிச்சைக் காரியாக்காமல், வாழும் சமுதாயத்திலே ஒரு அங்கத்தினராக ஆக்கிவிடப் பெருமுயற்சி செய்தாள். என்னைப் படிக்க வைத்தாள். ஒரு பெரிய மனிதரின் தயவை நாடிப் படித்தேன். ஆனால் கண்ணே, என் தாய் கண்ணை முடியதும், என் கண்களும் மூடப்பட்டு விட்டன. பிச்சைக்காரி மகள்தானே என்று பள்ளிக் கூடத்து மாணவர்கள் என்னை வட்டமிட்டார்கள். எவ்வளவு அழகாக நானிருந்தால் இவர்கள் என்னை வட்டமிட வேண்டும் என்று நான் கர்வமடைந்தேன். மாணவர்களிடம் பெரிய தொரு யுத்தமே ஏற்படவேண்டும் என் பொருட்டு என்று எதிர்பார்த்தேன். தேன்கூட்டை நாடும் கரடிகள்போல அந்தக் காளைகள் கூடினார்கள். மெய்ம்மறந்தேன். உணர்விழந் தேன். பெண்களுக்குப் படிப்பு கூடாது என்று கூறும் பித்தர் மொழிக்கு இந்தப் பழிகாரியும் ஒரு எடுத்துக்காட்டாக ஆனேன் படித்துறையிலே ஒரு முறை வழுக்கினால், அடுத்த படியிலே காலை

அழுத்தமாக ஊன்றித் தப்பி விடலாமென்று நினைக்கக்கூட நேர மிருக்காதே! அதற்குள் குளத்தின் அடித் தளத்திற்கல்லவா போய்ச் சேரவேண்டும். அதவும் என்னைப்போல நீந்தத் தெரியா தவர்கள் கதி? சமுதாயத்தின் பாசி படிந்த பாழுங்குளத்திலே சருக்கி விழுந்தேன். நாயைக் குளிப்பாட்டி நடுக்கூடத்தில் சேர்க்கலாமா என்று வசைமாரி பொழிந்தபடி, பெரிய மனிதர், என்னை வீட்டைவிட்டுத் துரத்தினர். தாயாரின் வேலையை மேற் கொண்டேன். பிச்சை எடுத்தேன் என் வயிற்றுக்கு! பிச்சையும் கொடுத்தேன் வாலிபர்களின் வெறிச் செயலுக்கு! இப்படி நகர்ந்த என் வாழ்விலேதான்—நட்சத்திரமே, நீ உதயமானாய்! நீயும் என்னைப்போல ஆகிவிடாமல் உன் பாட்டியைப் போலக் கௌரவ மாக மானத்தோடு வாழும்மா!''

என்று மரண முகப்பிலே அனுபவ சுருதியோடு கலந்த சோக கீதத்தை இசைத்துவிட்டு, மங்களம் பாடித் தன் கச்சேரியை முடித்துக்கொண்டாள் சிந்தாமணியின் தாய்!

தாயுமற்ற அனுதையாகிவிட்ட சிந்தாமணி பிச்சைக்காரச் சிறுமியாகச் சில நாள் அலைந்தாள். திடீரென்று அவளுக்கு ஒரு ''அதிர்ஷ்டம்'' அடித்தது. அனுதைச் சிறுவர்களைப் பாதுகாத்துக் கல்வி வழங்கும் ராமலிங்கசாமி குருகுலத்திலே அவளுக்கும் ஒரு இடம் கிடைத்தது. அந்தக் குருகுலத்தின் பிரதம ஆசிரியர் பழுத்த ராமலிங்க பக்தர். ராமலிங்க சிவானந்தம் என்பது அவரது பெயர். வயது ஐம்பதுக்கு மேலிருக்கும். ராமலிங்க ருடைய அருட்பாக்கள் அவருக்கு மனப்பாடம். தேவார, திரு வாசகங்களில் அவர் புலி. ''எம்மதமும் சம்மதமே—தென்னு டுடைய சிவனே போற்றி!'' என்ற வார்த்தைகளை அவர் முணு முணுக்காத நேரமே கிடையாது. அவரது பார்வையிலே பட்ட அனுதைச் சிறுமியை அவர்தான் குருகுலத்தில் கொண்டுவந்து சேர்த்தார். சிந்தாமணியும் நன்கு கல்வி பயின்று தேர்ச்சி பெற்றாள். சிவானந்தரின் மூத்த மகன், ஜோதியானந்தம் மேல் நாட்டுப் படிப்புப் படிப்பதற்காக அமெரிக்கா போயிருந்தான். அவன் படிப்பை முடித்துக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தான். அவனது கருத்தைக் கிளறும் சந்திப்பு ஒன்று குருகுலத்திலே நிகழ்ந் தது. அதுதான், சிந்தாமணியின் சந்திப்பு! சிந்தாமணி—ஜோதி யானந்தம் இருவரும் காதலராயினர். அந்தக் காதல் கட்டத்தை வர்ணிக்க வேண்டுமா என்ன? அந்தக் கட்டங்களைக் கண்டுகண்டு, கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருக்கும் உங்களிடம், அதை

வேறு நினைவுபடுத்திப் பிரம்மச்சாரிகளுக்குப் பெரும் வேதனையையும், பெருங் குடும்பிகளுக்குப் பெரிய வேதாந்த நினைவுகளையும் உண்டு பண்ணுவானேன்!

ஜோதியானந்தத்தின் இருதய ஜோதியாகச் சிந்தாமணி ஆகிவிட்டாள் என்பதை அருட்பெருஞ் ஜோதியின் பக்தர் சிவானந்தம் கேள்விப்பட்டார்.

"எம்மதமும் சம்மதமே!" என்று முணுமுணுத்த அவரது வாய், மகனை வசை பாட ஆரம்பித்தது! "காதலாம் காதல்! நாயைக் கொண்டுவந்து நடுவீட்டில் வைத்தால் அது இப்படித்தான் ஆகும்" என்று கத்தினர். உண்மையிலேயே சிந்தாமணி நாயல்ல!

சிந்தாமணியின் தாயாரைப் பார்த்து அவளுக்கு உதவிய பெரிய மனிதர்–**நாயைக் குளிப்பாட்டி நடுவுள்ளே வைத்தால்...** என்று திட்டினரே, அதற்கும் இப்போது ராமலிங்க சிவானந்தர் திட்டுவதற்கும் வித்தியாசமிருக்கிறது!

பொதுமக்களிடம் புகழ் பெறுவதற்காக, குருகுலத்தார் அளிக்கும் பாராட்டு மாலைகளைச் சுமப்பதற்காக, சிவானந்தர் சிந்தாமணிக்கு அபயம் அளித்தது என்னவோ உண்மை!

அதற்காக அவள் தனக்கே மருமகளாக வர வேண்டுமென்று ஆசைகொண்டால் அதை அவரால் அனுமதிக்க முடியுமா?

மகனைக் கண்டித்தார். சிந்தாமணியைப்பற்றி அவதூறுகள் கூறினர். காதல் என்பது ஒரு போலி வார்த்தை என்பதற்கு ஆயிரமாயிரம் ஆதாரங்கள் தேடினர்.

"கூடு கண்ட பூனை, பாலைப் பாஷாணம் என்று தானப்பா கூறும்" என்று ஜோதி பதில் தந்தான். அவரோ கேட்கவில்லை. குருகுலத்திலிருந்து சிந்தாமணி விரட்டப்பட்டாள், விபசாரக் குற்றம் சாட்டப்பட்டு! தன்னுல் ஜோதியின் குடும்பம் குலையக் கூடாது என்று எண்ணிய சிந்தாமணி, ஜோதிக்கு எவ்வளவோ எடுத்துச் சொல்லி, அவன் தன்னை மறந்துவிடவேண்டும் என்று மன்றாடினாள். அவனே கேட்கவில்லை. அவளைப் பின் தொடர்ந்தான்.

இப்படிச் சில நாட்கள், துன்பத்திலும் இன்பங்கண்டாள் அவள். ஜோதியின் தந்தை பைத்தியமாகமாறிவிட்டார். மகனின் போக்கு அவர் மூளையைக் குழப்பிவிட்டது.

அந்தக் குடும்பமே தத்தளித்தது. ஜோதியின் தாயாரும் ஜோதியின் சகோதரிகளும் சிந்தாமணியிடம் வந்து தங்கள் குடும்பத்தைக் காப்பாற்ற "ஜோதியைத் திரும்பக் கொடு!" என்று "மடிப்பிச்சை" கேட்டார்கள். "குடும்பத் தலைவன் ஜோதிதான். அவனும் போய்விட்டால் பைத்தியக்காரராகி விட்ட தந்தையுடன் எப்படியம்மா இந்தக் குடும்பம் நல்ல நிலைமைக்கு வரும்? எங்கள் மீது இரக்கம் காட்டம்மா" என்று புலம்பினர்கள்.

"அனைதையாகக் கிடந்த உன்னை ஆதரித்து, இவ்வளவு நாள் பராமரித்தவரான உன் தந்தை போன்ற சிவானந்தருக்கு, இப்படியாவது ஒரு நன்றி காட்டக் கூடாதா?" என்று குருகுலத்துத் தோழிகள் அவளுக்குப் புத்தி கூறினர்கள். சிந்தாமணி யாருக்கும் பதில் சொல்லாமல் மௌனமாகப் போய்விட்டாள்.

வெளியூர் சென்றிருந்த ஜோதி சிந்தாமணியின் வீட்டுக்கு வந்தான். ஒரு சிறு ஓலை வீடு அது; அவர்கள் குடும்பம் நடத்தக் கட்டிக்கொண்ட தற்காலிக மாளிகை. கதவைத் தட்டினான். கதவு தானே திறந்தது; உள்ளே எட்டிப் பார்த்தான். இருளில் மங்கலான வெளிச்சம் தெரிந்தது. "கதவைத் தாழிடாமலே தூங்கி விட்டாளே" என்று கூறிக்கொண்டே, "சிந்தாமணி!" என்று குரல் கொடுத்தான். பதில் இல்லை. படுக்கையைப் பார்த்தான், திடுக்கிட்டான். அலறியே விட்டான்! என்ன நினைக்கிறீர்கள்? சிந்தாமணி போய்விட்டாள் என்றா? அல்லது தற்கொலை செய்து கொண்டாள் என்றா? தற்கொலை செய்து கொண்டிருந்தால் அவள் என்னிடம் கதையைச் சொல்லியிருக்க முடியாதே—அதனால் அவள் ஓடித்தான் போய்விட்டாள் என்று முடிவு கட்டுகிறீர்களா? அதுதான் இல்லை!

ஜோதி கண்ட காட்சி அது அல்ல. ஒரு கட்டு மஸ்தான தேகமுள்ள வாலிபனின் மேனியை இறுக அணைத்தபடி சிந்தாமணி தூக்கத்தில் ஆழ்ந்திருந்தாள். அவளது மெல்லிய கன்னங்களிலே அந்த வாலிபனின் முகம் புதைந்திருந்தது.

"அடிப் பாவி" என்று ஜோதி கத்தினன். சிந்தாமணி எழுந்தாள்!

அவள் கழுத்தை நெறிக்க ஜோதி துடித்தான். அதை அந்த வாலிபன் தடுத்தான்.

"இது பல நாளாய் நடக்கிறது" என்று சிந்தாமணி விளக்கம் பேசினாள். ஜோதி தன் தலையில் அடித்துக் கொண்டு, வீட்டுக்குத் திரும்பினான். "விபச்சாரி! விபச்சாரி!" என்று அவன் வாய் உளறிக்கொண்டேயிருந்தது. அப்படி அவன் விபச்சாரியாக வாவது கருதித் தன்னை மறந்துவிட்டால் போதும் என்பதற் காகவே சிந்தாமணி அந்தக் கொடிய செயலில் இறங்கினாள் என்ற உண்மை அவனுக்குத் தெரியாது.

அவன் எண்ணியிருக்கிறான் அவள் விபச்சாரி என்று!

அவளை விபச்சாரியாக்கியது அவளது ஆசைப் பெரு வெள்ளமல்ல!

ஜோதியின் குடும்பத்திற்கு ஆறுதல் அளிக்கவேண்டும் என்பதற்காகவே அவள் அந்த முடிவுக்கு வந்தாள் என்பது அவளுக்கு மட்டுமே தெரியும்.

விபச்சாரி என்று பெயர் எடுத்தாலும் பரவாயில்லை.

குடும்பத்தைக் கெடுத்த பழிகாரி, சண்டாளி, என்ற பெயர்களைச் சுமக்க அவள் விரும்பவில்லை, அனைவருக்கும் வரவேற்பு வழங்கும் மண்டபமாக அந்தக் குடிசையை அமைத்துக் கொள்ளவில்லை.

கொள்கை நிறைவேறியதும், அந்த ஊரைவிட்டு வெளி யேறினாள். "என் அம்மா ஒழுங்காக வாழச் சூழ்நிலையிருந்தும் ஒழுங்காக வாழவில்லை. நானே ஒழுங்காக வாழ எண்ணங் கொண்டும் சூழ்நிலை என்னை ஒழுங்காக வாழ விடவில்லை!"

இதுதான் அந்தப் பிச்சைக்காரி தன் கதைக்குத் தந்த முடிவுரை. "ஜோதியின் தகப்பனார் என்ன ஆனார்?" என்று கேட்டேன். அவருக்குப் பைத்தியம் தெளிந்து விட்டது-ஆனால் அவரது மகன் ஜோதிக்குப் பைத்தியம் பிடித்துக் கடைசியில் இறந்தே விட்டான்" என்று அவள் அழுதுகொண்டே சொன்னாள். "ஆமாம்—ஜோதி உன்னை மறக்க வேண்டுமானால், நீ தற்கொலை செய்து கொண்டிருக்கலாமே—அதற்காக இப்பெரும் பழிக்கு ஆளாக வேண்டியதில்லையே?" என்று நான் அவளைக் கேட்டேன். அதற்கு அவள் தேம்பும் குரலில் சொன்ன பதில் இதுதான்:—

"தற்கொலை செய்து கொள்ளத்தான் நினைத்தேன். ஆனால் ஜோதியின் அன்புச் சின்னம் என் வயிற்றிலே மூன்று மாதம் வளர்ந்திருந்தது. அதை அழிக்க நான் விரும்பவில்லை. அதற்

காகவே தகாத தந்திரத்தைக் கையாண்டு, ஜோதியின் மனத்தை மாற்றினேன். ஆனல் நான் எதற்காக உயிர் வாழ இச்சித்தேனு, அந்த ஆசை நாசமாகி விட்டது. போஷாக்கில்லாத நிலையில் பிறந்த ஆண் மகவு இந்த உலகத்தைப் பார்க்க விருப்பமில்லாமல் பிரேதமாகவே பிறந்துவிட்டது.'' இதைச் சொல்லிவிட்டு, அவள் ஒரு பெருமூச்சோடு எழுந்தாள்.

துயரத்தின் சாயல், அவளது ஒவ்வொரு வார்த்தையிலும் வெளிப்பட்டது. அதோ அந்த வீட்டுக்கெதிரே பாடுகிறுள் பாருங்கள்; அந்தச் சோக கீதத்தில் கூட ஏழ்மையின் பிரதி பலிப்பு இல்லையே! காதலின் தோல்விதானே எதிரொலிக்கிறது!

பாலவன ராஜா

"**நா**ம் வெறும் மாணவர்கள் மட்டுமல்ல—எதிர் கால உலகத் தின் சிற்பிகள்!"—இப்படிப் பத்து மாணவர்களைப் பார்க்கும் போதெல்லாம் **கந்தையா** சப்தம் போட்டுச் சொல்வான். சிரித்துக் கொண்டே சொல்வான். இதை மற்றவர்களுக்கு நினைவுபடுத்த வேண்டியதுதான் தன்னுடைய பிறவிப் பயனைக் கருதியவன் போல் சொல்லிக்கொண்டே இருப்பான்!

எங்கள் கல்லூரி ஒரு பலசரக்கு மண்டி; யார் எதை எதிர் பார்த்து வருகிறார்களோ அது தப்பாமல் கிடைக்கும். காதல் வேண்டுமா? தோகை மயிலாளின் ஜாகையை நோக்கிப் படை யெடுக்கும் ஒரு இளஞர் பட்டாளம்! பாதையை மறிக்காமல் "வாழட்டும்" என்ற பெரும் உபதேசத்தோடு ஒதுங்கிவிடு வார்கள் மற்றவர்கள்! அறிவு வேண்டுமா? அதோ இருக்கிறது நூல்நிலையம். புத்தகங்களைக் கட்டி அழுதபடியே இருக்கலாம்..... அரட்டை அடிக்கவேண்டுமா? ஒரு மணி நேரமா அல்லது நாள் முழுவதுமா? என்று கேட்டபடி ஒரு கூட்டம் வரும்! மற்றும் மேட்னிக் காட்சி ரசிகர்கள், சீட்டுக் கச்சேரி வித்துவான்கள், இந்த ரகத்தினர் ஏராளம்! ஏராளம்!

அந்த வகுப்பின் கடைசி 'டெஸ்கி'ல் வசிஷ்ட மண்டல மென ஒரு சில நட்சத்திரங்கள் ஒளிவிட்டுக்கொண்டிருந்தன. அதிலே வட்டமிடும் நிலவாகத் திகழ்ந்தான் கந்தையா.

"வாழ்க்கையிலே ஒரு லட்சியம் வேண்டும்" என்று பெர்னட்ஷாவைப் போல உபதேசம் செய்வான். இங்கர்சாலைக் கொண்டுவந்து நிறுத்துவான்.

"நாம் அதிர்ஷ்டசாலிகள்? புதிய திராவிடத்தை நாம்தான் மலர்விக்கவேண்டும். நீலவானிலே அடக்குமுறை இருள் கவ்வியிருக்கிறது. அதோ! தேன் அருந்த நம் எதிர்காலச் சந்ததிகளாம் தும்பிகள் துதிபாடி நிற்கின்றன. வெள்ளி நிலவே! திராவிடப் பெருங்குடி மக்களே! நீங்கள்தான் எழ வேண்டும்!...நாளையே திராவிடம் மலர்ந்துவிடும்..." இப்படி அழகு நடை போடும் கவிதை மணிகளைக் கந்தையா அள்ளி அள்ளி வீசுவான். அவன் மேடையேறினால் புராணக் கொள்கைகள் பாடையேறுமே என்று அஞ்சும் பண்டிதர் கூட்டம்!

அவன் மட்டுமல்ல, அவனிடம் ஒரு படையே இருந்தது. வகுப்பின் கடைசி 'பெஞ்சி'லே கடைசிப் பையன் கண்ணையன். "பாரதிதாசன் பரம்பரையிலே இவன் மூத்தவன்" என்று அவனைப் பற்றிக் கந்தையா விருது அளித்திருந்தான்.

அவன் பக்கத்திலே உட்கார்ந்திருப்பவன் ராமு; அந்தக் கல்லூரியிலே 'ஈன்ஸ்டினின் தியரி'யைப்பற்றி நன்றாகத் தெரிந்தவன் அவன். அவனுக்காக ஒரு முதல் வகுப்புத் தேர்விலே, உதவி நிதி காத்திருந்தது. இங்கிலாந்து சென்று படித்து ஒரு 'புரொபஸர்' ஆகவேண்டுமென்பது அவன் கனவு!

மற்றவன் ஒரு பாடகன்; தென்னாட்டு இசையை "மாடர்னைஸ்" செய்யவேண்டும் என்று முனகிக்கொண்டே இருப்பான்!

இந்த வருங்கால மேதைகளுக்கெல்லாம் கொள்கை வடிவம் கொடுத்து வளர்த்துவந்தான் கந்தையா—என்னவோ வருங்கால திராவிட நாட்டில் அவர்களுக்கெல்லாம் ஒவ்வொரு இலாகா கொடுப்பதைப்போல! இந்தக் 'கந்தையா' குழுவினரால் தனது கல்லூரிக்கு மாறாத புகழ் வரப்போகிறது என்று நினைத்தார் கல்லூரித் தலைவர்! ஆசிரியர்கள் அவர்களிடம் அன்பு காட்டாவிட்டாலும் அவர்களுடைய 'எதிர்காலத்'திடம் மரியாதை செலுத்தினர்.

அகில உலகமும் புகழும் அரசியல் மேதை, விஞ்ஞான வித்தகன், ஓவிய நிபுணன், இசை வல்லுநன், இப்படிப் பலவித கோணங்களில் காட்சி தந்தது அவர்கள் எதிர்காலம்.

பாவம்! சூதாட்டம் போலன்றி, மாசுமருவின்றித் துவங்கிய அந்த எதிர்காலம் ஏக்ககாலமாக மாறும் என்பதை அவர்கள் மாணவப் பருவம் உணர்த்தவே இல்லை!

சந்தர்ப்பம் ஒரு சதிராடும் சூன்யக்காரி! பொங்கி எழும் வாலிபம் இருக்க—'உம்' என்ற மாத்திரத்தில் பகைவரைச் சங்காரம் செய்யும் திறனிருக்க—அவர்களையெல்லாம் விட்டு விட்டுச் செல்வச் சிரிப்பிலே ஆழ்ந்து அழுகிப்போன பிணத்திற்கு மாலை சூட்டும் மாய்மாலக்காரி அவள்! அந்தச் சந்தர்ப்பத்தின் குளிர்ப் பிடியிலே ஏழைக் கந்தையாக்கள் எப்படி மாட்ட முடியும்?

இப்படியே ஆண்டுகள் பல ஓடின. ஓடும் ரயிலில் 'டிக்கெட் பிளீஸ்' என்றபடி நகர்ந்துகொண்டிருந்தேன் நான்! அந்த ஆள் மௌனமாகச் சிந்தனையை எங்கோ மேயவிட்டுக்கொண் டிருந்தான். "சரிதான்...மாட்டிக்கொண்டான் ஒருவன்" என்று நினைத்தபடி அவனை அதட்டினேன். அவன் திரும்பினான். "என்னைத் தெரிகிறதா சார்! நான்தான் சார் உங்களோடு கல்லூரியில் படித்த கந்தையா!" என்றான்.

என்னால் நம்ப முடியவில்லை. கந்தையா எங்காவது வெளி நாடுகளிலே மேல் படிப்புக்காகச் சென்றிருப்பான்—உலகம் போற்றும் அறிஞனாகத் திகழ்வான்—என்று நினைத்துக்கொண்டி ருக்கும் நான், சாதாரணக் கந்தல் அணிந்த கந்தையாவை நினைத்துப்பார்க்கமுடியவில்லை!

"என்னப்பா கந்தையா! உன்னோடு சேர்ந்த கூட்டாளிக ளெல்லாம் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? முதல் வகுப்பு வாங்கிய ராமுவுக்கு அமெரிக்கா செல்ல "ஸ்காலர்ஷிப்" கிடைத்து விட்டதா? கவிஞர் கண்ணையன் ஏதோ தமிழ் ஆராய்ச்சி செய்யப் போவதாகச் சொல்லிக்கொண்டிருப்பானே," என்று ஆர்வ மிகுதி யால் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனேன்.

"ஆமாம்! கந்தையா முதல்தரமான பேச்சாளன்; எதிர் காலத்தில் நல்ல அரசியல்வாதியாக வருவான் என்று எதிர் பார்த்தீர்கள்.

"ராமு ஒரு கணித மேதை! கண்ணையன் ஒரு கவிஞன்! சுந்தரம் ஒரு சங்கீத ரத்தினம்! கோபாலன் சிறுவனாக இருக்கும் போதே பறக்கும் விமானம் செய்த ஆராய்ச்சிக்காரன். அவர்கள்

எல்லாருமே இப்போது குமாஸ்தாக்கள்'' என்று சொல்லிய படிக் 'கோ'வென்று அழுதுவிட்டான்.

''இதோ பார்த்தாயா'' என்று என்னிடம் பத்திரிகையில் வந்த ஒரு போட்டோவைக் காண்பித்தான்! ''அடே! இவன் பிச்சுமணியாச்சே! மேடையிலே நீ கேட்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல முடியாமல் தவிப்பானே? இவனுக்கு என்னப்பா இப்போ?'' என்றேன்.

''அவன் சாதாரணப் பிச்சுமணியல்ல இப்போது; அவன் அப்பா ஒரு மாஜி கலெக்டர். அவன் அத்திம்பேர் டெல்லி செகரெட்டரியேட்டில் இருக்கிறார். அவன் மாப்பிள்ளை மந்திரிக்கு உறவு. இப்போது அவன் ஐ. நா. சபைக்குப் போகிறான், நம் நாட்டுப் பிரதிநிதியாக!'' ஆவேசத்தோடு பேசிக்கொண்டே போனான்! வண்டி ஸ்டேஷனில் நின்றது. ''நான் போய் வருகிறேன் கந்தையா'' என்று சொல்லிவிட்டு நான் வண்டியை விட்டு இறங்கினேன்!

''சார்! அதைப் படியுங்கள்'' என்று சுவரிலே ஒட்டி யிருந்த போஸ்டரைக் காண்பித்தான் கந்தையா; நான் படித்தேன்.

''சுதந்திர இந்தியக் குடியரசு மக்களாகிய நாம், பேச்சுரிமை, எழுத்துரிமை, வழிபாட்டு உரிமை, அபிப்பிராயம் வெளியிடும் உரிமை, ஆகிய இவைகளோடு பிரஜைகள் எல்லாருக்கும் சரிசமமாகச் சந்தர்ப்பம் முதலியவற்றை வழங்கவும் உறுதிப் படுத்துகிறோம்.''

படித்து முடித்தேன். எல்லாருக்கும் சரிசமமாகச் சந்தர்ப்பம் வழங்கும் இந்திய அரசியல் சட்டம் என்னைப் பார்த்து எள்ளி நகையாடியது!

கல்லூரியிலே படிக்கும்போது கந்தையா ஒரு பிரசங்க பீரங்கி! ராமு ஒரு கணிதமேதை! கண்ணையன் ஒரு கவிதா சிரோன்மணி! சுந்தரம் ஒரு சங்கீதரத்தினம்! கோபாலன் வகுப்பறைக்குச் செல்லாமலேயே கற்றுத்தேர்ந்த இஞ்சினீயர்! இப்போது அவர்கள் எல்லோரும் குமாஸ்தாக்கள்!

தொட்டாற் சுருங்கியைப்போல் கந்தையாவின் சொற்போ ருக்குப் பதில் சொல்ல முடியாமல் மேடையிலே குன்றிப்போய் நிற்கும் பிச்சுமணி, இப்போது அமெரிக்காவிலே குன்றென உலவு

கிறான். அவனை வென்று வாகை சூடிய கந்தையா, டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்யும் நிலை! தென்றல் தூக்கி வரும் ரோஜாவின் மணம்! கருப்பு வண்டினைக் கனகமயமாக்கும் அதன் மகரந்தப்பொடி! அழுகி நாற்றமெடுத்த சொந்த நாட்டில் பரிமள கந்தம் வீசச் செய்யவேண்டிய அந்த நந்தவன ரோஜா வெண்மணற்பரப்பிலே கண்பார்வைக்கு எட்டாத பாலைவனத்திலே கருகிக்கொண்டிருக்கிறது! பகை ஒழிக்கும் வாளாக வார்க்கப்படவேண்டிய அந்த எஃகுக்கம்பி வறுமை ஈரமும் பட்டினி நீரும் பட்டுத் துருப்பிடிக்கிறது! அதோ! அங்கே திறமை சிறிதுமில்லாப் பிச்சுமணி, சுற்றி இருப்போர் தயவால் உயர ஏறிப் போகிறான். இந்த ரோஜாக்களைப் பிழிந்து அந்த வெள்ளெருக்கை மலருக்குச் சிகப்பு வர்ணம் பூசுகிறார்கள்.

நான் மாணவனாக இருக்கும்போதெல்லாம் எனக்குக் கந்தையாவின் கொள்கை பிடிக்காது. இருந்தும் இந்தக் காட்சியை நினைத்த என் இருதயம் கண்ணீர் விட்டது.

"அழு! மாசுபடிந்த திராவிடமே அழு! கறுத்துப் போன மேகம், சோகத்தால் கனத்துப்போன உள்ளம், இவைகளுக்கு மாற்று; கண்—நீர்தான்! அந்த கண்ணீர் ஓடையில்தான் புதிய சமுதாயத்தின் விடுதலைப் படகு மிதந்திடவேண்டும்" என்று உரக்கச் சிரித்துக்கொண்டே சொன்னான் கந்தையா! சொல்லிக் கொண்டே அழுதான்! அந்த அலறலோடு வண்டி நகர்ந்தது!

புரட்சிப் படம்

''டைரக்டர் சார்! பணத்தைப்பற்றிக் கவலையே இல்லை—உங்கள் இஷ்டத்துக்கு செட்டுகள் போட்டுக் கொள்ளலாம்—ஸ்டுடியோ வுக்குள் அமெரிக்காவின் கட்டிடங்கள் வரவேண்டுமா? மாஸ் கோவின் தெருக்களை அமைக்க வேண்டுமா? கடல் ஒன்று காட்டவா? ககனத்தையே அழைக்கவா? மழையா? புயலா? பூகம்பமா? எது வேண்டுமானாலும், என்ன செலவானாலும் சரி—படம் பெரிய படமாக இருக்கவேண்டும். பெரிய படம் என்றால் நாற்பதாயிரம் அடியோ அல்லது சினிமா ஸ்கோப் மாதிரியோ அல்ல சார்! ஒரு வருஷத்துக்கு ஒரு ஊரிலே ஓட வேண்டும்! இந்தப் படத்தைப் பற்றிப் பேசாதவர்கள் பிறக்காதவர்களாகத் தானிருக்க வேண்டும்! வசூல் மட்டுமல்ல லட்சியம்! அருமையான கதை! அபூர்வமான வசனம்! அற்புதமான டைரக்ஷன்! அநாயாசமான நடிப்பு! அமோகமாக கூட்டம்! இப்படி ஒரே பரபரப்பு நாட்டிலே ஏற்பட வேண்டும். நான் இந்தப் படத்தைப் பணம் சம்பாதிப்பதற்காக எடுக்கவில்லை. இதில் வரும் லாபம் முழுவதையும் நாலைந்து கல்லூரிகள் கட்டுவதற்குச் செலவிடப் போகிறேன். உங்களுக்குப் பிடித்தமான எழுத்தாளரையே ஏற்பாடு செய்து விட்டேன். முற்போக்கு எண்ணத்தோடு எழுதுவதில் அவருக்கு நிகர் அவரே தான். அரைக்கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கிவிட்டேன். நடிக, நடிகையர் தேர்தல், படப் பிடிப்பு, உடனே ஆரம்பமாக வேண்டும்.''

படமுதலாளி பரமசிவானந்தம் அவர்கள் முற்போக்கு எண்ணங்கொண்டவர். நல்ல கருத்துள்ள படங்களை மக்களைத்

திருத்தும் வகையில் வெளியிட வேண்டுமென்ற அவா அதிக முடையவர். படம் எடுத்துதான் பணம் சம்பாதிக்க வேண்டும்— வாழ்வு நடத்த வேண்டும்—என்ற நிலையிலே உள்ளவருமல்ல; பணத்தை அளவுக்குமேல் குவித்து அழகு பார்க்கும் கருமித்தன முடையவருமல்ல. வள்ளல் தன்மையும் அதே நேரத்தில் நாட்டுக்குத் தேவையான எண்ணங்களைக் கலைகள் மூலம் பிரச் சாரம் செய்ய வேண்டுமென்ற கொள்கையும் பெற்றவர். பல லட்ச ரூபாய்க்குச் சொந்தக்காரரான அவர், உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கக் கூடிய ஒப்பற்ற பெரும் படம் ஒன்றை எடுப்பதற்காகத் தன் சொத்தில் பெரும் பகுதியான ஐம்பது லட்ச ரூபாய்களை முதலாக வைத்தார். ஸ்டுடியோ ஒன்றைத் தனியாக அமைத்தார் படம் வசதியாக எடுப்பதற்காக! மிகப் பிரசித்தி பெற்ற டைரக்டர் ஒருவரும், மக்களிடம் செல்வாக்குப் பெற்றவசனமேதை ஒருவரும், புதுமைக் கவிஞர் ஒருவரும் ஒப்பந்தம் செய்யப்பட்ட னர். தன்னுடைய நல்ல உள்ளத்தைப் படமுதலாளி, அவர்களிடம் திறந்து சொல்லிவிட்டார்; அவர்களும் அகிலம் வியக்கும் அறிவுக்கதை யொன்றை அழகான பாடல்களுடன் தயார் செய்து விட்டனர்.

படப்பிடிப்பு ஆரம்பமானது. புகழ்வாய்ந்த நட்சத்திரங்கள் ஒருவர் பாக்கியின்றிப் படத்தில் நடித்தனர். நாடெங்கும் அந்தப் புதிய படத்தைப் பற்றியே பேச்சு. "எப்போது வெளிவருமோ?" என மக்கள் ஏங்கி நின்றனர். ஐம்பது லட்சம் ரூபாயும் கரைந்து, படப்பிடிப்புவேலை ஏறத்தாழ ஒரு கோடியை எட்டிப் பிடித்துப் பட முதலாளி சில இடங்களில் கடன்வாங்கிப் படத்தின் வளர்ச் சியைத் துரிதப்படுத்தினர். படம், இதுவரையில் யாரும் வெளி யிடாத அந்த அளவு உயரிய முறையில், உள்ளத்தைக் கொள்ளைக் கொள்ளும் வகையில் அமைந்தது! யாரும் துணிந்து சொல்ல முடியாத புரட்சிக் கருத்துக்களை, நாகரீகமான முறையிலும், ஆபாசமற்ற தன்மையிலும், அந்தப்படம் விளக்குவதாயிருந்தது. தொழிலாளர் உயர்வுக்கான வழிகள்—சாதிபேதமற்ற சமுதாயம் —கடவுள் பெயரால் நடைபெறும் கயமைச் சேட்டைகள்—கலை யின் பெயரால் நிகழும் ஆஷாடபூதித்தனங்கள்—மதம் மக்கள் சமூகத்தை எப்படிப் பாழ்படுத்துகிறது என்ற விளக்கம்— இத்தனையும் அடங்கிய ரத்தினமாக அந்தப்படம் அமைந்து விட்டது! நடிப்பு ஆகா, இதயத்தின் துடிப்பு! கதை வாழ் வின் ஒளி! வசனம் ஜீவகாவியம்! பாடல்கள் தேன்பாகு

கற்கண்டு! டைரக்ஷன் பாராட்டவே இயலாது! அத்துணை சிறப்பு–அத்துணை சிறப்பு!

படம் ஆயிரம் ஆயிரம் அடியாக வளர்வதிலிருந்து அது பதினுயிரம் அடிகள் வளரும்வரை தினந்தோறும் படமுதலாளி அதைப்பார்த்துப் பார்த்து ரசிப்பார்! தேசமெங்கும் புகழக்கூடிய ஒரு பெரிய படத்தை அளிக்கப் போகிறோம் என்ற ஆனந்தம் அவரை ஆட்கொண்டது. நண்பர்கள் வருவார்கள்; படத்தைக் காட்டுவார்; மகிழ்வார்கள்; பாராட்டுவார்கள்.

ஒரு சிலர் மட்டும் "சிறப்பான படந்தான்—ஆனல் சென்சார் ஆகுமா?" என்று சந்தேகத்தோடு கேட்பார்கள். அதைப் பற்றிக் கவலையே இல்லை என்பார் படமுதலாளி. "இப்போதென்ன அக்கிரமமான விஷயத்தையா படத்தில் சொல்லிவிட்டோம்? செக்ஸ் அப்பீலா இருக்கிறது? அல்லது ஆபாச வசனமா? மறுக்கக்கூடிய விஷயம் என்ன இருக்கிறது? புராணப் படங்களில் வரும் ஆபாசங்கள் எதுவும் இதிலே கிடையாதே! தாராசசாங் கத்தைப் போலவா படம் எடுத்திருக்கிறோம்? இல்லையே—சென்சார் எதற்காகத் தலையிடப் போகிறார்கள்?" என்று ஆத்திர மாகக் கேட்டார் பரமசிவானந்தம். அவரது நண்பர்களைப் போலவே நாட்டுமக்களும் சென்சாரைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சென்சார் என்பது ஒரு பாரபக்ஷம் வாய்ந்த ஸ்தாபனம் என்பது நாட்டு மக்களின் தீர்ப்பு. அதனல் பரம சிவானந்தம் எடுக்கும் புரட்சிப் படத்திற்கு ஏதாவது ஆபத்து வரும் என்று எதிர்பார்த்தனர்! சென்சாருக்கு முன்பே படத்தைப் பற்றிய விளம்பரங்கள் வெளிவந்தன.

மதவாதிகளுக்கோர் மருந்து! மறுமலர்ச்சித் தூதருக்கு விருந்து!

ஆண்டவன் பெயரால் அவனியை ஏமாற்றுதே! ஆண்டான் அடிமை அகிலத்தில் வேண்டாம்!

இவைபோன்ற கொட்டை எழுத்து வாசகங்களோடு புரட்சிப் படத்தின் விளம்பரங்கள் ஏடுகளில் மின்னின.

கடைசியாகப் படம் சென்சாருக்கும் சென்றது; படத்தில் எந்தக் காட்சியும் பாதிக்கப்படாத வகையில் இரண்டே இடங் களில்தான் சென்சார் வெட்டியிருக்கிறார்கள் என்ற சேதி

நாடெங்கும் பரவிற்று; "அப்பாடா, படம் தப்பிப் பிழைத்தது" என்று நாட்டோர் பெருமூச்சுவிட்டனர்.

குறிப்பிட்ட தேதியிலே படத்தை வெளியிடும் விளம்பரம் வந்தது, அடடா! படத்தின் பெயரை இதுவரையில் சொல்லாமல் இருந்துவிட்டேனே—"**செவ்வானம்**" என்பதுதான் அந்தப் புரட்சிப் படத்தின் பெயராகும்.

நானூறு தியேட்டர்களில் ஒரே நாளில் படம் வெளியிடப் பட்டது; தியேட்டர்கள் இடிந்து நொறுங்கிவிடுமோ என்கிற அளவுக்குத் திரளான கூட்டம்; எந்தப் படத்திற்கும் இவ்வளவு பரபரப்பு இருந்ததில்லை!

தலைநகரத்திலே திரையிடப்படும் தியேட்டருக்குப் பரமசிவானந்தம் வருகை தந்திருந்தார். அவரைக் கண்ட மக்கள் ஆவலோடு வரவேற்றுக் குதூகலித்தனர்.

படம் ஆரம்பமானது.

"செவ்வானம்" என்ற தலைப்பைக் கண்டதும் ஒரே கைதட்டல்—வயிற்றெறிச்சல்காரர்கள் சிலரின் மனத்தைப் புண் படுத்தக்கூடிய அளவுக்கு மக்களின் ஆரவாரம். "கதை, வசனம்" என்ற பெயர் காட்டப்பட்டது; அதனையொட்டி, நடிகர்கள் டைரக்டர் பெயர்கள் வந்தன. இறுதியில், "**தயாரிப்பு பரமசிவானந்தம்**" என்ற எழுத்துக்கள் பெரும் கரகோஷத்தைப் பெற்றன —அடுத்த முதல் காட்சி என்ன என்று மக்கள் துடித்தனர்; திரை ஒரே வெளுப்பாயிருந்தது! சில விநாடிகள் அப்படியே இருந்தது. பிறகு கீழ்க்காணும் எழுத்துக்கள் உருண்டு வந்தன.

"படம் முற்றிற்று—வணக்கம்"

மக்கள் திகைத்தனர். தியேட்டரில் மணி அடிக்கப்பட்டது. திரைகள் இழுக்கப்பட்டன. தியேட்டரில் ஒரே புரட்சி! மக்கள், பரமசிவானந்தத்தைச் சூழ்ந்துகொண்டனர்.

"என்ன அக்கிரமம்?" என்று கத்தினர்.

"எல்லாம் சென்சார் வேலை" என்றார் அவர்.

"சென்சார் இரண்டு இடத்தில்தானே அய்யா வெட்டியதாகச் சொன்னார்கள்?"

"ஆமாம் தோழர்களே! சென்சார் இரண்டே இடத்தில் தான் வெட்டினர்கள்!

முதல் இடம்; டைட்டில் முடிந்ததும் வெட்டினர்கள்.

இரண்டாவது இடம்; 'வணக்கம்' என்பதற்கு முதல் பிரேமில் வெட்டி விட்டார்கள்! ஆக இரண்டே இடம்தான்!"
என்று பட முதலாளி பதில் சொன்னர்.

மக்கள் வெள்ளம் "சென்சார் ஆபீஸ்" திசையை நோக்கி, ஒரு ஆத்திரப் பார்வையை வீசிற்று!

தடுக்கிடும் கதை

[குறிப்பு : ஒரு சிறிய நகைச்சுவைத் துணுக்கை ஆதாரமாகக் கொண்டு இந்தக் கற்பனை தீட்டப்படுகிறது.]

நியூயார்க் நகரத்தைப்பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம், சிலர் நேரே பார்த்திராவிட்டாலும்! அமெரிக்காவின் அழகுத் திருநகர் மட்டுமல்ல; அகிலத்தின் எழில்மாடம் என்றெல்லாம் வர்ணிப்பர் நாடு சுற்றிகள்! வானத்தைத் தொடும் மாடமாளிகைகள் அங்கே உண்டு! உச்சியிலே எரிவது மின்சார விளக்கா, அல்லது நட்சத்திரமண்டலம் வரையிலே அந்த உப்பரிகை உயர்ந்து நிற்கிறதா என்ற ஐயப்பாடுகள் புதிதாகப் பார்க்கிறவர்களுக்கு ஏற்படுவது சகஜம். அத்துணை உயரம் பொருந்திய பல அடுக்கு மாடிகள் உள்ள ஹோட்டல் ஒன்றில், உச்சிப்பகுதியில், மூன்று நண்பர்கள் ஒரு அறையை வாடகைக்கு எடுத்துக் கொண்டு அங்கே தங்கியிருந்தார்கள். அவர்கள் நகர் சுற்றிப் பார்க்க வந்தவர்கள். உயர்ந்த கட்டிடங்களுக்கு மேலே ஏறிச்செல்வதற்கான, "லிப்ட்" வழியாகக் கீழே வந்தால், அந்த மூவரும் நகரத்தின் சிங்காரப் பகுதிகளை யெல்லாம் சுற்றிப்பார்த்துவிட்டு, இரவு பத்து மணிக்கு மீண்டும் தங்களின் அறைக்கு திரும்புவது வழக்கம். இப்படிச் சிலநாட்கள் மூவரும் நியூயார்க்கின் நேர்த்தியை ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் அவர்கள் வேடிக்கை விநோதங்கள் விசித்திரக் கேளிக்கைகள் எல்லாவற்றையும் பார்த்துவிட்டுத் தங்கள் ஹோட்டலுக்குத் திரும்பினர்கள். கீழ்த்தளத்திலுள்ள ஹோட்டல் மானேஜர் அவர்களைப் பார்த்து வருத்தத்துடன் ஒரு செய்தியைச் சொன்னர். அதாவது;

"அன்புள்ள நண்பர்களே! இன்று நீங்கள் உங்கள் அறைக்கு நடந்துதான் போகவேண்டும். ஏனெனில் நமது "லிப்ட்" கெட்டு விட்டது. அதற்காக வருந்துகிறேன்" என்பதுதான் அந்தச் செய்தி. உண்மையிலே அது வருத்தமான செய்திதான். லிப்டில் ஏறி உட்கார்ந்தால் சில நிமிடங்களில் எந்தத் தொல்லையுமின்றிக் குறிப்பிட்ட இடத்திற்கு அவர்கள் போய்விட முடியும். லிப்ட் கெட்டுவிட்ட காரணத்தால்—இப்போது அவர்கள் கடக்கவேண்டிய மாடிகள் பல! ஏறவேண்டிய படிகள் இரண்டாயிரத்துக்கு மேல் இருக்கும். ஊரெல்லாம் சுற்றிக் காலெல்லாம் அலுத்துப் போயிருக்கிற அவர்கள் அவ்வளவு படிகளில் ஏறி, மாடிகளைச் சுற்றிச் சுற்றித் தங்களுடைய அறைக்குப் போவதென்றால் சாமான்யமா? என்ன செய்வது—போய்த்தானே தீரவேண்டும்! மூவரும் படிகளில் ஏறிப்போகத் தீர்மானித்தார்கள். அத்தோடு அலுப்புத் தெரியாமல் இருக்க, ஒரு புதிய உற்சாகமான ஏற்பாடு செய்துகொண்டார்கள். தங்கள் அறையை அடைவதற்குள், வழியில் மூவரும் ஆளுக்கு ஒரு கதை சொல்வதென்று முடிவு கட்டினர்கள். அதன்படி முதல் கதை ஒரு காதல் கதை! அந்தக் கதையை ரோமியோ என்பவன் சொல்ல வேண்டும். அடுத்த கதை வீரக் கதை. அதை ஆண்டனி என்பவன் சொல்ல வேண்டும். மூன்றுவது திடுக்கிடும் கதை. அதைச் சார்லஸ் என்பவன் சொல்லவேண்டும். அதன்படியே முதலில் ரோமியோ காதல் கதை கூற ஆரம்பித்தான்.

காதல் கதை

பாபிலோன் நகரம் செல்வத் திருநகரம். அங்குதான் நான் சொல்லப்போகும் கதையின் பாத்திரங்கள் வாழ்ந்தார்கள். ஓவிட் என்பான் இதை அழகாக எழுதியிருக்கிறான்.

இரட்டைக் குழந்தைகளைப்போல இரண்டு வீடுகள் ஒட்டிக் கொண்டிருந்தன. ஒற்றைக்கல் சுவர் ஒன்று அந்த வீட்டைப் பிரித்துவைத்தது. அதில்தான் இரண்டு நெஞ்சு இணைந்த காதலர்கள் வாழ்ந்தார்கள். திஸ்பே ஒரு அலங்காரத் திருஉருவம்; பைரமஸ் ஒரு ஆணழகன். கருத்தொருமித்த அவர்களுடைய காதலை மூடி மறைக்க அவர்களுடைய பெற்றோர்கள் முடிவு செய்தனர். வெம்பிய உள்ளத்தினராய் இல்லத்துக்குள்ளேயே வாடி வதங்கினர்கள். அதற்கு அந்தக் களிமண் சுவரோ உணர்ச்சிக்கு இடப்பட்ட வேலியாக இருந்து வேலை பார்த்து வந்தது.

யானையின் கண்களைவிடக் காதலர்களின் கண்களுக்குத்தான் கூர்மை அதிகமாயிற்றே! அந்தச் சுவரிலே இருந்த ஒரு பொந்து அவர்களுடைய கவனத்தை ஈர்த்தது. அவ்வளவுதான்!

நேரம்—காலம் இன்னதென்று பாராது திஸ்பேயும், பைரமசும் 'குசுகுசு' வென்று காதலுரையாட ஆரம்பித்தார்கள். சுவரின் ஒரு பக்கத்திலே பைரமஸ் வார்த்தைகளைக் கொட்டி அவளை வர்ணித்தபடி நிற்பான். அதையெல்லாம் ஆமோதித்த படிச் சுவரின் மற்றொரு பக்கத்திலே திஸ்பே மெய்ம்மறந்து நிற்பாள். அந்திநேரமென்றும், அர்த்தசாமமென்றும் பாராது அவர்கள் இன்பக்கடலாடினார்கள்! இத்தனை நாட்கள் இரண்டு ஜோடிக் கிள்ளைகளைப் பிரித்து வைத்திருக்கும் தடைக்கல்லாக நின்ற அந்தக் களிமண் சுவர், இப்போது தேக்கிய இன்ப வெள்ளத்திற்குப் பெருங்கரையாக நின்று பேருதவி செய்தது. பொந்தின் இடையிலே காந்தச் சொற்களின் இன்னிசை எந்நேரமும் ஒலித்தபடி இருந்தது. அவர்களுடைய உதடுகள் உராய்ந்ததில்லை. ஆனால் எப்போதும் 'இச்' என்ற ஒலி மட்டும் மெல்லென அதிர்ந்து கொண்டே இருந்தது.

பெற்றோரை ஏமாற்றும் காதலராய் அவர்கள் எத்தனை நாட்கள்தான் வாழமுடியும்? வேற்றூர் சென்று திருமணம் செய்து இல்வாழ்வு நடத்த அந்த இளம் இதயங்கள் முடிவு செய்தன.

பாபிலோன் நகருக்குப் பக்கத்திலே நினசின் சமாதி ஒன்று இருக்கிறது. அதன் அருகிலே நிற்கும் மல்பெரி மரத்தின் பக்கத்திலே இரவு நேரத்தில் இருவரும் சந்திப்பது எனவும்—பின்னர் அங்கிருந்து கட்டுப் பாடென்னும் கோடரியால் வாலிபத்தை வெட்டிச் சாய்க்கும் பெற்றோரை விட்டுவிட்டு ஓடிவிடுவது எனவும்—முடிவு செய்தனர்.

பெண்கள்தான் எப்போதும் அவசரக்காரர்களாயிற்றே! அதன்படிக் குறிப்பிட்ட நேரத்தில், கள்ளரும் அஞ்சி நடுங்கும் நள்ளிரவைக் கண்டு உள்ளம் நலியாமல், திஸ்பே மல்பரி மரத்தடிக்கு வந்து சேர்ந்தாள். ஆனால், பைரமசைமட்டும் அங்கே காணவில்லை. அந்த இருட்டிலே பேதைப் பெண் அவள் அவனை எங்கே தேடுவாள்? காற்றிலே புழுதி பறக்கும் ஓசைகூடப் பைரமசின் பாத ஓலியாகத்தான் தோன்றியது அந்தப் பாவைக்கு! "ஓ" வென்ற ஓலி அலை கேட்டுத் திஸ்பே திரும்பினாள்.

புள்ளிமானைக் கொன்று போட்ட பெண் சிங்கம் ஒன்று இரத்தம் வழியும் நாக்கைச் சப்புக் கொட்டியவாறு வந்து கொண்டிருந்தது, பாவம்! திஸ்பே நடு நடுங்கிவிட்டாள். பாயவரும் சிங்கத்தின் பார்வையை மறைத்து உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அந்தப் பாவை, தன் மார்பகத்தை மூடியிருந்த மேலங்கியைத் தூக்கி எறிந்துவிட்டு ஒரே நொடியில் ஓடி விட்டாள்! காற்றிலே மிதந்து வந்து தன் முகத்தை மறைத்த மேலங்கியைத் தன் கூரிய நகங்களால் பிறாண்டி, இரத்தக்கரை படிந்த பற்களால் கிழித்து எறிந்து விட்டுத் தன் குகைக்கு நடை போட்டது அந்தக் கிழட்டுச் சிங்கம்!

காதலியைக் காக்கவைத்த பைரமஸ், சிங்கம் அப்பால் நகர்ந்த பின்புதான் அங்கு வந்து சேர்ந்தான். காதலியைத் தேடினான்; தேடினான்! ஆனால், அவளே திஸ்பேயின் இரத்தம் தோய்ந்த மேலங்கியையும், சிங்கத்தின் பாதச்சுவடுகளையும்தான் பார்க்க முடிந்தது.

உள்ளம் வெடிக்க, உடல் துடிக்க அவன் சோகப் பெருங் கூச்சலிட்டான். "தாமதித்து வந்ததால் என் தாரத்தை இழந்தேனே! சிங்கத்தால் நீ சாகவில்லை. கண்மணியே! என்னால் தான் நீ இறந்தாய். நள்ளிரவில்—நடுக்காட்டில்—இளையவளாம் உன்னைத் தனியாக வரச்சொல்லி நானேதான் உனைக் கொன்றேன்" என்றெல்லாம் புலம்பித் தன் உடைவாளை மார்பிலே பாய்ச்சிக் கொண்டு, திஸ்பேயின் மேலங்கியை அணைத்தபடி மண்ணிலே சாய்ந்தான், அந்த வனப்புகொள் வாலிபன்!

இந்நேரம் காதலன் வந்திருப்பான்; கண்காணுச் சீமை சென்று காதல் வாழ்வு நடத்தலாம் என்றெல்லாம் மனக்கோட்டை கட்டியபடி திஸ்பே மல்பரி மரத்தடிக்கு வந்தாள். அய்யகோ! அவள் கண்ட காட்சியை அவளால் நம்பவே முடியவில்லை, இதயராஜாவின் இருதயத்தைக் கூர்வாள் கௌவிக்கொண்டிருந்தது. திஸ்பே உடன் தாவிக் காதலனின் மெய் தழுவி "அன்பே உன்னுயிர் குடித்தது கொடுவாள் அல்ல; நான்தான் உன்னைக்கொன்றேன்; என்மீது உனக்குள்ள வற்றாத காதல்தான் உன்னைக் கொன்றது!"—என்று அழுது, பைரமசின் நெஞ்சிலே பதிந்திருந்த வாளை எடுத்துத் தன் மார்பிலே பாய்ச்சிக் கொண்டாள். உற்றாரின் கட்டுப்பாட்டிற்கும் ஊராரின் கண்டனத்திற்கும் ஆளாகி, உள்ளம் நொந்து, புதுவாழ்வு நடத்தச் சென்ற காதலர்கள் நிஙசின் சமாதிக்கு அருகிலே பிணமாகச்

சாய்ந்து கிடந்தார்கள். சமுதாயம் சேர்த்துவைக்காத ஜோடிகளை மரணம் தன் இருட்கரங்களால் இணைத்து வைத்தது! ஆனால் ஒன்று! மல்பரி மரத்தடிக்குத் தாமதமாக வந்து திஸ்பேயை வாட்டிய பைரமஸ், சாக்காடென்னும் பூக்காட்டிற்கு முன்னமேயே சென்று தன் ஆருயிரைத் தேடிக்கொண்டிருந்தான்.

இந்தக் கதையைக் கூறிய ரோமியோவும் மற்ற இருவரும் கதையிலேயே லயித்து, ஆயிரத்துக்கு மேற்பட்ட படிகளைக் கடந்தனர். ஏறவேண்டிய தூரம் இன்னும் சிறிது இருக்கிறது. தீர்மானப்படி ஆண்டனி வீரக்கதையைச் சொல்லத் தொடங்கினான்.

வீரக்கதை

"ரோமியோ காதல் கதை என்ற பெயரால் உண்மையிலேயே ஒரு காதல் கதை சொன்னேன். நான் வீரக்கதை என்ற தலைப்பில் ஒரு விசித்திரக் கதை சொல்லப்போகிறேன்; மிகச் சுருக்கமாக. கேளுங்கள் இருவரும்!

"அடிமை வியாபாரத்தை எதிர்த்துப் பெரியதொரு கிளர்ச்சி ஏற்பட்டதல்லவா! அதுபோல ஒரு கிளர்ச்சி, வேறு ஒரு உரிமையைக் காப்பாற்றுவதற்காக நடைபெற்றது. அந்தக் கிளர்ச்சி எந்த ஊரில் நடந்தது என்றெல்லாம் கேட்காதீர்கள். கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவர் பெயரும் தெரியாது. கிளர்ச்சியின் நோக்கம் என்னவென்றால் அந்த ஊரில் உள்ள ஒரு ஜாதிக் கூட்டத்தாரை ஊரைவிட்டே விரட்டவேண்டும் என்பதுதான்! அந்த ஜாதிக் கூட்டத்தாரின் தலைவன்தான் அந்த ஊரையே பரிபாலித்துவந்தான். தலைவனின் ஜாதியை விரட்டவேண்டுமென்று கிளர்ச்சித் தலைவர் ஆக்ரோஷமாகப் பேசிவந்தார். அப்படி அந்த ஜாதியார் ஓடாவிட்டால் அவர்களைக் கண்ட இடத்தில் கொன்றுபோட வேண்டுமென்று கர்ச்சனை செய்தார். அந்த ஜாதித் தலைவன் மிகவும் தந்திரசாலி. அவன் தன்னுடைய சூழ்ச்சியைப் பயன்படுத்திக், கிளர்ச்சிக்காரர்களின் ஜாதியிலே பிறந்த ஒருவரைப் பிடித்து அந்த ஊருக்குத் தலைவனாக்கி விட்டான். அந்தப் புதுத்தலைவன் கிளர்ச்சிக்காரத் தலைவரைக் கூப்பிட்டு "நீர் இனிமேல் இந்த ஊரைவிட்டு யாரையும் துரத்துவதாகவோ அல்லது அவர்களை பயமுறுத்தும் வகையிலோ பேசக் கூடாது. அப்படிப் பேசினால் உம்மீது கடும் நடவடிக்கை எடுப்பேன்" என்று கூறிவிட்டான். புதுத் தலைவனின் மிரட்டலைக்

கண்ட கிளர்ச்சித் தலைவர், உடனே, "புதுத்தலைவருக்கு ஜே" என்று கூறிவிட்டு, ஜாதித்தலைவனையும், அவன் கூட்டத்தாரையும் ஊரைவிட்டுத் துரத்துவதைப் பற்றி இனிமேல் பேசுவதில்லை என்று வாக்கு அளித்து விட்டு, கிளர்ச்சிப் படையில் உள்ள வீரர் களின் கவனத்தையும் வேறுபக்கம் இழுக்க ஆரம்பித்து விட்டார். இதுதானப்பா என்னுடைய வீரக்கதை!" என்று முடித்து விட்டான் ஆண்டனி.

அவர்கள் மூவரும் இரண்டாயிரம் படிகளையும் அநேகமாகக் கடந்து தங்கள் அறைக்குப் பக்கத்திலே வந்துவிட்டார்கள். மூன்றுவதாக சார்லஸ் சொல்ல வேண்டிய திடுக்கிடும் கதை பாக்கியிருந்தது. ஆண்டனி, அவனைப் பார்த்து "சார்லஸ் நீ உன் கதையைச் சொல்லு" என்றான். சார்லஸ் சொல்ல ஆரம்பித்தான். "தோழர்களே! நான் உண்மையிலேயே இப்போது திடுக்கிடும் கதைதான் சொல்லப்போகிறேன். இரண்டாயிரம் படிகள் ஏறிய நாம் மறுபடியும் இரண்டாயிரம் படிகள் கீழே இறங்கி, மீண்டும் இரண்டாயிரம் படிகள் மேலே ஏற வேண்டும்" என்றான்.

"ஏன்—உன் 'திடுக்கிடும் கதை' அவ்வளவு நீளமானதா?" என்றான் ரோமியோ!

"இல்லை ரோமியோ! நமது அறையின் சாவியைக் கீழ்த்தளத் தில் மேனேஜர் அறையிலேயே வைத்துவிட்டு வந்து விட்டேன்" என்று வருத்தமுடன் சொன்னான் சார்லஸ்.

(இருவருக்கும் அது திடுக்கிடும் கதையாகத்தானே இருந்திருக்கும்.)

கடைசிக் கட்டம்

"கனம் நீதிபதி அவர்களே! கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் நான் கொலைகாரன் என்பது குற்றச் சாட்டு! நானும் அதை ஒத்துக்கொள்ளத்தான் போகிறேன். அதற்கான தண்டனையையும் ஏற்கத் தயாராகவே இங்கு நிற்கிறேன். ஏற்க மறுத்தால்தான் என்ன; நீங்கள் எங்கே விடப்போகிறீர்கள்? என் கழுத்தை இறுக்குவதற்காகத் தூக்குக் கயிறும், மூச்சடங்கிய என் உடலை மூடிக் கொள்வதற்காகச் சிறைச்சாலைக்குப் பக்கத்திலே ஒரு சிறு குழியும் தயாராக இருக்கும் என்பதை நான் அறியாமலில்லை. கொலைகாரன்—அதுவும் ஆசைநாயகியைக் கொலை செய்தவன்—சொந்தக் கணவனை ஏமாற்றிவிட்டு உள்ளத்திலேயே கள்ளக் காதலனுக்கு இடங்கொடுத்த பிரியமுள்ள பெண்ணொருத்தியைப் பிணமாக்கியவன்—என்றெல்லாம் ஊர் என்னைச் சபிக்கும்; உற்றார் உறவினர் தூற்றுவர்; மண்மூடி மறைந்துவிடும் என் உடல் அவர்கள் கண்களுக்குக் கிடைக்காவிட்டாலும், டாக்டர் பாபு என்ற என்னுடைய பெயரின் மீது அவர்கள் காரி உமிழ்வார்கள் என்பதும் எனக்குத் தெரியும். என்னுடைய இந்த அற்பமான சரித்திரம் மற்றவர்களுக்காவது ஒரு பாடமாக இருக்கட்டும் என்பதற்காகக் கொலைக்கான காரணங்களை உங்களிடம் விளக்க விரும்புகிறேன்.

காரணங்களைக் கூறி விடுதலை பெறலாம் என்ற ஆசை எனக்குக் கிடையாது! ஏனெனில் நான் கூறும் காரணங்கள் எதுவுமே என்னை நிரபராதி என்று கூறும் சக்தி படைத்தவை

அல்ல! எனது கள்ளக் காதலி **மஞ்சுளாவை** நான் தான் கொன்றேன்.

வெறியில் கொல்லவில்லை. என்னை அறியாத நிலையில் கொன்று விட்டேன். நான் ஒரு டாக்டர். கோபாலபுரத்திலே குடியிருந்து கொண்டு, டாக்டர் தொழில் நடத்திவந்தேன். நான் குடியிருந்த வீடு பெரிய மாடி வீடு. மாடியிலேதான் வைத்தியசாலையும் எனது குடும்பமும். கீழேயுள்ள வீட்டில்தான் மஞ்சுளா தனது தந்தையுடன் வசித்து வந்தாள். என் மனைவி கோகிலாவுக்கும் மஞ்சுளாவுக்கும் மிகுந்த நட்பு! அந்த வீட்டுக்குக் குடிபோன சிலநாட்களுக்குள்ளாகவே இருவரும் இணைபிரியாத் தோழிகளாகி விட்டனர். என் துணைவி கோகிலா, பத்தினிகளின் பரம்பரையிலே வந்தவள். காலையிலே படுக்கை விட்டெழும்போது என் கால்களைத் தொட்டுக் கும்பிடாமல் அறையைவிட்டு வெளியேறுவதில்லை. பகலானாலும், இரவானாலும், எவ்வளவு மணி நேரமானாலும் நான் சாப்பிட்ட பிறகே அவள் சாப்பிடுவாள். என் பெயர் பாபு என்பதற்காக— "பா" என்கிற முதல் எழுத்து வரும் எந்த வார்த்தைகளையும் அவள் உச்சரிக்கவே மாட்டாள். என் மீது அளவு கடந்த அன்பும், மரியாதையும், பக்தியும் கொண்டவள். கொஞ்சம் கர்நாடகமாயிருந்தாலும், கணவனைத் தெய்வமாகக் கொண்ட மனைவியாயிருக்கிறாளே என்ற எண்ணம், அவள் மீது எனக்கு அளவில்லாத பாசத்தை உண்டாக்கியிருந்தது.

கீழ் வீட்டிலேயிருந்த மஞ்சுளா திருமணமானவள். அவள் கணவன் டில்லியிலே இருந்தான். கணவனுக்கும் மஞ்சுளாவுக்கும் ஏதோ சிறு தகராறு ஏற்பட்டு அது பெரிதாக முற்றி, கோபித்துக் கொண்டு, மஞ்சுளா தகப்பன் வீட்டுக்கு வந்திருந்தாள். மஞ்சுளா நல்ல அழகி. நாகரீக நாரீமணி. அவளது நீலக்குறு நயனங்கள் அனைவரையும் வசீகரிக்கும் தன்மை வாய்ந்தவை. நான் அடிக்கடி வெளியிலே சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது கீழ் வீட்டைக் கடந்துதான் மாடிக்குப் போகவேண்டும். அத்தகைய சந்தர்ப்பங்கள் நானும் மஞ்சுளாவும் அடிக்கடி சந்திக்கும் நிலையை ஏற்படுத்தின. "நீ என்னைக் காதலிக்கிறாயா?" என்று ஒரு பெண்ணிடம் கேட்டா தெரிந்துகொள்ளவேண்டும்! பார்த்தே தெரிந்துகொள்ளலாமே! அதுவும் மஞ்சுளாவின் அந்த விழி அசைவு என் இருதயத்தையே அடியோடு அசைந்துவிட்டது. ஒரு நாள் நான் வீட்டுக்கு இரவு ஒன்பது மணிக்குத் திரும்பினேன். கீழ் வீட்டு வாயிற்புறத்தில் மஞ்சுளா உட்கார்ந்திருந்தாள்.

எப்போதும் கோகிலாவும் மஞ்சுளாவும் அரட்டை அடித்துக் கொண்டிருப்பார்கள். அன்று கோகிலாவைக் காணவில்லை. நான் மஞ்சுளாவிடம் "அப்பா இல்லையா" என்று கேட்டேன். "இல்லை ஊருக்குப் போயிருக்கிறார்" என்று கூறினாள். "கோகிலாகூட துணைக்கு வரவில்லையா?" என்று கேட்டுக்கொண்டே நின்றேன். "இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்தாள்—தலை வலிக்கிறது என்று தூங்கப் போய்விட்டாள்" என்று மஞ்சுளா கூச்சத் தோடு பதில் சொன்னாள். நான் மாடியில் போய்ப் பார்த்தேன்—கோகிலா நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தாள். மெதுவாக நடந்து கீழ் வீட்டுத் தாழ்வாரத்துக்கு வந்தேன். மஞ்சுளா, தெருக் கதவைத் தாழ் போட்டுவிட்டுத் திரும்பியவள் என்னைப் பார்த்துத் திடுக்கிடவில்லை! தலையைக் குனிந்துகொண்டு நின்றாள். அருகே சென்றேன். அவள் அசையவில்லை. தொட்டேன், "கோகிலா தூங்கிவிட்டாளா?" என்று கேட்டாள். "சம்மதம்" என்பதற்கு அறிகுறி இந்தக் கேள்வி! பிறகு சமயம் கிடைத்த போதெல்லாம் நானும் மஞ்சுளாவும் காதல் கீதம் பாட ஆரம்பித்தோம். இந்த விஷயம் என் மனைவி கோகிலாவுக்குத். தெரிந்துவிட்டது. அவள் என்னிடம் எவ்வளவோ கெஞ்சினாள் மன்றாடினாள். நானே மஞ்சுளாவின் மயக்கத்திலே அவள் புலம்பலை லட்சியம் செய்யாமலிருந்தேன். பற்பல அறிவுரைகள் கூறிக் கோகிலா என்னைத் தடுத்தாள்.

கோகிலாவுக்கும் மஞ்சுளாவுக்கும் விரோதம் வளர்ந்தது. எனக்கும் மஞ்சுளாவுக்கும் தொடர்பு வளர்ந்தது. கோகிலாவோடு நான் சரியாகவே பேசுவது கிடையாது. சதா சர்வகாலமும் மஞ்சுளாவைப் பற்றிய நினைவுகள். அவளைப் பற்றிய கனவுகள்! அவளுடைய தகப்பனார் எங்களின் சந்திப்புகளுக்கு ஒரு தடையாக இருந்தார். அந்தத் தடையை மீறுவது எங்களுக்கு ஒரு புது இன்பத்தையே அளித்தது. கோகிலா ஒரு நாள் என்னிடம் வந்து, "நான் தற்கொலை செய்துகொள்ளப் போகிறேன்" என்று பயமுறுத்தினாள். நான் "தாராளமாகச் செய்துகொள், எனக் கொன்றும் ஆட்சேபணை இல்லை" என்று கூறிவிட்டேன். கோகிலாவுக்கு வீட்டுக் குலதெய்வத்தின் அறையிலே முறையிட்டுக் கதறுவதே வேலையாகப் போய்விட்டது! தெய்வம் விட்ட வழியில் நடக்கட்டும் என்று அதன் காலில் விழுந்து கதறினாள்.

ஒரு நாள் திடீரென்று டில்லியிலேயிருந்து மஞ்சுளாவின் கணவன் கோபால் வந்துவிட்டான். மஞ்சுளாவைச் சமாதானப்

படுத்தி அழைத்துச் செல்வதற்காகக் கோபாலின் சென்னை விஜயம் நடைபெற்றது. மஞ்சுளாவின் கோபம் தணியாத காரணத்தால் மாமனரின் யோசனைப்படி கோபால் அங்கே ஒரு மாத காலம் தங்கவும் முடிவு செய்துவிட்டான். நானும் மஞ்சுளாவும் இப்போது வெகு கஷ்டப்பட்டுச் சந்தித்தோம். மஞ்சுளா டில்லிக்குப் போகக்கூடாது என்று நான் வேண்டினேன். அவளும் என்னைப்போலவே முடிவு செய்திருந்தாள். மஞ்சுளா டில்லிக்குப் போய்விடுவாள், பிறகு தன் வாழ்வில் நிம்மதி ஏற்படும் என்று எண்ணியிருந்த கோகிலாவுக்கு, மஞ்சுளா டில்லிக்குப் போகப் போவதில்லை என்ற செய்தி இடியாக விழுந்தது! கோபாலோ எப்படியும் மனைவியைச் சமாதானப்படுத்திவிடலாம் என்ற தைரியத்தில் தங்கியிருந்தான்.

கோபாலுக்கும் எனக்கும் நட்பு ஏற்பட்டது. அவனுக்குத் தெரியாது எனக்கும் அவன் மனைவிக்கும் நட்பு என்பது! ஒரு மாதம்—இரண்டு மாதம்—மூன்று மாதம்—கோபால் தங்கி இருந்தான் சென்னையிலேயே! கடைசியாகக் கோபாலும் மஞ்சுளாவும் டில்லிக்குப் போகப்போகிறார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. மஞ்சுளாவிடம் கேட்டேன். அவளும் 'ஆமாம்' என்று தலையசைத்துவிட்டு ஓடிவிட்டாள். அவள் என்னைக் கிண்டல் செய்வதற்காக அப்படிச் சொன்னாள் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு ஒரே ஆத்திரம் பிறந்துவிட்டது! மஞ்சுளா டில்லியிலே சென்று வாழ்வதா? நான் சென்னையில் அவளை நினைத்து ஏங்குவதா? என்று பெருமூச்சுவிட்டேன்.

அவளைக் கொன்று யாருக்கும் பயன்படாமல் செய்துவிட வேண்டுமென்று துடித்தேன், அன்று வெளியிலே சென்றிருந்த நான், 'ரிவால்வர்' சகிதம் வீட்டுக்குத் திரும்பினேன், மஞ்சுளாவைக் கொலை செய்து, அவள் டில்லிப் பயணத்தைத் தடுக்க வேண்டுமென்று முடிவுகட்டிக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். கீழ் வீட்டில் வேலைக்காரச் சிறுமி நின்று கொண்டிருந்தாள். அவளிடம், "கோபால் எங்கே?" என்று கேட்டேன். "அவர் ஊருக்குப் போய் விட்டாராம்" என்று பதில் கூறி விட்டு அவள் வேகமாகப் போய்விட்டாள். கீழ் வீட்டில் மஞ்சுளாவைத் தேடினேன்; காணவில்லை! சரி, அவளும் போய் விட்டாள் என்ற ஏமாற்றத்தோடு மாடிக்குப் போனேன். அங்கே என் மனைவி கோகிலாவைக் காணவில்லை. மேசைமீது ஒரு கடிதம் இருந்தது. பிரித்துப் பார்த்தேன்.

"அன்புள்ள பாபு! உம்மிடமிருந்து விடுதலை பெறுகிறேன். என்னை மன்னிக்க வேண்டுகிறேன். நீங்கள் செய்த தவறுகளுக்காக நானும் தவறு செய்வதா என்று எண்ணினேன். இது முறையல்ல என்று உலகம் சொல்லும்; அறிவாளிகளும் சொல்லுவார்கள்; ஆனால் உம்மைப் போன்றவர்கள் சீர்திருந்தி நடக்க, என் ஒருத்தியின் முடிவு ஒரு பாடமாக இருக்கட்டும். உமது உள்ளங் கவர்ந்த பொருளை உம்மிடம் விட்டுச் செல்லுகிறேன். இனி என் வாழ்க்கை கோபாலுடன் டில்லியில் நடைபெறும். நமஸ்காரம்."

உமது மனைவி
கோகிலா

யார்; கோகிலாவா? என் மனைவி கோகிலாவா? அவள் கோபாலுடன் போய்விட்டாளா? என்று அலறினேன். என்னையே நான் மறந்தேன். நிலைதடுமாறி நின்றேன். அப்போது, என் எதிரே மஞ்சுளா வந்திருக்கிறாள். எனக்குச் சரியாகக் கண் தெரியவில்லை. மஞ்சுளா எனக்குக் கோகிலா போலத் தோன்றினாள். இமைப்பதற்குள் ரிவால்வரை ஓங்கினேன். சுட்டேன். சுட்டேன்—சுட்டுக்கொண்டே யிருந்தேன்! வெறி அடங்கியது. பிறகுதான் மஞ்சுளாவைக் கொன்றுவிட்டதாக உணர்ந்தேன். கைது செய்யப்பட்டேன். இப்போது இந்தக் கூண்டிலே நிற்கிறேன்"

என்று குற்றவாளி, தன்னுடைய உரையை முடித்தான். நீதிபதி கேட்டார் "கொலையாளி என்பதை ஒப்புக்கொள்கிறாய் அல்லவா?" என்று!

"ஆமாம்; நான் கொலைகாரன்தான், கொலைகாரன்தான்!" என்று டாக்டர் பாபு முகத்திலே பல முறை அறைந்து கொண்டார். அப்போது அவரது மீசை கீழே விழுந்தது! டாக்டர் பாபு அந்த மீசையை எடுத்து அவசரமாக ஒட்டிக்கொண்டார். கோர்ட் காட்சியைப் பார்த்துக்கொண்டிருந்த மக்கள் சிரித்து விட்டனர். வக்கீல்களும் சிரிப்பை அடக்க முடியாமல் தவித்தனர். நீதிபதி, கீழே ஆத்திரத்தோடு இறங்கிவந்து குற்றவாளியைப் பார்த்து, "உனக்கு இப்போதே தண்டனை விதிக்கிறேன். அலட்சிய சுபாவத்தோடு, மீசையைக்கூட சரியாக ஒட்டிக் கொள்ளாமல், ஆயிரக்கணக்கான மக்களுக்கு நேராக, நடிப்ப

தற்கு வந்துவிட்ட நீ, இந்த நாடகக் கம்பெனிக்கே தகுதியில்லை! இப்போதே இந்தக் கம்பெனியிலிருந்து உன்னை டிஸ்மிஸ் செய்கிறேன். 'மேக்கப்பை' அழித்துவிட்டு வெளியேறு!" என்று அதிகாரத்தோடு கத்தினர்! திரை விழுந்தது, டாக்டர் பாபு வேஷம் போட்ட நடிகர் எவ்வளவுதான் கெஞ்சியுங் கூட, அவருக்கு நீதிபதி வேஷம் போட்ட கம்பெனி முதலாளியிடமிருந்து மன்னிப்புக் கிடைக்கவில்லை.

அய்யோ ராஜா!

சென்னை கோடம்பாக்கம் 'ரயில்வேகேட்' தெரியுமா உங்களுக்கு? அந்த 'கேட்'டை சபிக்காதவர்கள் கிடையாது சென்னையில்! ஸ்டுடியோக்களுக்கு அவசரமாகப் போகிற நடிகர், நடிகை, முதலாளி, தொழிலாளியிலிருந்து, வட பழனி ஆண்டவன் கோயிலுக்குப் போகிற பக்தர்கள் வரையிலே காரிலும், வண்டியிலும், ரிக்ஷாக்களிலும், பாதசாரிகளாகவும் தேங்கி நின்று கொண்டு, 'கேட்'டின் முன்புறத்திலேயிருக்கிற சிவப்பு விளக்கு எப்போது அணையும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஏறத்தாழ அரைமணி நேரம் கால் மணி நேரம் அங்கே நின்று தவமிருந்து, அதன் பின்னரே நகர முடியும். கார்களிலே அமர்ந்திருக்கும் நகைச்சுவை நடிகர்கள், "காமி சத்யபாமா கதவைத் திறவாய்!" என்று தங்களுக்குள்ளேயே பாடிக் கொள்வார்கள்... "சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதானம் மறைக்குது!" என்று பக்கத்திலேயிருப்பவனை ஒதுக்கி விட்டுச் சிவப்பு விளக்கு அணைவதை ஆவலோடு உற்று நோக்குவார்கள் பக்தர்கள்.

இதற்கிடையே தமிழ்நாட்டுச் செல்வங்களின் படையெடுப்பு! "அய்யா சாமி! காலணு கொடு சாமி!" என்ற சுயதேவைப் பூர்த்திப் பாடலோடு காரையும் சூழ்ந்து கொள்வார்கள்.

அந்த 'ரயில்வே கேட்'டை நம்பியே, சில வியாபாரிகள் தங்கள் கடைகளை இருமருங்கிலும் விரித்து வைத்திருந்தார்கள். அந்த இடத்திலே 'கேட்' மூடப்பட்டு, நேரம் ஆக ஆக முக மலர்ச்சியோடு இருப்பவர்கள் அந்த வியாபாரிகள் மட்டுந்தான்!

ஒருவேளை யாராவது அரும்புநிலையில் உள்ள காதலர்களா யிருக்கலாம். இவர்களைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சலிப்பு வழியும் முகத்தோடுதான் காட்சியளிப்பார்கள். சில நேரங்களில் 'கேட்' திறக்கப்பட்டு, வண்டிகளும் மக்களும் அவ்வழியே புகத் துவங்கியதுமே, மீண்டும் 'கேட்'டை மூடுவதற்கான மணி ஒலித்து விடும். காத்திருந்த வரிசையிலே கால் பகுதிகூடக் குறையாமல் போய்விடும்.

ஒரு எழுத்தாளர் காலையிலே ஒரு கதைக் குறிப்பு தருவதாகப் பட முதலாளியிடம் வாக்களித்திருந்தாராம். கதைக் குறிப்புடன் ஆசிரியரை அழைத்து வருமாறு முதலாளி கார் அனுப்பிவிட்டார். ஆசிரியரோ கதையைப் பற்றி நினைக்கக்கூட இல்லை. எதற்கும் முதலாளியிடம் நேரில் போய் சமாதானம் சொல்லுவோம் என்று காரில் ஏறிப் புறப்பட்டார்.

கோடம்பாக்கம் 'கேட்' எதிரே வந்தது. ஆசிரியருக்கு ஒரே மகிழ்ச்சி. காரில் அமர்ந்தபடியே கதைக் குறிப்புகளை எழுதி, இரண்டொரு சீன்களுக்கு வசனமும் எழுதிவிட்டார். அதன் பிறகே 'கேட்' திறக்கப் பட்டது. படமுதலாளியின் 'மணிப் பர்சு'ம் அந்த ஆசிரியருக்காகத் திறக்கப்பட்டது.

வடபழனி ஆண்டவர் கோயிலிலே மொட்டை அடித்துக் கொண்டு ஒரு அம்மையார் பக்தி சிரத்தையோடு வீடு திரும்பி யிருக்கிறார். இடையிலே 'கேட்' மூடப்பட்டு விட்டது, பிறகு திறக்கப்படும்போது, இந்த அம்மையார் சடை பின்னிப் போட்டுக் கொள்கிற அளவுக்கு நீண்ட கூந்தலோடு காணப்பட்டார்களாம்!

—இப்படி பல ரசமான கட்டுக்கதைகள் அந்த 'கேட்'டைப் பற்றி உண்டு. அவைகளிலே ஒரு சோகரசக் கதைக்கு மூல பாத்திரந்தான் அதோ அந்த 'கேட்'டின் மூலையிலே முறுக்கு மசால்வடை விற்றுக்கொண்டிருக்கிறாளே அந்த முத்தம்மா.

முத்தம்மாளுக்கு வயது முப்பதுக்குள்ளேதானிருக்கும். பார்க்கும்போதே தெரிகிறது. வயதை மறைத்துக்கொண்டு செல்லும் நட்சத்திரப் பெண்களை அவள் நாள்தோறும் மணிக் கணக்கிலே அந்த வழியிலே பார்த்துக்கொண்டுதானிருக்கிறாள். அவர்களும் முத்தம்மாளை உன்னிப்பாகக் கவனித்திருக்கிறார்கள்.

ஏனெனில் முத்தம்மா, முறுக்கு மசால்வடை விற்கிற காட்சியே ஒரு தனி அழகு! கண்ணாடி வளையல்கள் கல கல வென

ஓலிக்க, அவள் ஈ ஓட்டிக்கொண்டு, அந்தக் ஊசிப்போன வடை களையும் சவுத்துப்போன முறுக்குகளையும் காப்பாற்றுகிற கலையிலே கருத்தைப் பறி கொடுக்காதார் இருக்க முடியாததுதான்!

திடீரென்று படத்திலே அப்படி ஒரு பாத்திரம் ஏற்று நடிக் வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டால்—அதற்கு முத்தம்மா சம்பள மில்லாத ஆசிரியராக இருப்பாள் அல்லவா?

அந்தப் பகுதியிலே தொத்தி விளையாடும் வயிற்றுக் கோளாறு, விஷஜ்வரம் முதலிய கொடிய வியாதிகளுக்கான காரணங்களில் முத்தம்மாளின் பலகாரக் கடையும் ஒன்றுயிற்று.

அவள் என்ன செய்வாள் பாவம்; நாள் முழுதும் உழைத்து நாலணு எட்டணு கொண்டுவந்து கொடுத்துக் கொண்டிருந்த கணவனும் ஒரு குழந்தையை அவளுக்குக் கொடுத்துவிட்டு மின்சார ரயிலிலே தலையைக் கொடுத்துவிட்டான் தரித்திரம் தாங்கமுடியாமல்!

"எல்லோரும் வாழவேண்டும்.....முத்தம்மா!" என்ற பாடலைப் பக்கத்துக்கடை கிராமபோன் பெட்டி மூலம் அவள் பலமுறை கேட்டிருக்கிறாள். அந்தப் பாடல் அவள் மடியிலே குதிக்கும் பாலகனுக்கு விளையாட்டுக் காட்டத்தான் பயன் பட்டது.

"எல்லோரும் வாழவேண்டுமாமே; எல்லோரும் வாழவேண் டியதுதான்! யாரையா வாழவிடுகிறார்கள்?" இப்படிக் கேள்விகள் முத்தம்மாளின் இருதயத்திலே தாக்காமல் இல்லை. கணவன் இறந்த பிறகு ஒவ்வொரு இரவும் அவள் அந்தப் பகுதி கூலி களிடம் படும் அவஸ்தை அவளுக்கல்லவா தெரியும். மார்பிலே இருக்கும் குழந்தையின் வாயை விலக்கிவிட்டு, அது அழுது துடிக்கத் துடிக்க நாலணு எட்டணுக்களுக்காக; அய்யோ..... அந்த முத்தம்மா.....வேறு வழி? கணவன் நல்லவழி பார்த்துக் கொண்டு போய்விட்டான். வயிற்றிலே ரத்தத்தோடு ஊறிய பாசம் குழந்தையாக உருவெடுத்து அவள் முகத்தைப் பார்த்துச் சிரிக்கிறது. அதைக் காப்பாற்றுவதற்காக அவள் பலரது முகத்தைப் பார்த்துச் சிரிக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சிரிப்பிலே ஜீவன் இருக்கிறதோ இல்லையோ பல்லைக் காட்டித் தான் தீரவேண்டும். அவள் மேற்கொண்டிருக்கிற தொழில் அப்படிப்பட்டது!

பகலிலே முறுக்கு மசால்வடை; இரவிலே முத்தம்மா முரடர்களுக்கு இன்பம் விற்கும் கடை! இவ்வளவும் அவள் குழந்தைக்காக.

குழந்தையின் பெயரோ ராஜா. பெயராவது ராஜாவாக இருக்கட்டுமேயென்று அப்படிக் கூப்பிடுகிறாள் போலும்! அவளுக்கு அவன்தானே ராஜா? அந்த ராஜாவுக்காக அவள் இரவு ராணியாக மாறவேண்டியிருந்தது. அந்த நிலைமையை அவள் விரும்பவில்லைதான்; என்ன செய்வது?..பலகாரக் கூடையிலே ஈ மொய்க்கும்போது, கைவலியையும் பாராமல் விரட்டிக்கொண்டேதானிருந்தாள். எல்லா ஈக்களையும் விரட்டி விட முடியுமா என்ன? ஒன்றிரண்டு பலகாரத்தைத் தொட்டுப் பார்த்தே பறந்தன.

ஈ தொட்ட பலகாரத்திற்குக் கற்பு இல்லை; அதனால் கெட வில்லை; சுவை மட்டும் கெட்டது! முத்தம்மாளுக்கோ வாழ்க்கை யிலே சுவையும் கெட்டது—கற்பும் கெட்டது! குப்பை மேட்டிலே ஈ மொய்த்தால் என்ன; எறும்பு மொய்த்தால் என்ன; நாய்தான் படுத்தால் என்ன?.....இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள் அந்தத் தமிழ்நாட்டு மங்கையர் திலகம். அவளுடைய லட்சியம், ராஜா பெரியவனாகவேண்டும்; அவன் ஒரு குடும்பம் நடத்த வேண்டும்; அதைக் கண்குளிரக் காணவேண்டும் என்பதுதான்! உடலை விற்று, தன் உதிரத்தைக் காக்க முனைந்தாள்.

அவளது கட்டுமஸ்தான தேகம் அந்த வியாபாரத்திற்குத் துணைபுரிந்தது. பகல் நேரத்திலே ரயில்வே 'கேட்'பக்கம் வரும் பசிகாரர்கள் அவளிடத்திலே காலமும் நேரமும் குறித்துக் கொண்டு போவதற்காக முறுக்கு வடை வாங்குவதுபோல் வருவார்கள். வியாபாரத்தோடு வியாபாரமாக 'நீச நிகழ்ச்சி'க்கும் நேரம் கணிக்கப்படும். அந்தக் கொடுமையான உரையாடல் களுக்கு அர்த்தம் தெரியாமல் அவளது ஆசை ராஜா அவள் மார்பகத்தின் மீது முகம் பொருத்திக்கொண்டு திருதிருவென விழித்துக் கொண்டிருப்பான். முத்தம்மாள் விதவைதான்! ஆனாலும் அவளது தொழிலுக்கு அந்த வேடம் பொருத்தமா யில்லை.

கழுத்திலே தாலிக்கயிறுமட்டும் கிடையாது. மற்ற லட்ச ணங்கள் அனைத்தும் சுமங்கலிக்குரிய தனிச் சோபையோடு காணப்படும். நெற்றியிலே குங்குமம்—தலையிலே பூ—கையிலே

கண்ணாடி வளையல்கள்— கருப்பு ரவிக்கை—வெள்ளைப் புடவை. சில நாட்களில் வெள்ளை ரவிக்கை—கருப்புப் புடவை. கையிலே வைத்து விளையாடும் பொம்மைகளைக்கூட அழகுபடுத்தித்தானே விற்கமுடிகிறது. காமப்பதுமைகள் அலங்காரமாய் இருந்தால் தானே காலட்சேபம் நடத்தமுடியும்.

குழந்தை ராஜாவுக்காக அவள் ஒரு மண்பொம்மை வாங்கியிருந்தாள். அது போதித்த பாடம் இது! அந்தப் பாடத்திற்குப் பிறகு பகட்டுகள் ஒருபடி அதிகமாகவே ஆயின,

ராஜா! ராஜா!! ராஜா!!! எப்போதும் அவளது கசங்கிய இதழ்களிலே இந்தச் செல்லமான பெயர்தான் பனித்துளிபோல உருண்டுகொண்டிருந்தது. "ராஜா! முள்ளில் ரோஜா!" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு அவனுக்கு முத்தமாரி பொழிவாள். அவள் புருஷன் இறந்தபிறகு, உதடுகளின் உணர்ச்சி மயமான துடிப்போடு அவள் யாருக்கும் முத்தம் தந்தது கிடையாது. எல்லாம் வறண்ட முத்தங்கள்தான். ராஜாவின் கன்னங்கள் மட்டுமே, இவளது இதழ்களால் மென்மை யோடும் பாசத்தோடும் அழுத்தப்படும். அந்த உயிரினும் மேலான ராஜாவுக்கு ஒருநாள் ஆபத்து வந்துவிட்டது. வழக்கம்போல் முத்தம்மாரயில்வே 'கேட்' வியாபாரத்திற்கு வரவில்லை.

ராஜாவுக்குத் திடீரெனக் காய்ச்சல் கண்டு, உடம்பு அக்கினிக் கட்டை போல் ஆகிவிட்டது. இரவு என்னென்ன மருத்துவங்களோ செய்துபார்த்தாள். காலையிலே குழந்தைக்கு நோய் கடுமையாகி விட்டது. முகமே மாறிவிட்டது. அதன் சின்ன உதடுகளிலே தங்கியிருந்த புன்னகை எங்கேயோ ஓடி மறைந்து விட்டது. முத்தம்மாளுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

பக்கத்திலே பழனி ஆண்டவர் கோயில்.....பிரார்த்தனை செய்துகொண்டாள். அதன் பிறகு குழந்தைக்குப் பிரக்ஞையும் போய்விட்டது. திடீரென்று அவளுக்கு ஒரு ஞாபகம். தியாகராய நகரிலே அவளுக்குத் தெரிந்த டாக்டர் ஒருவர் இருக்கிறார். பணம் கேட்காமலே வைத்தியம் செய்வார் என்று அவள் எதிர் பார்த்தாள். அவரை அவளுக்கு எப்படித் தெரியும் என்று இந்தக் கொடுமையான சந்தர்ப்பத்தில் யாரும் கேட்காதீர்கள்!

அவள் ராஜாவைத் தோளிலே தூக்கிக்கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டாள். ராஜா துவண்டு விழுந்தான். அவ்வளவு தூரம் நடந்து செல்லத் தன்னாலும் முடியாது என்பதை உணர்ந்

தாள். இரவு முழுதும் குழந்தையோடு கண்விழித்து இடையிலே இன்னொருவன் தந்த காசு, குழந்தைக்கு மருந்துக்கு ஆகாதா என்று நினைத்து, அதற்காகவும் விழித்திருந்து, முத்தம்மாள் மிகவும் களைத்துப் போயிருந்தாள். எதிரே ஒரு ரிக்ஷாக்காரன் வந்தான். தெரிந்தவன் தான்! "தியாகராயர் நகர் வரையில் வருகிறாயா, கையிலே காசில்லை?" என்று அழுதாள் முத்தம்மா.

"தியாகராய நகருக்கு வருவேன். அதோடு உன் வீட்டுக்கும் வருவேன்—சரிதானே?" என்று பல் இளித்தாள் ரிக்ஷாக்காரன்.

ராஜா பிழைத்தாக வேண்டுமே! முத்தம்மாள் அழுது கொண்டே 'சரி' என்றாள். ரிக்ஷாவிலே ஏறிக்கொண்டாள். அவனுக்கும் ராஜா பிழைக்கவேண்டுமென்பதிலே ஆசை போலும்! என்ன இருந்தாலும் ஏழை அல்லவா! ரிக்ஷாவை வேகமாகவே இழுத்தான்.

ராஜா பிழைத்துவிடுவான் என்ற நம்பிக்கையிலேயே அவனை மார்போடு அணைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள் முத்தம்மாள்.

கோடம்பாக்கம் 'கேட்' குறுக்கே வந்தது, ரிக்ஷா நின்றது. சிவப்பு விளக்கு எரிவதை முத்தம்மா பார்த்தாள். எத்தனையோ நாட்கள் அவள் அந்தச் சிவப்பு விளக்கைப் பார்த்திருக்கிறாள். இப்படி அதிர்ச்சி அடைந்ததில்லை.

"அய்யோ! விளக்கு அணைவதற்குள் என் ராஜாவின் உயிர் அணைந்துவிடும் போலிருக்கிறதே!" என்று கத்தினாள். ரிக்ஷாக் காரன் தேறுதல் கூறினான். ராஜாவின் உடம்பைத் தொட்டுப் பார்த்தாள். மூச்சு ஒரு மாதிரியாக விட ஆரம்பித்தது குழந்தை! முத்தம்மா கோவெனக் கதறினாள்.

விளக்கு அணைந்தது. கதவு திறந்தது. ரிக்ஷா நகர்ந்தது. ராஜாவின் உயிர் போய்விடவில்லை. முத்தம்மா 'முருகா! முருகா! பழனியாண்டி' என்று கத்திக்கொண்டேயிருந்தாள். ரிக்ஷாவும் மிகவேகமாகப் போய்க்கொண்டிருந்தது.

அதோ, அவள் போகவேண்டிய டாக்டர் வீடு இன்னும் ஒரு பர்லாங் தூரத்திலேதான் இருக்கிறது. போலீஸ்காரர்கள் ரிக்ஷாவை நிறுத்திவிட்டார்கள்.

முத்தம்மா வந்த ரிக்ஷாமட்டுமல்ல; பல ரிக்ஷாக்கள்—பல வண்டிகள்—பல கார்கள்—நூற்றுக்கணக்கான மக்கள்—நிறுத்தப்பட்டுப் போக்கு வரத்தே தடைபட்டுப் போயிருந்தது.

ஒருவரைப் பார்த்து ரிக்ஷாக்காரன் கேட்டான் "என்ன விசேஷம்" என்று. "நேபாள ராஜா வருகிறார்; அதற்காக!" என்றார் அவர்.

"எவ்வளவு நேரம் இப்படி?" என்றாள் முத்தம்மா அழுகையோடு!

"ஜனங்களையெல்லாம் ஒரு இடத்திலே திரட்டி வைத்து, நேபாள ராஜாவை நாடுமுழுதும் வரவேற்கிறது என்று காட்ட வேண்டாமா? அதற்காகத்தான் விரும்பாதவனையும் நிற்க வைத்து வேதனை கொடுக்கிறார்கள்" என்று சொல்லிக்கொண்டே இப்படியும் அப்படியும் உலவிக்கொண்டிருந்தான் ஒரு இளைஞன். நேரம் ஆகிக்கொண்டே போனது. முத்தம்மாளின் கண்ணீரும் வற்றிவிட்டதுபோலும்!

ராஜாவை முகத்தோடு முகம் வைத்து மெய்ம்மறந்து போயிருந்தாள். போலீஸ் அதிகாரிகளின் பிரமாத முஸ்தீபுகளோடு, முக்கால் மணி நேரத் தாமதத்திற்குப் பிறகு, நேபாள ராஜா வறட்டுச் சிரிப்புகளை வரவேற்பாகப் பெற்று பவனி சென்றார்.

அந்த ராஜா போனபிறகு முத்தம்மா ராஜவின் முகத்தைப் பார்த்தாள். திடுக்கிட்டாள். குழந்தை துவண்டது.

"நேபாள ராஜாதான் போய்விட்டாரே; இனிமேல் கூட நாம் போகக்கூடாதா?" என்று முத்தம்மா கத்தினாள். ரிக்ஷா டாக்டர் வீட்டுக்கு ஓடியது. முத்தம்மாளின் நம்பிக்கையின்படியே டாக்டர் குழந்தையைப் பரிசோதித்தார். இறந்துபோய் அரை மணி நேரமாகிறது என்ற தகவல் மட்டுமே அவரால் தர முடிந்தது.

நேபாள ராஜா போவதற்கு முன்பே, தன் ராஜாவின் உயிர் போய்விட்டதா என்று முத்தம்மா புரண்டு அழுதாள். "அரைமணி முன்பே வந்திருந்தால் எப்படியும் குழந்தையைப் பிழைக்க வைக்க முயற்சித்திருப்பேன்" என்று டாக்டர் வருத்தத்தோடு சொன்னார்.

"அய்யோ ராஜா!" என்று கத்துவதைத் தவிர முத்தம்மாளால் வேறு என்ன செய்யமுடியும். அவளது கண் எதிரே கோடம்பாக்கம் 'ரயில்வே கேட்'டும், போக்குவரத்தைத் தடை செய்த போலீஸ் அதிகாரிகளின் வளையமும் மாறிமாறிக் காட்சி தந்தன. ரிக்ஷாக்காரன் தான் கேட்ட 'கூலி'யை இன்னொரு நாளைக்குப் பெற்றுக் கொள்வதாகக் கூறிவிட்டு அனுதாபத்தோடு அவளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டான்.

விஷம் இனிது

'ஜெ'கவீரா, சத்தியவதியின் போக்கு எனக்கு பிடிக்கவில்லை மகனே!''

''அம்மா!''

''ஆம் செல்வனே, சத்தியவதி பருவப் பெண், பட்டத்து ராணி, அவள் இவ்விடப்படி வேற்றூடவர்களோடு பேசுவது தகாது, தீக்குளித்த திலகங்களைப் பெற்றெடுத்த ராஜபுத்ர வம்சத்துக்கே அது அவமானம்!''

''அம்மா, என்ன சொல்கிறீர்கள்? சத்தியவதி என்ன செய்தாள்? யாரோடு சரசம் செய்தாள்? சொல்லுங்கள்!''

''ஆத்திரப்படாதே! நேத்திரத்தைப் போல நீ அவளை நேசிக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். ஆனாலும்...!''

''என்னம்மா ஆனாலும்...?''

''உன் தம்பியும் அவளும் அடிக்கடி தனித்து உரையாடுவது எனக்குப் பிடிக்கவில்லை ஜெகவீரா! நீ கொஞ்சம் கண்டித்தால் அவள் கட்டுப்பட்டுவிடுவாள் என்றுதான் சொல்கிறேன்.''

''தம்பி அர்தோலைப் பற்றி அப்படி யெல்லாம் தப்பாகச் சொல்லாதீர்கள் அம்மா! அவன் ஒரு சொக்கத் தங்கம்—சுடர் மணி விளக்கு!''

''ஜெகவீரா! நீயோ டெல்லிக்குப் போகிறாய். வர நாள் பிடிக்கும். இப்போதே எச்சரித்துவிட்டேன். நான் சத்தியவதியை

தவறு கூறுகிறேன் என்று கருதாதே. தவறான பாதைக்கு அவள் சென்றுவிடக்கூடாது என்பதுதான் என் எண்ணம்.''

''சரியம்மா; கவனித்துக்கொள்ளுங்கள் எல்லாவற்றையும் நல்லவிதமாக! நான் புறப்படுகிறேன்.''

ஜெகவீரசிம்மன், ஒரு காலத்தில் ஓரிசா மக்களின் இதய விளக்கு. பதினேழாம் நூற்றாண்டில் அந்த மண்டலத்து மாந்தர்களின் மட்டற்ற செல்வாக்கைப் பெற்ற யுவராஜன். சக்கரவர்த்தி ஷாஜகானுக்கு முடிசூட்டுவிழா டில்லியில். அன்பழைப்பு வந்திருக்கிறது ஜெகவீரனுக்கு. வீரர் ஆயிரவருடன் அவன் டெல்லிப் பயணம் புறப்படும்போதுதான் அவனது தாய் அமிர்தராணி அங்குவந்து மருமகள் சத்தியவதியைப் பற்றிய புகார்களைக் கூறினாள். விடைபெற்றுச் செல்ல வந்த வேந்தன் தாக்குண்டான் சொல் வேலால்! புள்ளிமான்களுக்குப் பரிந்து அவன் பிணமாக்கியுள்ள புலிகளுக்குக் கணக்கில்லை. களத்தில் குதித்துவிட்டால் கண் மூடித் திறப்பதற்குள் கணக்கற்றோர் பிணமாவர் அவன் கத்தி வீச்சால்! அத்தகைய மாவீரனை அன்னையின் சொல்லம்புகள் சுருளவைத்து விட்டன. தன் இன்ப வாழ்வில் ஏதோ ஒரு இழுக்கு படர ஆரம்பித்துவிட்டது என்பதால்தான் அம்மா அந்த எச்சரிக்கைக் கணையைத் தொடுத்திருக்கிறாள் என்று எண்ணினான். அதனால் ஏங்கினான். டெல்லிக்குப் பயணமானான், வாடிய முகத்தோடு!

அவன் இருதயத்தை அரித்திடும் பிரச்சனையாகி விட்ட சத்தியவதி அவனது ஆசை ராணி. ஓரிசாவின் புதிய மீராபாய் இவள் தான் என்று சொல்லக்கூடிய அளவுக்குக் கடவுளிடத்திலே பக்திகொண்டவள். கணவன் ஜெகவீரனிடத்திலே பிரேமையும், தன் தேசத்தினிடத்திலே அன்பும் கொண்ட அந்த ராணிக்கு ஒரே ஒரு குறை மட்டும் இருந்துவந்தது. அக் குறையைத் தீர்த்துவிடச் சமயத்தை எதிர்நோக்கியிருந்தாள் சத்தியவதி. ஜெகவீரனின் தந்தையும், அவளது மாமனருமான வீரசிம்ம வேந்தர், புலியொன்றினால் தாக்கப்பட்டு உயிர்விடும் தருணம், தன் மகன் ஜெகவீரனிடத்திலும் சத்தியவதியிடத்திலும் தனது இளைய மகன் அர்தோலை ஒப்புவித்துப் பாதுகாக்கும்படிச் சொன்னதோடு, தன் நினைவாக—''இராமபிரான் கோயில்'' ஒன்று கட்ட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அப்போது தந்தையின் உத்திரவை நிறைவேற்றுவதாக ஜெகவீரன் வாக்களித்தான். தந்தையின் நினைவாகக் கட்டும் ஆலயம் மிகச் சிறப்புடையதாயிருக்க

வேண்டும்; அதற்கு ஏராளமான பொன் வேண்டும்—பொக்கிஷ நிலை சரியில்லாத இந்தச் சமயத்தில் எப்படி அந்த ஆலயத்தை நிர்மாணிப்பது என்று தயங்கினான். சத்தியவதியோ மாமனருக்கு அளித்த வாக்கை எப்படியும் நிறைவேற்ற வேண்டுமென்று துடித்துக்கிடந்தாள். மாமன் ஆசைப்படி அவரது இளைய செல்வன் அர்தோலை நன்கு பாதுகாத்தாள். அதன் காரணமாக அர்தோல், அவளைத் தன் சொந்த அன்னை போலவே பாவித்தான். ஆண்டவனுக்கு ஆலயம் விரைவில் கட்டியாகவேண்டும் என்ற ஆசையைச் சத்தியவதி, அடிக்கடி அர்தோலிடம் தெரிவித்து வந்தாள்,

"அர்தோல்! அரசர் டில்லியிலிருந்து திரும்ப நாளாகு மல்லவா?"

"ஆம் அம்மா! நான்கு மாதங்களாவது பிடிக்கும்."

"அதற்குள் ராமன் ஆலயத்தை நாம் எப்படியும் கட்டி முடித்துவிட்டால் அவர் திரும்பி வந்ததும் எவ்வளவு மகிழ்ச்சி அடைவார் தெரியுமா?"

"தாயே! அது உண்மைதான். தேவாலயத்தை நாளைக்கே எழுப்பிவிடலாம். அதற்கான பொருள் கருவூலத்தில் இல்லையே!"

"எங்கேயோ வைரச் சுரங்கம் இருப்பதாகச் சொன்னீயே; அது என்ன ஆயிற்று அர்தோல்?"

"ஆமாம் இருக்கிறது. நாட்டு மக்களின் வரிப்பளுவைத் தடுக்க அந்த வைரங்களைப் பயன்படுத்தலாமென எண்ணினேன்."

"முதலில் என் மனப் பளு தீரவேண்டும் அர்தோல்! ராமனின் ஆலயம் அமைந்துவிட்டால் நாட்டிலே எக்கேடும் கிளம்பாது. இருக்கும் தீமைகளும் அழிந்துபடும். ஆகையால் முதலில் கோயில் திருப்பணியைக் கவனி!"

"வைரச் சுரங்கத்திலிருந்து மிக ரகசியமாக வைரங்களைச் சேமிக்க வேண்டும். சுரங்கம் நம் நாட்டில் இருப்பது தெரிந்தால் உடனே சுரண்டும் டெல்லி, சூறுவளி வேகத்தில் புறப்பட்டு வரும் வைரம் எங்கே என்று வாயைப் பிளந்தபடி!"

"சரி அர்தோல்; டெல்லியில்தான் விழாவும் வேடிக்கையுமாக இருக்கிறதே; இந்த நல்ல நேரத்தில் நாம் வைரங்களை ரகசியமாகச்

சேமித்து, வைகுந்த நாதனின் கோயிலைக் கட்டி முடித்து விடுவோம்! ''

''கட்டளை தாயே!''

சத்தியவதியின் எண்ணத்தை நிறைவேற்ற அர்தோல் புறப்பட்டுவிட்டான்.

முடிசூட்டு விழாவுக்கு முன்கூட்டியே அழைக்கப் பட்டிருந்தும் ஜெகவீரனுக்கு அங்கு மனம் இருப்புக் கொள்ள வில்லை. சத்தியவதி சாகசக்காரியா? அல்லது பெற்றெடுத்த மாதா பொய்க்குற்றம் சுமத்துகிறாளா? அல்லது தம்பி அர்தோல் தான் துரோகம் புரிகிறானா? என்ற மனப்போராட்டம் அவன் உள்ளத் தில் குமுறி எழுந்தது. அந்தப்போரின் உச்சக் கட்டமாக அவனுக்கு ஓரிசாவிலிருந்து ஓர் ஓலையும் வந்து சேர்ந்தது. பிரித் துப் படித்தான்; மீண்டும் கண்ணை விரித்துப் படித்தான். ஆம்— அவனது அன்னை எழுதிய கடிதம்தான் அது.

''அன்புச் செல்வா! அணைபோடச் சொன்னேன், வெள்ளம் வருவதற்கு முன்பே! கணைதொடுக்கிறேன் என்றாய் அப்போது. இப்போது விளைவு விபரீதமாகி விட்டது. ஒவ்வொரு அர்த் தராத்திரியிலும் அர்தோலைச் சந்திக்கச் சத்தியவதி புறப்பட்டு விடுகிறாள். இதை என்னால் மெய்ப்பிக்க முடியும். கேட்டால் சொல்லுகிறாள்: கோயில் கட்டத் திட்டம் போடுகிறோம் என்று! களங்கம் நமது வம்சத்தை அழித்து விடுவதற்கு முன்பு நீ புறப்பட்டு வா!

உன் அன்னை

அமிர்த ராணி''

ஓலையைக்கண்ட ஜெகவீரன் தலைசுழன்றது. டில்லி பாதுஷா வின் பட்டாபிஷேக மண்டபத்திலே அமுத வீணையின் இன்ப நாதம்! வீரசிம்மனின் மனக்குகையில் அறுந்த நரம்புகளின் முறுக்குப் பிரியும் ஜீவனற்ற 'கீச்' ஒலி! அங்கே முரசின் முழக்கம், இங்கே ஓரிசா அரசின் கலக்கம். உடனே புறப்பட்டு விட்டான் தன்னகம் நோக்கி!

இரவுநேரம். வைரம் நிறைந்த பேழை. அந்தப் பேழைதான் ராமருக்குக் கோயிலாக உருவெடுக்கப் போகிறது. கோயில் கட்டு வதற்கு முன்பே கோயிலில் வைக்க விக்கிரகம் தயாராகிவிட்டது. அதன் முன்னே அமர்ந்து ராமகீர்த்தனை பாடிக்கொண்டிருக்

கிறுள் சத்தியவதி. தன் மாமனரின் அன்புக் கட்டளை நிறைவேறப் போகிறது, மணாளன் திரும்பிவரப் போகிறான். வந்ததும் ஆலயத்தைக் கண்டு அதிசயத்தால் மகிழப்போகிறான். நாடு சுக மடைய இந்த ராமபிரான் கோயில்கொள்ளப்போகிறார். இப்படி-யெல்லாம் எண்ண அலைகள் எழும்பிடச் சத்தியவதி பூஜையில் ஈடு பட்டிருந்தாள். பூஜை முடிந்தது. வைரங்களை எடுத்து மறைவாக வைப்பதற்காகச் சத்தியவதி அர்தோலை அழைத்தாள்.

"அர்தோல்! அர்தோல்!"

"இதோ வந்து விட்டேனடி கள்ளி!" என்று கூறியபடி அங்கே நுழைந்தான் ஜைகவீரன். சத்தியவதி திடுக்கிட்டுத் திரும்பினாள்.

"பிரபு!"

"எட்டி நில்! கண்ணுக்கு அழகு தரும் காஞ்சரங் கனியே! இந்த மண்ணுக்கே அவமானம் விளைத்த மாபாதகி! எட்டி நில்!"

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"எங்கே உன் ஆசைநாயகன் அர்தோல்?"

"ஆ! அப்படிச் சொல்லாதீர்கள் பிரபு! அர்தோல் எனக்கு மகன்போல!—அவன் என் ஆசைச் செல்வன்."

"மகனேடுதான் நடு ராத்திரியிலே—தனியிடத்திலே—அடிக் கடி சந்தித்துப் பேசுகிறாயாக்கும்?"

"ஆமாம்—அதில் என்ன தவறு! ஆண்டவனுக்கு ஆலயம் அமைக்க அர்தோலுடன் பேசினேன். திட்டங்கள் தீட்டினேம். திருப்பணி ஆரம்பமாகிவிட்டது!"

"தீயே! போதும் நிறுத்து—"

"இதோ இந்த வைரங்களைப் பாருங்கள் பிரபு! ராமர் ஆலயம் கட்டுவதற்குச் சேர்த்தவை. இப்போதாவது நம்புங்கள்."

"ஆலயம் கட்ட அல்லடி வைரம்! அர்தோல் உன் ஆலிங்கனத் துக்குத் தந்த பரிசு இது! தெரியும் எனக்கு!"

"அய்யோ! அய்யோ!"

"ஏனடி காதை மூடிக்கொள்ளுகிறாய்? கண்ணை மூடிக் கொண்டு காமக்கடலில் விழுந்துவிட்டு, உளரை ஏமாற்ற ராமக் கடவுளைப் பூசிப்பவளே! பாசாங்கு செய்யாதே!"

"பிரபு! என் கற்பை இகழாதீர்கள். என் இருதயத்தின் சாபத்துக்கு இரையாகாதீர்கள்."

"என்னடி நீலி! அர்தோல்மீது உனக்கு கள்ளக் காதல் இல்லையானால் இதோ இந்த விஷத்தை உன் கையாலேயே அவனுக்குக் கொடு பார்ப்போம்."

"அவனுக்கா; வேண்டாம்! நானே சாப்பிட்டுச் சாகிறேன்!"

"முடியாது! அர்தோல் உன் கையால் விஷம் அருந்த வேண்டும்."

"அப்படியே ஆகட்டும்."

சத்தியவதி விஷத்தை வாங்கிக்கொண்டு ஓடுகிறாள்.

தேவலாயத் திட்டங்களைப் போட்டவாறு இருந்த அர்தோல் அயர்ந்து தூங்கிவிட்டான். அப்போதுதான் கையில் விஷக் கோப்பையுடன் அங்கே சத்தியவதி நுழைந்தாள்.

"அர்தோல்!"

"என்னம்மா?"

"இந்தா—இந்தப் பாலைக்குடி!"

"பாலா? இந்நேரத்திலா?"

"ஆமாம்—என்னைப் பத்தினியென நிரூபிக்க நீ இந்தப் பாஷாணம் கலந்த பாலைச் சாப்பிடவேண்டுமாம்."

"என்ன?—தாங்கள்—?"

"உன் ஆசை நாயகியெனக் குற்றம் சாட்டிவிட்டார் அரசர்—இல்லையென்பதை நிரூபிக்க, என் கையாலேயே நீ விஷம் சாப்பிட வேண்டுமாம்."

"ஆ! அம்மா! யார் கட்டிவிட்ட பழி இது? அரசரா நம்பினார் இதை? என் அண்ணை, இந்த வீண் புகார்களை நம்பி, தம்பியைத் தகாப் போக்குடையோன் எனக் கூறவும் துணிந்து விட்டாரா? அண்ணை! அண்ணை என் மனம் புண்ணாகும்படி ஏன் அண்ணை அப்படிப் பேசினீர்கள்? அய்யோ! அம்மா! என்னால் தாங்க முடியவில்லையே!"

"பேசநேரமில்லை அர்தோல்! என் அன்புமகனே, நீ விஷத்தைச் சாப்பிட்டால்தான் ராஜபுத்திர வம்சத்தின் மானமே காப்பாற்றப்படும்."

"சாப்பிடுகிறேன். ஏ விஷமே! நீ தான் என் அன்னையை அவதூறிலிருந்துகாப்பாற்றுகிறாய். ராமருக்குக் கோயில் கட்டிடத் துவங்கிவிட்டோம்—ராமர் சிலையும் அழகாகச் செதுக்கிவிட்டோம்—அந்த ராமரோ—அவர் பரிவாரமோ வந்து என் அன்னையின் தூய்மையை என் அண்ணிவிடம் சொல்லத் துணிந்திடவில்லை! தாயின்மீது, புரியாதார் சுமத்தும் பழியை—விஷமே—நீயாவது துடைக்க வந்தாயே! உனக்கு நன்றி! விஷம் இனிது! விஷம் மிக இனிது! ஆண்டவனைவிட இனிது! நம்பினோர்க்குக் கை கொடுக்காத ராம பிரானைவிட இந்த விஷம் இனிது" என்று கூறியபடி சத்திய வதியின் கையிலிருந்த விஷத்தை வாங்கிக் குடித்தான்—வீழ்ந்தான் இறந்தான்.

சத்தியவதி கண்ணீரால் அவனைக் குளிப்பாட்டினாள். தன் தவற்றைப் பிறகு தானே உணர்ந்து நொந்தான் ஜெகவீரன்! அமிர்தராணியும் பிறகு அழுதாள். எல்லோரும் காரியம் முடிந்த பிறகு கண்ணீர் வடித்துப் புலம்பினர்கள். அப்படிப் புலம்பாமலிருக்க, அய்யன் ராமபிரான் ஜெகவீரனிடம் வந்து, சத்தியவதியின் தூய்மையை எடுத்துக் கூறியிருக்கலாம்! எப்படிக் கூறமுடியும்? கூறியிருந்தால் அர்தோல் **ஆண்டவனை விட ஆலகாலம் இனிது** என்று கூறியிருக்கமாட்டானே!

வேணியின் காதலன்

இரவு எட்டுமணி. பட்டாளத்து ஆஸ்பத்திரி பெண்வார்டில் நர்ஸ் சூர்யா தன் கடமைகளைப் பரபரப்புடன் கவனித்து வந்தாள். அவளுடைய எண்ணம் ஏதோ ஒரு பொருளின்மீது லயித்துப் போய் ஊசலாடிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் நன்றாகப் புரிந்தது.

இளமையின் அழகு ஒளிவிடும் அவளது முகத்திலே கவலையின் ரேகைகள் படிந்திருப்பது மிகத் தெளிவாக யாராலும் தெரிந்துகொள்ளத் தக்கதாய் இருந்தது. நோயுள்ள பெண்மணிகளுக்கு சிகிச்சைகள், உபசாரங்கள் நடத்திக்கொண்டிருந்த அவளது முகத்திலே அழகான சிவந்த உதடுகள் முணுமுணுத்தபடியிருந்தன. "ஏ ஆண்டவனே! அவரை எப்படியாவது காப்பாற்று! அவருக்காகவே நான் உயிர்வாழ்கிறேன். அவர் என் ஜீவகாதலே இன்றைக்கு மறுத்தாலும், என்றைக்கோ ஒரு நாள் ஏற்றுக்கொள்ளத்தான் போகிறார். அதுவரையில் நான் காத்திருக்கிறேன். அதுவரை அவரையும் வாழவிடு! அதன் பின்னும் எங்களை வாழவிடு!"

இதுதான் அந்த எழிற் பெண்ணின் பிரார்த்தனை. அவள் பிரார்த்தனையினூடே பட்டாளத்து சார்ஜண்ட் குண்டப்பன் அங்கே பிரவேசித்தான். நர்ஸ் சூர்யா அவனுக்கு மரியாதை செய்து வரவேற்றாள்.

"எப்படியிருக்கிறாள் வேணி?" இது குண்டப்பன் கேள்வி.

"பூரண சுகம்—நல்ல ரெஸ்ட் வேணும். அவ்வளவுதான்!" சூர்யா சொன்னாள் இப்படி.

குண்டப்பன் பேசிக்கொண்டே அவள் படுக்கையண்டை போய் நின்றான். "வேணி!" என்று அழைத்தான். நோயினால் மூனகிக் கொண்டிருந்த வேணி, அவனைக் கண்டதும் கண்களை மூடிக்கொண்டு வேறு பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டாள். இரண்டு மூன்று நாட்களாய்ப் பிரக்ஞையற்றிருந்து, இன்றைய தினம் கண் விழித்திருக்கும் வேணி, குண்டப்பனைக் கண்டதும், வேறு பக்கம் திரும்பிப் படுத்துக்கொண்டது சூர்யாவுக்கு ஆச்சரியத்தைத்தான் அளித்தது. அவள் அதைக் காட்டிக்கொள்ளவில்லை. குண்டப்பனும் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு சூர்யாவிடம்—"சரி, நான் வருகிறேன்" எனக் கூறியபடி அவளிடம் ஏதோ ரகசியம் கூற வேண்டுமென்று ஜாடை காட்டித் தனியாக அழைத்தான். சூர்யாவும் அந்த ரகசியத்தை ஆவலுடன் எதிர்பார்த்தாள்.

"சூர்யா! வேணி ஜாக்கிரதை! ஓடிவிட்டாலும் ஓடிவிடுவாள்!" என்று கூறிவிட்டு அவன் வேகமாகப் போய் விட்டான். சூர்யாவுக்கு ஒன்றுமே புரியவில்லை.

ஓடிவிடுவாளா? ஏன்? எதற்காக சார்ஜண்ட் அப்படிச் சொன்னார்? அப்படியானால் யார் இவள்? இதுபோன்ற கேள்விகளின் அடிமையானாள் சூர்யா. குழப்பத்திலே எதுவும் வேலை ஓடாமல் தன் மேஜையண்டை போய் உட்கார்ந்தாள். சிந்தனை அதிகமாயிற்று. வேணியின் கட்டில் பக்கம் திரும்பிப் பார்த்தாள். திடுக்கிட்டாள். காரணம், வேணி அங்கில்லை. அவள் அந்தக் கூடத்தைவிட்டு அப்போதுதான் வெளியே நழுவிக்கொண்டிருந்தாள். சூர்ய ஓரே பாய்ச்சலாகப் பாய்ந்தோடி வேணியைப் பிடித்துக்கொண்டு "எங்கே ஓடுகிறாய்?" என்று அதட்டிக் கேட்டாள்.

"அம்மா—என்னை விட்டுவிடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியமுண்டு." அந்த யுவதி அழுதாள்.

"சார்ஜண்ட் உத்திரவில்லாமல், உன்னை விடுவதா? முடியாதம்மா முடியாது!"

"சார்ஜண்ட்—அவர் யாரம்மா எனக்கு உத்திரவிட! எனக்கு உத்திரவிட வேண்டிய உத்தமர் உலகமையாகிக் கிடக்கிறார் தாயே!

வேண்டுமானால் எனக்கு கொஞ்சம் விஷத்தைக் கொடுத்துவிடுங்கள்—அந்த விரியன் பாம்பிடம் என்னை ஒப்புவிக்காதீர்கள்.''

''நன்றாயிருக்கிறது நியாயம். உன்னை நம்பியிருக்கிற ஒருவரை இப்படியா ஏமாற்றுவது? உன் உடம்பு சுகமாக வேண்டுமென்று குண்டப்பன் எவ்வளவு கஷ்டப்படுகிறார்?''

''ஆமாம் என் உடம்புதான் அவனுக்குத் தேவை. அதற்காகக் கஷ்டப்படுகிறான். கனி, அழுகிவிடாமல் காப்பாற்றுகிறார்களே ஏன்? அதன்மேல் உள்ள கருணையாலா? இல்லை; அதைச் சுவைத்துத் தின்ன வேண்டுமென்ற காரணத்தால்! அந்த வகையைச் சேர்ந்தவனம்மா இந்த வஞ்சகன்!''

''ஏன் அவர் மீது சீறிவிழுகிறாய்? நீ அவருக்கு வைப்பாட்டி தானே?'' கேட்டாள் சூர்யா.

''அய்யோ! சொல்லாதீர்களம்மா! அப்படி இன்னொரு முறை சொல்லாதீர்கள்! கேளுங்கள் தாயே என் கேலிக்கதையை! புண்ணாகிப்போன உடல்களைக் கண்ணாகக் காத்து வரும் புனிதவதியே, வெறியனின் கோர விளையாட்டால் கந்தல் கந்தலாகப் பிய்த்தெறியப்பட்ட என் வாழ்க்கைச் சரிதத்தைக் கேளுங்கள். பட்டாளத்திலே ஒரு சிப்பாய்.....அவர்தான் என் பாசத்திற்குரிய கணவன். அவரைப் படாத பாடு படுத்தி என்னையும் பஞ்சனைக்கு இழுக்கிறான் பாவி குண்டப்பன். அவர் சிப்பாய்தான்; ஆனால் காருண்ய சீலர் தாயே! என் மூச்சிலே கலந்துவிட்ட ஜீவன் அவர். என் கண் எதிரிலேயே அந்தத் தடியன் அவரைத் தாக்கினான். எனக்கு தலை சுற்றியது. கந்தா, கந்தா என்று கதறிக்கொண்டு தரையில் விழுந்துவிட்டேன். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். விழித்துப் பார்த்தபோது நான் ஆஸ்பத்திரியில் இருக்கிறேன்.''

''கந்தன்!''

''ஆமாம், அம்மா! ஏன் உங்களுக்கு அவரைத் தெரியுமா?''

''சமீபத்தில் பட்டாளத்தில் சவுக்கடி தண்டனை கிடைத்ததே—அவரா?

''ஆம் தாயே அந்த நிலவுதான் என் லட்சிய கீதம். அவரைத்தான் துவளத் துவள அடித்தான் அந்த துன்மார்க்கன்; துவளத் துவள அடித்தான். நான் தொத்தி விளையாண்ட

தோள்கள்....என் கண்ணைப் பொத்தி விளையாண்ட கரங்கள் சண்டாளனின் சவுக்கு நுனியால் கொத்தி விளையாடப்பட்டன. அவர் கண்களிலே ரத்தம் வழிந்தது. விடவில்லையம்மா அந்தக் கொடியவன்—அவருக்கு நேராகவே என்னைக் கொஞ்சினன். கோர மொழி பேசினன். கூண்டுக் கிளி ஆக்குவேனென்றான். அதற்குத்தான் தாயே அவசரப்படுகிறான். என் சுகத்தைப்பற்றி அக்கறைப் படுகிறான். அம்மா என்னை விட்டுவிடுங்கள்! உங்கள் உடன்பிறந்தவளாயிருந்தால் ஒரு துளி கண்ணீரைக் கண்டதும் துடிக்கமாட்டீர்களா? அம்மா...என்னைக் காப்பாற்றுங்கள், இல்லாவிட்டால் உங்களை விடமாட்டேன்''—கெஞ்சினாள் வேணி. சூர்யாவுக்கு மூளை குழம்பியது. விழிகள் சோர்ந்தன.

கத்தன்—தற்போது வேணியின் கணவன்—ஒரு காலத்தில் சூர்யாவின் சிந்தை கவர்ந்தவனாக இருந்தான். அப்போதெல்லாம் சூர்யாவின் குடும்பம் செல்வத்திலே மிதந்தது. சீரும் சிறப்பும் மிக்க மாப்பிள்ளைகள் சூர்யாவின் வீட்டு வாயிலிலே காத்திருந்தார்கள். அந்தத் தனவந்தர் வீட்டுப் பெண் எப்படித் தரித்திர நாராயணனும் கந்தனுக்கு மாலையிடமுடியும்? புரோகிதர் குறித்த நல்லதோர் நாளில் சூர்யா குட்டிப்பட்டி முதலியாரின் மகனுக்கு மனைவியானாள்.

சூர்யா அக்கினி சாட்சியாகத்தான் மணந்தாள். மணப் பந்தலில் அம்மி மிதித்து அருந்ததியைத்தான் சந்தித்தாள். இருந்துமென்ன? பத்தே மாதத்தில் சூர்யா விதவையாகி விட்டாள். பாவம். சூர்யாவைச் சுற்றி வீசிய சூறாவளி அத்தோடு நின்றதா? சொத்து சுகத்தை யெல்லாம் ஹைகோர்ட்டின் படிக் கட்டுகளைக் கடப்பதிலேயே அவள் அப்பா கழித்துவிட்டார். அது மட்டுமா? குறுக்கு வழியிலே வந்த செல்வம் யாருக்கும் சொல்லிக் கொள்ளாமல் குறுக்கு வழியாகவே சென்றுவிட்ட கவலையில் அவரும் மண்டையைப் போட்டுவிட்டார்.

அப்பாவை அடக்கம் செய்துவிட்டு, மறுநாளே சூர்யா, நர்சிங் பள்ளியில் சேர்ந்தாள். அப்போதெல்லாம் அவள் அருமருந்தாம் கந்தனைச் சந்திக்கலாம்; கந்தர்வ லோகத்திலே உலாவலாம் என்று கனவுகூடக் கண்டதில்லை. மனிதன் நினைப்பதைப் போலவா எல்லாம் நடக்கின்றன?

கந்தன் ஆஸ்பத்திரிக்கு நினைவிழந்துதான் வந்தான். சூர்யாவின் நினைவிலே மீண்டும் புகுத்துகொண்டான்.

இந்த நேரத்திலேதானே தன் காதலுக்கோர் போட்டிக்காரியாக வேணி முளைக்கவேண்டும்? யார் இந்த வேணி? எப்படி அவள் கந்தனுக்கு மனைவியானாள்? என்பனவற்றைக் கேட்டறிய வேண்டு மென்று சூர்யாவுக்கு ஆசைதான். ஆனால் இவைகளையெல்லாம் விசாரித்துத் தன் வேதனையை அதிகரித்துக்கொள்ள அவள் விரும்பவில்லை.

தன் மென்தோள்களிலே துயில் கொண்ட கந்தனே வேறொரு பெண்ணும் வேணி உரிமை கொண்டாடுவதா? சூர்யாவால் வேணியின் காதல் போட்டியை நினைத்துப் பார்க்கவே முடிய வில்லை.

ஆசைக் கனவுகளைப் புதுப்பித்துக்கொள்ள சூர்யாவுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. ஆமாம்...மருந்து கொடுப்பது போல வேணிக்கு விஷம் கொடுத்துக் கொன்றுவிடலாம்.... பின்னர் கந்தன் வேணியை மறந்துவிடுவான்....இடத்தைப் பின்னர் சூர்யா பிடித்துக்கொள்ளலாம்....

அருமையான யோசனைதான்! சூர்யாவின் மென்மை இருதயமோ இந்தக் கோர நினைப்பால் நைந்துபோனது. பிளாரென்ஸ் நைட்டிங்கேல்களின் அரும்பெரும் தொண்டுகளால் ஏற்றம் பெற்ற நர்ஸ் தொழிலுக்குக் கேவலம் ஒரு காதல் விவகாரத்துக்காகக் களங்கம் கற்பிப்பதா?

சூர்யாவின் உள்ளம் ஒரு போர்க்களமாகியது. அவளையறியா மலே வாய்மட்டும் முணுமுணுத்தது.

"அவள் வாழட்டும்....வேணியின் வாழ்வு புத்துயிர் பெறட்டும்!" அந்த தியாகச் சின்னம் இப்படித்தான் மொழிந்தது.

மலர்ந்திருந்த அவளுடைய செந்தாமரை முகம் இறுகிப்போன அல்லிமொட்டுப் போலாயிற்று. சோகத்தின் மின்வேகத் தாக்குதலால் அவளுடைய உதடுகள் கருத்துப்போய் வெடிப்பு விழுந்தது.

"எழுந்திரு! கலங்காதே; அவருக்கு நான்தான் சிகிச்சை செய்கிறேன்" துக்கம் தோய்ந்த குரலிலே ஆறுதல் கூறினாள் சூர்யா.

சூர்யாவின் இந்த வாய்மொழி கேட்டதும், வேணியின் முகத்திலே மகிழ்ச்சியின் சாயல் படிந்தது. "எப்படியம்மா இருக்கிறது இப்போது? பேசுகிறாரா? வேணி என்று என் பெயர் சொன்னாரா?"

"ஆமாம், ஒரு நாள் உன் பெயரைச் சொல்லிப் புலம்பினர்."

"புலம்பினர்! என் ராஜன் புலம்பினர்! எங்கேயம்மா இருக்கிறார் இப்போது?"

"அவர் பட்டாளத்து ஆஸ்பத்திரியில்தான் இருக்கிறார். நான்கூடச் சிறிது நேரத்தில் போகவேண்டும் சிகிச்சை செய்ய!"

"அம்மா கவனித்துப் பார்த்துக்கொள்ளுங்கள் அவரை. என் சிந்தையில் சித்திரமாகிவிட்டவருக்குச் சிகிச்சை செய்யும் அந்தக் கைகளைக் கொடுங்கள், கொடுங்களம்மா கொடுங்கள்!" நர்ஸ் சூர்யாவின் பூக்கரங்களைப் பிடித்துத் தன் கண்களில் ஒத்திக்கொண்டாள் வேணி!

"வேணி!"—இதயத்தின் அடித்தளத்திலிருந்து பெருமூச்சின் துணைகொண்டு உதிர்த்தாள் சூர்யா. அவளது கடைக் கண்களின் ஓரத்தில் அரும்பு விட்டிருந்த கண்ணீர் மார்பகத்தில் விழுந்தது.

"வா வேணி, உன் கண்ணிறைந்த அந்த மன்னவரைக் காட்டுகிறேன் வா!" என்று கத்திக் கொண்டே வேணியின் கையைப் பிடித்து இழுத்தாள் சூர்யா. அப்போது ஆண்கள் வார்டிலிருந்து ஒரு தள்ளு வண்டி வந்துகொண்டிருந்தது.

"ஏன் மிஸ்டர் தாமோதர், எந்த 'பெட்' பேஷண்ட் இவர்? என்ன ஆச்சு?" என்று வண்டியைத் தள்ளி வந்தவரைப் பார்த்துக் கேட்டாள் சூர்யா.

"நீ இரக்கப்பட்டு, இரவும் பகலுமாய் பாதுகாத்து வந்தாயே அந்த ஆசாமிதான் சூர்யா இவர்! ஆள் 'பினிஷ்' ஆகிவிட்டான்."

"ஆ! கந்தனா? வேணி! நம் நெஞ்சு புகுந்தவன் செத்து விட்டான் வேணி!"

தரையில் சாய்ந்தாள் சூர்யா.

"ஐயோ, வாழ்வைத் துண்டித்த சண்டாளா, குண்டப்பா! கந்தா! கந்தா! கந்தா!" வேணி தள்ளுவண்டியில் விழுந்தாள்—மண்டை உடைந்து ரத்தம் சிமிண்டுத் தரையைச் சிவப்பாக்கியது. அந்தச் செங்குருதியிலே, வேணியின் கருங்கூந்தல் துவைந்து கிடந்தது.

அமிர்தமதி

எரிமலை ஆகிவிட்டதப்பா என் நெஞ்சம்; தாங்க முடியவில்லை இந்த வேதனையை என்னால்! தாய்க்குப் பிள்ளையில்லை யென்கிறார்கள். எதையாவது சொல்லிவிட்டுப் போகட்டும்; அந்தப் பிள்ளையையாவது ஒழுங்காக வளர்க்கிறார்களா என்றால். அதுவுமில்லை; அதைச் சித்திரவதை செய்து சீரழிக்கிறார்கள். எப்படியப்பா சுமக்க முடியும் இந்த சோகச் சுமையை? சொல் சுந்தர்; நீயே சொல்! சுவையான செய்திகளையே உன்னோடு தினம் தினம் பேசியிருக்கிறேன்; இன்று உன்னையும் அழவைக்கும் செய்தியைப் பேசுகிறேனேயென்று என்மீது வருத்தப்படாதே— சகோதரா! சகிக்க முடியவில்லையடா இந்தக் கொடுமையை! என் இருதயச் சுமையை உன் கனிவான மொழியொன்றினால் மட்டுமே குறைக்க முடியும் என்று எனக்குத் தெரியும். ஆனாலும் இந்த நிகழ்ச்சியைப் பொறுத்தவரை நீயும் தோற்றுவிடுவாய்! அப்படி நொந்து போயிருக்கிறேன் நான்."

"அன்பா! அழாமல் பேசு—முதலில் விஷயத்தைச் சொல்! அப்படி யென்ன வராதது வந்துவிட்டது?"

"வராதது வந்துவிடவில்லை—வழக்கமாக வஞ்சகர்கள் செய்யும் வேலைதான் இது! ஆனால் இது, இதுவரை நடக்காத இடத்திலே நடந்து விட்டது!"

"மாமனார் வீட்டிலா?"

"குடும்ப விஷயமில்லை சுந்தர் நான் பேசுவது! கொந்தளித்துக் குமுறிவிட்ட கோர நிகழ்ச்சியடா இது!"

"பிறகு யாராவது நண்பர்களிடம்?"

"நண்பர்களா? சகோதரா!—நண்பர்களைப் பற்றித்தான் நாமிருவரும் ஒரு நல்ல முடிவுக்கு வந்து பல நாளாகிறதே!—நாசம் நடந்துவிட்டது—நடக்காத இடத்திலே நடந்துவிட்டது!"

"புரியும்படிச் சொல்—என்னையும் குழப்பாதே!"

"திருடி விட்டார்கள்!"

"எதை? பணத்தையா?"

"பணம் போனால் என்ன — அதைப் பற்றி நான் என்றைக்கடா இப்படிக் கவலைப்பட்டிருக்கிறேன்?"

"பிறகென்ன; குழந்தையின் முத்தாரமா?"

"அது அந்த திருடனுக்குத் தேவையில்லை போலும்?"

"பிறகு எதைத்தான் திருடினான்? யார் அந்தத் திருடன்? அதைச் சொல்!"

"திருடன் பெயரைச் சொன்னால் நீ நம்பமாட்டாய்—நானும் நம்பவில்லை முதலில்! இப்போதுதானப்பா உள்ளம் கொதிக்கிறது! மகனைப் பறிகொடுத்த தாயின் வயிறுகூட இப்படி எரியாதப்பா!"

"சரிதான்—ரத்தக் கண்ணீரே விட ஆரம்பித்து விட்டாய்!"

"அது தானப்பா என் கதை!—கண்ணீர்க் குளமாகத்தான் மாறிவிட்டது என் வாழ்க்கை!"

"நீ இப்போது சொல்லப் போகிறாயா இல்லையா? கடைசியாகக் கேட்கிறேன், விவரத்தைச் சொல்!"

"என் எழுத்தைத் திருடிவிட்டார்கள்!"

"என்ன?"

"யசோதர காவியத்தைத் தழுவி ஒரு கற்பனைச் சித்திரம் வரைந்தேனே தெரியுமா உனக்கு?"

"ஆமாம், சொன்னாய்! நான் படித்துப் பார்க்கவில்லை—அந்தக் கற்பனைக்குத் தலைப்புகூட "சுகம் எங்கே" என்று அமைத்திருந்தாய் அல்லவா!"

"அதுதான் சகோதரா! சூதர்களால் களவாடப்பட்டு விட்டது!"

"தலைப்புதானே!"

"அல்ல! அல்ல! தலைப்பைப்பற்றியல்ல நான் பேசுவது! கருத்துக்களும் உரையாடல்களும் களவாடப் பட்டுவிட்டன பாவிகளால்!"

"பதறுதே!"

"நான் என்றைக்காவது இப்படிப் பதறிப் பார்த்திருக்கிறுயா? என் அன்பு உருவான தந்தையின் பிணத்தைப் பார்த்த போது கூட மரம் போலத்தானே நின்றேன்—அழுதேனு? பதறினேனு? சுந்தர்! உனக்குத்தான் தெரியுமே; என் இதய ராணி, இல்லறத்தின் விளக்கு, இமைகளைத் திறக்காமல் மூடி இறப்புலகம் ஏகிவிட்ட நேரத்தில் கூட வாய்விட்டுக் கதறவில்லை. நான் அமைதியாகத்தான் நின்றேன்—பட்டமரம்போல் ஆனேனே தவிரப் பதறவில்லையே சகோதரா! அப்பா! அப்பா! என அழைத்துத் தாவிய என் செல்வன் செத்துவிட்டபோதும் கண்ணீர் உகுத்திடவில்லை — கலங்கினேன் — கதறிடவில்லை! அதுவும் தெரியும் உனக்கு! அருமைச் சகோதரனே! இப்போது நான் பதறுகிறேன்—துடிக்கிறேன்! இதை நான் மறைத்திட விரும்பவில்லை. கழுத்திலே அரிவாள் பாய்ந்திருந்தால் தலைவேறு முண்டம் வேறுகப் போயிருக்கும்! இந்த அரிவாள் இருதயத்தைக் கொத்திவிட்டதடா என் சுந்தர்! அலறுகிறேன்—இந்த உலகத்தின் காதிலே விழட்டும் என்ற நினைப்பிலே கூவுகிறேன்—கூச்சலிடுகிறேன்!—கூடாது! கோழைபோல் அழக்கூடாது, என்று நீ கூறுகிறுயா?—என் ஒருவனின் கண்ணீர் அந்தப் பாதகர்களின் பாறுங்கல் மனத்தைக் கரைத்துப் பண்படுத்திவிடும் என்பதால் அல்ல நான் அழுவது! பழம் கிடைக்கும் அழுதால் என்று குழந்தை நினைக்கிறதே அது போலவோ; பலன் கிடைக்கும் அழுதால் என்று பாசாங்குக்காரி நினைப்பாளே அது போலவோ அல்ல நான் அழுவது! மண்டையைப் பிளந்தால் ரத்தம்தானே கொட்டுகிறது—அது போலத்தான் கண்ணீரும் கொட்டுகிறது. என் கண்ணீருக்குச் சக்தியிருக்கிறதோ இல்லையோ—அதைப்பற்றி ஆராய்ச்சி எனக்குத் தேவையில்லை—நான் அழுகிறேன்—இல்லை—அழும் நிலைமைக்கு ஆளாக்கப்பட்டு விட்டேன்!"

"மிகவும் புண்பட்டிருக்கிறுய்—கொஞ்சம் நிம்மதியாக மௌனமாக இரு!"

"முடியாது சுந்தர்! என் இருதய பாரம் குறையவேண்டும்—ஏதாவது பேசிக் கொண்டேயிருக்கிறேன்—பித்தன் என்று கூறுவாய்! கூறிக்கொள், கவலையில்லை!"

"நானும் சேர்ந்து உன்னோடு அழுகிறேன்—விஷயத்தை யாவது புரியும்படிச் சொல்!"

"அதுதான் சொன்னேனே; யசோதர காவியத்தைத் தழுவி "சுகம் எங்கே?" என்று ஒரு கற்பனைக் காவியம் தீட்டினேன். அதிலே உள்ள என் உரை நடைகளைத் தீவட்டிக் கொள்ளை அடித்துவிட்டார்கள் தீயவர்கள்!"

"அந்தத் தீயவர்கள்தான் யார் என்று கேட்கிறேன்—அதைச் சொல் முதலில்!"

"யசோதர காவியத்தில் வரும் அமிர்தமதி என்ற அரசியை விடக் கொடியவர்களப்பா அந்தத் திருடர்கள்!"

"அமிர்தமதி! யசோதர காவியம்! நான் எதுவுமே படித்ததில்லை—நீ என்னிடம் வந்து உதாரணம் காட்டுகிறாய்!"

"யசோதர காவியம்—நீ படித்ததில்லை? ஐஞ்சிறு காப்பிய வரிசையிலே உள்ளதல்லவா அந்தக் காவியம்! அவந்தி நாட்டு மன்னனின் வரலாற்றைக் கூறும் சமண சமய நூல். சுந்தர்! அதிலே வரும் அமிர்தமதி என்ற பாத்திரத்திற்கும் என் எழுத்தைத் திருடிய எத்தர்களுக்கும் கொஞ்சமும் வித்தியாசமில்லை! சுருங்கச் சொல்லப்போனால் இந்தச் சம்பவத்துக்கும் யசோதர காவியத்திற்கும் நிரம்பத் தொடர்பு உண்டு!"

"சரி! அதையாவது புரியும்படிச் சொல்!"

"யசோதரன் அவந்தி நாட்டு மன்னன். அவனது பட்டத்து ராணி அமிர்தமதி. ராணியின் மனமறிந்து மகிழ்ச்சியளிக்கும் மன்னன்தான் யசோதரன். சுந்தரரூபன். சுகுமாரன். நாட்டுக்கு அதிபதி! அத்தகைய செங்கோலேந்தியின் சிற்றின்பக் கூடாரத்தை அலங்கரிக்கக் கூடிய பாக்கியம் அந்தச் சிங்காரி அமிர்தமதிக்குக் கிடைத்திருந்தது, மன்னவனின் மஞ்சத்து மயில் என்றால் சாதாரணமா? தாதிகள் உண்டு; தயவு கேட்டு நிற்கப் பல சேவகருண்டு! தங்கம் கலந்த உணவை உண்டு—அங்கம் பூரிப்பு கொண்டு—காதல் மிஞ்சுதே சேடி—காவலனைக் கூப்பிட்டு வாடி! என்று அழைத்த கணமே அவர்கள் ஓடி, ஆடிப்பாடி.

அரசனை அழைத்து வருவர். ஆனமேல் அம்பாரியா? அணி தேர்ச்சவாரியா? பூனை ரோமத்தால் மிதியடியா? புலிப் பாலா? புரவிக் கொம்பா? எது கேட்பினும் தருவர் — அதற்கெனவே எடுபிடிகள் ஏராளமாக உளர். இந்தச் செல்வாக்கின் மத்தியிலே செல்லாடை போடும் சேயிழையாள் அந்த அமிர்தமதி!''

''ஆகா பிரமாத வர்ணனை! சொல்! இன்னும் சொல்!''

(தன் தோழன் சொல்ல வந்த சோகச் செய்தியை மறந்து காவியத்தின் சுவையிலே இலயித்துவிட்டதைச் சுந்தர் உணர்ந்தான்—ஆகவே, மீண்டும் காவியத்தைத் தொடரத் தூண்டினான்.)

''அழகி அமிர்தமதியும், அரசன் யசோதரனும் ஒரு நாள் அந்தப்புரத்தில் இன்பக் கேளிக்கையில் ஈடுபட்டனர்.''

''ஓகோ! ஒய்யாரமான கட்டமே இப்போதுதான் ஆரம்பம் போலும்—சொல் சோதரா, சொல்!''

''கட்டிற் காவியம் எழுதி முடித்தனர்—கண் அயர்ந்தனர்.''

''சரிதான், சுருக்கமாக முடித்து விட்டாய்! பிறகு காலையில் எழுந்தனர்; அவ்வளவுதானே?''

''இல்லை இல்லை—அரசன் தூங்கும் சமயம், ராணி கண் விழித்தாள். ஆமாம்! மலர் விழித்துக்கொண்டது; வண்டோ தூங்கிக்கொண்டிருந்தது. விழித்த சமயம் அந்த இரவில் ஒரு இனிய கானம் அவள் காதில் ஒலித்தது!''

''சரி''

''கானம் வந்த பக்கம் கருத்தைச் செலுத்தினாள். அந்தக் கானம் எழுப்பியவனைக் கட்டித் தழுவவேண்டுமென்று துடித்தாள்!''

''அய்யய்யோ—அப்புறம்!''

''மறுநாள் தன் தோழி குணவதியை அனுப்பினாள்; அர்த்த ராத்திரியிலே பாடியவன் யாரென்று அறிந்துவர! தோழியும் போய் அவனைக் கண்டாள். இசை எழுப்பியவன் ஒரு யானைப் பாகன். அவன் எப்படிப்பட்ட அழகுடையவன் தெரியுமா? தோழி வாயிலாகக் கவிஞர் கூறுகிறார் கேள்:—

'நரம்புகள் விசித்த மெய்யன், நடையினிற் கழுதணிந்தோன், திரங்கியவிரலன், கையன், சிறுமுகன், சினவன், சீறிற் குரங்கினையனையன், கூனன், குழிந்து புக்கழிந்த கண்ணன்!'

''இன்னும் பலவாறுக அவனது விகாரங்களை வர்ணித்து அவன் மீது ஆசை வைப்பது தகாது என்று ராணியிடம் தோழி கூறுகிறாள். அமிர்தமதியோ 'அவன் எப்படியிருந்தாலும் கவலையில்லை. அவனை அணைத்து மகிழத்தான் வேண்டும்' என்று பறக்கிறாள். 'கனியிருப்பக் காய் பறிக்கலாமா அம்மா! சகல அழகும் பொருந்திய அரசர் பெருந்தகையின் மனைவியாகிய நீங்கள், கேவலம் குரங்கைப் போன்ற—ஒரு சாக்கடை மனிதனைக் கொஞ்சிக் குலவ விரும்பலாமா தாயே!' என்றெல்லாம் குணவதி தடுக்கிறாள். ஆனால் அரசியோ, 'அவன் எப்படியிருந்தால் எனக்கென்ன; அவன் நல்ல இசைவாணன் — அவன் அணைப்பிலேதான் சுகம் இருப்பதாக நான் உணர்கிறேன்' என்று கூறியதோடு, அந்தப் பாடல் கற்ற யானைப் பாகனையும் வலிய இழுத்து, அணைத்து மகிழ்ந்தாள். நாளொருமேனியாக அந்த நாய்க் காதல் வளர ஆரம்பித்தது. ஒரு நாள் அரசனே அவர்களது காதல் களியாட்டத்தைத் தூர நின்று பார்த்துவிட்டான். அப்போது என்ன நடந்தது தெரியுமா? அரசன் எந்தக் காட்சியைக் கண்டான் தெரியுமா? வழக்கமாக யானைப்பாகனைச் சந்திக்கும் அமிர்தமதி அன்று சற்றுத் தாமதமாக அவனிடம் வந்து விட்டாளாம். அதற்காக அந்த யானைப் பாகன் — அட்டபங்கன் என்னும் பெயருடைய அந்த அவலட்சணம்—அமிர்தமதியின் அழகுக் கருங் கூந்தலைக் கையால் இழுத்து எறிந்து, அவளைக் கீழே தள்ளி, இரு கைகளாலும் நையப் புடைத்து 'என் காலம் தாழ்த்தி வந்தாய்?' என்று கனல் கிளம்பக் கேட்கிறான்.

''கட்டளையிட்டால், காதம் யோசனை என்ற தூரம் ஓடிக் காரியமாற்றிடும் பணியாளர்களின் தலைவி—மண்டலாதிபதியின் மனைவி—ஒரு அழகிய உடல் படைத்த யானைப்பாகன், தன்னைத் திட்டி அடிப்பதிலே சுகம் காண்கிறாள்.

''அவள் மலர்ப் பாதங்களை அர்ச்சிக்க ஆயிரம் பேர் காத்திருப்பர்—அவள் அந்தப் பாகனின் கால்களைக் கண்ணில் ஒத்திக் கொண்டு காலந் தாழ்ந்தமைக்கு மன்னிப்புக் கோருகிறாள். இதைக் கண்ட மன்னன் வெகுண்டான். தனக்குத் தடையாக வந்த மன்னனுக்குத் தந்திரமாக நஞ்சு கலந்து அவனையே தீர்த்துக்கட்டி

விட்டாள், அந்தப் பாகனின் பாட்டிலே சுகம் கண்ட பாதகி. அந்தப் பாதகிக்குப் பெயர் அமிர்தமதி! இதுதான் சுந்தர் யசோதர காவியத்தின் சுருக்கம்!''

''நன்றாயிருக்கிறது—சந்தனத்தை மறுத்துச் சாக்கடையிலே சுகம்கண்ட ராணியின் கதை நன்றாயிருக்கிறது! இந்தக் காவியத்திற்கு நீ ''சுகம் எங்கே?'' என்று பெயர் வைத்தது மிகவும் பொருத்தம்.''

''இப்போது புரிகிறதா—என் எழுத்தைத் திருடியவரும் அந்த அமிர்தமதியும் குணத்தால் ஒருவரே என்பது; கேள் சுந்தரம்! பேச்சை மாற்ற வேறு பக்கம் திரும்பாதே! காவியத்தில் வரும் அமிர்தமதி அரசனைவிட்டு யானைப் பாகனைத் தேடுகிறாள்; அந்த விகாரியுடன் விபச்சாரமும் நடத்துகிறாள். நல்லது கசக்கிறது, நாசம் இனிக்கிறது அவளுக்கு! அவளைப் போலத்தான் என் எழுத்தைத் திருடியவருக்கும் தேன் கசக்கிறது! ஆமாம் சகோதரா! திருட்டுத் தனம் இனிக்கிறதாம்.''

''யார் என்று தான் சொல்லேன்!''

''சொன்னால் நம்பமாட்டாய்! அவ்வளவு நல்லவராய இருந்தார்—யாரோ அவரை விஷமாக்கி விட்டார்கள். அய்யோ அவர்கள் வாழமாட்டார்கள்! மூளையை உருக்கிச் செய்த கற் பனைகளை உழைக்காமல் எடுத்து விழுங்கிவிட்ட எத்தர்கள் அதிக நாள் வாழமாட்டார்கள்! வியர்வை சொட்டச் சொட்ட, விலா விலே வலி கொட்டக் கொட்ட, விழி மூடாமல் வேலை செய்து நான் உருவாக்கிய தழுவல் இலக்கியத்தைப் பாடுபடாமல் எடுத்து, வாயிலே போட்டுக் கொண்டவர்களுக்கு நல்லதொரு தீர்ப்புக் கிடைக்காமல் போகாது!''

''உஸ்! பேசாமலிரு! அலட்டிக்கொள்ளாதே!''

''என் நிலைமையிலே நீ இல்லை — அதனால் அப்படிச் சொல்கிறாயா?''

''நானும் நீயும் ஒன்றுதானே—வேறு வேறு?''

''அப்படியானால் இதற்கு என்னதான் வழி? அதையாவது சொல்! இந்த அக்ரமத்திற்கு அழிவே கிடையாதா?''

"ஏன் கிடையாது! நீ சொன்னயே கதை—அதிலே இருக்கிறதே முடிவு! அமிர்தமதி தன் "சுகம் எங்கே?" யென்று தேடிக் கொண்டாள். கணவனையும் கொன்றுள். ஆனல் அந்த அற்ப புத்திக்காரி காவியத்திலே களங்கம் நிறை அவமானச் சின்னமாக ஆகிவிட்டாளே—அதை அந்தக் கைகாரியால் மாற்ற முடிந்ததா? அதேபோல் உன் எழுத்தைத் திருடியவர்களும் அவமானத் தோட்டத்திலே பூத்துவிட்ட எருக்கம் பூவாகி விடுவார்கள் பயப்படாதே!"

"சுந்தர், நீதான் எனக்கு ஆறுதல்!"

"கவலைப்படாதே! அந்த எழுத்துக் கொள்ளையர் யார்? அதைச் சொல்!"

"பிறகு சொல்கிறேன்—இப்போது என்னல் பேச முடியவில்லை!"

சுமந்தவள்

"என்னைச் சுமந்தவள்; நான் பிறந்ததும் தான்பட்ட வேதனையை மறந்து தாமரை முகம் காட்டியவள்; நான் சிரித்தால் சிரித்து, அழுதால் அழுது எனக்கு அமுதூட்டிய பெருமாட்டி— என் தாய்—என்தெய்வம்—என்றைக்காவது ஒருநாள் என்னை விட்டுப் பிரிந்துவிட்டால்...

அம்மவோ! அதை நினைக்கவே என் நெஞ்சுக்குத் தென்பில்லை. இந்தத் தள்ளாத வயதிலும் எவ்வளவு சுறு சுறுப்பு! எத்துணை குடும்பக்கவலை! ஒருகணம் அந்த எலும்புக் கால்களுக்குதான் ஓய்வு இருக்காதா? கொல்லைப்புறம்—கூடம்—அடுக்களை—தெரு வாயில்—மாடிப்படி—இப்படி எங்காவது ஓர் இடத்தில் கீழே கிடக்கும் துரும்பையாவது எடுத்து வெளியே போட்டுத் தூய்மைப் படுத்தும் பணியில் துரு துருவென்று இருக்க எப்படித்தான் முடிகிறதோ?

உழைத்து உழைத்து ஓடாகத் தேய்ந்துவிட்ட அந்தத் திரு வுருவம் ஒரு நாள் நீங்காத்துயில் கொள்ள நேரிடுமே—அந்த வேதனையை எவ்வாறு தாங்கிக் கொள்ளப் போகிறேனே; தெரியவில்லையே? எலும்பும் தோலுமாக ஒரு கிழம்கிடப்பது வீடு முழுதும் விளக்கேற்றி வைத்ததுபோல ஒளிமயமாய்த் திகழும். குஞ்சு குளுவான்கள் நிறைந்த குடும்பத்தையே தாங்கிக் கொண் டிருக்கும் தூண் அந்தப் படுகிழம் தான்! அந்தப் பழுப்பு இலையின் நிழலிலே நாங்கள் காணும் குளிர்ச்சியை இழந்துவிடு வதற்கு எப்படித்தான் மனம் வரும்!"

இத்தகைய நினைவுகளோடு தாழ்வாரத்தில் உலவிக் கொண்டிருந்தேன். தாயின் அன்புக்கரத்தின் தழுவல் இல்லாத பாலைவனம் போன்ற ஒரு வறண்ட எதிர்காலத்தைக் கற்பனை செய்து களைத்துப்போய் மெலிந்த பெருமூச்சு விட்டுக்கொண் டிருந்தது என் நெஞ்சம். தாயில்லாத வீடு. தாய் அளிக்காத உணவு. தாயின் அன்பு மொழி கேட்டு இன்பம் பெறமுடியாத செவிகள். தாயின் அருள் முகம் காண இயலாத விழிகள். தாயில்லாத நான். இவைகள் எல்லாம் எனக்கு வருங்காலத்தில் புயல்—பூகம்பம்—சூறாவளி எனத்தக்க பெரும் சுழற்சிக் கொந்த ளிப்புகள் அல்லவா?

தாயின்மீதுள்ள பாசம் மட்டும் மனிதனை ஏன் இவ்விதம் ஆட்டிப்படைக்கிறது? வாட்டிவதைக்கிறது? தாய் என்ற சொல்லுக்கு இவ்வளவு மகிமை ஏன்? மதிப்பு ஏன்? உண்மை யிலேயே தாய் என்றால்யார்? தாய்க்குரிய இலட்சணங்கள்தான் என்ன? பெற்றுவிட்டால் அவள் தாயாகிவிடுவாளா? பிள்ளை பெற்றவர்கள் எல்லாம் தாய்கள்தானே?

இந்தக் கேள்விகளுக்கு விடைகாண வேண்டுமென்ற அவா உள்ளத்தில் கொடி கட்டிப் பறந்தது.

அப்போது என் தாயார் மெல்ல மெல்ல என் பக்கம் வந்து நின்று, என் முகத்தை அன்பு கசிய உற்றுப்பார்த்து "ஏனப்பா ஒரு மாதிரியிருக்கிறாய்?" என்று ஆவலைக் கொட்டினார்கள்.

"ஒன்றுமில்லையம்மா. உட்காருங்கள்!" என்றேன். என்னை உட்காரவைத்தவாறு அவர்களும் உட்கார்ந்தார்கள்.

"அம்மா! ஒரு சந்தேகம்—நீங்கள் விளக்கவேண்டும்!" என்றேன்.

"என்னடா கண்ணு? ஓயாமல் படிக்கிறாய்—ஊருக்கெல்லாம் பேசுகிறாய்—என்னிடத்தில் வந்து சந்தேகம் கேட்கிறாய்?" என்று அம்மா கொஞ்சினார்கள்.

"ஓயாமல் படிக்கிறவன்—ஒப்பற்ற மேதை—உலகுபுகழ் நிபுணன்—என்றெல்லாம் உயரத்தில் நிற்கிறவனுக்குக்கூட சில சமயங்களில் தாயின் அருமை தெரிவதில்லையே; அந்த அடிப்படை யில் எழுந்ததுதான் இந்தச் சந்தேகம்."

"ம்! மேலே சொல்லு!" என்றார்கள் தாயார்.

"தாய்மை என்றால் என்ன? தாய் என்றால் யார்? பெற்றவள் தாயா? பேணி வளர்த்தவள் தாயா? இதற்கு எனக்கு விளக்கம் வேண்டும்!"

தாயின் கண்களில் புது ஒளி தோன்றியது. அமைதியாகப் பதில் சொன்னார்கள்:

"நடந்த கதையொன்றைச் சொல்லுகிறேன் கேள்! கதையைக் கேட்டால் உன் சந்தேகம் நீங்கும். விளக்கம் கிடைக்கும்!" என்றவாறு கதைசொல்லத் தொடங்கினர்கள். தாயார் கூறிய கதை இதுதான்:

"அண்ணை! எனக்கு இப்போது திருமணமே வேண்டாம் தயவு செய்து என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்; விட்டு விடுங்கள்."

"தம்பி! திருமணம் என்ன தீக்குண்டமா? ஏன் இப்படி நடுங்குகிறாய்? இதோ நானும் உன் அண்ணியும் மகிழ்ச்சியோடு வாழ்க்கை நடத்தவில்லையா?"

"திருமணமே கூடாது என்று கூறவில்லை, அண்ணை! இப்போது தேவையில்லை என்கிறேன். என்னதான் வசதிகள் இருந்தாலும், மாதம் நூறு ரூபாய் சம்பாதிக்கிறேன் என்ற கௌரவம் இல்லாவிட்டால் எனக்கு யார் அண்ணை திருப்தியோடு பெண் கொடுப்பார்கள்?"

"பணக்காரவீட்டுப் பெண்—படித்த பெண்—வேண்டாமே! உன் அண்ணி சொல்வதுபோல டெய்லர் ஏகாம்பரத்து மகள் மரகதத்தைக் கட்டிவிட்டால் என்ன?"

"நல்ல வேடிக்கை! சந்திரன் தம்பி சேகருக்குப் பெரிய இடங்களில் பெண் கிடைக்கவில்லை. காரணம்; மாப்பிள்ளை வேலை எதுவும் பார்க்கவில்லையென்று பணக்கார வீடுகளில் மறுத்து விட்டார்களாம்—என்று ஊரெல்லாம் பேசுவார்கள். வேண்டாம் அண்ணை! அப்பா வைத்து விட்டுப்போன சொத்திலே வாழ்க்கை நடத்தாமல் உன்னைப்போல நானும் மாதம் நாலுகாசு சம்பாதிக்கிறேன். அதற்குப் பிறகு பெரிய வீட்டுப் பெண்ணே எனக்குக் கிடைக்கும்!"

"மரகதம், தங்கமான பெண். அவளைத்தான் உனக்குக் கட்டவேண்டுமென்று உன் அண்ணி துடியாய்த் துடிக்கிறாள்.

அண்ணியின் மனம் கோண நீ நடக்கமாட்டாய் என்று நம்பி யிருக்கிறாள். பிறகு உன் இஷ்டம்!''

''அண்ணி! என்மீது உனக்கு வருத்தமா? நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா! அண்ணி!''

''சௌந்தரி! சேகரிடம் நீயே பேசு! என் உயிரை வாங்கா தீர்கள். நீங்களே ஒரு முடிவு செய்யுங்கள். நான் வருகிறேன்.''

''சேகர்! பார்த்தாயா; உன் அண்ணு வருத்தத்தோடு போவதை! எங்கள் மனம் குளிர நீ திருமணம் செய்து கொண்டால் என்ன குடிமுழுகிவிடும் தம்பி?''

''அண்ணி! போயும் போயும் டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணையா? பரம ஏழை அவன்! அந்த ஐதர் காலத்துத் தையல் மிஷின்தான் அவனுக்குச்சொத்து!''

''ஆனல்—தையல் மிகவும் அழகப்பா!''

''அந்தத் தையலை நீதான் புகழவேண்டும். சட்டை தைக்கக் கொடுத்தால், பையை முதுகில் வைப்பான்; கையைக் கழுத்தில் வைப்பான்!''

''நான் சொல்வது அவன் தையலையல்ல தம்பி! அவன் பெற்ற தையல் இருக்கிறாளே மரகதம்—அவளைச் சொல்கிறேன். அவள் கூட எவ்வளவு அழகாகச் சோளி ரவிக்கையெல்லாம் தைக்கிறாள் தெரியுமா? இப்போது எனக்கு வேண்டியதை யெல்லாம் அவள் தான் தைத்துத் தருகிறாள். தம்பி! மரகதம் ரொம்ப நல்ல பெண். உன்னைக் கல்யாணம் செய்துகொள்ள அவளுக்குக் கொள்ளை ஆசை. உன் பேச்சை எடுத்தாலே நாணிக்கோணிப் புன்னகை புரிவாள். அடேடே, உனக்குக் கூட வெட்கம் வந்து விட்டதே! சரி.....சரி.....உனக்கும் ஆசையிருக்கிறது. அண்ணனிடம் சொல்லக் கூச்சப்பட்டுக்கொண்டு இத்தனை நாளும் மறுத்திருக்கிறாய். தம்பி! சேகர்! சொல்லு! திருமண ஏற்பாட்டை யெல்லாம் கவனிக்கும்படி உன் அண்ணனிடம் சொல்லிவிடட்டுமா?''

''சரியண்ணி; எல்லாம் உங்கள் இஷ்டம்.''

டெய்லர் ஏகாம்பரத்தின் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் அடித்தது என்று உற்றூர் உறவினர் பேசிக்கொண்டார்கள். யார் கட்டப் போகிறார்கள் இந்த ஏழை வீட்டு எழிலரசியை என்று வாய்ப்புக் கிட்டாதவர்கள் எல்லாம் வாய் பிளந்து கிடந்தார்கள். இப்போது அவர்கள் வாய் மூடிற்று.

சேகரும் மரகதமும் வாழ்க்கைச் சகடத்தைச் சேர்ந்து உருட்டத் தலைப்பட்டார்கள். மரகதத்தின் அன்பும் பண்பும், குடும்பப் பொறுப்பை உணர்ந்து அவள் நடந்து கொண்ட தன்மையும் சேகரின் மனத்தில் இன்பத்தைப் பொழிந்த வண்ண மிருந்தன. மரகதம் வீட்டுக்கு வந்த பிறகுதான், அதுவரையில் வீட்டில், குடும்பத்தில் ஏதோ ஒரு பெரிய குறை இருந்தது அவனுக்குப் புரியத் தொடங்கியது. அண்ணனும் அண்ணியும் மனநிறைவோடுதான் வாழ்ந்து வருகிறார்கள் என்று அவன் எண்ணியிருந்தான். மரகதம் வந்த பிறகுதான் குடும்ப வாழ்க்கை எப்படியிருக்க வேண்டுமென்ற இலக்கணத்தை அவன் அறிந்து கொண்டான். தன்னுடைய வாழ்க்கைக்கும் அண்ணனுடைய வாழ்க்கைக்கும் இருக்கிற பெருத்த வேறுபாட்டை அவனால் உணர முடிந்தது. அதற்காக அவன் அண்ணன் மீது ஆழ்ந்த அனுதாபங்கொண்டான்.

வேலைகளை முடித்துக்கொண்டு வீடு திரும்புகிற சந்திரன் களைத்துப்போய்ச் சாப்பாட்டு மேசையருகே உட்காருவான். "எனக்கு ஒரே அலுப்பாயிருக்கிறது! மரகதம்! சாப்பாட்டைக் கொஞ்சம் எடுத்து வைத்து விட்டுப் போ! அவர் போட்டுக் கொள்வார்!" என்று சௌந்தரி கூறுவாள்.

அதைக்கேட்டுச் சந்திரன் எந்த முகமாற்றமும் அடைவதில்லை. மரகதம் சந்திரனுக்கு நேராக அதிகமாகப் போகமாட்டாள். சாப்பாட்டை எடுத்துப்போய் மேசையில் வைத்துவிட்டு வந்து விடுவாள். சந்திரன் தானே பரிமாறிக்கொண்டு பசியாறுவான்.

மரகதம் வந்தபிறகு, வீட்டு வேலைக்காரிக்கும் சமையற் காரிக்கும் சம்பளம் கணக்குத் தீர்க்கப்பட்டு அவர்கள் அனுப்பப் பட்டார்கள். எல்லாவேலைகளுமே மரகதத்தின் தலையில் விழுந்தன. சௌந்தரியின் நோக்கம், மரகதத்திற்குத் தெளிவாகப் புரிந்து விட்டது. தன்னைச் சேகருக்குத் திருமணம் செய்துவைக்கச் சௌந்தரி தலைகீழ் நின்றதற்குக் காரணமே வீட்டுக்கு ஒரு நல்ல வேலைக்காரியும் சமையற்காரியும் சம்பளமில்லாமல் கிடைப்பாள் என்பதற்காகத்தான், என்பதை மரகதம் உணர்ந்து கொண்டாள். அந்த மன உளைச்சலை அவள் தன் கணவனிடம் வெளியிடவில்லை. குடும்பத்தில் தன்னால் குழுறல் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காக அவள் கொதிப்பை அடக்கிக் கொண்டு கூனிக்கிடந்தாள். சௌந்தரியோ அந்த வீட்டு

மகாராணிபோல ஆர்ப்பாட்டங்கள் நடத்திவந்தாள். மரகதம் படும் கஷ்டங்களைக் கண்ட சந்திரன், சௌந்தரியிடம் ஒரு நாள் மனம் விட்டுப் பேசிவிட்டான்:

"என்ன இருந்தாலும் அவளும் இந்த வீட்டு மருமகள் தானே! அவளை இப்படிக் கஷ்டப்படுத்தலாமா?" என்று சௌந்தரியிடம் மெதுவாகக்கேட்டான், அடக்க உணர்ச்சியுடன்!

"எனக்கு வேலை செய்வதற்காகத்தான் ஒரு ஏழை வீட்டுப் பெண்ணை உங்கள் தம்பிக்குக் கட்டிவைக்க நான் முயற்சி செய்தேன். இல்லாவிட்டால் எனக்கிருக்கிற உடம்புக்கு இந்த வீட்டில் வேலை செய்தால் சீக்கிரம் சாகவேண்டியதுதான்!" என்று கண்ணீர் வடித்தாள் சௌந்தரி.

"அழாதே! கர்ப்பஸ்திரீ இப்படிக் கண் கலங்கக்கூடாது! மரகதமும் கர்ப்பமாயிருக்கிறாளே! அளவுக்கு மீறி ஓய்வின்றி வேலைகளைச் செய்து கஷ்டப்படுவாளேயென்றுதான் சொன்னேன்."

"அய்யோ பாவம்! தம்பி மனைவி மீது எவ்வளவு அக்கறை! அந்த அக்கறையில் பாதி என்னிடம் காட்டக்கூடாதா?"

—என்று முகத்தை நீட்டிக்கொண்டு சௌந்தரி எழுந்து போய்ப் படுக்கையில் படுத்துக்கொண்டாள்.

பிறகு சந்திரன் சமாதானப்படலத்தை ஆரம்பிக்க, முதலில் சரணாகதிப் படலத்தில் வீழ்ந்தான்.

மரகதமும், சௌந்தரியும் ஒருவார இடைவெளியில் அழகான பெண் குழந்தைகளுக்குத் தாய்களாயினர். தான் பெற்ற செல்வத்தின் அருகே படுத்திருந்த சௌந்தரியின் கண்கள் எதிரில் உள்ள சுவரில் மாட்டப்பட்டிருந்த அவளது திருமணப் படத்தின்மீது நிலைத்து நின்றுவிட்டன. சந்திரனுக்கு அருகே கட்டுக்குலையாமல் கனிமரமென நிற்கும் தன் அழகைக்கண்டு சௌந்தரி பெருமை கொண்டாள். பொன்னுற்செய்த சிலைபோல் நிற்கின்ற தோற்றமும்—எடுப்பான உடற்கட்டும்—எழில் சிந்தும் முகமும்—அவளுக்குத் திடீரென ஏதோ ஒரு பீதியை ஏற்படுத்தி விட்டன என்பது அவள் முகத்தில் பளிச்சிட்ட விகாரத்திலிருந்து தெரிந்தது. உள்ளத்தில் புயல் ஆரம்பமாகிவிட்டது!

சௌந்தரி ஒரு குழந்தைக்குத் தாயாகிவிட்டாள். வயிற்றுக் குள்ளேயிருந்தபோதே அந்தக் குழந்தை அளித்த வேதனையால்

ஏற்கனவே அவளது உடல் இளைத்துப் போய்விட்டது. இனி இந்தக் குழந்தை பால் என்ற பெயரால் வேறு அவள் இரத்தத்தை யெல்லாம் உறிஞ்சி, அவளது உடற்கட்டையும் குலைத்துவிடும்.

இப்படி ஓர் அச்சம் ஊட்டும் அவலக் குரல் ஓநாயின் தொனியை வெல்லும் விதத்தில் அவள் நெஞ்சத்தின் ஒரு மூலையில் எழுந்து, இரத்த அணுக்களில் எல்லாம் எதிரொலித்து, அவளை நடுக்கம் கொள்ளச் செய்தது.

எழுந்து நின்று நிலைக்கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டாள். அறையில் மாட்டப்பட்டிருந்த ஹாலிவுட் சினிமா நடிகைகளின் அரை ஆடைப் படங்களை வைத்த கண் வாங்காமல் பார்த்தாள். முழுங்கால் அளவுத் தண்ணீரில் நின்றுகொண்டு முரளிதரனிடம் தாங்கள் இழந்த ஆடைகளைத் திரும்பக் கேட்கும் கோபிகளின் படங்களைப் பொருமையுடன் நோக்கினாள். மீண்டும் கண்ணாடியைப் பார்த்துக் கொண்டாள். "குழந்தைக்குப் பால் கொடுக்க ஆரம்பித்தால் எழிற்கட்டுக் குலைந்துவிடும்—இளமை அழிந்துவிடும்!" என்று அவள் நெஞ்சம் மீண்டும் புலம்பி விம்மியழுதது.

விழிகள் வேறு திசையில் திரும்பின. ஜன்னல் கம்பிகளின் இடைவெளியில் நுழைந்த பார்வை, தூரத்தில் மாட்டுத் தொழுவத்தில் தாய்ப்பசுவிடம் பால் குடிக்கும் கன்றின் மீது விழுந்தது. கன்றின் முதுகில் தாய்ப்பசு தனது நாக்கினால் நக்கிக் கொண்டிருக்கிற காட்சியையும் அவள் கண்கள் கண்டன. தோட்டத்துச் சுவரின் பக்கம் 'கீரிச்' என்ற ஓர் ஒலி! அங்கே பார்த்தாள்; குரங்கு தன்குட்டியைத் தூக்கிக்கொண்டு மதில் மேலிருந்து மரத்திற்குத் தாவியது. கூடத்து மூலையில் "உச் உச்!" என்ற சப்தம் கேட்டது. பார்த்தாள்; அவர்கள் வீட்டு நாய், தன்னுடைய ஐந்து குட்டிகளிடமும் தன் பால் சுரப்பிப் பையை ஒப்படைத்துவிட்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது. மேலே "மியாவ் மியாவ்" என்ற ஒலி காதைப் பிளந்தது. பார்த்தாள்; குட்டிகள் புடைசூழ வீட்டுப் பூனை பரண்மீது தன் படுக்கையை அமைத்துக் கொண்டு தன் குழந்தைகளின் சங்கீதத்தில் மெய்ம் மறந்து கிடந்தது. அந்தப் பூனை அந்த வீட்டுக்கு வந்து இப்போது மூன்றுவது தடவையாக அரை டசன் குட்டிகளைப் போட்டுப் பால் கொடுக்கும் வேலையைக் கவனித்து வருகிறது என்பதும் அவளுக்குத் தெரியும்.

போர்க்களத்துக் கூச்சலில் எங்கேயோ ஒரு வீணையின் நரம்பு இலேசாக அதிர்ந்த ஒலி கேட்பதுபோல அவளது இருதயத்துப் பேய்க் கூச்சலினிடையே ஒரு மெல்லிய குரல் அதிர்ந்தது.

"நாயும் பூனையும் மாடும் குரங்கும் கூடத் தங்கள் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கின்றனவே—அவைகளுக்குள்ள தாய்மை உணர்ச்சிகூட உனக்குக் கிடையாதா?"

அந்த ஈன சுரத்தை உடனே அடக்கிவிட்டு, வெறிச் சத்தம் காதைச் செவிடு படுத்தும் வகையில் முழங்கியது.

"நாயும் பூனையும் மாடும் குரங்கும் தம் பிள்ளைகளுக்குப் பால் கொடுக்கின்றன. ஆனால் அவைகளின் அழகு குலைவதைப் பற்றியோ—இளமை குன்றுவதைப்பற்றியோ—அவைகளுக்குக் கவலை கிடையாதே! அவை கடற்கரையில் போய் நாலு பேரோடு உலவப்போகின்றனவா? சினிமாவுக்கு நாள் தவறாமல் செல்லவேண்டியவைகளா? நண்பர்களுடன் 'பிக்னிக்' போக வேண்டிய சங்கடந்தான் அவைகளுக்கு உண்டா? எடுப்பும் சிறப்பும் பொருந்த அஜந்தா ஓவியங்களைப்போலவும், மாமல்லபுரத்துச் சிற்பங்கள் போலவும், ஆடையை நெகிழ விட்டுக்கொண்டு வாலிபப்பருவத்தின் வனப்பையெல்லாம் வாரியீந்த வண்ணம் விருந்துகளில் கேளிக்கைகளில் வந்து அமரும் பெரிய இடத்துப் பெண்களுக்கு நடுவே எள் முனையளவு இளமையையும் இழந்து விடாமல் காட்சியளிப்பது தான் இந்தக் காலத்துப் பெண்களுக்குக் கவுரவம். அதை விட்டுத் 'தாய்மை' என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையைக் காப்பாற்றுவதற்காக நாலுபேர் மத்தியில் தலை குனிந்து உட்கார்ந்து இருக்க வேண்டுமா? உன் எழிலைப்பார்! மாம்பழ மேனி படைத்தவளே! மண்ணைக்கி விடாதே உன் பருவத்தின் பூரிப்பை!"

இறுதியில் இளமைக்கு வக்கீல் வேலை பார்த்த பேய்க்குரல் தான் வெற்றி பெற்றது. தாய்க்குரல் தந்தியறுந்த யாழ்போல் ஆயிற்று.

அதன் விளைவு, மரகதம் தன் மகளுக்கு மட்டும் அல்லாமல் சௌந்தரியின் செல்விக்கும் பால் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டாள். இரண்டு குழந்தைகளுக்கும் அவளே தாயாக விளங்கினாள்.

"ஏழைப்பெண் மரகதத்தைச் சேகருக்கு மனைவியாக்கியது எவ்வளவு நல்லதாயிற்று பார்த்தீர்களா" என்ற பரவசத்துடன் சந்திரனைத் தழுவினாள் செளந்தரி.

அந்த அணைப்பில் அவன் கண்ட சுகத்தில் "நீ புத்திசாலியடி என் தங்கமே!" என்று உளறினான் சந்திரன்.

மழலை பருகிடவேண்டிய தாய்ப்பாலை மருந்து பருகியது. பருவத்தின் பொலிவு குலையாத செளந்தரி, தன்னைக் கண்ணழியில் ஏற இறங்கப் பார்த்துக்கொண்டு பெருமிதத்துடன் நாலு பேர் மத்தியில் நடந்தாள். கணவனுடன் கடற்கரைக்குச் சென்றாள்.

மரகதம் படும் கஷ்டத்தை இனியும் சகித்துக் கொள்ளச் சேகரன் தயாராக இல்லை. மரகதத்தைத் திருமணம் செய்து கொள்ள அவன் முதலில் விரும்பவில்லை என்பது உண்மைதான். அவள் அழகில்லாதவள் அல்ல. குடும்பத்திற்குத் தகுதியற்ற பெண்ணல்ல. ஆனால் ஏழை. அதனால் அவன் தயங்கினான். ஏழைப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்வது கூடாது என்ற கொள்கை உடையவனல்ல அவன். தன்னுடைய வீட்டுச் சூழ்நிலைக்கு ஒரு பெரிய வீட்டுப் பெண் வந்தால்தான் அவள் மற்றவர்களுக்குச் சமமாக வாழ முடியும்; ஏழையாயிருந்தால் அடிமையாக வேண்டியதுதான் என்ற காரணத்தினாலேதான்! மரகதம் தன்னை விரும்புகிறாள் என்று செளந்தரி கூறிய பிறகு அவனையறியாமல் அவள்மீது ஒரு பிரியம் ஏற்பட்டு விட்டது. அது திருமணத்தில் வந்து முடிந்து, இருவரும் ஒரு குழந்தைக்குப் பெற்றோராகவும் ஆகிவிட்டனர்.

அவன் எதிர்பார்த்தபடி மரகதம் அந்த வீட்டில் சர்வ சாதாரணமாக நடத்தப்பட்டாள். அண்ணனிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கும் மதிப்புக்கும் ஊறு தேடக்கூடாதே என்பதற்காகப் பல்லைக் கடித்துக்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்து வந்தான். அந்தப் பொறுமை அணையையும் உடைத்துக் கொண்டு ஒரு நாள் குமுறியெழுந்து விட்டான்.

முதல் நாள் இரவு சந்திரனின் குழந்தைக்கு இலேசாகக் காய்ச்சல்; சேகர் குழந்தைக்கு வயிற்று நோய்.

இரண்டும் மாறி மாறி இரவெல்லாம் அழுது, தொல்லை கொடுத்துக் கொண்டேயிருந்தன. மரகதம் கண்ணை மூடவில்லை. இரண்டு தொட்டில்களையும் ஆட்டுவதும் "ஆராரோ" பாடுவதும்

பிணிக்கு மருந்து தருவதும் தூக்கி வைத்துக்கொண்டு உலவுவதும்தான் அவளுக்கு இரவு முழுவதும் வேலை.

குழந்தைகள் போட்ட கூச்சலைக் காதிலே வாங்கிக் கொள்ளாமல் சந்திரனும், செளந்தரியும் தங்கள் படுக்கை யறையிலேயே வெகுநேரம் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர்.

அந்தக் கொடுமையைச் சேகரால் சகிக்க முடியவில்லை. தன் மனைவி கஷ்டப்படுவதை நினைத்து அழுவதா? அல்லது பெற்ற குழந்தையைப் பற்றிக் கவலைப்படாமல் வாழ்க்கையை அனுபவித்துக் கொண்டிருக்கிற வன்னெஞ்சர்களை நினைத்து அழுவதா?

பொழுது விடிந்தது. குழந்தைகளோடு கஷ்டப்பட்ட மரகதம் விடிந்த பிறகு சற்று அயர்ந்து தூங்கிவிட்டாள். அதனால் செளந்தரிக்கு 'பெட்காபி' கிடைக்கவில்லை. ஆத்திரங்கொண்ட செளந்தரி, மரகதத்தை மிகச்சூடான வார்த்தைகளில் போட்டு வறுத்து எடுத்தாள்.

மரகதம் எதுவும் பேசாமல் வேலையைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவளுடைய கவலையெல்லாம் அந்தக் குடும்பத்தில் தன்னால் எந்தக் கலகமும் வந்து விடக்கூடாது என்பதுதான்! செளந்தரியின் ஏசற்கணைகளுக்கு எதிர் நிற்க முடியாமல், திக்குத் தெரியாமல் திண்டாடும் மான்போல் மிரள மிரள விழிக்கும் மரகதத்தைக் கண்டு துடித்துவிட்ட சேகரன் அண்ணியின்மீது எரிதழலென வார்த்தைகளை அள்ளி வீசினான்.

"மரகதம், எனக்கு மனைவி. உங்களுக்கு வேலைக்காரி அல்ல. உங்கள் குழந்தையை வளர்க்கும் பால்காரி அல்ல!" என்று உறுமினான்.

"சரிதான் நிறுத்து! பெரிய ராஜகுமாரியைப் போய்த் திருமணம் செய்து விட்டாயாக்கும்!" என்று செளந்தரி செய்த கிண்டலுக்குச் சபாஷ் கூறி, சந்திரன் அங்கே வந்து விட்டான். செளந்தரியால் சேதமடையாமல் கட்டிக் காக்கப்படும் யௌவனத்தின் நீங்காத அடிமையல்லவோ அவன்! ஆகவே அவள் பக்கம் நின்றுதான் அவன் நியாயம் பேசினான்.

அண்ணன் தம்பிகளுக்கிடையே வார்த்தைகள் முற்றிப்போய் கை கலப்புவரையில் சென்று, இருவரும் துப்பாக்கிகளைத் தூக்கிக் கொண்டு மரணமுகப்புநோக்கி நடப்பதற்குத் துவங்கிவிட்டனர்.

யார் வெடிக்கிற தோட்டா முதலில் யார் மார்பில் பாயப்போகிறது என்ற பயங்கரமான நிலைமை உருவாகிவிட்டது.

அந்தச் சமயத்தில் குறுக்கே விழுந்து அவர்களைச் சமாதானப் படுத்த முயன்றும் தோல்வி கண்ட மரகதம், அறையில் போய் நிம்மதியாகப் படுத்துக்கொண்டிருந்த சௌந்தரியிடம் ஓடி "எப்படியாவது இருவரையும் சமாதானப்படுத்துவோம் வா!" என்று அலறினாள். சௌந்தரி, மரகதத்தின் தலைமயிரைப் பிடித்து இழுத்து அவள் கன்னத்திலே அறைந்து ஓவென்று கத்த ஆரம்பித்தாள். "சின்ன புத்திகார நாயே! ஏழை வீட்டு எச்சில் இலையே! நாயைக் குளிப்பாட்டி நடு வீட்டில் வைத்தது என் குற்றம்."

இப்படிப் பட பட வென்று ஆவேசம் கொண்டு கத்திக் கொண்டிருந்த சௌந்தரி திடீரென்று இருமத் தொடங்கினாள். இருமல் நிற்கவில்லை. இருமி முடிந்ததும் மயக்கம் வந்து விட்டது. சௌந்தரி கீழே விழுந்து விட்டாள்.

மரகதம் பயந்துபோய் "அய்யோ! ஓடி வாருங்கள்! அய்யோ! ஓடி வாருங்கள்!" என்று கூச்சலிட்டாள். குறிபார்த்த துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்த அண்ணனும் தம்பியும் பரபரப்புடன் ஓடி வந்தார்கள். சண்டையை மறந்து விட்டுச் சேகர், டாக்டர் வீட்டுக்குப் பறந்து சென்றான்.

டாக்டர், நீண்ட நேரம் பரிசோதித்துவிட்டு "இது டி.பி.—எலும்புருக்கி நோய்! ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்!" என்று மருந்து எழுதிக் கொடுத்து விட்டுப் போய்விட்டார்!!

சௌந்தரி, விழித்துக் கொண்டுதான் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்!

சித்தார்த்தன் சிலை

கெண்டை விழி. கரு வண்டு நிகர் கூந்தல். குங்கும வண்ணத்தின் குறுநகையைச் சிந்துகின்ற அந்தி வானத்துச் சிவப்பெல்லாம் அவள் இதழில்...கன்னத்தில்! தாங்குமோ அன்றித் தளர்ந்து வீழ்யுமோ என்றெண்ணத் தோன்றும் வகையினிலே இடையழகும் இளமைப் பேரழகும் போட்டியிடும் பொற்பாவை. அலைதோறும் அலைதோறும் வருகின்ற நுரை போல அவள் உதிர்க்கின்ற சொல் எல்லாம் சுவை மணக்கும் தேன் துளிகள். நிலம் நோகும் என அஞ்சும் அவள் நெஞ்சம் நடையழகில் தெளிவாகும். சிப்பியிலே முத்து விளைகின்ற உண்மையினைப் பொய்யாக்கும் அவள் சிரிக்கின்றபோது தெறிக்கின்ற நிலவின் ஒளி!, யாழினிலே குழலினிலே இனிய இசைதான் எழும் என்போர் மறைந்திருந்து அவள் பாட்டைக் கேட்டு "யார் சொன்னர்; யாழ் குழலில் பாட்டும் உண்டு" எனக் கருத்தை மாற்றிக்கொள்வர்.

அவன் பெற்ற பேறே அரும்பேறு என வாழ்த்தியது அவளைப் பெற்றவனை-உலகம்! "உனைப் பெற்றவரை வணங்குகின்றேன். தமிழே! உயிரே! ஓவியமே! உனைப் பிரிந்து ஒருக்கணமும் நில்லாது என்றன் கூடு!" என உறுதி எடுத்துக் கொண்டு அருகிருந்தான். இலக்கியத்து எழிலெல்லாம் காவியத்துச் சுவை யெல்லாம் அவளோடு வாழ்வதிலே காண்கின்றேன் எனப் பெருமை கொண்டிருந்தான்.

அத்தகையோன் எப்படித்தான் அவளைப் பிரிந்தான் என்று ஊரெல்லாம் வியப்பினிலே மூழ்கிவிட—அவள் விழிகள் நீரூற்றாய் மாறிவிட—நிலைமையொன்று உருவாகித் தனியாளுள்.

தேனமுதம் தெவிட்டியதோ? வானமுத வதனத்தை மறந்தாளே? ஏன் கிளியே உனக்கிந்த இன்னலென்று ஊர்ப் பெண்கள் கேள்வி போட்டார்.

"உள்ளத்தை ஒப்படைத்தேன். உயிர் மூச்சு அவரென்று எண்ணிக் கிடந்தேன், பனித் துளியால் சுகம் பெற்ற மலர் மீது பாலைவனக் கடுங்காற்று வீசுமென்று நினைக்கவில்லை. இரு கிழமை அவர் உள்ளம் நிலையாக இருக்கவில்லை. அதனை அவர் பேச்சாலே உணர்ந்து கொண்டேன். இப்படியாகுமென்று அப்போது தெரியாது தோழி!" என அழுதாள் தமிழ்ப்பாவை.

"கலங்காதே! கண்ணீர் சிந்தாதே! வழியொன்று சொல்கின்றேன் கேள்! ஆற்றுக்குத் தென்புறத்தில் அழகான சோலையிடையிருக்கின்ற புத்தரது கோயிலுக்குச் சென்று குறை சொல்லி முறையிட்டால் கொழுநன் திரும்பிடுவான். நிற்காதே போ!" என்றுள் உயிர்த்தோழி.

அங்ஙனமே அவள் சென்றுள். "அருள் வடிவே! அன்பின் பிழம்பே! செயற்கரிய செய்திட்ட சித்தார்த்தப் பெருமானே! போதி நிழலிலே உலகுக்குக் குளிர் தந்தாய்! இன்று உன் நிழலால் என் துயரம் போக்கிடுவாய். அழகரசன், என் ஆளன், உயிர்த் துணைவன், பிரிவு எனும் வேதனையைத் தரமாட்டேன் எனச் சொன்ன என் அத்தான்—அவரில்லை என்னிடத்தில் இப்போது! எங்குற்றார்? ஏன் சென்றார்? என்ற சேதி தெரியாது இவ்வேழைக்கு! தூயவனே; என் துன்பம் துடைத்திடுவாய்! காசினியோர் வாழ்வதற்கு வழி சொன்ன பெரியவனே! கருணைக் கடலே! அலைக் கரத்தால் இவ்வறண்ட கரையை நனைத்துவிடு. என் மனத்தை மகிழவைப்பாய்!"

—என அழுதாள், தொழுதாள். விளக்கேற்றி வைத்து விழிநீரைச் சிலமுன்பு சிந்தி நின்றுள். சிலை பேசிற்று. கண் மூடிக்கொண்டு அதைக் கேட்டாள்:

"பெண்பாவாய்! கணவன் பிரிந்துவிட்ட கவலைதனை என்னிடத்தில் உரைக்க வந்தாய். என்ன மதி உன்றனுக்கு? அழகு மனையாட்டி—அவளருகே உறங்குகின்ற அருமைச்

செல்வன்—இருவரையும் ஏங்கவிட்டு "அன்பு" போதிக்கத் துறவு பூண்டவன் நான். அவனிக்கு நான் தந்த படிப்பு...அன்பு!... அன்பு!...அன்பு!...ஆனலும் அந்த அன்புதனை எனை நம்பி வாழ்ந்திட்ட துணைவியிடம், அவள் பெற்ற பிள்ளையிடம் காட்டாமல் வெளிவந்தவன் நான், கணவனைப் பிரிந்த உன் கவலையைப் புரிந்து கொள்ளும் சக்தி எனக்கில்லை போ—போ!"

குரல் கேட்டாள், "அய்யோ பகவானே!" என அழுதாள்.

சிரிப்பொலி கேட்டது. விழி திறந்தாள், சிலைக்குப் பின்னிருந்து அவள் கணவன் வந்திட்டான்.

"அத்தான்" எனப் பாய்ந்தாள்.

அணைத்தபடி "ஆருயிரே! விளையாடிப் பார்த்தேன் உன்னுடு! அதற்குள் நீ வேதனை உருவாகி விட்டாயே! வா வா போவோம்!" என்றான்.

"சித்தார்த்தன் அருள்!" என்றாள்.

"அவர் அருளியது உலகை வாழ்விக்கும் உயர் கொள்கை. உன்னையும் என்னையும் சேர்த்து வைக்க-உலகோரின் பிரார்த்தனைகளை நிறைவேற்றிக் காணிக்கைக் கூலி பெற—அவரில்லை; அந்தோ! அவரைக் கடவுளாக ஆக்கிவிட்டார்—தீமை! தீமை!!" என்றான்.

"பின்னர், பேசியது யார்?" என்றாள்.

"சிலையல்ல; நானே!" என்றான்.

தழுவிக்கொண்டான்.

நுனிக்கரும்பு

'சதங்கை கொஞ்சும் பாதம் சதிமிதிக்கும், வானில் மிதக்கும் அவள் தாமரைக்கை மேலும் வதங்கலிலாச்சண்பகத்து நல்லரும்பு. சாடை புரிகின்ற விரல் கண்கவரும் செம்பவளக் காம்பு'.

கவிஞர் பாரதிதாசனின் இந்தக்கவிதைக்கு அவள் ஆடற்கலை மூலம் அழகு தந்தபோது அந்தக் கலையரங்கமே மகிழ்ச்சிக் கூத்தாடியது. தாமரைக் கொடியொன்று, முகமலரும் இருமொட்டும் பெற்று, உயிர் பெற்று, ஓவிய உறுப்பும் பெற்றுக் களி நடனம் புரிய வந்ததோ அந்தக் கலையரங்கில் என வியக்காதார் யாருமில்லை.

'ஆணிப் பொன்னுலே மேனி—அழகு ரத்தினத்தால் ஒரு பேழை—அது நிறைய ஒளிமுத்து—ஆடற்கலை அவள் சொத்து' என அரங்கத்துச் செயலாளர் அருள்நம்பி பாராட்டுரை பொழிந்தபோது கையொலியால் அந்த மண்டபமே அதிர்ந்தது. அழுதா, பெயருக்கேற்ற அழகின் பூரிப்பும் அங்கமெலாம் இளமையின் ஆதிக்கமும் கொண்ட ஆடலரசி. அவள் ஆடாத மேடையில்லை—அவளைத் தேடி ஓடாத நெஞ்சமில்லை! அன்று நூறுவது நடன நிகழ்ச்சி. அதனைத் தனது கலையரங்கத்திலேயே நடத்த வேண்டுமென்று அருள்நம்பி பெருமுயற்சி எடுத்து வெற்றி பெற்றார். அரங்கின் செயலாளர் அவர். கவிதை புனையக் கற்றவர். கலைத்தாயின் சேவையே வாழ்வின் இலக்கு எனக் கொள்கை முழக்கம் செய்து கொண்டிருப்பவர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளைக் கடந்து, அறுபது என எண்ணத்தக்க அளவுக்கு அனுபவமும் தோற்றமும் கொண்டவர்.

அவரது நிர்வாகத்தின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற அந்தக் கலையரங்கத்தில் எத்தனையோ கலை நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஆனல் அமுதாவின் நிகழ்ச்சியை அங்கு நடத்த வேண்டுமென்பதில் அவருக்கு எத்துணை ஆர்வம்! எத்துணை துடிப்பு! அவர் நினைத்தது நடந்தது. இலக்கியங்களில் நுழைந்து புலவர்களைக் கெஞ்சிக் காவியங்களைப் புரட்டிக் கடைசியாக ஒரு தமிழ் வளங் கொழிக்கும் பாராட்டுரையைத் தயார் செய்து, அதனை இரண்டு நாள் இரவு பகல் மனப்பாடம் செய்து, கனவிலே கூட அதனை உளறி, இத்தனைக்கும் பிறகு அன்று மேடையில் அமுதாவை வர்ணித்து, மன்றத்தின் பாராட்டுதலைப் பெற்றார்.

அவர் விரும்பியது மன்றத்தின் பாராட்டு மட்டுமா?

அமுதாவின் ஓர விழிகள் அவரை நோக்கி ஒருமுறை அசைந்தால் போதும்; அதற்காகவே அவர் அத்தனைநாள் கடுந்தவம் இயற்றினர். அருள்நம்பி கலையுலகில் செல்வாக்கு மிக்கவர். தமிழ் மேடைகளில் அவர் தோன்றுதிருப்பதில்லை. விழாக் கூட்டங்களில் அவரது முத்திரை எங்காவது இல்லாமல் இருக்காது. விருந்து கேளிக்கைகளில் அவர்தான் முன்னோடி. இப்படி அனைவரது கவனத்தையும் எப்படியாவது கவர்ந்து நினைவில் தன்னை ஒட்டவைத்துக் கொள்வதில் திறமை மிக்கவர். அவரது சில பிடிக்காத செயல்களைக் கூடக் 'கிடக்கிறார் பாவம் வயதான மனிதர்' என்று பலர் மன்னித்து விடுவது வாடிக்கை. அவருக்கு என்னவோ; தன்னை வயதானவர் என்று குறிப்பிடுவதை விட வேறு வசை புராணம் ஒன்று இருப்பதாகவே நினைப்பில்லை. அந்த வார்த்தையைத் தவிர வேறு எதைச் சொன்னலும் தாங்கிக்கொள்வார். உலகின் இன்பங்களை இளமை உணர்வோடு அனுபவிக்கத்தக்க ஆற்றல் அவரிடம் இருப்பதை யார் மறுத்தாலும் அவருக்கு மனம் புண்ணாகி விடும். அந்த உணர்வோடு அவர் தனது நடவடிக்கைகளைத் தொடர்ந்து கொண்டிருந்தார்.

அப்படிப்பட்டவர் அமுதாவின் அன்புப்பார்வையையே எதிர் நோக்கியதில் அவரைப் பொறுத்தவரையில் தவறில்லையல்லவா?

பாராட்டுரையை நிகழ்த்திவிட்டு மல்லிகை மாலையை அமுதாவின் கழுத்தில் அணிவிக்க அவளருகே சென்றார். அதற்குள் அமுதா அவர் இருக்குமிடம் நோக்கி வந்து விட்டாள்.

மாலையைக் கழுத்திலேயே வாங்கிக்கொள்வாளா? அருள்நம்பிக்குச் சற்றுக்குழப்பம். கழுத்திலே வாங்கிக் கொண்டால், 'வயதானவர் தானே பரவாயில்லை' என்ற முறையில் வாங்கிக் கொண்டாள் என்று ஆகிவிடும். அதை அவரால் தாங்கிக் கொள்ளமுடியாது. இதையெல்லாம் அவர் நினைத்துப் பார்த்து முடிவுக்கு வருவதற்குள் அமுதா, அவர் கையிலுள்ள மாலையைத் தனது அழகுக் கரங்களால் பற்றி வாங்கிக் கொண்டாள். அடடா; அப்போது அந்தக் கரங்களின் மென்மையை அவர் உணர்ந்து கொண்டார். மாலையைப் பற்றும்போது அவளது விரல்கள் தன் விரல்களை விட்டு மெதுவாகத்தான் பிரிந்து சென்றன என்பதும் அவரைக் கிறு கிறுக்க வைத்தது.

அரங்கத்தின் திரை விழுந்தது.

அமுதா, ஒப்பனை அறைக்குள் சென்றாள். அவரும் கூடவே சென்றார். ஆடிய களைப்புத் தீர பாதாமிட்ட பால்கொண்டு வந்து தந்தார்கள் அவளுக்கு. அவளோ அதனை அருள்நம்பிக்குக் கொடுத்தாள். பால் கிண்ணத்தைத் தரும்போது இரண்டாவது முறையாக அந்த மலர்க்கரத்தின் மெல்லிய ஸ்பரிசம் அவரை இன்பபுரிக்கு இழுத்துச் சென்றது. "அமுதா! நாளைக்கு 'போன்' பண்ணுகிறேன்!" என்று விடைபெற்றுக்கொண்டார் அருள்நம்பி.

"அவசியம் 'போன்' பண்ணுங்க" என்று வணங்கி விடை கொடுத்தாள் அமுதா.

"அவசியம் 'போன்' பண்ணுங்க" என்ற அந்தக் குயில் மொழி காட்டும் குறிப்பை நினைத்து நினைத்து மகிழ்ந்தவாறு வீட்டுக்குச் சென்றார் அருள்நம்பி.

எப்பொழுது விடியும் என்று இரவுப்பொழுதைச் சாபங் கொடுத்து விரட்டிக் கொண்டிருந்த அருள்நம்பி, காலை எட்டு மணிக்கெல்லாம் அமுதாவின் இல்லத்திற்கு 'போன்' செய்தார். வேலைக்காரி பேசினாள். "அம்மா தூங்குகிறார்கள்; உங்களைப் பத்து மணிக்கு 'போன்' செய்யச் சொன்னார்கள்" என்று அவள் கூறியதும் பரக்கப் பரக்கக் காலைக்கடன்களை முடித்து விட்டுக் கெடிகாரத்தின் முட்களைச் சவுக்கால் அடித்து ஓட்டிக் கொண்டிருந்தார்.

மணி பத்தாயிற்று! அமுதா வீட்டு 'போன்' நீண்ட நேரம் மணி அடித்தது. யாருமே எடுக்கவில்லை. வெகுநேரம் கழித்து "ஹலோ" என்று ஒரு முரட்டுக் குரல் கேட்டது.

"யார், அமுதா வீடா? அமுதா இருக்குதா?"

"நோ! நோ! ராங் நம்பர்!"

"மன்னிக்கவும்."

அவன் இந்த மன்னிப்பைக் கேட்காமலே 'போனை' தடால் என்று வைத்து விட்டான். அருள்நம்பிக்கு ஏதோ ஒரு வெட்கம்; மீண்டும் எண்களை உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டே 'போன்' செய்தார்.

"ஹலோ?"

ஆகா! அது அமுதாவின் குரல்தான். அருள்நம்பி எச்சில் விழுங்கிக் கொண்டார். தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

"நான்தான் அருள்நம்பி பேசறேன்!"

"அமுதாதான், வணக்கம்..."

"என்ன, சௌக்கியமா?"

"நீங்க இருக்கும்போது சௌக்யத்துக்கு என்ன குறை?"

அமுதா சிரித்தது அவர் காதில் விழுந்தது. அதற்குள் அவர் முகமெல்லாம் 'குப்' என்று வியர்த்து விட்டது.

"ம்? அப்புறம் என்னங்க?"

"ஒண்ணுமில்லை...என்ன, உன் வீட்டிலே எனக்கு விருந்து கிருந்து கிடையாதா?"

"ஓ...தாராளமாக! எப்ப வர்றீங்க! எப்ப வந்தாலும் விருந்து உண்டு."

"என்ன விருந்து?"

"எல்லா விருந்தும் உண்டு. உங்களுக்கு என்ன பிடிக்கும் மாமிசமா? சைவமா?"

"சைவமா? சேச்சே! மனிதன், மாமிசத்திற்குத் தானே அடிமை!"

"சரி, உங்களுக்குத் தனியா மாமிசம் சமைக்கச் சொல்கிறேன். நாங்கள்ளாம் சைவம்!"

"வேண்டாம்....வேண்டாம்....உனக்கு ஒரு சாப்பாடு; எனக்கு ஒரு சாப்பாடா? எனக்கும் சைவமே இருக்கட்டும். எப்ப வர்றது?"

"இன்னைக்கு மத்தியானமே வாங்களேன்!"

"பகல் விருந்து ரசிக்குமா? ராத்திரி எட்டு ஒன்பது மணிக்கு வரட்டுமா?"

"ஓ! வாங்க! கண்டிப்பா வரணும். வராம இருந்திடாதீங்க! நிச்சயம் வரணும்!"

அருள்நம்பி, அப்படியே ரிஸீவரைக் கன்னத்தில் அழுத்திக் கொண்டு சற்று நேரம் மயங்கிய நிலையில் அமர்ந்துவிட்டார். நினைவு வந்த பிறகு, உடலில் வழியும் வியர்வையைத் துடைத்துக் கொண்டு, 'அப்பனே முருகா! எல்லாம்; உன் அருள்!' என்று வாய்விட்டுக் கூறிக்கொண்டே திருப்புகழ் புத்தகத்தைக் கையில் எடுத்து ஏடுகளைப் புரட்டத் தொடங்கினர்,

இரவு எட்டரை மணி. "வாங்க வாங்க" என்று அமுதா இள நகை சிந்தி வரவேற்க, அருள்நம்பி, உடம்பெல்லாம் தணலான நிலையில் அவள் வீட்டுக் கூடத்தில் அமர்ந்தார்,

"என்ன, வீட்டில் யாரையும் காணோம்?"

"எல்லாம் ஆறரை மணி ஆட்டத்துக்குச் சினிமாவுக்குப் போயிருக்காங்க! இப்ப வந்துடுவாங்க!"

"மணி எட்டரை ஆயிட்டதே. இப்ப வந்துடுவாங்களா?"

"அது இன்னும் ஒருமணி நேரம் ஆகும்; நீங்க இப்பவே சாப்பிடுறீங்களா?"

"நான் மட்டுமா? நீ?"

"இரண்டு பேருந்தான்! இருங்க; இதோ வர்றேன்!"

அடுக்களைப்பக்கம் அமுதா போன அழகைப் பின்னலிருந்து அருள்நம்பி ரசித்துச் சொக்கிப் போனர். போதாக் குறைக்குச் சினிமாவில் வேறு அப்படிப்பட்ட காட்சிகளைக் காட்டி உள்ளங்

களைக் கெடுத்து வைத்திருக்கிறார்கள் அல்லவா? அரைமணி நேரமாயிற்று அமுதா திரும்பிவர! அதுவரையில் அருள்நம்பியின் நெஞ்சத்தில் அமுதாவின் எத்தனையோ விதவிதமான நடனங்கள்.

"வாருங்கள்; சாப்பிடலாம்" என்ற வண்ணமொழிகேட்டு வாரிச் சுருட்டிஎழுந்து அவள் பின்னல் சென்றார். அலங்காரமான மேசையில் ஆடம்பரமான விருந்து. எதிர் எதிரே இருவரும் அமர்ந்து கொண்டனர்.

வேலைக்காரி இருவருக்கும் பரிமாறினாள்.

இடையிடையே இரண்டு மூன்று தடவை, அருள்நம்பியின் கால், எதிரே வீற்றிருந்த அமுதாவின் காலில் பட்டுவிட்டது. 'சிவ! சிவா!' என்பார். 'பரவாயில்லை' என்று அவள் புன்னகை புரிந்த வண்ணம் உணவு அருந்துவாள். அவருக்குச் சாப்பிடவே முடியவில்லை. மேனியெங்கும் மின்சாரம் பாய்ந்து கொண்டிருந்தது. ஒரு வழியாகச் சாப்பாட்டை முடித்துவிட்டுக் கூடத்திற்கு வந்தார்கள். தனது நடன நிகழ்ச்சி 'ஆல்பங்கள்' எல்லாவற்றையும் அவரிடம் கொண்டு வந்து கொடுத்தாள். அதைக் கொடுக்கும்போதும் வாங்கும்போதும் கைகள் உராய்ந்தன. அருள் நம்பிக்கு இருப்புக் கொள்ளவில்லை. மணியும் ஒன்பதரை ஆகி விட்டது. அறையைக் காட்டி, அவளிடம் ஏதோ சொல்ல ஆரம்பித்தார். அதற்குள் வாசலில் கார் வந்து நின்ற சப்தம். "ஓ! சினிமாவுக்குப் போனவர்கள் வந்து விட்டார்கள்" என்றவாறு எழுந்து நடந்தாள். அவளது மேலாடை நாற்காலியில் சிக்கிக் கீழே விழுந்தது. அதனை எடுத்துச் சரிப்படுத்திக் கொண்டு, அவரைப்பார்த்து ஒரு சிரிப்பையும் கொட்டிவிட்டுத் தெருப்பக்கம் போனாள். சினிமாவுக்குப் போனவர்கள் திரும்பி வந்தார்கள். அமுதா, தன் கையில் ஒரு குழந்தையைப் பிடித்துக் கொண்டு அருள்நம்பியிடம் வந்தவாறு—

"இவனைத் தெரியுமா? என் மகன்!"

என்று அறிமுகப்படுத்தினாள். அமுதாவுக்கு ஒரு குழந்தையிருப்பது அவருக்கு முன்பே தெரியுமாதலால், 'ஓ! நம்பப் பயலா?' என்று ஆர்வத்தோடு கேட்டார். அதை அவ்வளவாகக் காதில் போட்டுக் கொள்ளாத அமுதா குழந்தையைப் பார்த்து,

"டே டே! கண்ணு! எங்கே, தாத்தாவுக்கு வணக்கம் சொல்லு!"

என்று அவன் கரங்களைத் தொழுவதற்கான முறையில் கூப்பி வைத்தாள்.

அவன் அடம்பிடித்து வேறுபக்கம் போகவே, அவனைத் தொடர்ந்து போய் இழுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

கூடம் காலியாக இருந்தது!

அழுதா, ஒரு வெற்றிப்புன்னகையுடன் குழந்தையை முத்தமிட்டாள்.

தம்பி கருணாநிதியின் தமிழ் ஆளுந்திறன்!

"தம்பி கருணாநிதியின் தமிழ் ஆளுந்திறன், பாத்திரங்களைப் படைக்கும் உயர்தனி ஆற்றல் ஊரும் உலகமும் அறிந்தது; அறிந்து மகிழ்ந்தது; மகிழ்ந்து பாராட்டியது!"

"ஒரு காட்சியை உணர்ச்சி உருவோடு அமைப்பது ஒரு எழுத்தாளனுக்கு எளிதான காரியமல்ல! ஆனால் கருணாநிதி யாரையும் விஞ்சுகின்ற அளவில் வெற்றி கொண்டுள்ளார்; தான் ஒப்புவமையற்ற நடையழகு காட்டும் எழுத்தாளர் என்பதால்!"

"தம்பி கருணாநிதி தமிழ் இலக்கியத்திற்கு நற்பணி ஆற்றியுள்ளார்!"

— பேரறிஞர் அண்ணை

